நாடும் தேசமும்!....

(இத் தமிழ்நாடுதான் -
என்றும் நம்நாடு!...)

பேராசிரியர்

அருளியார்

வேரியம்

புதுச்சேரி - 605 009

நூல் விளக்கம்

BIBLIOGRAPHICAL DATA

நூல் பெயர்	:	**நாடும் தேசமும்!...** (இத் தமிழ்நாடுதான் - என்றும் நம்நாடு!...)
நூல்ஆசிரியர்	:	பேராசிரியர் **அருளியார்**
பதிப்பு	:	02.03.2025 ஞாயிறு மாசி 18, தி.பி. 2056
தாள் தகைமை	:	படமக்கல் 1/8 அரைக்கான் மடி (Demy)
பக்கங்கள்	:	176
படிகள்	:	1000
விலை	:	உருவா இருநூறு (200)
படவடிப்பு	:	தோழர். அ.தே. தெள்ளியன்
கணிப்பொறிஞர்	:	திரு. நா. கமலச்செல்வன் திரு. நா. சேகர் திரு. சு. பன்னீர்செல்வம்
வெளியீட்டகம்	:	வேரியம் வேரியல் ஆராய்ச்சி நிறுவனம் 32-அ, புலவர் வீதி நீட்சி, தமிழூர் (திலாசுப்பேட்டை), புதுச்சேரி - 605 009.
அச்சாக்கம்	:	அன்னை அருள் அச்சகம், புதுச்சேரி

முன்னணி

இச் சிறுநூல், பல்வேறு காலக்கட்டங்களில் "போராளி" என்னும் இதழுள்ளும் "தென்மொழி" என்னும் இதழ் உள்ளும் வெளிப்போந்த பழங்கட்டுரைகளின் தொகுதியும் - நூற்கருத்து நோக்கிய வழிப்பாட்டில் நிறைவிக்க வேண்டியதாயிருந்த - ஒரு கருத்துச்சேர்ப்பின் இன்றியமையாமை கருதியிணைத்த ஒரு பினைவுக்கட்டுரையும் பின்னிக்கொண்டமைந்துள்ள ஒரு பயன்கருவியாகும்!

போராளி இதழின் முழுப்பெயர் "இலட்சியப்போராளி!" (இலக்கியப் போராளி) என்பதாகும்! இசையையா (ஏசுபெருமான்) கொள்கைநெறியில் இயங்கிக்கொண்டிருக்கும் மதவினைப்பாடுகள் வழியே, - மக்கள்தொண்டாற்றி வரும் அமைப்பினின்று தொடரும் ஓர் அரிய திங்கள் இதழ்! இடையில் இடைநின்று, இன்று மீளவும் புதுப்பொலிவுடனும் புரட்சி வலிவுடனும் நேரிய பார்வையொடும் பாரிய உழைப்பைத்தாங்கி வெளிவந்து கொண்டிருக்கும் அரிய பயனிதழ்களுள் ஒன்று, இது! இதன் ஆசிரியர் இயற்பெயர், "அருள் ஜீவா" என்பதாயிருந்தது! என் இல்லம் வந்து சந்தித்த அம் மதப்பெரியார் (பாதிரியார்) நான் சொன்னதை உள்வாங்கிக்கொண்டு அன்புடன் நெஞ்சிலும் அறிவிலும் அதனை உடனேந்தித் தம் பெயரை "அருள் உயிர்" என்றவாறு மாற்றிக்கொண்டவராய் அப்பெயரிலேயே தொடர்ந்தியங்கித் தொண்டாற்றி வருகின்றார்!... இருபானாண்டுகட்கும் மேலாகத் திங்களிதழுள் ஆசிரியர் பெயராக இவ் அருள் உயிரே பொலிந்திலங்குகின்றது! மதத்தினும் இங்குத் தமிழ் மேனிற்றலை உள்ளார உணர்கின்றோம்! மகிழ்கிறோம்! அப் பேரன்பு நிறைவாரும் "அருள் உயிர்" எனும் ஏந்தலொடு அருமைப் பெரியோர் பலரும் உடனியல்கின்றனர்!... அவருள் வெனி இளங்குமரனார், அருளரசன் ஐயா முதலியோரும் அடங்குவர்! அவ்வலுவலகத்துள் நல்வினைவேந்தன் நல்வினைச் செல்வன் என்னும் பெயர் தாங்கியோர் இதழ்ப்பணியில் துணை புரியும் உள்ளத்தினர்! தனித்தமிழை

உள்ளேற்றிக்கொண்ட பேருள்ளத்தவர் குழு என்பது, இதழுள்ளும் பலபடப் புலப்படும்!

கடந்த இருபது ஆண்டுகாலத்திற்கும் மேலாகத் தொடர்ந்து ஒரு முழுப் பக்கத்தையே இவ் அருளிக்கென்று ஒதுக்கித்தந்து - இவன் தொகுத்துத்தந்த அயற்சொல் கருத்துக்களை மக்கள் பயனுக்காக அறிவுநலம் நோக்கித் தொடர்ந்து வெளிப்படுத்திவரும் செய்திவழியே மிகத் தெளிவாக உணரலாகும்!

அத் திங்களிதழில் 17 திங்கள்அளவில் வெளிவந்த ஒரு தொடர் கட்டுரையே இம் முற்பகுதிக் கருச்செய்திக் களமாகும்! அக் கருச்செய்தி பதினேழு கட்டுரைகளின் தொகையாகும்! காலம் கைகூடுமாயின் அதன் முழுமை நிறை கொள்ளும்! அதில் வந்த தொடர் கட்டுரைத் தலைப்பு “தமிழும் தமிழரும் தமிழகமும்” என்பதாகும்! அதைத் தொடர எண்ணியும் தொடர முடியாதபடியான பிற ஆய்வு வினையழுத்தங்களும் நீடிநிறுத்திவிட்டன! அத் தலைப்பின் அடியில் வைக்க வேண்டிய பயன்முடிவுகள் பலவுள! அதனை எதிர்கொள்ளும் நிலை, எனக்கு வாய்க்க வேண்டும்; வாய்க்கும்!

அடுத்து, “தேசம் யாருக்கு உரியது?” என்னும் ஆய்வுக் கட்டுரை தென்மொழியுள் வந்தவற்றுள் ஒன்று! தென்மொழியாசான் முனைவர் பூங்குன்றனார், இந்நிலையில் நன்றி கூறத்தக்க நல்லுள்ளத்தவர்!

“தேசம்” நாம் உருவாக்கிய சொல் என்பதூஉம் - அது நம் நாட்டினைக் குறிக்கத் தோன்றியதன்று என்பதூஉம், அதன் பொருள் இன்னது என்றும் - விளக்கப்படுத்திநிற்கும் கட்டுரை அது! ஆகவே, நமக்குரிய வாழ்விடப்பெயர் அஃது எஃது? என்னும் குறைநிறைக்கவே, நாடு எனும் தலைப்பின் கீழாகக் கருத்துரைக்கவேண்டிய உடனடித் தேவையும் இன்றியமையாமையும் நேர்ந்தன! அதற்கென உழைப்பெடுக்க வேண்டியதாயிற்று! ஏனெனில், “நாடு” எனும் சொல் எவ்வாறு தோன்றியது, என்ன பொருள்களில் அது மேலெழுந்து நின்று நிலைத்தது என்பதற்கான சிறுமுயற்சியும் ஆய்வினுள் இதுகாறும்

எழாதிருந்தமையும் இத்துயருக்கு - இவ்வுழைப்பெடுக்கக் காரணம் ஆகும்!

செ.செ. பி. பேரகர முதலியும் - பாவாணரின் வழியிலாக என்றுகூறி "நண் > நள் > நடு> நாடு என்றவாறு குருட்டாம்போக்கிலாகிய கருத்து மாட்டலையே தொங்காட்டம் போட்டவாறு அமைத்திருந்தது! (காண்க செ. சொ. பி. அக. பக் 449, மடலம் 5 பகுதி-1 2005) அது அடிப்படையற்றது!

அதற்குத் தீர்வுகண்டே நாடு என்ற இக் கட்டுரைப்பகுதி இதனுள் அணிகொண்டுள்ளது.

முக்கூட்டுக் கட்டுரைகளின் தொகுப்பு நூல், இது! படியுங்கள்! படிக்கப் படிக்கப் பிடிக்கும்! பிடியுங்கள்! பிடிக்கப் பிடிக்க விடியும்! விடிவதற்காகத்தான் நாங்கள் விடிய விடிய விழிக்கின்றோம்! விழிப்புக்கு இரு பொருள் உள்ளமையை,

நம் பாவலரேறு ஓரிடத்தில் -

அழகொழுகப் பதிவு செய்வார்!....

அது, இது!

"விடிந்தும் விழித்தவன் தேர்வினில் வென்றான்!

விடிந்துந் தூங்கியோன் தேர்வினில் விழித்தான் !"

விழித்தல் என்பது ஈண்டு முழித்தல்!...

திருதிருவென என்ன செய்வதென்று தெரியாது, அலமருண்டு விழித்தல்!...

நாங்கள் முன்வரியில் உள்ள விழிஞர்!

இது, எம் முன்னணி (முன் + அணி) உரை

அன்பன்

(ப. அருளி)

நம் தமிழும் தமிழரும் தமிழகமும்

'குட்டக் குட்டக் குனிவுறும் கூனன்! - கோபுரப் பெருமையைக் குப்பையில் சாய்த்தோன்!" என்றவாறு தமிழனைக் குறித்து - ஒரு பாடலில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் குமுறுவார்!....

"தமிழியக்கம்" என்னும் அருமையான கிளர்ச்சி நூலுள்- "இருப்பதைவிட இறப்பது நன்று!" என்னும் தலைப்பிலமைத்த பாட்டொன்றில் – தமிழர்களின் இன்றைய தகைமைகள் இவை... இவை... என மிகத் தெளிவார்ந்த ஓர் அட்டியலிட்டு அலமரல்நெஞ்சொடு அவலஞ்சுட்டுவார் - செந்தமிழ்ப் பாவேந்தர்!... "பெருவாழ்வுக்கு ஓர் ஏணிபெற்றும் ஏறாத தமிழர்" "நல்வாழ்வுக்கோர் புகுமாறு புறக்கணித்த தமிழர்" – "வாழ்வில் ஏற்றமுற எண்ணாத தமிழர்" - இன்ப வாழ்வின் எல்லையறிந்தும் திருந்தாத் தமிழர்" – என்பன – அப் பாட்டினுள் தமிழரின் இன்றைய நிலைகளைக் கூறும் துலக்கவரிகள்!....

நம் இனம் சரிந்து – சாய்ந்து – நலிந்து – நைந்து – குலைந்து – தொலைந்து கொண்டுள்ளதே என மிகமிகக் கவலைப்பட்டு – இதன் மீட்சிக்கென ஆழ்ந்து சூழ்ந்து சிந்தித்து அருமறையாகிய திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் பெருமான் – (நேரிடையாகத் "தமிழன்" என்ற சொல் கொண்டு குறிப்பிடாமல்-) "பேதை" என்ற ஆணுக்கும் பெண்ணுக்குமான பொதுச்சொல் ஒன்றால் - நம் தமிழினத்தானை மறைமுகமாகச் சுட்டி.... "இப் பையலுக்கு நான்கு இழிவான பண்புகள் உள்ளன!... இப் பண்புகள் கொண்ட நான்கு செயற்பாடுகளைத் தொழில் செய்வதுபோலவே இம் மடயன் செய்து வருகின்றான்!... (மடயன் = மடமை வாய்ந்தவன். மடையன் = மடைத் தொழிலாகிய சமையல் பணி செய்பவன்)... என்றவாறு மிக நுட்பமாகவும் அருங்குறுஞ் சுருக்கமாகவும் அவற்றைப் பட்டியற்படுத்தித் தம் அகநோக்காட்டை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே சுட்டினார்!

அவர்கூறும் தமிழனின் - “முதல்... இழிவுப் பண்பு” நாணாமை என்பதாகும்! இப் பையலுக்கு (இத் தமிழப் பையலுக்கு...) வெட்கம் என்பதே சொல்லிலும் – செயலிலும் இல்லை!...

(“வள்”: வளைவுக் கருத்து வேர். வள் + கு > வட்கு = வளைவு: தாழ்வு வட்கு + ஆ + அர் > வட்கார் = வளையாதவர்; பணியாதவர்; பகைவர். வட்குதல் = நாணுதல்; கூசுதல்; கூச்சம்.

வட்கு + அம் > வட்கம் = நாணம்; கூச்சம் வட்கம் > வெட்கம் = நாணம்; கூச்சம் (அகர எகரத் திரிபு)

(ஒ.நோ: வல் > வெல் கட்டி > கெட்டி பரு > பெரு)

(வட்கம் என்பது – நாணவுணர்ச்சியின் மெய்ப்பாடு!... அம் மெய்ப்பாட்டுக்குரிய சொல் – அவ்வுணர்ச்சியைக் குறித்தும் பொருள் விரிவாக்கம் பெற்றது! (வட்கம் > வெட்கம்). நாணவுணர்ச்சி ஏற்படுகையில் –இயல்பாகவே உடல் கூனிக் குறுகும்! கழுத்து வளைவுறும்! தலைவணங்கித் தாழும்! இழிவான - தகைமையில்லாத – பண்புக் கேடுமிடைந்த சூழ்நிலை நேருங்கால் உள்ளம் நெளியும்! உணர்ச்சியும் அதன்வழி உடலும் வளையும்! அவ் வளைவு இயற்கையானது! அப்படிக் கூனுவதும் அதற்கென மனம் நைந்து வளைவதும் மாந்தவுயிரிக்கு இயல்பாக அமைந்த மெய்ப்பாட்டுக் கூறுகள்!... அது அற்ற மரக்கட்டையே வெட்கம் கெட்டவன்!... அல்லது வெட்கங்கெட்டவள்!...

“வெட்கம்” – என்பது பெண்டிர்க்குரிய நாணவுணர்ச்சியின் மெய்ப்பாடு குறித்து வழங்கிய சொல், ஆகும்! அதனையே - ஆணுக்கும் பெண்ணுக்குமாகப் பொதுப்பட வைத்துச் சுட்டும் வழக்கமும் நேர்ந்தது! “அவமானம்” என்னும் பொதுப்பொருளொன்றும் இச்சொல்லுக்குள் புகுந்தது. “வெட்கங்கெட்டவன்” என்பது மானங்கெட்டவனைக் குறித்து வழங்கும் தெளிவார்ந்த குறிப்பீடுகளில் ஒன்று! “வெட்கம் அறுபட்டவன்" அல்லது அற்றுப்போனவன் என்னும் பொருளில் (வெட்கு+அறை>) “வெட்கறை” என்னப்பெறும் அழகிய

சொல்லொன்று நாட்டுப்புறத்தில் வழங்கி வருவதை - வின்சிலோ பெருமகன் தம் அகரமுதலியுள் பதிவு செய்துள்ளார்!

(ஞல் = வளைவுக்கருத்துவேர்) ஞல் > ஞெல் > ஞெலி. ஞெலிதல் = தீக் கடைதல். மூங்கில் தட்டையில் - தீக்கடையும் குச்சியைப் பொருந்தப் பண்ணி-முன்னும் பின்னுமாக விரைவுவிரைவாக வளைவுற்றுச் சுழலுமாறு உரசுகையின் வழி "தீ" உருவாகும்! அக் கடையும்கோலுக்குத் "தீக் கடைகோல்" என்பது பெயர். (குடைதல் = துளைத்தல் குடைதல் > கடைதல்) தீய்க்கெனக் (குடையும்) கடையும் கோலே, தீக்கடைகோல்! தீயைப் பெறுதற்குக் கடையும் வினையைப் புரிதல் வேண்டும்! அவ் வினையில் முன்னும் பின்னுமாகச் சுழற்றியுரசுதல் என்பது அடிப்படைத் தொடர்ச் செயற்பாடு... அவ்வினை... ஞெலிதல் ஆகும்! அஞ் "ஞெலிதல்" வினைப்பாடு காரணமாகவே, தீக்கடைகோல் "ஞெலிகோல்" எனப்பட்டது!

(காண்க: ஞெலிகோல்: "ஞெலிகோல் கொண்ட பெருவிறல் ஞெகிழி" பெரும்பாணாற்றுப்படை : 178). ஞெலி > நெளி (நெளிவு = வளைவு) ஞல் > ஞால்> ஞாறுதல் = வளைதல், பொழுதுசாய்தல் (ஒப்புநோக்குக: "பட்ட மாரி **ஞான்ற ஞாயிற்று**" (**புறநானூறு**: 82: 2)

ஞல் > ஞால் > ஞாள் > ஞான் > நாண்.

நாணுதல் = வெட்கப்படுதல் பழி நாணுதல் = பழிச்செயலுக்கு வெட்கப்படுதல்; பழிச்செயல் செய்வதற்கு அஞ்சுதல் (காண்க: "தன்கட் பழிநாணு வானை" குறள்: 794).

"நாணம்" என்னும் வெட்கப்படுகையுணர்ச்சி பொதுப்பட்ட பொருளில் தோன்றினும், ஆண்ஆளுமை மேம்பட்டிருந்த குமுகச் (சமுதாயச்) சூழல்வழி - பெண்ணுக்கேயுரிய சிறப்புப்பண்பாக அதனைச் சுட்டிக் குறிப்பிடும் வழக்கம் - தமிழகத்தில் பரவலெய்தியிருந்தது! "அச்சமும் நாணும்..." எனவரும் தொல்காப்பிய வரித் தொடர்ச்சியில் (தொல். பொருள் : 99) வரும் இந் "நாண்" என்பது,

மகளிர்க்குரிய கூச்சப்பண்பைத் தெளிவாகக் குறித்து நிற்கும் ஒரு பதிவுக் காட்சியையே படம்பிடித்து வைத்திருக்கின்றது! அச்சம் - மடம் - நாணம் - பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களையும் பெண்டிர்க்கு உரிய சிறப்பு இயல்புகளாக ஆண்ஆளுமைத் தலைக்கனத்தவர்கள் நிலைநிறுத்தினர்!

நம் பெண்களும் அதற்குத் தலைகவிழ்ந்து நாணிநகைத்து கோணிக் கூனி உரிய ஒப்பிசைவும் தந்தனர்! நாணம், பெண்டிர்க்குரிய குணம் என்னும் நிலை "ஏற்பு-இசைவு" பெற்றுப் பரவலாகப் புழங்கி - வழங்கி வந்த காலத்தில்தான் திருவள்ளுவர் பெருந்தகை - அதனை - ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவில் வைத்துப்பார்த்து... ஆணாகிய பையலுக்கும் "நாணம்" வேண்டும்! அதாவது - மானம், பெருமை, சார்பு, பண்பு குணங்களையுடையவனாயிருக்க வேண்டிய ஒரு நல்ல ஆண்மகனாகிய பையலும் - தனக்குப் பொருந்தாத அறமல்லாத நயன்மையற்ற செயல்களைச் செய்வதற்கு நாணும் “நாணம்” என்னும் இயல்புத்தன்மை வேண்டும்! என்று வலியுறுத்தம் செய்தார்! "நாணுடைமை மாந்தர் சிறப்பு” (குறள்: 1012) என்றார்!

“பண்பாடு" என்னும் பொருட்பாட்டில் பழங்காலத்தில் வழங்கிவரப்பெற்ற சால்பு சொல்லுக்குப் பொருள் கூற வந்த திருவள்ளுவர் - அது “நாணம்” என்னும் பெரும் பண்பே என்றார்! இக் கருத்தை நெஞ்சில் பதிக்கும் வகையில் அழகும் அருமையும் நிறைந்த “உவமம்" (உவமை) ஒன்றையும் உடன்வைத்து விளக்கினார்! “நாம் ஒரு நாயைப் பார்க்கின்றோம்!.... அப்போது அதன் உடலையே முழுத்தோற்றமாகக் காண்கின்றோம்! ஊனால் ஆகிய வடிவம் (தசையால் ஆகிய உருவம்) கொண்ட அம் முழுத் தோற்றத்தைப் பார்த்தே அவ்வூனைக் குறித்தே... அது இன்ன உயிரி (பிராணி) என்று சுட்டுகிறோம்; அறிகிறோம்... அதனை "நாய்!" என்கின்றோம்! அதுபோலவே "நாணம்' என்பதுவும் சால்பு (பண்பாடு) என்னும் பெரும் பண்புக்கு ஊன் போன்ற புறவடிவம் ஆகும்! புறமெய்யான தோற்றம் ஆகும்! பண்பாடு என்னும் உயிர்த்தன்மையின் புற ஊன்வடிவாகிய

“நாணம்” என்பது இல்லையானால், “சால்பு” என்ற ஒன்றும் இல்லாது போய்விடும். அந் நாணம் என்பது ஆணுக்கும் வேண்டுமடா... மடயா!” என்றார்!

இப்படி அவர் கூறிய காலத்தில் - மக்கள் இக்கருத்தினைக் கேட்டு, “நாணம்” என்பது மகளிர்க்கேயுரிய சிறப்புப் பண்பு ஆயிற்றே!... இதனை ஆணுக்கும் வேண்டும்!" என்று இவ் வள்ளுவர் மயக்கமாகக் (குழப்பமாகக்) கூறியுள்ளாரே என்றவாறு குழப்பங்கொள்ளக்கூடாது என்பதற்காகவே பிறிதோர் இடத்தில் "கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல் நல்லவர் நாணுப்பிற" (குறள்: 1011) என்று தெளிவுற அவரே ஒரு தனிக் கருத்தாக விளக்கப்படுத்தியுள்ள முறைவினை மிக மிக ஆழ்ந்து கவனிக்கத் தக்கதாகும்.

"திருநுதல் நல்லவர் நாணுப் பிற" - அழகிய நெற்றியையுடைய நல்ல மகளிர்க்கு என்று உலகில் - வழங்கிவரும் “நாணம்” என்பது வேறு! அது ஒரு புறத்தது. - அதனை நான் இங்கு சொல்ல வரவில்லை! அதுவேறு! - நான் - சொல்லுகின்ற இந்த “நாணம்” - "கருமத்தால் நாணுதல் நாணு” - ஆகும்! தீய வினைகளைச் செய்வதற்கு வெட்கப்படும் ஆணுக்குரிய பொதுப்பண்பையே, இங்கு நான் தெளிவாகவும் குறிப்பாகவும் சுட்டுகின்றேன்!” - என்று, வள்ளுவர் அன்று சுட்டினார்.

மாந்தனுக்கு நாணம் வேண்டும்! தீயகருமங்களைச் செய்வதற்கு அஞ்சுகின்ற இயல்பான வெட்கம் வேண்டும்! இத் தமிழனிடத்தே, இப் பேதையிடத்தே இப் பண்பு அறவே இல்லையே..... இப்படிப் பட்ட இழிவுக் காலச் சூழல் இத் தமிழகத்தில் கவ்விக்கிடக்கின்றதே! – என்றவாறு நெஞ்ச அவலத்தோடும் கவலைத் தோய்வொடும் “நாணாமை" எனத் தொடங்கும் குறளை யாத்திருக்கின்றார், நம் பெருமான்.

“தமிழன்” என்றவாறு தெளிவாகப் பெயர் துலங்கித் தெரியும்படிக் குறிப்பிட்டுச் சுட்டாமையும் - "பேதை” என்ற சொல்

கொண்டே தமிழனைக் குறிப்பாகவும் பொதுப்படவும் சுட்டுவதும் அவரின் உத்திநெறிகளில் ஒன்று!

அம் மறையுள் வெளிப்படையாகச் சிலவற்றை எழுதி உரிய எதிர்கால நல்விளைவுகளைச் சிதைத்தும்விடலாகாது என்னும் எச்சரிக்கையான விழிப்புணர்வு ஊடிழையாகவே உள்ளோடுவதை உள்நோடுந் திறனாளர்களால் உணரவியலும்!

இத் தமிழனுக்கு வெட்கம் - அதாவது தீய செயல்களுக்கு அஞ்சி நாணும் நாணம் இல்லையே... அவமானம் வாய்ந்த வினைகளுக்கு வெட்குகின்ற பெரும்பண்பு அறவே அற்றுப்போன இழிஞனாய்க் கிடக்கின்றானே..... என்றவாறான குமுறல்களோடேயே இவனுக்கு இன்றைக்கு இயைந்திருக்கும் தீய பண்புகளுள் ஒன்று "நாணாமை" ஆகும், என்றார் வள்ளுவர்! அவர் கூறும் முழுக்குறள் இது!....

"நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்" – (குறள்: 833)

"வெட்கப்படவேண்டிய செயல்களுக்கு வெட்கப்படாமையும் - ஆய்ந்து பார்க்க வேண்டியவற்றை ஆய்ந்து பார்த்து முடிவு செய்யாமையும் - அன்பு எனும் அடிப்படை உயிர்ப்பண்பே இல்லாதிருக்கின்றமையும் - இன்றியமையாது பேணிக்காக்க வேண்டிய எதனையும் காத்துக்கொள்ளும் வினைப்பாட்டு உணர்ச்சியின்மையும் ஆகிய நான்கு தன்மைகளையும் இத் தமிழப் பேதை (தமிழ் மடயன்!) ஏதோ இயல்பான தொழில்கள் செய்வதைப் போலவே செய்து வருகின்றான்!.." என்கிறார்!... இத் தமிழ்மண்ணும் தமிழ்மொழியும் தமிழ்நாடும் சிதைந்து கொண்டுள்ள போக்குக்கு - இவனுக்கு "வெட்கம்" (நாணம்) இல்லை... (மானம் இல்லை! சூடு சுரணை இல்லை!...) என்பதுவே முதற்காரணம் என்பதை மிக நுண்ணுட்பமாகச் சுட்டும் பதிவு ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும்!

நம் தமிழினம் மாற்றாரிடம் எவ்வளவு கவனமாகவும், விழிப்பாகவும், எச்சரிக்கையாவும் இருத்தல் வேண்டும் என்றவாறெல்லாம் அவர் நேரிடையாகவும் மறைமுகமாகவும்

மிகப்பல்லிடங்களில் ஆழமாக அறைந்து வைத்துள்ள அருங்கருத்துக்களில் நன்கு மனம் பதித்து அவற்றின் அகப்புறச் செய்திகளை விளங்கிக்கொள்ளும் முயற்சியும், சூழலும், வாய்ப்பும் நேராததாலேயே - இம் மண்ணும் - இம் மண்ணின் மைந்தனும் - இம் மண்ணவனின் மாமொழியும் தொடர் சிதைவினின்று இன்னும் மீட்சியெய்த முடியவில்லை! அறநூல் வடிவில் - பொதுவான அறிவுநூல் வடிவில் - இல்லறவாழ்வியல் நூல் வடிவில் - அரசியல் நூல் வடிவில் - உலகத்தவர் யாவர்க்கும் பொதுப்பட்ட அறிவு விளக்கங்கொளுத்தும் நடைமுறை நூல் வடிவிலாக அதன் உள்ளடக்க வகைப்பிரிவுகளை மேலுக்கு அமைத்துக் கொண்டு இத் தமிழனை விழிப்பிக்க அவர் எடுத்துள்ள, செய்துள்ள- அன்றைய முயற்சிகள் முறையான பயன்களை உருவாக்கவேயில்லை!

திருவள்ளுவரால் யாக்கப்பெற்ற அக் கருத்து வீச்சுகள் - பொதுமக்களின் அறிவில் - நெஞ்சில் போய்ப் படியும்படியான சூழலே அமையவில்லை! புலமக்களிற் பலர் படித்துள்ளனர்! ஈடிணையற்ற பெரும்புலமையினை வியந்து போற்றியதோடு - அவர்கள் தம் பணியை முடித்துக் கொண்டனர்! திருக்குறள் யாக்கப்பெற்று ஆயிரம் ஆண்டுகள் கழிந்த பிற்பாடு வடமொழியிலும் தமிழ்மொழியிலும் புலக்கணம் முற்றித் தலைக்கனம் நிறைந்த "பரிமேலழகன்" என்னும் பார்ப்பன மகனொருவன் நீக்குப்போக்கு நிறைவாரப் பார்ப்பனியத்துக்குப் பழுதுநேராதவாறு கட்டியமைத்த உரைக்குப் பின்னரேயே, "திருக்குறள்" என்னும் பெயரே தமிழ்மக்களுக்கு ஓரளவு தெரிய வந்தது! சாய்ந்தால் சாய்கிற பக்கம் சாய்கிற செம்மறியாடுகளைப் போலவே - பரிமேலழகன் பாரித்துரைத்த ஓரவாரப் பகட்டுரையைச் சார்ந்து சாய்ந்தவாறே பின் வந்தோரிற் பலரும் உரைபின்னி உருட்டிவிடலாயினர்! அன்றைய பார்ப்பானின் திருக்குமுறுக்குத் திருவிளையாடற் போக்குகளை திருவள்ளுவமுனிவர் அன்றே சுட்டிக் காட்டியுள்ளார் - என்னும் கருத்துச் சாயலையே நம் தமிழவர் இன்னும் இன்றும் விளங்கிக் கொள்ளாத சூழலே தமிழகத்தில் நின்று நிலைகுத்தி நிற்பதால்தான் -அதற்கான உரைவரைதலில்

"சுச்சாத்தா" (சுஜாதா) போன்ற தமிழறியாமையும் தமிழ் மரபிலக்கண அறியாமையும் தமிழ் வரலாறும் தமிழக வரலாறும் ஒரு சிறிதும் புரியாமையும் வாய்ந்த பார்ப்பனமகனும் பங்கேற்றுப் பணமும் பண்ணிக் கொண்டிருக்கின்ற காட்சிகளையும் நாம் காணுகின்றோம்!

ஆக, இத் தமிழனுக்கு நாணம் கிடையாது என்பதை- முதன்முதலில் நமக்குக் கோடிட்டுக் காட்டிய பெருந்தகை - நம் வள்ளுவர் பெருமானே ஆவர்! அவருக்குப் பின்னர் சற்றேறக் குறைய பத்தொன்பது நூற்றாண்டுகள் கழித்து – இவ் வுண்மையுணர்வுக்கு மறுபதிப்புப் போல இம் மண்ணில் தந்தை பெரியார் அவர்களால் 1925 இல் "சுய மரியாதை இயக்கம்" தொடங்கப் பெற்றது! தமிழனுக்கு வெட்கம் இல்லை!.... ஆம்... சூடும் இல்லை; சுரணையும் இல்லை அதாவது, மானமே இல்லை!..... மாந்தன் என்பவனுக்கு இருக்கவேண்டிய இயல்பான தன்மானமும் இல்லாமலேயே இவன் கிடக்கின்றான்.... அதனை முதலில் இவனிடத்து ஏற்படுத்தியாக வேண்டும் என்னும் அடிப்படைத் தெளிவும் - வள்ளுவர் பெருந்தகைக்கிருந்த நோக்குவீறும் பெரியாரிடம் இயல்பாயிருந்தன! "சுயமரியாதை" என்னும் சொல்ஆட்சியுங்கூட "தன்மானமில்லாத பெயர்க் குறிப்பீடு" என்ற அளவுக்குத் தமிழரிற் சிலர் விழிப்பெய்தும் நிலைகள் வளரத் தொடங்கின! அவ் வளர்ச்சிக்கும் பெரியாரின் பெருந்தொண்டுத் தொடர்ச்சியே அகக் காரணமாக விளங்கியது!

தமிழனுக்குரிய இயல்புத் தன்மைகளாகிய நாணமும் மானமும் நழுவி - வழுவி மழுக்கமாகிப் போனமையால் வரலாற்றுச் சறுக்கல் என்பதுவும் தொடர்வரலாறாகி நிற்கின்றது! இச் சறுக்கல் நிலையைத் தடுத்து நிறுத்தும் பெருமுயற்சியில் ஈடுபட்டு - ஈடுபட்டுநின்ற - தமிழ்மானம் நிறைந்த அறிஞர்களிற் பலர் - ஆற்றல் சான்ற பாவலர்களிற் பலர் - பெரியாரைப் போன்ற பொதுத் தொண்டர்களிற் பலர் முயன்று முயன்று பார்த்துவிட்டுச் சலிப்பும் எரிச்சலும் நம்பிக்கைத் தளர்ச்சியும் எய்தியவாறு சினத்தொடு வீசிய கடுஞ் சுடு சொற்கள் மிக மிகுதியன!

காமராசர் ஆட்சியைக் காப்பாற்றி நிலைநிறுத்த அதன் பெருமையைத் தமிழ்உலகெங்கும் உயர்த்திப் பிடித்து நின்ற தந்தை பெரியார் அவர்கள் ஒரு கூட்டத்தில் இவ்வாறு பேசினார்... "(நம்ம) பச்சைத் தமிழர் ஆட்சியிலே ... என்ன குறை?!... இத் தமிழனுக்கு!... (புத்தி, அறிவு இல்லை என்ற ஒரே ஒரு குறையைத் தவிர....")

இவ்வாறு இத் தமிழனை வசை பாடுவதுபோல் வாரிவீசிய அத்துணைச் சொற்களுள்ளும் இவனின் மீட்சிக்கு ஏங்கும் - இவனின் மேம்பாட்டுக்கென ஓங்கிக் குரலெழுப்பி இவனையே ஏந்தித் தாங்கும் - தாய்மையும் தந்தைமையும் தோழமையும் சார்ந்த உறவுப் பாசத்தையே உற்றுப் பார்க்கும் நம்மால் உணர்ந்து மகிழ முடிகின்றது...

முழுநிறை மாந்தனுக்கு அடிப்படையாக இயல்பாக அமைந்திருக்க வேண்டிய மற்றுமொரு பண்பு, தன் நிலைமையினின்றும் தாழாது நிற்கும் "தன்மதிப்பு" ஆகும். (மதி = அளவிடு மதிப்பு = அளவு) (மா = அளவு மா + அனம் > மானம் = அளவு, மதிப்பு. மானித்தல் = தீர அளவிடுதல், தீர்மானித்தல்).

நாட்டுக் குடிமக்களாகிய மாந்தர் தம் நிலையினின்று இழிந்து தாழ்ந்து போய்விடுவாரானால், தலையினின்று கழிந்து கீழே கிடக்கும் மயிருக்குச் சமமாகக் கருதப்பெறும் நிலைக்கு ஆள்களாகி விடுவர் என்றவாறு ஒரு குறள் வழியே உவமம் கூறி ஒரேயடியாய்த் தாக்கியிடிப்பார், நம் வள்ளுவர் பெருமான். (காண்க "தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர் நிலையின் இழிந்தக் கடை" குறள்: 964)

மானங்கெட்டு வாழ்வதை விட, மானங்காத்து அதன்வழி மாளுவதே சிறந்தது என்றும் (குறள் : 967), - மானம் என்னும் பெருந்தகைமை கெடும்படியான சூழல் வந்து நேர்ந்தபோது - ஊன் ஓம்பும் - தசையாலாகிய... தன் உடம்பினைப் பேணி வாழும் வாழ்க்கை... ஒரு வாழ்க்கையா? தூ...!.... என்றும் (குறள் : 968), மானம் கெடும்படியான ஒரு குற்றநிலை (மானம்) ஏற்படுமானால் தன் உடம்பில் மயிர்கள் உதிர்ந்துபோய்விடின் அந்நிலையைத் தாங்கிக் கொண்டு உயிர்வாழ மாட்டாது இறந்து போகின்ற கவரிமான் போல மானத்தனும் உடனேயே மாண்டுபோய் விடுவான் என்றும்

(குறள் : 969), - இழிவு நேருமானால் அதனைத் தாங்கி கொண்டு வாழாது உயிர்துறந்துவிடும் மானவுணர்வு மிக்கவர்களை உலகத்தார் கும்பிட்டு உயர்த்திப் புகழுவார்கள் என்றும் (குறள்:970), - மானங்காக்க உயிர்நீக்கும் சிறப்பு நிலைகள் பற்றி நான்கு குறள்களில் வள்ளுவர் பதிவு செய்துள்ளமை இவ்விடத்தில் ஆழ்ந்து சிந்தித்தற்கு உரியதாகும்!

திருக்குறளில் பொருள்பால் பகுதியில் அரசியல் உறுப்புக்கள் ஏழுள் இறுதிப் பகுதியாகிய குடியைப்பற்றிப் பதின்மூன்று அதிகாரங்களால் சுட்டப்பெறும் செய்திகளுள் முதலாவதாகிய.... அறிவாலும் ஒழுக்கத்தாலும் உயர்ந்த கொடிவழியிற் பிறந்த குடிமக்களுக்குரிய பண்பு பற்றிக் கூறும் "குடிமை" என்னும் அதிகாரத்தை அடுத்து உடனேயே மானத்தைப்பற்றி அவர் கூறி நின்றதன் காரணம், நம் குடிக்கு 'மானம்' பற்றிய சிறப்பையும் உண்மையையும் நினைவூட்டி, உணர்வூட்டி, தெளிவூட்டி, அதனை மீண்டும் கடைப்பிடிக்கும்படித் தூண்ட விரும்பியமையே ஆகும்! அவர் காலத்தில் நம் தமிழ்க்குடி மானவுணர்வில் மங்கி மந்தமாகிச் சோம்பிச் சுரணையற்றுக் கிடந்து நின்ற இழிநிலைக் காட்சிகளைக் கண்டு இதனை இவ்வாறு பல கோணங்களில் சுட்டியுள்ளார் என்றே தோன்றுகிறது!

தன்மதிப்பாகிய பெருந்தன்மையும், அறனல்லாத - செய்யத்தகாத தீய செயல்களுக்கு நாணுகின்ற - வெட்கப்படுகின்ற மாந்தவுயிருக்குரிய இயல்புப்பண்பும் ஓர் உயரிய முழுமை மாந்தனுக்கு அடிப்படையான உயிர்ப்பண்புகள்! ஒரு காசின் இரு பக்கங்கள் போல்வன, அவை! மூச்சுக் காற்றை உள்ளிழுப்பதற்குப் பயன்படும் மூக்கிலமைந்துள்ள இரு கூட்டுத் தொளைகள் போன்றன, அப்பண்புகளின் இருப்புநிலை! ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நம் தமிழ்ப்பெருமக்களிடம் இத் தன்மைகளில் குறைநிரம்பிய சூழலொன்று முற்றிச் சுற்றியிருந்தமையைக் குமுக ஞானிகளில் மிகப்பலர் உற்றுக் கவனித்திருக்கக் கூடும். அது பற்றி அவர்கள் ஆழ்ந்து சிந்தித்திருக்கவும் கூடும். ஆயினும், வாய்திறந்து சொல்லவோ - எழுதுகோலை நாட்டியசைத்துக் கருத்துகளாகத் தெரிவிக்கவோ அன்றைய சூழல்

இடந்தரவில்லை - என்றே தோன்றுகின்றது!. என்ன அப்படிப்பட்ட சூழல்? அச் சூழலை உருவாக்கிய - துணை நின்ற சூழ்ச்சிக்குழுவினர் எவர் - எவர்? நாமும் பதற வேண்டியிருக்கிறது! அன்றைய நிலையில் வள்ளுவர் ஒருவரே துணிந்து சொல்ல முற்பட்டுள்ளார். அவராலுங் கூட மிக வெளிப்படையாக வெளிப்படுத்திட முடியாதிருந்த கொடிய இக்கட்டான அரசியல் கடுஞ்சூழல் தமிழகத்தையே பின்னியிருந்தமையையும் நாம் ஒருவாறு உணர முடிகின்றது!

அறநூல் போர்வையில் மிகமிக நனிமறைவாகத் தாம் உண்டாக்க விரும்பிய கிளர்ச்சிக்குரிய மீட்சிச் செய்திகளை அவர் பதிவு செய்துள்ள அதே போழ்திலேயே, சினநிலைகளின் பல கடுந்துளிகள் மிகப்பலஇடங்களில் சிதறலாக அவர்க்கும் படிந்திருப்பதை மேலோட்டப் பொதுப் பார்வையிலேயே கூட நம்மால் விளங்கிக்கொள்ள முடிகின்றது!

சற்றேறக்குறைய ஈராயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னீடேயே தமிழ்மக்கள் வழங்கிவந்த ஈடிணையற்ற நம் செந்தமிழ்மொழியுள் அயலவர் பிறரின் சொல்வழக்குகளோ பிறழ்ந்த ஒலியீடுகளோ உட்புகுவதற்கே வழியில்லாதபடியான இயல்பான மானச்சூழல் வலிய வேலிபோல, இத் தமிழ் மண்ணில் சூழ்ந்திருந்தது. கால இக்கட்டுச் சூழல்களில் பலுக்க (உச்சரிக்க) வேண்டியமைந்த போதுகூட, அயலொலிப்புக்கே இடந்தராது மண் சார்ந்த மக்களியல்புக்கேற்ப ஒலித்து நிற்கும் இயற்கைநிலை மட்டுமே அனைவரின் வழக்கத்திலும் நிலைகொண்டிருந்தது! "வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே"! என்னும், தொல்காப்பியம் எச்சவியல் நூற்பா (எண். 51).

பொருட்பாட்டிலுங்கூட அன்றிருந்த தமிழ்மக்களின் எச்சரிக்கையுணர்வும் விடாப்பிடியும் ஒட்டாரமும் பற்றிப் படிந்துள்ளமையைக் காணலாகும். "பாஷை" என்பதைப் பாடை (பாடை = பிணக்கட்டில்!) என்றவாறே ஒலித்த தமிழரின் அறிவுக் குறும்பு சார்ந்த வெளிப்பாட்டிலுங்கூட, இப் பண்டைய மானத்தின் சாரத்தையும் ஓதத்தையும் நாம் உணர்ந்து தெளிய முடியும்!....

"பிரம்மா" என்னும் ஒரு படைப்புக் கடவுளின் முகத்திலிருந்து வெளியே தொப்பென்று குதித்த கூட்டத்தினர் நாங்கள்..... (மிகச் சினமாக நம் பாவலரேறு அவர்கள் இதுபற்றிப் பாட்டொன்றில் குறிப்பிட்டார்.... அப்படியானால் "மூக்கா கருவாய்" - என்பது அவரின் கேள்வி).... எனவே எங்களுக்குப் 'பிராமணர்" என்று பெயர் - என்றவாறு தவளைக் கத்தல்கள் கத்திப்பார்த்தும்..... கழக (சங்க) நூல்கள் எவற்றினுள்ளும் எவ்வொரு சிறிய பதிவையும் நம்மவர் செய்யாதிருந்துள்ளமையினுள்ளும் அவர்களைப் புறந்தள்ளி அவர்களின் அச்சொற்குறிப்பீட்டையே புறந்தள்ளித் தன் மொழிக்காப்பில் தலைநின்றுள்ளமையை நாம் நன்கு உணரமுடிகின்றது!

தூணைத் துரும்பு ஆக்கவும் பேனைப் பெருமாளாக்கவும் வல்ல பிராமணர் அந்நிலைகளுக்கெல்லாம் ஈடுகொடுக்கும் உத்தியாகத் தமிழ்மொழியில் மிகவுயர்வாகவும் மீமதிப்பாகவும் அருள்தன்மை செறிந்த தூய துறவியரைச் சுட்டி வழங்கப்பெற்ற 'அந்தணர்' என்னும் தமிழ முனிவர்க்கேயுரிய செந்தமிழ்ச் சொல்லைத் தமக்குரிய சொல்லாக வழங்குமாறு நிலையைத் திசைதிருப்பி நிறுத்திக் கொள்ளலாயினர்! வள்ளுவர் காலத்தில் இந்நிலையில் வலியுறுத்தம் காட்டியுள்ளனர்!

"அம்" = அழகு. தண்மை =குளிர்மை (ஒ.நோ. தண்ணீர் = குளிர்ச்சி வாய்ந்த நீர்) தண் + ண் + அர் = தண்ணர் = குளிர்ச்சியும் செம்மையும் வாய்ந்த அருள்மனப் பண்பினையுடையவர். (தண்ணர் > தணர்) அம் + தண்ணர் = அந்தண்ணர் > அந்தணர்) அருள் மனப்பான்மையும் திருமை சான்ற பெருந்தகைமையுமுடைய தூய்தமிழ் முனிவர்க்குரிய நேயம் செறிந்த செந்தமிழ்ப் பெயரைப் பிராமணர் அப்போது தமக்கெனச் சூட்டிக்கொண்டதும் சுட்டக்கூறியதும் நம் திருக்குறள்ஆசானுக்கு எள்ளின் மூக்குமுனை அளவுக்குக்கூட உடன்பாடில்லை! ஏனெனில், நம் தமிழ்முனிவர்களாகிய அந்தணர் யாரும் புலாலை அறவே தொடாத, உண்ணுதற்கு எண்ணவும் விரும்பாத, உயிர்க்கொலைக்கு எதிரான மிகமேம்பட்ட அருளுணர்வாளர்கள்!...... மெய்யாகவே துறவு பூண்டிருந்தவர்கள்..... செழுமைச் சித்தர்கள்...... பழுத்த பண்டார ஞானிகள்!......

(பார்ப்பனர்களாகிய பிராமணர்களோ, துறவுவேடம் மட்டுமே பூண்டு நெஞ்சப்பேராசைகளையும் தன்னலவுணர்ச்சிகளையும் அறவே துறவாதவர்கள்!

நூலும் (நூல் - என்பது இங்குப் பூணூல் ஆகும்!) கரகமும் (= நீர்க்கலம்) முக்கோலும் (= முத்தலைக்கோல்) நன்கு அழுத்தமாகப் புட்டத்தைத் தேய்த்தவாறு குந்தித் தின்பதற்குத் தோதான மழமழப்பான மணைக் கட்டையும் பிற பொருள்களுமாக உடனெடுத்துச் சுமந்த புனைவுவேடத்தொடு திரியோதிரியென்று அலைந்து திரிந்து கொண்டிந்தவர்கள்! (இதனால் தான்) இதனைச் சுட்டித்தான் திருவள்ளுவர் பகடியாக ஓரிடத்தில் ஓர் இடியிடித்து இப்படிச் சுட்டினார். “மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல்? பிறப்பறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை!", என்பது அவரின் அவ்"வாய்மொழி" ஆகும். (குறள்: 345).

("அடடேய்ய்!... பிறவியையே அதாவது பிறப்பையே அறுத்துப் போட்டுவிட்டு இவ்வுலக இன்பங்களாகிய இன்மை இன்பங்களையெல்லாம் தூக்கித் தூர எறிந்து விட்டு இறைவனோடு இரண்டறக் கலப்பதற்கென்று சொல்லிக்கொண்டுதானே நீங்களெல்லாம் ஏதேதோ மந்திரங்களைக் கத்திக்கொண்டு எது எதனையோ நோக்கி வழிபட்டுக் கொண்டிருக்கிறீர்கள்! அப்படிப் பிறப்பை அறுக்க எண்ணுகின்ற மடப்பயலுக்கு - உடம்பு என்ற ஒன்றைத் தாங்கியவாறு இருப்பதே பெருஞ்சுமையாயிற்றே!.... அப்படியிருக்க.... மேலும் என்னங்கடா... ஏதேதோ தொடர்ப்பாடுகளாக அங்குமிங்கும் தொங்கல்தாங்கல்களாக உங்கள் உடம்பில் எங்கெங்கெல்லாமோ மாட்டிக்கொண்டு கிடக்கிறீர்கள்! ...... திரிகிறீர்கள்!” என்று வள்ளுவர் கேட்ட சூடான கேள்வியே - அவ் அருங்குறளாகும்). நம் முனிவர்கள் அனைவரும் முழுநிலை சான்ற புலால் மறுப்பாளர்கள்! மாந்தர்கள் உண்ணும் காட்சி - சிவந்த புண்ணையே வறுவலாக வறுத்துத் தின்னும் மிக இழிந்த காட்சியாகவே அவர்களுக்குப் பட்டது! (செம்புண் வறுத்த வறை தின்பர்)

அன்றைய பிராமணன் ஆர அமர அமர்ந்து கொண்டு புலாலை முக்கி முக்கித் தின்று கொண்டேயிருந்த பழக்கத்தினன்!..... வழக்கத்தினன்.... இறைச்சிவாயன்!..... (இன்றைய பிராமணர்களிற் சிலரும் - இவ்வகை வழக்கங்களில் ஒன்றும் சளைத்தவர்களாகவோ இளைத்தவர்களாகவோ இலர்!.....) அசுவமேதயாகம், அந்த யாகம், இந்த யாகம் என்றவாறு குதிரை முதலாகிய பெருவிலங்கு வகைகளிற் பலவற்றைக் கூறுபோட்டுக் கூறுபோட்டு நெய்யிட்டு வதக்கி வயணமாக வறுத்தெடுத்து நொறுக்குவதில் அக் கால வேள்வியென்னும் ஒருவகை மடைத்தொழிலில் வெகுவாகத் தோய்ந்திருந்தவர்கள் - பிராமணர்கள்! ஆவின் (பசுவின்) இறைச்சியையும் எருதின் இறைச்சியையும் உண்ணக்கூடாது என்று பிறர் சொல்லும் போது "நான் உண்பேன்!" என்று "சதபத பிரமாணம்" என்னும் நூல்வழி (யாக்ஞயவல்க்ய) என்றொரு பச்சைப் பசும்பார்ப்பான் முழங்கி நின்றமையையும் இவ்விடத்தில் ஒப்பிட்டுக் கருதிப்பார்க்க வேண்டும்! வடஇந்தியாவில்கூட, எட்டாம் நூற்றாண்டுவரை ஆவின் (பசுவின்) இறைச்சியைப் பிராமணர்கள் தொடர்ந்து வெளிப்படையாகவே உண்டு வந்தனர் என்னும் உண்மை "உத்தரராமசரிதம்" என்னும் நாடகநூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது!

"கொலைப்படை வேண்டும்!" என்னும் தலைப்பில் பாவேந்தர் அவர்கள் மிக அருமையான கருத்தொன்றை இப்படிப் பதிவு செய்தார்!.... "வடபாங்கில் முன்னாளில் தமிழரை வென்றார்! வந்திட்ட ஆரியர் உடும்பையும் தின்றார்! இடம் பெற்ற பின் சைவம் மிக நல்லதென்றார்! இன்று தேவைப்படல் கொலைப்படை அன்றோ?" என்பது அவரின் அப் பாடலில் வருகின்ற ஒரு பகுதி! பிராமணர்களாகிய ஆரியர் உடும்பு என்னும் விலங்கையும் தின்றதாக இதில் பதிவுசெய்துள்ளாரே பாவேந்தர்- என நான் வியந்து எண்ணியிருக்கின்றேன்! அடிப்படை இல்லாமல் - எழுதவே மாட்டாரே நம் புரட்சிப்பாவலர்... என்ற எண்ண அழுத்தத்துடன் பழஞ்செய்திகளைப் புரட்டத் தொடங்கினேன்! அவ் எண்ணத்திற்குத் தீனியாக - விடையாகப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய

“பழமொழி நானூறு" என்னும் நூலுள் ஒருவரி "துடும்"- என என் முன் பளிச்சிட்டது! அது, இது!.... "நாய் கொண்டால் பார்ப்பாரும் தின்பார் உடும்பு" அட..... இதற்கும் ஏதாவது அடிப்படை இருக்கின்றதா என்று தேடுகையில் மனு (அ)தர்ம சாத்திரநூலுள் ஒரு பகுதியில் - நாய் கவ்வி வந்த உடும்பு போன்ற உயிரிகளைப் (பிராமணன்) பார்ப்பான் புசிப்பதில் எப்பிழையும் இல்லை என்ற குறிப்பும் தென்பட்டது. அத்துடன் பாடப்பகுதி (அத்தியாயம்-5, சொலவகம் (சுலோகம் -27) இல், "ஒரு பிராமணன் மந்திரத்தினால் கொல்லப்பட்ட விலங்குகளின் இறைச்சியைப் புசிக்கலாம்" என்று சட்டநெறி வகுக்கப்பட்டிருக்கின்ற பதிவையும் பார்க்கும் போது - அவர்கள் பெரும்பாலரும் ஊன் வெறியர்கள், ஊன் நனிவிரும்பிகள், இறைச்சி தின்னிகள் என்பதில் எவ்வகை ஐயமும் எவர்க்கும் ஏற்படவே ஏற்படாது!

உயிரிகளைக் கொன்று இப்படி (யாகம்) வேள்வி வேட்கும் முறை- அறவெறுப்பான நடைமுறை என்று குத்திட்டுக் காட்டும் போக்கிலேயே வள்ளுவர் ஓரிடத்தில் இப்படிச் சொன்னார்...... "அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று" - என்பது அவரின் குறள்வழிக் குரல்... (எண். 259).

ஆரியவேள்விகள் கொலைவேள்விகள்! ஆரியர்கள் புலால் உண்ணிகள். மிக நிறைவார வயிறார வாயார இறைச்சி திணித்துக் குதப்பித் தின்று மென்று அசைபோட்டுக் கொண்டிருந்த அன்றைய பார்ப்பனனை "அந்தணன்" என்ற சொல்கொண்டு அழைக்கும் புதிய வழக்கத்தை எதிர்த்துத்தான் தம் குறள்நூலுள் இப்படிப் பெருஞ்சினம் கொப்புளிக்கக் குமுறிக் கூவுவார்! "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்". (குறள். 30).

உலகிலுள்ள எல்லா உயிர்கள் மீதும் செழுமையான நேயஞ்செறிந்து அருளுணர்வு பூண்டு பற்றற்று வாழும் அறவோராகிய முனிவர்களே "அந்தணர்" என்னும் செம்பெயருக்குத் தகுதி உடையவர் ஆவார்கள்! புலால் கவ்விக் கடிக்கும் வாயராக நீங்கள் எவரும் "அந்தணர்" என்னும் சொல்லுக்கு உரியவர்கள் அல்லீர்!..... என்னும்

கிளர்ச்சிக் குரலே - இக்குறள் அடக்கியுள்ள பொருள் திரள்... அந்தணர் வேடம் பூண்டுகொண்டே புலால் தின்று கொழுப்பேறியிருந்த கூட்டம், அன்றைய ஆட்சியாளர்களாகிய வேந்தர்களின்- மன்னர்களின் மடிகளுக்கு அடிநிலைகளிலேயே அமர்ந்து விளையாடும் வாய்ப்பைப் பெற்றது! அக் கால இந்தியாவாகிய இந் நாவலந்தீவின் வெதணச் சூழல் (தட்பவெப்பச்சூழல்) பாலியல் கிளர்ச்சிக்கு - காமவுந்தலுக்கு மிகவும் வாகானது!... பெரிதும் வசதியானது!... வெப்பமண்டிலத்தில் வாழும் மாந்தன் குளிர்மண்டிலத்தில் வாழும் மாந்தனைவிடப் பாலியல் உந்தலில் படுவிரைவு எய்துவது ஓர் இயற்கையுண்மை! சூழலியல் மெய்ம்மை!..... சூடு அச் சூட்டை மிகுதிப்படுத்தத்தானே செய்யும்!.....? அன்றைக்கு ஆண்ட வேந்தர்களை - மன்னர்களை எவரும் கேட்பாருமிலர்!... மேய்ப்பாருமிலர்!..... அவர்கள்தாமே மெய்யான மேய்ப்பர்கள்!.... அவர்கள் ஆங்காங்கும் வைத்ததுதானே சட்டம்!... இட்டதுதானே நெறி முறை!... எல்லாமும்.

வெள்ளைவெளேர் என வெளிறிய நிறமும் நெட்டையுடலும் மினுமினுப்பும் வாய்த்திருந்த அப் புதுக்கூட்டம் தங்களின் வல்லிய கரட்டுமுரட்டு இழுப்புக் குரல்களோடு இங்குப் புகுந்தபோது கடவுளர் நம்பிக்கையும், ஆவி நம்பிக்கையும் பலியீட்டு வழிபாட்டு முறைகளும் கொண்டிருந்த இத் தமிழக வேந்தர்களும், மன்னர்களும், குடிகளும் தெய்வப் பூசனைக்குரிய ஆற்றல் சான்றவர்களாகவே ஆரியரைக் கருதினர்! நம்பினர்! அரசனே அடிபணியும் போது அவனை அண்டியிருந்த குடிகள் எப்படி நிமிர்ந்து பார்ப்பது நிகழும்?!....

நாடோடியராகவே நீண்ட நெடுங்காலமாகத் திரிந்து அலைந்து வந்த- பல்வேறு வகைப்பட்ட மக்கள் வழக்கங்களையும் உலகியலையும் படிப்படியே வந்த வழியெல்லாம் அறிந்து - தெரிந்து - புரிந்து - உணர்ந்து வந்த அக் கூட்டம், நம் வேந்தர்களையும், மன்னர்களையும் மிக எளிதாக ஏமாற்றிவிடக்கூடிய திறம் செறிந்ததாகவே இருந்தது! அனைத்துக்கும் மேலாக.... முன்னர்க் குறிப்பிட்ட பாலியல் சூட்டுக்கு ஊட்டங்கொடுக்கும் நிலையிலாக

அரசர்களுக்கு விட்டுக் கொடுக்கும் போக்கினைப் பிராமணர் மிகத் திறமாகத் திரைமறைவில் படிப்படியே மேற்கொண்டுள்ளனர்!

காட்டகத்தின் ஓரிடத்தே பெருங்குழியொன்றை அகழ்ந்து வெட்டி (அதற்கு "பயம்பு" என்பது பெயர்! பயம்பு = யானை விழும் குழி) அதன்மேல் தழை-இலைசருகுகள் முதலியன கொண்டு பரப்பி அக் குழிக்கு மிகஅருகில் பெட்டையானை ஒன்றை (பிடியைக்) கட்டி நிறுத்திவைப்பது அன்றைய வழக்கம்! அப் பிடியை நோக்கி வேட்கை கொண்ட கடாயானை (களிறு) விருப்பத்தொடு அணுகும் நெருங்கிய அந் நிலையிலேயே "தடார்" என அப் பயம்பில் விழுந்து எழமாட்டாமல் கிடக்கும்! பிறகு, அக் கடாயானையைக் கயிறு கொண்டு பிணித்து வந்து விடுவது அன்றைய யானை பிடிக்கும் முறைகளுள் ஒன்று. அன்றிருந்த இம் முறைவழக்கத்தின் காட்சியையே "நனைகவுள் யானையால் யானை யாத்தற்று" - என்னும் குறள்வரி வழியே திருவள்ளுவர் சுட்டினார்! (குறள். 678).

இவ்வகைச் சான்றுக்காட்சியைக் கருத்தில்கொண்டு, “அன்றைய ஆரியர்கள் அரசன் பிடிப்பை அதாவது அரசனையே கையகப்படுத்திக் கொள்ளும் வினைமுறையை எவ்வாறு செய்தார்கள்" என்னும் நடைமுறை உண்மையையே அகநானூற்றுப் பாடல்வரியொன்று பதிவுசெய்து வைத்துள்ளது! "ஆரியர் பிடிபயின்று தரூஉம் பெருங்களிறு போல" (அகம்: 267:9:10) என்பது அவ்வரியின் படிவம்!.... அதாவது, (பிராமணர் - ஆரியர் பெட்டை யானைக்குப் பயிற்சி கொடுப்பார்கள். எதற்காக?... கடாயானையை எவ்வாறு கவர்ந்து இழுத்து வருவது, என்னும் திறமான முறைபற்றி....... அப்படிப் பயிற்சிபெற்ற பிடி (பெட்டையானை) தானேசென்று பழகிக் களிற்றினைப் (ஆண்யானையை) பற்றிக்கொண்டு வந்துவிடும்..... அதுபோல.....

இவ்வுவமைக்கு உள்ளீடாக அன்றைக்கு நடந்தேறிய உள்முகக் கசமுசாக்கள் பற்றிய உண்மைகளும் அடங்கியுள்ளன... உங்களால் உணர முடிகின்றதா?...

"இன்னகை ஆயம்" என்பது, அரசனுக்கு இனிமையை விளைக்கும் மகளிர் கூட்டம் ஆகும். பாட்டாலும் கூத்தாலும் பேச்சாலும் "இகிகிகி......" என்று நகையொலி எழுப்பியவாறு அரசனைப் பற்றிச் சூழ்ந்து கொண்டு இனிய மகிழ்ச்சியைச் செய்யும் மகளிர் கூட்டம், அது! இவர்கள் சுற்றிச் சூழ்ந்திருக்க விண்மீன்கள் பலவற்றுக்கும் நடுவிலே பால்நிலாப் போல அவ் அரசமடயன் அங்கிருந்தான்..... பல்மீன் நடுவண் பால்மதி போல இன்னகை ஆயமொடு இருந்தோன்" (சிறுபாணாற்றுப்படை: 219 : 220) ஓய்மான் நாட்டு நல்லியக்கோடன் என்னும் சிறிய ஓர் அரசப்பயலுக்கு இவ்வகை வாகு வசதி வாய்ப்பு நிலைகள் அன்றைக்கு இருந்தனவெனில், பெரிய பெரிய பேரரசப் பயல்களாகிய வேந்தர்களெல்லாரும் எவ்வகைவகையான இன்பங்களில் நீந்தித் திளைத்துக் கிடந்திருப்பார்கள் என்பதை நாம் உன்னித்து உணர்ந்து பார்க்கவேண்டும்!

இவ் வேட்கையுணர்ச்சிகளின் மீதுதான் – பார்ப்பான் கோட்டை கட்டினான்.....வேட்டையாடினான். அரசன், பார்ப்பான் சொன்னபடி படிப்படியாக பலபடி வைத்துக் கோயில் கட்டினான்...... குளம் வெட்டினான்! மந்திரங்கள் விண்ணில் எழுந்தன.... நம் திறங்களும்- உரங்களும் – நலங்களும் - வளங்களும் மண்ணுள் அழுந்தின!

காஞ்சிபுரத்துக்கு மேற்கில் ஓர் ஊர்!... "தாமர்" என்பது அதன் பழம் பெயர். அவ் வூரிலுள்ள கோயிற்கல்வெட்டுகளில் - இவ்வாறுதான் இப்பெயர் பதிவுற்றுள்ளது!" (காண்க : S. I.VOL. V. 1004. A.R.139-1896).

இவ்வூரில் வாழ்ந்து வந்த பார்ப்பனர்களில் ஒருவன் பெயர் "பல்கண்ணன்!..." கழகக் காலத்தில் இங்கு வந்தேறிவாழ்ந்த பார்ப்பனருள் பெரும்பாலார் தாங்கள் கொண்டிருந்த ஆரியப் பெயர்களுக்கு நேரிய மொழிபெயர்ப்பாலாகிய தூய தமிழ்ப் பெயர்களையே போர்த்திச் சூட்டிக் கொண்டு இயங்கினர்! ஏனெனில் தமிழரிடையே ஊடாடவும் உறவாடி உலை வைக்கவும் இங்குள்ள

தமிழ்மானப் போக்குக்கு ஒத்த தமிழ்ப்பற்று உடையவராகத் தங்களைக் காட்டிக்கொண்டு அவர்கள் தொடக்கத்தில் இவ்வாறு நடக்கவேண்டியிருந்தது!..

மேற்குறிப்பிட்ட "பல்கண்ணன்" என்னும் பார்ப்பானுக்கும் - இயற்பெயராக இந்திரன் என்றோஅவனுக்குரியவாகவிருந்த பலபெயர்களில் ஒன்றைச் சார்ந்தோ இருந்திருத்தல் வேண்டும்!. (தேவர்களுக்கெல்லாம் தலைமைப் பயலாய் இருந்த அவன் (அவ் இந்திரன்) முல்லைமாறித்தனமாகப் (மாற்று உருவில்) புரிந்த ஒரு பாலியல் குறும்பு வினைக்காக அக் குறும்புக்குத் தெரிந்தே - விரும்பியே ஆட்பட்ட (ஆட்டியாகப்பட்ட) முனிச்சி ஒருத்தியின் கணவனாகிய முனிப்பயல் ஒருவன் தந்த சாவத்தால் (சாபம்) உடம்பெங்கும் கருவாய்க்குறி (!) போன்ற ஆயிரம் கண்களைப் பெற்றான் என்பது பரவலாயிருந்த பழங்காலக் கதை! (இக்கதை - வள்ளுவர் காலத்தில் தமிழகம் முழுமைக்கும் தெரிந்திருந்தது! காண்க "இந்திரனே சாலுங்கரி" (குறள்: 25:2). எனவே இந்திரப் பயலாகிய அக் கேடிக்கு "ஆயிரங்கண்ணன்" என்பதுவும் ஒரு பெயராயிற்று! (காண்க: திவாகரம்) "ஆயிரங்கண்ணோன்" என்றவாறும் சுட்டப் பெற்றான், கற்பனைத்தலைவனாகிய இம் மடமூடக் காமவெறியன்!.... (காண்க: மணிமேகலை: 1: 261).

தாங்கள் தேவர்கள்!... தேவர்வழித் தோன்றல்கள்!.... பிரம்மாவின் அருமையான வாய்க்குள் மிக நுட்பமாகக் கருவேறி அதே வாய்வழியே வந்திறங்கிய புதுமைப் பிறவிகள்! தேவனாகவும் மாந்தனாகவும் ஒரேசமயத்தில் ஒக்கப் பிறப்பெடுத்ததால் - நாங்கள் இருபிறப்பாளர்கள்.... (இதற்கு இணையாக அவர்கள் மொழியில் அவர்கள் சொன்ன சொல் - "துவ-ஜா!" (dvi-ja) dvi = இரண்டு (two). Ja = பிறப்பு) (காண்க: "ஒன்று புரிந்து அடங்கிய இருபிறப்பாளர்" (புறம்: 367:12) (மேலுங் காண்க: திருமுருகாற்றுப்-படை: 182. மணிமேகலை: 3: 30).

தேவராதலால்(!) தேவர்க்குத் தேவனாகிய இவ் ஆயிரங்கண்ணனின் பெயரைப் பார்ப்பனருள் பலர் சூட்டிக்கொண்டிருந்தனராதல் வேண்டும்! அதில் ஒரு இந்திரனே.... (இந்திரன் பெயரைச் சூட்டிக் கொண்டிருந்தவனே) இத் "தாமர்' என்னும் ஊரில் வாழ்ந்து பல்கண்ணனாக **இருந்து இயங்கியுள்ளான்!. "தாமர்" என்னும் இவ்வூர் இன்று, "தாமல்" என்றவாறு வழங்குகின்றது. தாமல் - பல்கண்ணன் என்னும் இப் பார்ப்பான் அன்றைக்கு நெருங்கிய நட்பு - உறவு கொண்டிருந்த இடம்...! உயர்ந்த கோயில்! (கோ+இல்) கோயில்! = அரசனின் இல்லம்! ஆரியர் முதலில் புகுந்த இடம்- அரசனின் இல்லமாகிய (கோயிலே!).. அரண்மனை...**

அவ் அரண்மனையுள் இருந்து அன்றைக்கு ஆட்சி நடத்திய தலைவன் - சோழன் மாவளத்தான்! சோழன் நலங்கிள்ளியின் உடன் பிறந்த தம்பி!... அடிக்கடி சினங்கொள்பவன்!... முன்கோவி!.... சீறுபவன்!... சீற்ற மிகுதியால் எதிரில் இருப்பவரை எதிரில் எது உள்ளதோ அதைக் கொண்டு நையப் புடைத்து விடும் பழக்கத்தினன்!....

அச் சீற்றக்காரனாகிய மாவளத்தானோடு இத் தாமற் பல்கண்ணனாகிய பார்ப்பான் அரண்மனைக்குள் வட்டு விளையாடிக் கொண்டிருந்தான்.... (வட்டு என்பது வட்டுக்காய்களை உருட்டி விளையாடும், ஒரு வகைத் தாய விளையாட்டு.) பார்ப்பான் தன் திறனைக் காட்டும் முயற்சியாக ஆடிக் கொண்டிருக்கும்போதே.... (பார்ப்பான், அரசனோடு எந்த அளவுக்கு உள்முகத் தொடர்பை அன்றைய காலக்கட்டத்தில் கொண்டிருந்தான் என்பதற்கு இவ் விளையாடிய நிகழ்ச்சியும் ஒரு காட்சிக்கூறு...) வட்டுக்காயொன்றைத் (அவ் இனத்துக்கேயுரிய சூழ்ச்சி வாய்ந்த நரித்தனமாக) தம் அடிக்குக் கீழாக ஒளித்துவைத்துக் கொண்டான்!... ஆட்டத்துக்கு இடையே இத் திருட்டு விளையாட்டு வினையைச் சோழன் மாவளத்தான் கண்டுவிட்டான். கண்டு....விடவில்லை!.... திடுமென எதிரிலிருந்த மற்ற வட்டுக்காய்களை வாரி அப் பார்ப்பனப் பல்கண்ணன் மீது

சினத்தோடு ஓங்கி எறிந்தான்!.... அதாவது, அக் காய்களைக் கொண்டு அடித்தான்! (இச் செய்தி.... பழைய புறநானூற்று உரையாசிரியரால் மெல்லிய வடிவில் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது!... "சோழன் நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தானும் தாமற் பல்கண்ணனும் வட்டுப் பொருவுழி கைகரப்ப வெகுண்டு வட்டுக் கொண்டெறிந்தானைச் சோழன் மகன் அல்லையென நாணியிருந்தானைத் தாமற்பல்கண்ணனார் பாடியது!...")

அடிபட்ட பார்ப்பான்!... இம் மண்ணில் தான் பெற்றுத் தேர்ந்த தமிழாற்றலைக் கொண்டே மன்னனைப் பாடித் தூக்குகின்றான்..... இடையில் ஓரிடத்தில் மிகமிக நுண்ணுட்பமாக இழிவுபடுத்தியும் இடிக்கின்றான்!....

ஐயமுடையேன்!.... (புறம்: 43 : 13) என்கிறான்! அதாவது, "அடேய்!.... உன் பிறப்பிலேயே நான் ஐயப்படுகின்றேன்! (சந்தேகப்படுகின்றேன்!) (சோழன்சோழத்தி வயிற்றுவழியில் நீ முறையான கலவியில்தான் பிறந்தாயா?!.... அல்லது இடைச்செருகல் ஏதாவது நிகழ்ந்துள்ளதா...... என்று) - மெல்லிய வெளிப்பாடுதான்! - ஆயினும் வல்லிய கொடுந்தாக்கு நிறைந்த கடுமையான வாய்வீச்சு இது! எதற்கு எடுத்தாலும் திடுதிப்பென்று சினப்படுகின்ற தன்மை வாய்ந்திருந்த அம் மாவளத்தானாகிய மாவுப்பயல்! - இதனை அமைதியாகக் கேட்டுத் தலைகுனிந்தவாறு இருந்தான்!.....

மேலும், பார்ப்பான் அவனை நோக்கி இவ்வாறு பகர்கின்றான்!.... "ஆர்புனை தெரியல் நின் முன்னோ ரெல்லாம் பார்ப்பனர் நோவன செய்யலர்!" (புறம்: 43:13-14). (ஆர்=ஆத்தி) (ஆத்தியால் செய்யப்பட்ட மாலையணிந்த சோழமன்னர்களாகிய நின் முன்னோர்கள் எல்லோரும் - அவர்கள் யாவரும் பார்ப்பனர் மனம் நோகும்படியான சிறு செயலையும் செய்ததில்லையே!...அப்படிச் செய்யமாட்டார்களே!... (முன் ஆண்டுநின்ற எச் சோழப்பயலும் - பார்ப்பான் மனமானது சிறிதளவுக்கேனும் வருந்தும் படியான எச் செயலையும் இம் மண்ணில் செய்ததாக வரலாறில்லை என்பதனுள்

இவர்கள் காலத்துக்கும் முன்னர்ப் பார்ப்பான் எவ்வளவு பெரியவனாக மதித்துப் போற்றிப் பேணப்பட்டு வந்தான் என்னும் பதிவும் உடன் அடங்கியுள்ளது!)

நீ இப்படி என்னை அடித்து விட்டாயே! (சினந்து-வட்டுக்களைக் கொண்டு இவ்வாறு எறிந்து நின்றாயே! இது உனக்கு அடுக்குமா?..... (மற்று இது நீர்த்தோ நினக்கு.... (புறம் : 43: 14 - 15), என்கின்றான்!

அன்றைய பார்ப்பானுக்கு ஒவ்வொரு அரசப்பயலும் பணிந்து கிடந்தான்! புலவருள் பெரும்பாலரும் பார்ப்பானுக்கு எதிராக ஒரு சொல் சொல்லவும் அஞ்சி நின்ற காலம் அது! ஆரியப் பார்ப்பானுக்குச் சார்பினனாகவே - இயைந்தவனாகவே ஒவ்வொரு அரசனும் இயங்கி நின்ற காலத்தில் அவனை அண்டியும் ஒன்றியும் போற்றியும் ஏற்றியுமே தன் வாழ்க்கையை நடத்த வேண்டிய வழமையிலிருந்த புலவன் மட்டும் எவ்வாறு எதிரேறி நிற்க முடியும்?... பலநிலைகளிலும் அரசனுக்கு அறிவுரை கூறி - கடிந்துரைத்து - வஞ்சப் புகழ்ச்சிசெய்து - பலப்பலவாறு எதிர்த்தாற்போன்று பாடிய பலபாடல்கள் அக் காலத்துப் புலவன்மாரிடமிருந்து எழுந்துள்ளன. எனினும், அவனுடனிருந்த பார்ப்பானைத் தோலுரித்துக் காட்டற்கான முயற்சிகள் அவர்கள் மூளைகளில் முளைவிடாமலேயே போயின! அப்படி முயன்றிருப்பினும், ஆரியத்துக்கே உரிய நுட்பச் சூழ்ச்சித் திறன்களின் முன் அவை சுக்குநூறுகளாகச் சிதறித்தாம் போயிருக்க முடியும்!....

அன்றைய அரசர்கள், அவர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்த பார்ப்பனக் கூட்டம் முழுமையையும் தாமே புரந்தனர்; பேணி நலஞ்செய்தனர். இந்நிலை எழுதப்படாச் சட்டம் போன்றே அக்காலத் தமிழகத்தில் இயல்பான செயற்பாடு கொண்டது!. (காண்க: "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும் பெண்டிரும் பிணியுடை யீரும் பேணி" (புறம்: 9:1-2).

அன்றைக்கு அரசாண்டவன், ஆரியப்பார்ப்பான் ஒவ்வொருவனையும் தலைதாழ்த்திப் பணிந்து வணங்கினான்! அப்படி

வணங்கத்தான் வேண்டும் என்றவாறு அரசர்களை நோக்கிப் புலவன்மார் அடிக்கடி அறிவுரை கூறிக்கொண்டே இருந்தனர்! பார்ப்பனப் புலவனும் கூறினான்; பழந்தமிழ்ப் புலவனும் இந்நிலைக்கு ஒத்திசைத்தான்! அதாவது, ஒத்து ஊதினான் அல்லது ஒத்து ஓதினான்!

"பாமுளூர்" என்னுமிடத்துப் பகைவரை வென்று" பாமுளூர் எறிந்த இளஞ்சேட்சென்னி" என்றவாறும் "செருப்பாழி" என்னுமிடத்துப் பகைவரை வென்று "செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி" என்றவாறும் புகழப்பெற்ற, "நெய்தலங்கானல்" என்னும் ஊரிற் பிறந்த சோழனாகிய இளஞ்சேட் சென்னியை "ஊன்பொதி பசுங்குடையார்" என்றவாறு தொடராற் பெயர்பெற்ற புலவர் பெருமான் ஒருவர் இவ்வாறு பாடுகின்றார்...

"பெண்டிர்தம் (மகளிரின்) முயக்கத்தின் வழி (தழுவலின் வழி) உன்னை மாறுபடப் புரட்டிப் போடுவர்!... அந் நிலையல்லாமல் பகை வீரர்கள் உன்னுடன் நடத்தும் போரில் நீ மாறுபடக் கிடக்குமாறு புரட்டிப்போட இயலாதவனாக இருக்கிறாய்....." என்னும் பொருள்பட அவர்பாட்டில் இவ்வாறு கூறுகின்றார்.. அது.- இது....

"மகளிர் மலைத்தல் அல்லது மள்ளர் மலைத்தல் போகிய
சிலைத்தார் மார்ப!" (புறம்:10: 9-10)

அவனுக்கிருந்த காமத்திறனைக் காட்டிலும் அவனைச் சூழ்ந்திருந்த மகளிர் கூட்டம் திறன்களைக்காட்டி அவனைப் படுத்திய பாட்டை இவர் என்னவோ நேரிலேயே நின்று நெடுநேரம் கண்டுகளித்து வியந்தவர் (VOYEUR) போலப் பதிவுசெய்துள்ள இச் செய்தியுள் அவ் இளஞ்சேட் சென்னி போன்றோரின் அகவாழ்க்கைப் பிறழ்ச்சிகளையே அல்லது புரட்சிகளையே (அதாவது, ஒருவரையொருவர் புரட்டிக்கொண்டு கிடந்த புரட்சிகள்!...) (பெரும்பாலும் "புரட்சிகள்" எல்லாம் தமிழகத்தில் இப்படித்தான் என்றும் கிடந்து புரண்டு கொண்டு கிடக்குமோ?.... என்றவாறு இன்றைய செய்திகள் சிலவும் இவ்விடத்தில் எவை எவற்றையையோ நம்மை எண்ணவைத்துப் புரட்டியெடுக்கின்றன!...) உள்ளீடுகளாகக் காணவியல்கின்றது.

சோழனை விடச் சேரன் என்ன இளைத்தவனா எண்ணி... அப் பயல்களில் ஒருவனை இங்குச் சான்றுக்காகக் காண்போம், வாருங்கள்..... "செல்வக் கடுங்கோ வாழியாதன்" என்னும் இச் சேரப் பயலுக்கெனக் "கபிலன்" என்னும் தமிழ்த்திறம் பழுத்த பார்ப்பான் பத்துப்பாட்டுக்களைப் பாடினான்!. அவற்றிலொரு பாட்டுக்கிடையில் அக் “கடுங்கோ" மகளிர் இடைகள் அடியே கிடந்த பயல் என்பதையும் (உயர்வுபடும்படியாக) ஓரிடத்துள் கூறியுள்ளமையில், அக் காலத்து அரசப்பயல்களின் பாலியல் திருவிளையாட்டு எல்லைமீறல்களும் உடன் பதிவாகியுள்ளமையைக் காணலாகும்.

“மல்லாந்து முழிஞ்சா மார் மேலே!" - என்றவாறு இன்றும் ஓர் அழகிய நாட்டுப்புறப் பழமொழி தமிழகமெங்கும் வழக்கில் உள்ளது. (இதன் செப்ப வடிவம், "மல்லாந்து உமிழ்ந்தால் மார்மேலே! என்பதாகும்!!) (படுத்துக் கொண்டு மேல் நோக்கி எச்சிலை உமிழ்ந்தால் அதே ஆளின் மார்பிலேயே வந்து விழும்" என்பது அப் பழமொழியின் புறப்பொருள். (நம்மவர் சார்ந்த குற்றங்குறைகளை நாமே வெளிப்படுத்தினால், அது நமக்கே இழிவைத் தருவதாகி நிற்கும் என்பது, அதற்குரிய உட்பொருள்!).

இதில் உள்ள 'மல்லாந்து' என்பதன் பழைய நேரிய செப்ப வடிவம் “மலர்ந்து" என்பதாகும். மலர்த்துதல் > மல்லாத்துதல் (கொச்சை வடிவம்) முதுகுப்புறம் தரைத்தளத்தில் பதியுமாறு - மார்பை வெளிநோக்கி அகலித்து விரித்துப் படுத்தல்- "மலர்ந்து படுத்தல்" ஆகும். மலர்ந்து படுத்தலை - “மலர்ப்பு" என்றுங் கூறுவர்!

இப்போது கேளுங்கள்!... செல்வக் கடுங்கோ வாழியாதனை நோக்கிக் கபிலன் கூறியதை!.. “செல்வக் கோவே!... சேரலர் மருக! (பதிற்று:7:161) நின் மணங்கமழ் அகலம் மகளிர்க்கு அல்லது மலர்ப்பு அறியலையே!" (பதிற்று: 7:4-5) (பழையவுரை: (அகலம் = அகன்ற மார்பு) மகளிர்க்கு அல்லது மலர்ப்பு அறியலையே என்றது, நின்னொடு பொருவார் இன்மையின் - நின் அகலத்தை நின் மகளிர் போகத்துக்கு

இடமாகவல்லது மலர்வித்தலை அறியாய்!... மகளிரிடம் இன்பந்துய்க்கும் நேரத்தில் மட்டுமே (புணர்ச்சி நேரத்தில் மட்டுமே) - மலர்ந்து (மல்லாந்து!) படுத்துக் கிடப்பாயே தவிர- மற்ற நேரங்களில் நீ மலர்ந்து (மல்லாந்து) கிடக்கமாட்டாயே, மன்னா!.... என்றவாறு இக் கபிலன் கூறியுள்ள செய்தியுள் - அம் மடச் செல்வக்கடுங்கோ வாழியாதன் அவன் அரண்மனைப் படுக்கையறைக்குள் படுத்துக் கொண்டே (மலர்ந்து) ஆட்சி பண்ணிய பன்னாடைத்தனமே நம்முட் காட்சியாகத் தெரிகின்றது....

இச் செய்தியைச் சொல்லுவதற்கும் முன்னர் அவன் சொன்ன மிக இன்றியமையாத கூற்று, இதுதான்!..... “மன்னா!..... இவ்வுலகில் நீ யாருக்கும் பணிந்து நின்றதே கிடையாது!... ஒரே ஒரு வகுப்பினரைத் தவிர!... அவர்கள் தாம் பார்ப்பனர்கள்!" பாட்டின் முதல் வரியிலேயே இதனை முதன்மைப்படுத்திப் பாடுகின்றான் பார்ப்பான்!....

அவ் வரி, இது! "பார்ப்பார்க்கு அல்லது பணிபு அறியலையே" (பதிற்றுப்பத்து: 43. ஏழாம்பத்து:3:1)

அடுத்த செய்தியாகத்தான், மேற்சொன்ன மலர்ந்து படுத்த மானங்கெட்ட செயலுக்கான உசுப்பலும்- கிர்ர்ர்... ஏற்றலும் தொடர்கின்றது!...

இப்படியாகப் பாடிய பத்துப்பாட்டுக்களில் மகிழ்ந்து வெறியேறிய அச் செல்வக்கடுங்கோ வாழியாதன், இக் கபிலன் என்னும் கடைந்தெடுத்த பார்ப்பானுக்குத் தன் அரசக் கருவூலத்தினின்று அள்ளி வாரிக் கொடுத்த தொகை எவ்வளவு தெரியுமா?!... “நூறாயிரம் பொற்காசுகள்!" அத்தோடு மட்டுமில்லை!... அக் கொடைமட மடயன் மிகப்பல ஊர்களையும் உடன் சேர்த்துத் தானமாகவும் தந்தான்!

தானமாகத் தந்த ஊர்களும் அவ்வளவு - இவ்வளவு என்று கணக்கிலடங்காதன!... பெருங்குன்னூர்க்கிழார் என்னும் புலவரொருவர் கபிலன் அன்றைக்குப் பெற்ற தானவூர்கள் (பிரமதாயம்) எவ்வளவு என்றவாறு அறிய முடியாதிருந்த நிலையை,

ஒரு பாட்டில் இவ்வாறு பதிவு செய்கிறார்..... (காண்க: கபிலன் பெற்ற ஊரினும் பலவே! (பதிற்றுப்: 85:13).

"நன்றா" என்னும் குன்றின்மேல் ஏறிநின்ற அவ் வாழியாதன் - தன் கண்ணுக்கு எவ்வெவ்வூர்கள் எல்லாம் தென்பட்டனவோ அவற்றையெல்லாம் "கபிலன்! நீயே எடுத்துக் கொள்!" என்று கூறி அளித்துவிட்டான்! (சான்று: பதிற்றுப்பத்து: ஏழாம்பத்து: பதிகம்: பழையவுரைக் குறிப்பு: சிறுபுறம் என (= சிறுகொடையாக) நூறாயிரம் காணம் (ஓரிலக்கம் பொற்காசு) கொடுத்து, "நன்றா" என்னும் குன்றேறிநின்று தன் கண்ணிற்கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடுத்தான், அக் கோ!).

கபிலன் பிறப்பிலேயே பச்சைப் பசும்பார்ப்பான்!..... (பாண்டிய நாட்டிலுள்ள திருவாதவூர்க்காரன்!) இவன் பாடிய புறநானூற்றுப் பாடல்கள் இரண்டில், "யானே, பரிசிலன் மன்னும் அந்தணன் (புறம்: 200:13), "யானே அந்தணன் புலவன்" (புறம்: 201:5-7) என்றவாறு அனைவர்க்கும் தெளிவூட்டுமாறு தன்னைத் தானே முற்படுத்திப் பதிவுசெய்து கொண்ட பத்தரைமாற்றுப் பசும்பார்ப்பான்.... மாறோக்கத்து நப்பசலையார் என்னும் பெண்பாற் புலவர் ஒருவரும் இவனைப் - "புலன் அழுக்கற்ற அந்தணாளன்!" என்றவாறு அன்றைக்கே குலச்சான்றிதழும் தந்துள்ளார். (காண்க: புறம்:126:11). இத்தகைய பார்ப்பான் - பார்ப்பனர்களைத் தாங்கித் தூக்கி ஏத்தி நிறுத்தியது இயல்பான இனக் காப்பு நிகழ்ச்சியே!.... நம் அன்றைய தமிழ்ப் புலவனுக்கு, என்ன வந்தது!.... மூளைக் கோளாறு!...

"காரிக்கிழான்" என்னும் தமிழ்ப்புலவன் பல வேள்விக்கூடங்களை யமைத்து அவற்றின்வழியே "பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி" என்றவாறான பட்டத்தொடு வானிலேறிப் பறந்த மற்றொரு மானக்கேடனுக்குத் தன் பாட்டின் ஓரிடத்தில் இவ்வாறு அறிவுரையாற்றுகின்றான்! "**இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த நான்மறை முனிவர் ஏந்து கை எதிரே!**" (**புறம்**: 6: 19-20) "**மேம்பட்ட நான்கு மறைகளையுடைய (இருக்கு, அசுர்,**

அதருவணம், சாமம் எனப்பட்ட வேதங்கள்!) ஆரிய முனிவர்கள் "நீ நீடு வாழ்க" என்று கைகளை மேலே தூக்கும் போது அவர்கள் முன்னே நீ உடனே வளைந்து பணிந்து வணங்கடா!" என்கின்றான்!

அக் காலவட்டத்தில் வட்டத்திலேயே வணங்கி நின்ற இவ்வகைத் தமிழ்மன்னர்களாகிய மானக்கேடிகளைப் பார்ப்பனர்களின் பாதங்களிலும் மேலும் பணிந்து படிந்து கிடக்குமாறு நம் புலமையாளர்களும் வேண்டிக் கொண்ட வெட்கக்கேட்டு நிகழ்ச்சிகள் படிப்படியாக நமக்குரிய தமிழாண்மையை - நம்மிடம் உயிர்ப்பண்பாகத் திகழ்ந்த தமிழ்மானத்தை - நம்மரபோடு பின்னிப் பிணைப்புற்றுக் கிடந்த தமிழ்வீற்றை வீழ்த்தின! தாழ்த்தின! ஆரியப்படுகுழிக்குள் ஆடி ஆழ்த்தின!

"உ" என்னும் ஓர் உயிர்ஒலி, உயர்ச்சிக்கருத்து வேர்ப்பொருளை உள்ளடக்கியுள்ள அரிய - தொடக்கக்காலத் தொல்ஒலி.... உ > உய் உய் + அர் > உயர் உயர் + அம் > உயரம் உயர் + (ச்) + சி > உயர்ச்சி உயர் + வு > உயர்வு - முதலிய சொல்வளர்ச்சிகளை இக் கருத்து விளக்கத்திற்கென இங்குக் கருதிப்பார்க்கலாம்!

"உய்" என்னும் ஒலியீடு- மேற்செல்; மேல் ஏறு; மேல் தாவிச்செல் என்பன போலும் கருத்துக்கள் பெற வெளிப்படுத்தப்பெற்றுப் - பிற உயிரிகளின் தாக்குதலினின்று "தப்பித்துக் கொள்ள மேலேறு" என்னும்படித் தனிப் பொருளுக்கும் நின்று செறிவுற்று நிலைத்துப் பயன்பட்டு வருகின்றது. (உய்+தி> உய்தி உய்+வு>உய்வு = மேலேறித் தப்புகை; தப்புகை; ஈடேற்றம்; கழுவாய்.) (காண்க: "எந் நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம்- உய்வு இல்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"-குறள்: 110).

உ>உய்>உய்வு >உவு உவு + அவு > உவவு: வானவிசும்பில் உயரத்தே தோன்றியொளிரும் நிலா, நிறைநிலா; முழுமதி. (காண்க: "உவவுமதி உருவின் ஓங்கல் வெண்குடை" (புறம்: 3:1).

உவவு>உவா = நிறைநிலா. (ஒ.நோ: இரவு> இரா உணவு > உணா)

மகிழ்ச்சியுணர்ச்சி வாய்க்கும் சூழலின்போது - நாமே உயர்வுற எழும்புவது போன்று நமக்குத் தோன்றும்; மேலே பறப்பது போன்ற நிலையில் - நம் உள்ளத்து அசைவுகள் அக் கால் உயர்வதிர்வு கொள்வதுவும் இயல்பானதே! குழந்தைக்கு மகிழ்ச்சியேற்படும் - சூழலின்போது அது இயல்பாகத் துள்ளிக் குதிப்பதைக் கண்டும் - இதன் உண்மையை நாம் உணரலாம்! மகிழ்ச்சியில் துள்ளினான் - மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான் - மகிழ்ச்சியில் துள்ளிக் கூத்தாடினான் - மகிழ்ச்சி பொங்கப் பேசினான்..... என்றவாறாக மக்கள் பயிலும் இன்றைய பேச்சுவழக்குகளிடையேயும் இவ் எழுச்சியையும் துள்ளலையும் குதிப்பையும் நாம் இயல்பாகக் காணலாகும்! இவற்றிடையே எழுகின்ற உயர்ச்சிக் கருத்தமைவுகள் நன்கு கவனிக்கத் தக்கனவாகும்!

உவு > உவ > உவ + (ப்) + பு > உவப்பு உவ + கை > உவகை உயர்ச்சிக்கருத்து அடிப்படையிலேயே இவ் உவப்பும், உவகையும் இவ்வகையில் நம் தமிழில் உருக்கொண்டுள்ளன. (காண்க: "உவப்பே உவகை" தொல். சொல்: உரி: 11).

"சிவப்பு" என்பதைச் "சிகப்பு" என்ற வடிவில் வகர - ககரத் திரிபாக வழங்கும் நிலை போன்றே, "ஆ....ஆ...." என்பதை "ஆவா" என்றொலித்துப் பிறகு "ஆவா" என்பதனையும் "ஆகா" என்றவாறு (வா > கா) வழங்கும் நிலை போன்றே, "உவப்பு" என்பதை "உகப்பு" என்றவாறும் தமிழில் ஒலித்துப் பயின்றனர்! (உகப்பு: உயர்ச்சி) (காண்க:"உகப்பே உயர்தல்" தொல். சொல். உரி:10)

உவு + அம்பு > உவம்பு = ஓம்பு. (ஒப்புநோக்குக: உவகை > ஓகை) ஓம்புதல்; பாதுகாத்தல்; பேணுதல்; உடலோம்புதல்; உடம்பைப் பாதுகாத்தல்; உடம்பைப் பேணிவளர்த்தல்.

முற்காலத்தில், ஊருக்குப் புதியவராய் ஒருவர் வந்து தங்கநேர்ந்த போது, அவர் தங்கியிருக்கும் சில நாள்களுக்கு வேண்டிய சிறந்த உணவும், தங்குவதற்குரிய இருப்பிடவசதியும் அளித்து அவரைப் பேணிப் புரந்து மகிழும் சிறந்த பண்பாடு - தமிழகமெங்கணும் பரந்துபட்ட அளவில் ஒரு பொது இயல்பாகவே இருந்தது! ஆரியப்பார்ப்பனர்கள் இம் மண்ணுள் வந்தேறி நிலை கொள்ளுவதற்கு முன் மிகப் பரவலாயிருந்த இயல்புநிலை இது!....

உணவுக்கடைகளோ, நின்றேந்தி உண்டு ஓடுவதற்கு ஏந்துடைய (வசதியாக அமைந்த) விரைவுணாக் கடைகளோ, (Fast foods) தங்கல் விடுதிகளோ அறவே வழக்கத்தில் வாராதிருந்த அன்றைய காலத்தில் ஊர்க்கோ, தம் இல்லத்திற்கோ வருகைதந்த புதியவரை- அல்லது புதியவர்களை விருந்தோம்பிப் புரந்து பேணி மகிழும் சிறப்புவினை, இல்லறம் நடத்தும் கணவனுக்கும் மனைவிக்கும் ஓர் அறக்கடமையாகும் என்றவாறே கருதப்பெற்றுக் கடைப்பிடிக்கப் பெற்று வந்தது!

உறவினர்கள், **நண்பர்கள் ஆகிய இரு திறத்தாரும்** - ஒருவரின் இல்லத்துக்கு வருகை தருதலும் சில பல நாள்கள் தங்கியிருந்து உண்டு மகிழ்ந்து செல்லுதலும் - விருந்தோம்பல் வகையிலாக அக் காலத்தில் கொள்ளப்படவில்லை. இயல்புவழக்கமும் கடமையுமாதலின் இந்நிலைகளை அறத்தின்பாற்பட்டவையாக மக்கள் கருதவில்லை. அன்று, புதியோரே விருந்தினராவார்! (விருந்தினர் "புதுவர்" என்ற சொல்லாலும் கட்டப் பெற்றனர்).

"விருந்து" என்னும் சொல், விரும்புதலையுடையது என்னும் பொருட்பாட்டில் எழுந்துள்ள அழகு - நன்கு கவனிக்கத்தக்கது. விருந்து என்றாலும் விரும்புதல்; ஓம்புதல் என்றாலும் விரும்புதல். இரண்டு விருப்பக் கருத்துக்களை அடக்கிய "விருந்தோம்பல்" என்றவாறான இக் கூட்டுச்சொல் உருவாக்கத்துள்ளேயே - தமிழ்மக்களின் பரந்துபட்ட மாந்தநேயப் பான்மையையும் ஒருவரால் அறிந்து கொள்ளவியலும்!

கணவனும் மனைவியுமாக இல்லத்தின்கண் இருந்து வாழ்க்கை என்ற ஒன்றை வாழ்வதே வரும் விருந்தினரைப் பேணி அவருக்குப் பல வகையிலும் நன்றி செய்வதற்காகத்தான்! இது, ஒரு தமிழறக்கூற்று!

அறவழியில் பொருளீட்டுவதும், அறவழியில் ஈட்டிய பொருளை, அற்றார்க்கும் – இல்லார்க்கும் - ஏதிலிகட்கும் பகிர்ந்தளித்தலும், அறவழியில் இன்பந்துய்த்தலுமாகிய நெறிகளையே தமிழ்மக்களில் மிகப் பெரும்பான்மையர் தங்களுக்கான பொது இயல்புகளாகக் கொண்டு உயர்ந்த நேயவாழ்க்கை வாழ்ந்த காட்சிகளையே ஆரிய வருகைக்கு முன்னீடான தமிழகத்தில் பரவலாகக் காணும் நாம், ஆரியர் இங்கு வந்தேறி நிலைகொள்ள, நிலைகொள்ள அவ் அடிப்படைப் பண்புகளிலேயே தமிழர்களிடம் நெகிழ்ச்சிகளும் நெளிவுசுளிவுகளும் தோன்றத் தொடங்கிவிட்ட அவலப் போக்குகளையும் படிப்படியே காணுகின்றோம்!

வேளாண்மகளிர் தம் பிள்ளைகளை வெளியிலனுப்பிப் போய்க் கொண்டிருந்த வழிப்போக்கரைத் தடுத்துத் தம்வீட்டிற்கு வருவித்து விருந்தோம்பி அனுப்பியமை - போன்ற செய்திகள் எல்லாம் இம் மண்ணுள் நடந்த இயல்பான பொதுநிகழ்வுகள்... (காண்க: சிறுபாண்: 190-125).

மாலைநேரத்தில்... ஒவ்வொரு வீட்டிலுமுள்ள தத்தம் வாயிற்கதவை அடைத்தற்கு முன்பாக அவ்வாயிலின்கண் நின்று "விருந்தினர்களாக எம் வீட்டிற்கு வருகின்றவர்கள் யாராவது இருக்கின்றீர்களா?...." (வருவீர் உளீரோ?.... குறுந். 118:4) என்றவாறு உரக்கக் கூவி அழைத்துவிட்டுத்தான் பிறகு கதவைமூடும் பழக்கம் - வழக்கம் இத் தமிழகத்தில் தொன்றுதொட்டு இயல்பான பொதுநடைமுறையாகவே இருந்தது என்பதை அறியும்போது மிகப் பண்பட்ட ஒரு பெரும் நாகரிகக்கூட்டம் வாழ்ந்த அப்பழம் பெருந்திருத் தமிழ்நாட்டையே நம் உள்ளத்துள் காணுகின்றோம். உணர்வெல்லாம் தித்திக்கின்றது!

என் காதலன் விடுத்த தூதை (தூதினைக்) கொண்டு வந்து இக்கனவு எனக்குக் காட்டியது. இக்கனவு விருந்துஆளாக என்பால்

இப்போது வந்துள்ளது! - இக்கனவுக்கு என்ன விருந்து படைப்பது என்று எனக்கு ஒன்றும் புரியவில்லையே!... என்றவாறு ஒரு தலைவி துடிக்கின்ற கற்பனைக் காட்சியைத் திருவள்ளுவர்பெருமான் நம் நெஞ்சக்கண்களுக்கு முன்னர் நெடும்படமாக்கி நிறுத்துகையின்போது, அன்றைய நம் தமிழகமக்களின் இயல்பான பண்பாட்டுத் தகைமையின் படப்படியையே (xerox copy) அதனுள் கண்டு நிறைந்து மகிழ்கின்றோம்! (காண்க; "காதலர் தூதொடு வந்த கனவினுக்கு யாது செய்வேன்கொல் விருந்து" குறள்.1211) (தூதாக வந்த கனவுக்கு விருந்து செய்து அனுப்புவது பற்றிய மனவுணர்வு கற்பனையே ஆயினும், அத்தகு **கற்பனையானது நன்கு ஊறிப் பழுத்துப் பதன்பட்டுப் பரந்து** விரிவெய்திய மாந்தநேயஞ் செறிந்த பண்பட்ட ஒரு பெரும் பேரினத்தில் மட்டுமேயே கருவும் உருவும் வெளிப்பாடும் கொள்ளவியலும்!.... ஆழ்ந்து சிந்திப்போரால் மட்டுமே – இவ் வுண்மையையும் தெளிவாக உணரவியலும்!....)

இரத்தல் (பிச்சையெடுத்தல்) இழிவானது. அப்படி ஒருவன் இரந்து நிற்கும்போது - ஈயேன் (தரமாட்டேன்!) என்று அவனிடம் சொல்வது அவ் இரத்தலைவிட (பிச்சையெடுத்தலைவிட) மிக இழிவானது!..... "இதனை எடுத்துக்கொள்ளுங்கள்!" என்றவாறு நெஞ்சம் மகிழக் கொடுத்தல் உயர்வானது; அப்படி ஒருவர் கொடுக்கும்போது, "எனக்கு வேண்டவே வேண்டா!" என்று அதனை மறுத்து ஏற்றுக் கொள்ளாமல், தவிர்த்துவிடுதல்- அக் கொடுத்தலை விடவும் மிக உயர்வானது... (காண்க: புறம்: 204: 1-4) என்பன போலும் உயர்ந்த மனவளச் செழும்பண்புகள் நிறைந்த ஓர் உயரிய தமிழ்க் கூட்டத்தை - பிறர் நலம் நோக்கி வாழ்ந்த – பீடும் பெருமிதமும் நிறைந்த ஓர் அரும்பெருந் தமிழினத்தை - உழைத்து உண்ணுதலை மட்டுமே பெருமையாகக் கருதி மிகக் கடுமையாக வினையீடுபாட்டில் தோய்ந்திருந்த ஒப்பற்ற உழைப்புக் கூட்டமாகிய உண்மைத் தமிழ்க்குடியினரை - இம் மண்ணின் மைந்தர்களை இங்கு வந்தேறிய ஓர் அயல்நாடோடியர் குழாம் - மிகமிக எளிதாக ஏய்த்து விட்டமை யையும், ஏய்த்ததோடு விடாது ஏறி அமுக்கி அழுத்தி நசுக்கியவாறே தானும் நின்று

நிலைகொண்டு விட்டமையையும், அதன் தொடர்ச்சிக்கென இன்று இந்நொடிப் பொழுதிலும், அவ் அயலினம் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கும் அயர்ச்சியில்லாத முயற்சிப்போக்குகளையும் எண்ணஎண்ண நமக்கு வியப்பே மேலிடுகின்றது!

வினை செய்வது - தொழில் புரிவது - அவற்றிலேயே தொடர்ந்து தோய்ந்து இருப்பது உயிர்போன்றது (உயிர்க்கு நிகரான விருப்பத்துக்கு) என்னும்படியான கருத்துடைய ஒரு கடுமையான உழைப்புக்கூட்டத்தை (காண்க: குறுந் : 135-1) ஓடுகாலியரால் ஆடுமாடுகளாகிய கன்றுகாலிகளை ஓட்டியவாறு மெலுக்காக அலைந்து திரிந்துஇறுதியில் ஒன்ற வந்து அண்டி நின்ற அயல்கூட்டம் ஒன்று, தம் சூழ்ச்சித்திறத்தாலேயே சூம்பவைத்துவிட்ட - தேம்ப வைத்து விட்ட - வெம்ப வைத்துவிட்ட வரலாற்றுச்செய்திகள் யாவும் கவலையோடு கண்டு மனம்பொருமுதற்குரிய அவலச்செய்திகளாகவே நம் முன் கிடக்கின்றன!

தமிழக அரசர்களின் அரண்மனைகளுள் போக்குவரத்து மேற்கொள்ளத் தொடங்கிய போதேயே, தங்களுக்குரிய தொழில்கள் ஆறு வகைப்பட்டன என்றும் முறையே, ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல் - ஏற்றல் - ஆகியனவே அவை எனவும் - ஆரியப் பார்ப்பனர்கள் மிகத் தெளிவாகப் பதிவு செய்து விட்டனர்! அரசன் ஒப்பேற்புக்குப் பின்னர் (sanction) மக்களிடையேயும் இதனை அழுத்தமாகத் தெரிவித்து விட்டனர்!

வேதத்தை ஓதுவது; வேதத்தை (அவர் இனத்தார்க்குள் மட்டும்) ஓதிக் கற்பிப்பது; வேள்வி செய்வது; வேள்வி செய்ய வைப்பது; ஈவது; ஈவதை ஏற்பது (அதாவது பிறர் "பிச்சை" தருதலை ஏற்றுத் தின்பது) முதலிய ஆறு செயற்பாட்டு வகைகளை இங்கு வந்து காலூன்றிய ஆரியப் பார்ப்பனர்கள், தொழில்கள் இவை எனக் கூறி இயங்கினர்! (காண்க: "ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்றிவை ஆறும் ஆதிக் காலத்து அந்தணர் தொழிலே!" பிங்கலம்: 729).

ஆரியர் இவ் ஆறு தொழில்களைச் (?..) செய்தமை காரணமாக "அறு தொழிலாளர்" என்றும் (காண்க: பிங்கலம்: 726), "அறு தொழிலோர்" என்றும் (காண்க: குறள்: 560), "அறுதொழில் அந்தணர்" என்றும் (புறம்: 397:20) பலவாறு சுட்டப்பட்டனர்!

மூளை என்ற ஒன்று அறவே அற்றுப்போன - அல்லது இற்றுப்போன - களிமண்ணே அல்லது மண்ணாங்கட்டியே (தறிதலையே = முண்டமே...) இவ் ஆறு செயற்பாடுகளையும் தொழில்கள் என்றவாறு கருதுவான்!

"அறுதொழில் அந்தணர்" எனவரும் புறநானூற்றுத் தொடர்மொழிக்கு உரைக்குறிப்பு வரைந்த பெரும்புலவர் ஔவை துரைசாமிஐயா அவர்கள் "உழவு வாணிகம் முதலிய தொழில்களைச் செய்யாமைபற்றி ‘அறுதொழில் அந்தணர்’ எனப்பட்டனர் என்றால் சிறப்பென அறிக!" என ஒரு குத்துக்குத்தி நிறுத்தியுள்ளமையும் இவ்விடத்திற் குறித்துக் கருதுதற்குரியது! (காண்க: புறம்: 397: 20-21 உரைக்குறிப்பு).

(அறு தொழில் அந்தணர் - வேலையில்லாத வெற்றுவெட்டிகளாகிய அந்தணர்கள்.)

ஆறுதொழில்களில் இறுதியாக அவர்கள் குறித்த இரப்பு என்னும் (பிச்சை எடுத்தலாகிய) வினையே அவர்கள் ஆற்றிய (ஆட்டிய) முதல் தொழில்!... அவர்கள் எடுத்த இரவு (பிச்சை!)... நாகரிக இரவு!.. அதிகார இரவு!... போட்டுத் தீரவேண்டியது, கட்டாயமானது என்று வலியுறுத்திக் கடைப்பிடிக்கச் செய்யப்பெற்றன!. அச் செய்கைகளின் நடைமுறைத் தொடர்ச்சிகளே இயல்பான எழுதப்பெறாச் சட்டங்கள் ஆயின.

ஆரியர் நாடோடியராகக் (nomads) கூட்டங்கூட்டமாக வந்த பொழுது- பாடிக்கொண்டு வந்த பல்வேறுவகையான திருத்தமற்ற நாட்டுப்புறப்பாடல்கள் - சிறு தெய்வங்களை வாழ்த்திய பாடல்கள் - முதலியவற்றின் மொத்தத் தொகுப்பே - "ரிக்" என்னும் கோப்பு

நூலாகும். அவ் ஒன்றே - பிறகு மூன்றானது! (இருக்கு - யசுர் - சாமம்) இம்மூன்றுக்குமான பெயர் "த்ரயீ" என்பதாகும். வசியம், சாவனை (சாவம் இடுவது...) முதலிய பல்வேறு குருட்டு திருட்டு ஏய்ப்பு ஏமாற்று வினைகளுக்கு ஏற்புடையதாகப் பின்னிப் பிணைத்து மிடைந்த மந்திரத் திரட்டே அதர்வ வேதம் ஆகும்! இந் நான்கில் கடையனவான மூன்றும் இந் நாவலந்தீவாகிய நாட்டுள் அடியெடுத்து வைத்த ஆரியர் ஆர அமர அமர்ந்து கொண்டு முந்தைய "இருக்கு" மறையினின்று இறக்கிப் பொருக்கிப் பிரித்தனவும் தேவையானவிடத்துக் கொண்டு கூட்டியனைவும் ஆன பயனற்ற குப்பை கூளங்களே!

இக் குப்பை கூளங்களை இந்நாட்டிலிருந்தார் அனைவரும் பெருமையாகக் கருதி மதிக்கின்ற வகையில் ஏற்றிக் கூறித் தூக்கி நிறுத்தினர்! (அதனுள் உள்ள செய்திகளில் ஓர் இம்மியளவும் வெளியில் பிறர்க்குத் தெரிந்து விடாதபடி மிகக் கரவாக மறைத்தவாறே) அவர்களுக்குள்ளேயே ஓதுதலும் ஓதுவித்தலும் தொடர்ந்தனர்; ஆரியப்பார்ப்பனர்களுக்கு என்னென்ன கடமைகளை இந்நாட்டிலுள்ள மற்றைய பிற வகுப்பினர்யாவரும் எவ்வெவ்வாறெலாம் ஆற்றுதல் வேண்டும் என்னும்படியான கட்டளைகள் அடங்கிய நூற்கூறுகளின் செய்திகளாக (மனுதர்மசாத்திரம் போன்றவை....) அரசர்களுக்கும் அதிகார வகுப்பினர்க்கும் பார்ப்பனர்கள் தெரிவித்தனர்; அவற்றை அவர்கள் நெஞ்சங்களிற் படிவித்தனர்! அவற்றிற்குப் படியப் பண்ணினர்! மந்திரச் சுற்றமாகிய அமைச்சர்களும் அதிகார வகுப்பினரும் அனைவர்க்கும் மேலவனாயிருந்த வேந்தனும் அவற்றுக்கெல்லாம் ஓர் எதிர்ச்சொல்லும் சொல்லாது பணிந்து ஒடுங்கி அடங்கிக் கேட்டுக் கொண்டனர்; அனைவரும் ஆரியர்மனம் ஒரு சிறிதும் நோகாதவாறு முறைப்பட அமைவாகவும் மெலுக்காகவும் இசைவாகவும் நடந்து கொண்டனர்!

வெஃகுதல் = விரும்புதல். வெஃகல் = 1. மிகு விருப்பம் (பிங்கலம்) 2. பேராசை (சதுரகராதி). வெஃகுதல் = 1. மிக விரும்புதல் (குறள்: 176) 2. பிறர் பொருளை விரும்புதல். ("வெஃகுதல் செய்யார்"

குறள்: 174) "வெஃகு" என்னும் இச் சொல் - கன்னடத்தில் "பேக்கு" என்ற வடிவில் இன்னும் பயில்விலுள்ளது.

"வெஃகு" என்னும் இத் தமிழ்ச்சொல்லையே ஆரியப்பார்ப்பனர் (Bhik) (Bhiksh) என்றவாறு திரித்துப் பயன்படுத்தத் தொடங்கினர். இந்நாட்டுள் காலடிவைத்து ஊன்றிநிற்க முனைகையில் எடுத்துத் திரித்து வழங்கிய வடிவங்களில் இதுவும், ஒன்று! "பிக்ஷ" என்னும் அத் திரிபுவடிவத்தையே நாம் "பிச்சை" என்றவாறு மேலும் திரித்துப் (திருத்தி வழங்குவதாக எண்ணிக்கொண்டு) பழக்கமாக்கி வழங்குகின்றோம்! இவ் இரவு (பிச்சை) எடுக்கும் தொழிலை மேற்கொண்ட இரவலனுக்கு - இரப்பாளனுக்கு "பிக்ஷு " (Bhikshu) என்று, ஆரியர் பெயர்சுட்டினர். அன்று பெரும்பாலரான பார்ப்பனர்கள்- "பிக்ஷுக்களே.. பிறரிடம் கையேந்தி வாங்கித் தின்றவாறே சென்றுகொண்டிருக்கும் தொழில் திறமையாளனான பார்ப்பானுக்கு "பிக்ஷு" எனும் பெயர் உரிமை உள்ளமையை, "மனுதருமசாத்திரம்" தம் சட்டப் பலகையிலும் கட்டம்கட்டி மாட்டித் தொங்கவிட்டுள்ளது!

இப்படி வாழும் வாழ்க்கையை, "இரந்தூண் வாழ்க்கை" (இரந்து ஊண் வாழ்க்கை) என்றவாறு நம் முன்னோர் சுட்டி இடித்தனர். இரந்து உண்ணும் அவ் உணவை அவர்கள் ஏற்றுத் தின்பது காரணமாக "ஏற்றூண்" என்றும் குட்டித் தட்டினர்....

"இரந்தூண் தலைக்கொண்டு இந்நகர் மருங்கில் பரந்துபடு மனைதொறும் திரிவோன்" என்றவாறு மணிமேகலையுள் கூறப்பெற்றுள்ள வரிகளிடையே (மணி: 5: 45-46) இரவு (பிச்சை) உணவு ஏந்தித் தின்பதற்குரிய குறிக்கோளை முதன்மையாகக் கொண்டு நகரத்திலுள்ள இல்லம் ஒவ்வொன்றையும் நோக்கி இப்படியும் அப்படியுமாக அலைந்து திரிந்த பார்ப்பானின் அவலவாழ்க்கைக் காட்சிப் படிவைத் தெளிவாகக் காணலாகும்! (தொடக்கக் காலத்தில் -அவர்கள் பாங்கில் நிலவிய நிலைமையின் ஓர் ஓதப்பகுதியே இது! மணிமேகலைக் காலவட்டத்தில் ஆங்காங்கும்

நன்கு நிலைநின்று விட்ட தகைமையைப் பெற்றிருந்தனர் எனினும், **சிற்சில பகுதிகளில் அவர்களின் நிலைமைகள் இவ்வாறும் (பண்டையபடி) இருந்தன என்பதற்குரிய சான்றுப்பகுதியாகவே இதனை நாம் கொள்ள வேண்டும்.**

கையேந்தி - இரவு எடுத்து வாங்கியுண்ணும் பார்ப்பனர்களுக்குரிய பழக்கமுடைத் தொடர்ச்சியைப் பதிவு செய்து வைத்துள்ள பழமொழிகளாக இன்றும் நம் நாட்டுப்புறத்துள் பல...உள! "ஒருவாய்ச் சோற்றுக்கு ஊர் வழியே போனான் பார்ப்பான்!....." "பார்ப்பானுக்கும் பன்றிக்கும் பயணச் செலவில்லை!" – என்பன, அவற்றுள் சில..

நன்மை - மங்கலம் முதலிய பொருள் பெற்றுச் சமற்கிருதப் பெயர்களுக்கு முன் வரும் - முன்னொட்டுக்களில் (prefix) ஒன்று "சு" என்பதாகும்! (காண்க: ரூபம் - சுரூபம். மதி - சுமதி. முகம் - சுமுகம்).

இரவு கொள்வதே (பிச்சையெடுப்பதே) பார்ப்பானின் இயல்பான முதல் தொழில்! (அடிப்படைத் தொழில்! உரிமைத் தொழில்! அவனுக்குத் தெரிந்த சிறந்த தொழில்) ஆதலால் ஒரு பார்ப்பான், மற்றொரு பார்ப்பானை ஏதோ ஒரு சூழலில் திடுமெனக் காண நேர்ந்தபொழுது முதன் முதல் அவனை நோக்கிக் கேட்கும் உசாவல் (அதாவது - குசலம் விசாரிப்பு..) என்ன தெரியுமா?.... "சுபிட்சமா இருக்கேளா…" என்பதுதான்! (பிச்சை - சுபிட்சை - சுபிட்ச (Su-bhiksha) = நல்ல இரவு; நல்ல (பிச்சை); பெரிய அளவிலான (பிச்சை).

"சுபிட்சமா இருக்கேளா?!..." என்றால் "நீ அங்குத் தங்கியுள்ள இடத்தில் (அங்குத் தங்கிப் பொருக்கித் தின்கிற இடத்தில்…) மிக நல்ல இரவு… பெரிய அளவிலான இரவுப் பொருள் (பிச்சையுணவு) உனக்குக் கிடைத்து அதன்வழி வளமாக இருக்கின்றாயா?! ஓய்!...." என்பது பொருள்!

தமிழ்நாட்டில் உள்ள வந்தேறிப் புகுந்து நின்று நிலைகொண்ட பார்ப்பானுக்கு (சுபிட்சத்துக்கு) - அன்றும் இன்றும் என்ன குறை?!

பிங்கல முனிவர் என்பவர் இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தொகுத்த 'பிங்கல நிகண்டு' என்னும் சொல்தொகை நூலுள் வரும் 726-ஆம் நூற்பா, பார்ப்பனர்க்குரிய பெயர்களாகப் பதினேழு பெயர்களைச் சுட்டுகின்றது, அவை முறையே அறவோர், பூசார், அறு தொழிலாளர், இருபிறப்பாளர், எரிவளர்ப்போர், ஆதிவருணர், வேதியர், அந்தணர், வேள்வியாளர், மறையவர், விப்பிரர், (மறு பிறப்பாளர்) மேற்குலத்தார், முற்குலத்தார், ஐயர், வேத பாரகர், முப்புரி நூலோர், தொழுகுலர் என்பனவாகும், பார்ப்பார் என்ற பெயரையும் உடன் சேர்த்தால் அவர்களுக்குரிய அன்றைய பெயர்கள் பதினெட்டு.

வேத கருப்பன் (யாழ். அக), வேத நாவர் (திவ். திருவாய்: 9:10:9) வேத பாராயணன் (அஷ்டப். திருவேங்கடமா:காப்பு), வேதர் (கந்த புராணம்: தெய்வயா: 195), வேதமாந்தர் (நம்பியகப்: 75) வேத அரசன் (யாழ் அக). வேதவாணன் (திவ்யப்பிரபந்தம் திருச்சந்: 9), வேதமோதுவான் (பதினெண் சித்தர் சிவவாக்.) என்றவாறெல்லாம் பின்னர்க் குறிப்பீடு பெற்றுள்ள எட்டு பெயர்களையும் முன்னைய பதினெட்டுடன் சேர்த்தால் பிராமணனுக்குரிய பெயர்களாக இத் தமிழகஎல்லையுள் புகுந்த பெயர்கள், மொத்தம் இருபத்தாறு! பிராமணனையும் சேர்த்துக்கட்டினால் தொகுமொத்தமாக இருபத்தேழு பெயர்கள்!.... அப்பப்பா.....

இவ்வாறு இருபத்தேழு (27) பெயர்களாக இங்குப் பதிவெய்தி உள்ளமையில் - இம் மண்ணகத்தில் தூள் கிளப்பியவாறு ஏறியாடிய அவர்களின் அத்துணை ஆட்டம் - பாட்டங்களின் வரலாறும் உடன் பதிவெய்தியுள்ளது!

ஏதோ பெரிய பெரிய முடிக் கருத்துக்களெல்லாம் அடங்கிய ஒரு பெருங்கருவூலப் பெட்டகம் போலப் பார்ப்பனர்களால் தூக்கிப் பிடித்து ஏற்றிப் போற்றிப் புளுகியவாறு அன்றும் இன்றும் எகிறிக் கூத்தாடி ஏத்தி வரப் பெறுவதாகிய "வேதம்" என்னும் வெற்றுக் கூப்பாடு ஓலத் தொகுதிகள் நான்கின் "அடிமுடிகள்" பற்றி

ஈராயிரமாண்டுகளுக்கு முந்தைய தமிழர்க்கும் அவர்களைக் கட்டியாண்ட ஆண்டைகளாகிய தமிழ்வேந்தர்க்கும் ஒன்றுமே தெரியாது!... "எல்லாம் அவற்றுள் உள!" என்று மட்டும் பார்ப்பான் கூறிக் கொண்டே ஏமாற்றினான்; ஏய்த்தான்!

(மிகச் சிறந்த எழுத்தாளியாகிய அருந்ததிராய் அம்மையார் சென்னையில் நடந்த மாநாடு ஒன்றில் (1988) தம் பேச்சுக்கு இடையில் இவ்வாறு கிண்டலாகக் குறிப்பிட்டார். ஆமாம்! வேதங்களில் கூட அணுகுண்டைப் பற்றிச் சொல்லியிருப்பதாகக் கூறுகின்றார்கள்! ஒருவேளை இருக்கலாம்! இன்னும் தீவிரைவாக (தீவிரமாக) ஆராய்ந்தால் கொக்கோ - கோலாவைப் பற்றிக் கூட அதில் சொல்லியிருப்பார்கள்!... நம்முடைய மதநூல்களின் மதப் பெருமையே இது தான்!.... (கற்பனை முடிந்து போனது நூல் - பக்கம்: 27).

அவ் வேதங்களின் (மறைகளின்) அடிப்படையைச் சிறிதும் உணராமலேயே "மிகப் பெருமை மிக்கன அவை! என்னும் ஒரு கருத்தோட்டம் பிராமணர்களின் கருத்தேற்றத்தினால் (Suggestions) தமிழக மக்களின் நெஞ்சங்களில் ஊடாடத் தொடங்கியது!

"துளி" என்பது "துணு" (நீர்த் துணுக்கு) எனப் பொருள்படும் ஒரு சொல் (துள் - துன் – துனி துணித்தல் = பிளத்தல்; பிரிவு படுதல். துள் – துண் - துணு - துணு + கு > துணுகு, துணுக்கு   துண்+து > துண்டு = பிளவு, பிளவுற்ற பகுதி. துண்டு+இ > துண்டி = துண்டாக்கு துண்டித்தல் = பிளவுறுத்தல், பிரிவு படுத்தல்   துண்டு+ அம் > துண்டம் = பெருந்துண்டு).

நீரின் துணுக்கு, "துளி' ஆகும். நீர்த்துளிகள் படிப்படிப்படியே ஒன்று சேர்ந்து திரண்டு ஓடி ஓடையாகி ஓடைகள் பல சேர்ந்து ஆறு ஆகின்றது! பல்+துளி = பலதுளி! பலதுளிகளின் திரட்சியே-சேர்க்கையே, நீர் ஆறு! இத்தகைய இயற்கை நிகழ்வு உண்மையை உற்றுப் பார்த்து உணர்ந்த அன்றைய மீமுது தமிழர்கள் ஓர் ஆற்றுக்கு

(பல்துளி) "பஃறுளி "என்றவாறு பெயரிட்டுள்ளனர்! (காண்க "நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே" (புறம்: 9:10). (இப் பஃறுளியாறு பாண்டியன் நெடியோன் காலத்திருந்து ஓடிய பண்டைப் பேரியாறு - என்பது இதனுள் கிடக்கும் வரலாற்றுக் கூறு!).

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள" (சிலம்பு: 11:19-20).

சிது>சிதை = வெட்டு, பிரி. சிது - சிந்து = பிரிவு; துளி; நீர்த்துளி. பலதுளிகளின் திரட்சியாலாகிய ஆறு, "பஃறுளி" என்றவாறு சுட்டப்பெற்றமை போன்றே "துளி" என்னும் பொருள்படும் 'சிந்து' என்னும் சொற்கொண்டு இந் நாவலந்தீவின் வடபால் வாழ்நராயிருந்த அன்றைய நம் தமிழ்ப்பெருங்குடி வழியினரால் "சிந்துஆறு" என்றவாறு (அதே மனநோக்கு மரபு அடிப்படையில்) சுட்டப்பெற்றது! (இச் சிந்து ஆற்றங்கரைப் பகுதியாகிய சிந்துச் சமவெளிகளில் - பள்ளத்தாக்குகளில் மிகப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தி வாழ்ந்தவர்கள் - நம் தமிழ் வழியினரே!) அச் சிந்து வளப்பகுதிகளில் வாழ்ந்தவர்களான நாகரிக மக்களின் மீது நாடோடித் திரிந்து வந்த அயலவரான ஆரியப் பெருங்கூட்டத்தினர் வாழ்விடம் கைப்பற்றும் முகமாகப் பல்வகைச் சூழ்ச்சிகளுடன் தொடர்ந்து போர் தொடுத்துள்ளனர்!

அப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த நாகரிக மக்களைக் குறித்தற்கு ஆரியர் அன்றைக்குச் சுட்டிய குறியீட்டுச் சொல் "தசுயு" என்பதாகும். (dasyu = inferior) (தக்கு = தாழ்வு.) “தக்குத் தொண்டையில் பாடுகிறான் "= தாழ்ந்த குரலோசையில் பாடுகின்றான்! தக்கு - தாக்கு : பள்ளம். (ஒப்பு நோக்குக: பள்ளத்தாக்கு.) தாழ்ந்த-பள்ளமான நிலம். இது இந்திய மொழியில் (deccan) degan என்று வழங்கப்பெறுகின்றது. இதன் வழிமுறையிலேயே பண்டைய மேலையாரிய மொழிகளின் வகையுள் ஒன்றான வேதமொழியிலும் “தக்க" (dakshu) என்றவாறு ஒரு சொல் பதிவெய்தியுள்ளது! வடக்கினும் நில அமைப்பில் தாழ்வாயுள்ள தென் பகுதியைத் "தட்சிண பாரத்" என்று அவர்கள்

இன்றும் குறிப்பதைக் காணலாம். இத் "தக்க" என்பதன் திரிபே "தசுயு" (dasyu) என்பதுவும் ஆகும்!.

அத் தசுயு (dasyu) **என்னும் சொல்லுக்கு இறுதியும் அறுதியுமாகக் “கடவுளின் எதிரி "என்றவாறு ஆரியர்**, **அன்றைக்கே பொருள் வரையறுப்பும் செய்துள்ளனர்**!

அவர்கள் நாடோடியராகக் கன்று- காலிகளுடன் வருகையில் பாடிக் கொண்டே வந்த வெற்றோல நாட்டுப்புறத் தன்மை வாய்ந்த விசிப்பிழுப்பு உரைப்பாக்களுடன் - சிந்துச் சமவெளி - சிந்துப் பள்ளத்தாக்குப் பகுதிப் பழங்குடியினருடன் மோதிய பல்வேறு நிகழ்ச்சிகளின் பதிவுகளாகவே பல்வேறு உரைப்பாக்களை மேலும் உடன் சேர்த்தனர்! அவற்றின் தொகுதியே-முதல் "இருக்கு" (ரிக் வேதம்) ஆகும்! (ரிக் = வழிபாடு; வேண்டல்)

மூளை கெட்ட - திருத்தமுறாத - நாகரிகம் வாயாத - பண்பாடு பற்றாத - பெருந்தன்மை மேவாத - தன்னல வெறிபிடித்த - முரட்டுக் கூட்டத்தினராகவே இத் துணைக்கண்டத்துள் ஆரியர் நுழைந்தனர் என்பதற்குரிய அசைக்கமுடியாத வரலாற்று ஆவணங்களாகவே - அவ் இருக்குத் தொகுதியும் - அதிலிருந்து கட்டியும் கூட்டியும் உருவாக்கப் பெற்றுள்ள மூன்று தொடர்த் தொகுதி நூல்களும் (யசுர் – சாமம் - அதர்வணம்) நம் முன் காட்சி காட்டுகின்றன!

முதல் தொகுப்பாகிய "இருக்கு" பத்தாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்திரண்டு வேண்டல் ஓலங்களைக் கொண்டது! இதன்பாலுள்ள மிகப்பல்லாயிரம் வழிபாட்டுவேண்டல்கள் நம் பழங்குடிகளான மண்ணின் மைந்தர்களுடன் நிகழ்த்திய நேர்மையற்ற கரந்தடித் தாக்குதல்களில் அடிக்கடி ஈடுபட்ட ஆரிய இனத்தவரின் வீச்சு உரைகளே!

"இந்திரன்" என்பவன் ஆரியக் கூட்டத்தினரின் வழிபடு கடவுள்! அவனைக் குறித்த வேண்டல்கள் அடங்கிய மரபு முறையிலேயே - அக்கூட்டத்தினருடன் இருந்த ஆரியக் கல்வியாளர் சிலர் இங்கு ஆரியர் செய்த சண்டை நிகழ்ச்சிகளைச் சில திருக்கு முறுக்குக் கற்பனைகளுடன் பல்லாயிரம் உரைப்பாக்களாகப் புனைவு

செய்து உடன் பிணைத்துக் கூட்டித் தொகுத்ததே - முதல் “இருக்கு" ஆகும்!

“பண்டைய உலகத்தில் பண்பாட்டு நாகரிக நிலைகளில் மிகச் சிறந்து விளங்கிய ஓரினத்தவரை அழித்தொழித்ததைப் பாராட்டும் பாவியமே "இருக்கு வேதம் "ஆகும்!"- என்பார், வயவர் “இலியோனார்க்கு ஊலி " என்னும் வரலாற்றாசிரியர். (காண்க: Sir Leonard Wooley: (HISTORY OF MANKIND) CULTURAL AND SCIENTIFIC DEVELOPMENT: Page: 389) "The Rig Veda is the epic of the destruction of one of the great cultures of the ancient World)

இவ்வேண்டல் உரைகளில் பெரும்பாலான இடங்களில் தலைவனாக இந்திரனே நிற்கின்றான்! இவ் இருக்குள் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட உரை வீச்சுக்களில் இவ் இந்திரப் பயலே ஆட்டம் ஆடுகின்றான்! தீக்கடவுள் (அக்கினிப் பயல்) ஈராயிரம் இடங்களில் எரிந்தவாறு புகை கிளப்புகின்றான்!

இந்தியா என்றவாறு கட்டுப்போடப் பெற்றுள்ள இந் நாட்டுக் கூட்டமைப்புக்கும், இதில் கற்பனையாகவும் சூழ்ச்சியாகவும் நிலை நிறுத்தப் பெற்று வெற்றிக் கொடி நாட்டி வெறி கொளுத்தப் பெற்று வரும் இந்துமதம் என்னும் இல்லாத மதத்திற்கும் "இதுவே பெரிய அடிப்படை!" என்றவாறு புளுகி ஏய்ப்பதற்கு இடனாகவுள்ள இருக்குவேதமும் - இதன் அடிப்படையில் முடையப் பெற்ற யசுர் - சாமம் - அதர்வணம் என்னும் பிறவாகிய முத்தொகுப்புக்களும் வெற்றுவேட்டுமூட்டைகளே என்பதனை அவற்றை அவிழ்த்துப்பார்த்து ஆராயும் எத்தகு அறிவரும் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியும்! (தந்தை-பெரியார் சொன்னதைப்போல மயிர்மூட்டை) இம் மண்ணுக்குரியவராயிருந்த நம் மக்களை - அவ் இருக்குநூலுள் அரக்கர் - திருடர் - சடங்கிலிகள் - முரடர் - காட்டுவிலங்காண்டிகள் (காட்டு மிருகாண்டிகள் - காட்டுமிராண்டிகள்!) - கழுதைகள் என்றவாறெல்லாம் மிகப் பல இடங்களில் சுட்டியுள்ளனர்! (சான்றுக்கு ஒன்று: “எங்கள் எதிரிகளான அக்கழுதைகளைக் (தசுயுக்களை) கொல்வாயாக! (ரிக்: 326). இவ்வகை

இழிப்புகளும் - பழிப்புகளும் - ஏச்சுக்களும் - வசவுகளும் அக்குப்பைத் தொட்டியில் மிகமிகப்பேராளமாய் உள்ளன!

"யாச" என்னும் வேதமொழிச்சொல்லுக்கு - "இரந்து கேள்!- (கேள்-வேண்டு-பணிந்து வேண்டு) என்பது பொருள்! இவ்வழியிலேயே "யாசக(ம்)" என்னும் சொல்லும் இரப்பைக் (பிச்சை) குறித்து வழங்குகின்றது! இச்சொற்பகுதியின் அடிப்படையிலேயே "யக்ஞம்" (Yajna) என்னும் சொல்லாக்கமும் வேண்டுதல்பொருளில் சமற்கிருத்தில் எழுந்துள்ளது! இரந்து - கெஞ்சி - வேண்டும் வேண்டுகை "யாக" என்ற சொல்லால் சுட்டப் பெற்றது! யாக(ம்)!.... இந்த யாக (வேள்வி) வினையைச் செய்விக்கின்றவன் எவனோ அவன் "யஜமான(ன்)"எனக் குறிக்கப் பெற்றான்! (இன்றைக்கு "எஜமான்!" என்றவாறு முதலாளியை - ஆண்டையை நோக்கித் தொழிலாளி குறிப்பிடுகின்றானே அக்குறிப்பீடு (அதாவது விளி) இதன் வழியில் வந்ததுவே!

இந்த (யாகத்தை) வேள்விச் சடங்கு நிகழ்ச்சிகளை இந்நாடு முழுமைக்கும் பரப்புவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளுவதற்கு அடிப்படை வசதியாக ஆரிய அறிவாளிப் பயல்களெல்லாம் ஒன்று திரண்டு ஆர அமர அமர்ந்து கொண்டு அவர்களின் மூளைகளையெல்லாம் கசக்கிப்பிழிந்து இருக்குத் தொகுதியின் உரைப்பாக்களின்று சாறுஇறக்கி ஒரு தொகுதிநூலை உருப்படுத்தினார்கள்! (இந் நாட்டிலுள்ளவர்களெல்லாரும் உருப்படாமல் போவதற்காக!.) அந்த நூல்தான் (யாஜ்-யாக்)> "யஜுர்" (வேதம்) மறை! தவளைஒலத் தகைமை வாய்ந்த உரைப்பா வீச்சுத் தொகுதித் தொட்டி, அது!....

உலகஇனமக்கள் எவரைக் காட்டிலும் - அளவுக்கும் அதிகமாகவே குடிமயக்க வெறியில் ஊறித் திளைத்த கடைகெட்ட அன்றைய கூட்டத்தாரில் தலைசிறந்த பெருங்குடிப்பாளிகள் ஆரியரே ஆவர்! கொடிக்கள்ளி வகையில் கொடுமையான மயக்கந்தரும் சாற்றினை உடைய கொடி ஒன்று உண்டு! பற்றியேறிப் படர்ந்து வளரும் கொடிவகை அது! அது கடும் மயக்கந்தரும்

தன்மையுடையதாகலின் அதற்குச் "சோமம்' (Soma-Plant) என்று பெயரிட்டிருந்தனர். (Sarcostemma viminales (or) Asclepias Acida) சோமக் கொடியைத் துண்டுகளாக்கிக் கல்லுரலில் இட்டு நசுக்கி நையச் செய்து கசக்கிப் பிழிந்து சாறெடுத்து அச்சாற்றுடன் வெண்ணெய்யையும் மாவுப் பொருளையும் (flour) கலந்து பிசைந்து கலக்கி நன்றாக நொதிக்கச் செய்து வடிகட்டி - அம் மதுவகையை உருவாக்கியுள்ளனர்.

அம் மதுவை எவ்வாறு உருவாக்குவது என்பது பற்றியும் எவ்வெம் முறைகளில் அதனைப் பருக வேண்டும் என்பது பற்றியும் - இருக்குத் தொகுதியில் (ரிக் வேதம்) ஆயிரத்து நூற்று எட்டுப் (1108) பாவீச்சுக்கள் உள்ளன. (தலை சுற்றுகின்றதா?...) இம் மதுமயக்கத்திற்குரிய கடவுளாக அவர்கள் கற்பனையாகப் படைத்த கழிசடைக் கடவுளே, "சோமன்" (God Soma) என்பவன்! இவனைப்பற்றியும் சில மண்டலங்களில் ஏத்தியேத்தித் தொழுது கூத்தடித்துள்ளனர்.

எல்லையளவு மீறி ஏற ஏறக் குடிப்பது - யாகம் என்ற பெயரில் விலங்குக் கூட்டத்தைத் தீயிலிட்டுப் பொசுக்கிப் பங்கு பிரித்துத் தின்று குதப்புவது - வரைதுறையற்ற முறையற்ற பாலியல் திருவிளையாடல்களில் புகுந்து புரண்டு நெளிவது முதலிய அகப்புறக் குறும்புகளில் தோய்ந்த கேடர்களாகவே அன்றைய ஆரியர் இயங்கியுள்ளனர்.

குதிரை இறைச்சி ஆரியர்களுக்கு மிக மிக விருப்பமான உணவு. ஆக்கறி (அதாவது பசுவின் இறைச்சி).... அதுவும் விருப்பமானது. வழிபாட்டுக்கு என்று தீ வளர்த்து அதில் போட்டுச் சுட்டுத் தின்பதற்கு ஏற்றன அறுநூற்று ஒன்பது (609) காட்டு விலங்குகள் - பறவைகள் - மீன் வகைகள் - புழுபூச்சிகள் முதலியன என, அக்கால ஆரியர் தம்நூல்களுள் சுட்டியுள்ளனர். அவற்றையெல்லாம் வாய்ப்பு நேர்ந்தவிடத்து வெட்டினர்... சுட்டனர்... வயிறு புடைக்க முக்கி அமுக்கினர்!

தீக்குண்டத்திலிட்ட ஆவின் (பசுவின்) உறுப்புகளாகிய இறைச்சித் துண்டங்களை எந்தெந்தப் பார்ப்பானுக்கு எப்படியெப்படிப் பங்குபிரித்து உண்ணக் கொடுக்கவேண்டும் என்றவாறெல்லாம்

அவர்கள் இயற்றிக் கடைப்பிடித்து வந்த "அய்த்திரேய பிராமணம்" (AITRAYA BRAHMANA] என்னும் நூல் மிக மிக விளக்கமாகப் பட்டியல் போட்டுக் கட்டளையிட்டுள்ளது! (பசுவின் நாக்கு பிரசுதோதாவுக்கு - பருந்து வடிவத்திலுள்ள மார்புப்பகுதி உத்தகாதாவுக்கு - கழுத்தும் முதுகுப் பகுதியாகிய திமில் உறுப்பு இறைச்சியும் பிரதிகருத்தாவுக்கு - வலப்பக்கத் தொடை கோதாவுக்கு - இடப்பக்கத் தொடை பிரம்மாவுக்கு - வலப்பக்கத் தொடை விலாப்பகுதி உபகாதாவுக்கு - இப்படிச் சவ்வு போல நீள்கின்றது அந்நெடும் பட்டியல்...)

சமற்கிருதத்தில் "அசுவம்" என்றால் "குதிரை" என்று பொருள். "அசுவமேதயாகம்" என்ற வழிபாட்டுத் தீக்குண்டச் சடங்குமுறை - குதிரைகளைப் பலிகொடுத்து நெய்யிட்டு வதக்கியெடுத்து - ஆரியர்கள் வயிறார உண்ணுதற்கென்று உருவாக்கப்பட்ட சிறப்புமுறை! குதிரைகளைக் கூறுபோட்டுத் தின்ற வகைமுறைகள் இருக்குத் தொகுதியுள் மிகவிரிவு விளக்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றை வெட்டுவதற்குக்கூட, அத் தொகுதியில் சிறப்புக் குறிப்புகள் உள்ளன!

(ஓரிரு சான்றுகள்:) குதிரையின் முப்பத்து நான்கு விலா எலும்புகளில் கத்தி செல்லுகின்றது!.... அந்தந்தப் பகுதிகளும் கெடாதவாறு கறியை வெட்டுங்கள்! திறமையுடன் வெட்டுங்கள்! துண்டு போடும் போதும் ஒவ்வொரு துண்டின் பெயரையும் கூறுங்கள்! (ரிக்: 1698)..

“கறித்துண்டங்கள் கம்பியால் குத்தப்பட்டு நெருப்பிலே சுடுகின்ற பொழுது கம்பியிலிருந்து ஒரு துண்டு கூட தரையிலோ புல்வெளியிலோ விழுந்து விடாதவாறு மிகக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்! ஏனென்றால், அவை தேவர்கள் உண்ணக் கூடியவை! (ரிக்: 1: 691) (தேவர்கள் என்றால் வேறு எவருமிலர்.... புலால் வெறிப்பிடித்த அன்றைய ஆரியப் பார்ப்பனர்தாம்!)

இப்படியெல்லாம்... கேடு கெட்ட - முறை திறம்பிய - நெறி பிறழ்ந்த - நேர்மை தவறிய - நாகரிகமற்ற - பண்பாடற்ற - தன்னலவெறி பிடித்த - ஒழுக்கஞ் சிதைந்த ஓடுகாலிகளே சிந்தாற்றங்கரையிலிருந்து சிறு சிறு கூட்டங்களாகப் பிரிந்து - இந் நாவலந் தீவாகிய அன்றைய இந்தியத்துணைக் கண்டத்தின் பல்வேறு ஆளுமைப் பகுதிகளுக்கும் மெல்ல மெல்லப் பெயர்ந்து சென்று புகத் தொடங்கினர்!

இரவு (பிச்சை) எடுத்தவாறே நடந்து நடந்து ஆங்காங்குமிருந்த ஆட்சியாளர்களின் அரண்மனைகளுக்குள் அமைவாக அடியெடுத்து வைத்து ஆங்காங்குமிருந்த குடிகளின் நெஞ்சங்களில் நஞ்சு பாய்ச்சினர்! அரசக் குடும்பங்களின் அடிமடிகளிலும் படிப்படியே கைவைத்தனர்!

"முதுகுடுமிப் பாண்டியன் பெருவழுதி" என்னும் ஒரு மட்டி மன்னன் பல்வேறு வேள்விப் பெருங்குடில்களை அவர்கள் தின்று கொழுப்பதற்காகவே அடிக்கடி ஏற்பாடுகள் செய்து "பல்யாக சாலை முதுகுடுமிப் பெரும்வழுதி" என்றவாறு மானங்கெட்ட ஒரு அடைமொழி பெற்றுக் கொண்டு ஆட்சி ஆற்றினான். அவனைப் போலவே மற்றொரு ஏமாறிக் கொம்மாளி "இராசசூயம் வேட்ட சோழன் பெருநற்கிள்ளி" என்பவன்!

அன்றைய ஆட்சியாளர்களிற் பெரும்பான்மையினரும் அங்கங்கும் போட்டி போட்டுக் கொண்டு "வேள்வி" என்ற பெயரின் கீழ் ஆரியப் பார்ப்பான் கட்டளையிட்டுச் சொன்ன 'யாகங்கள்' பலவற்றைப் பேராளமான பொருட்செலவில் நடத்துவித்து இம் மண்ணுக்கிருந்த மாண்புகளையும் மானங்களையும் பூழ்திபடப் பொசுக்கலாயினர்!

பொருள்களை வாரி வாரித் தந்ததோடு வளமிக்க ஊர்களையும் அவர்களுக்குச் சொந்தமாக்கினர்! இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் ஒரு மூளை கெட்ட முழு முண்டன் உம்பற்காட்டு ஐந்நூறு ஊர்க் கொடையை (ஊர்பிரமதாயம்) பார்ப்பனர்களுக்குக் கொடுத்தான்! கொடுத்ததோடு மட்டுமில்லாமல் முப்பத்தெட்டு

ஆண்டுகள் தென்னாட்டுள் வந்த வளத்தினில் பாகமும் கொடுத்தான்....பார்ப்பான் நன்றாகத் தின்றான்! (நன்னா..தின்னான்!) (இன்றும் - இன்னும் நன்னாத் தின்னுண்டேயிருக்கான்!...)

கழுத்தில் அணியப்பெற்று மார்பில் தொங்கிக்கிடக்கும் மாலைக்குத் "தார்" என்பதுவும் ஒரு பெயர்! தொங்கிக் கிடக்கும் காரணமாகத் "தொங்கல்" என்றவாறும் மாலை பெயர்பெற்றது. (காண்க: சீவ: 2626) அலங்குதல் : அசைதல் மார்பில் அசைந்தவாறு தொங்கும் மாலைக்கு "அலங்கல்" என்பதுவும் ஒரு பெயர்! (காண்க: அகம்: 13:9) (புறம் : 364:10).

மாலை அணிந்திருப்பவனைத் "தார் ஆர் மார்ப!" (அகம்: 150: 14) என்றவாறு அழைத்தல் நம் மரபு! மாலை அணிவிக்கப்பெற்ற யானை, "தார்பூண் களிறு" (அகம்: 166: 12) (தாரணியானை) என்றும் - அவ்வாறு அணிந்திருந்த குதிரை, - "தாரணி புரவி" (நற்றிணை: 181:11) என்றும் அக்காலத்தில் சுட்டப்பெற்றன! கிளியின் கழுத்துப் பகுதியைச் சூழ்ந்து மாலையைப் போல் அமைந்துள்ள கோட்டு வரியும் "தார்" என்ற சொல்லால் சுட்டப்பெற்றது! ("செந்தார்ப் பசுங்கிளியார்' (சீவக சிந்தாமணி : 10-36) அரிமாவின் (சிங்கத்தின்) முற்கழுத்துப் பகுதியில் செறிந்து வளரும் முரட்டு முடிக்கொத்து கீழ்நோக்கி மடிந்து வளைந்து தொங்கிக் கிடந்து மாலைபோல் காட்சியளிப்பதைத் திரைகளிலும் காட்சிக்கூடச் சிறைகளிலும் நாம் காண்கின்றோமே அவ் அரிமா, பதிற்றுப்பத்தில் ஓரிடத்தில் "தாரணி எருத்தின் அரிமான் (12 : 4) (எருத்து = கழுத்து) என்றவாறு சுட்டப் பெற்றுள்ளது! (அப்பிடரிமயிர் மடங்கித் தொங்கும் அழகு காரணமாகவே அரிமா, "மடங்கல்" என்றவாறான பெயராலும் சிறப்பிக்கப்பெற்றது! (காண்க: "மடங்கலிற் சீறி மலைத்து எழுந்தார்" (புறப்பொருள் வெண்பா மாலை: 3:24).

ஒன்றோடொன்று தொடர்ந்து மாலைப்பின்னல் போல அணியுற அமைந்திருக்கும் ஒழுங்குபாடு -"தார்" என்னப்பெற்றது! (ஒப்புநோக்குக: "தார் அருந் தகைப்பின்" (பதிற்றுப்பத்து: 64:7) தார்

ஒழுங்குபாடு (orderliness) வாழைச் சீப்புகளின் தொடர்த் தொகுதியைக் குறித்து "வாழைத்தார்" என்றவாறு இன்று சுட்டப் பெறுவதனுள்ளும் இதன் கருத்து வரலாற்றுப் பதிவை நாம் காணமுடியும்! (தார் > தாரு > தாறு).

தொடர்ச்சியாக ஒழுகுதல் கொள்ளும் நீர் (தார்>தார்+ஐ> தாரை) "தாரை" என்று குறிக்கப்பெற்றது! மிகுந்த துயரத்தில் ஆற்றவியலாத அவலத்தில் பெண்ணொருத்தி அழும்போது இரு கண்களிலும் பெருகிவரும் கண்ணீர் தொடர்ந்து ஒழுகும் நிலையைக் குறித்தற்குத் "தாரை தாரையாய் கண்ணீர் வடிக்கிறாள்!" என்றவாறு கூறுதல் இன்றும் எங்கும் உள்ள வழக்கம்! "தாரை" என்பது பெருத்த மழைப் பொழிவைக் குறிக்கும் சொல்லாகும் எனப் பிங்கலநிகண்டு குறித்துள்ளது!

இத் "தாரை", நீர்ப்பொழிவையும் - நீர் ஒழுகுதலையும் குறிக்கும் பழுத்த நாட்டுவழக்குச் சொல்லாகும். தாரை = நீரொழுக்கு ("நெடுந்தாரை கண்பனிப்ப" திருவாசகம்: 7:15)

"எஃகி" போன்ற நீர்வீசி விளையாடற்குரிய கருவி ஒன்று- "தாரை" என்ற பெயரில் தமிழகத்தில் புழக்கம் கொண்டிருந்தது. ("தாழ்புனல் தாரையும்" (பெருங்கதை: உஞ்சைக்: 38:105) தாரை வார்த்தல் = நீர்வார்த்தல்; நீரை ஒழுகுறச் செய்தல்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு மிகமுன்பாகவே தமிழகத்தில் வந்தேறிய ஆரியப்பார்ப்பனர்க்கு அரசமரபினர் தானம் செய்த (அதாவது பொன்னும் பொருளுமாகக் கொடை வீசி இறைத்த...) வகைகளுள் ஒருமுறை, நீர் வார்த்துக்கொடுக்கும் முறையாகும்!

பார்ப்பான் தன் ஈரக்கைகளை ஏந்தியவாறு இரவு (பிச்சை) கேட்பான்; அப்படி ஏந்திய ஈரக்கைகளுக்கு எதிர்நின்ற மன்னன்- பொற்பூவையும் (சொர்ணபுட்பம்) பொற்காசுகளையும் சொரிந்து அவற்றின் மீது நீர் வார்ப்பான்! (அவற்றைப் பெற்று கொண்ட பார்ப்பான் கொம்மாள மகிழ்ச்சியுடன் குடுகுடுவென ஓடிவிடுவான்!....)

இவ் வரலாற்றுக் காட்சிகளின் பதிவுகள் புறநானூற்றில் ஈரிடங்களில் உள்ளன! அவற்றுள் ஒன்று, - இது!

"ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்

பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து" (புறம்: 367:4-5)

(உரை: பொருள் வேண்டி இரந்து நின்ற பார்ப்பனருக்கு அவருடைய நனைந்த கை நிறையும்படி, பொற்பூவும் பொற்காசும் நீர்வார்த்துக் கொடுத்து...) பார்ப்பானுடைய கைகள் ஈரமுடையனவாய் அமைந்திருப்பது பற்றிய காரணத்தை "உரைதிறப் பெரும் புலவர்" ஔவை - துரைச்சாமி ஐயா அவர்கள் தம் அடிக்குறிப்பாக இவ்வாறு பதிவு செய்துள்ளார்!. "பார்ப்பார் கை உண்டல் தொழில் ஒன்றிற்கே பயன்பட்டமை தோன்ற "ஈர்ங்கை" என்றார்!" (காண்க: புறநானூறு ஔவை உரைக்குறிப்பு: கழகப்பதிப்பு - பக்கம்: 341)

பொற்பூவும் பொற்காசும் தரப்பெற்றனபோல் பொன்னாலாகிய அரிய அணிகலங்கள் பலவும் இப்படி வாரிக் கொடுக்கப் பெற்றன! (வேள்வி அந்தணர்க்கு அருங்கல **நீரொடு சிதறி**! (**புறம்**: 361:4-5) (**உரை**:**வேள்வி செய்தலையுடைய அந்தணர்களுக்குப் பெறற்கரிய பொற்கலங்களை நீர்வார்த்துக் கொடுத்து**...)

"உரைசால் வேள்வி முடித்த கேள்வி

அந்தணர் அருங்கல மேற்ப நீர்பட்டு" (பதிற்றுப்பத்து: 64:4-5)

(உரை: மறையை ஓதிய அந்தணர் அரிய கலங்களைப் பெற்றுக் கொள்ள அவற்றை நீர்வார்த்துக் கொடுத்தலால் அந் நீர் பட...)

மேற்குறிப்பிட்டுச் சுட்டியுள்ள இம்மூன்று சான்றுகளில் நம்மவர் தாரை வார்த்துக் கொடுத்தலும் - அயலவராகிய ஆரியப் பார்ப்பனர் நீர்படுமாறு அவற்றை வாரிச் சுருட்டிக் கொள்ளுதலும் ஆகிய காட்சிகளின் பதிவுகளில் அக்காலத்திருந்த இயல்பு வழக்கத்தின் வரலாற்றை நாம் தெளிவாக உணர முடிகின்றது!

இடைக்காலத்துத் தொன்மமான அரிச்சந்திர புராணத்தில் இத் "தாரைவார்த்தல்" தெளிவான வழக்கு வடிவில் பதிவுற்றுள்ளது! தாரை வார்த்துக்கொடையளித்தல் "தாரைவார்த்தல்" என்னும் செப்பக்

கூட்டுச்சொல் கொண்டே குறிக்கப் பெற்றுள்ளது! "**தாரை வாரெனக் கௌசிகன் சாற்றிட**" (**அரிச்சந்திர 'சூழவி** : 79)

தாரைவார்த்துக் கொடுத்துவிட்டால் கொடுத்த அப்பொருள் மீட்கவே முடியாதபடி - மீண்டும் பெறவே இயலாதபடி பார்ப்பானுக்கே (சுவாகா!...) சேர்ந்துவிடுவதால் ஒரு பொருள் இயல்பாகத் தொலைந்து போய்விட்டாலோ -காணாமல் போய்விட்டாலோ "அப்பொருள் தாரை வார்ந்து போய்விட்டது!" என்னும்படியாகத் தம் பேச்சுவழக்குகளுக்கிடையில் நம் மக்கள் பயில்வாராயினர்! ஒன்றை இழந்துவிடுதலையும் -தொலைந்துவிடுதலையும் இவ்வழக்குப் பயில்வால் மக்கள் சுட்டத்தொடங்கினர்! சான்றுகள்: 1. "அவன் தன் சொத்துக்களையெல்லாம் தாரைவார்த்து விட்டான்!" 2. "தாரை வார்த்து விட்டுத் தேடிச்கொண்டேயிருக்கிறான்!" (தாரைவார்த்துவிட்டு என்பது இன்றைய பேச்சுவழக்கில் "தாராத்துட்டு" என்றவாறாகப் பயிலப் பெறுகின்றது!)

நம்தமிழ்இனத்தவன் தனக்கென்று அமைந்திருந்த அடிப்படையான சிறப்புத் தனிக்கூறுகள் மிகப் பலவற்றையும் இன்றைக்குத் தாரை வார்த்துவிட்டுக் கிடக்கின்றான்!

தன் அறிவைத் தாரை வார்த்துவிட்டான்! அன்பைத் தாரைவார்த்து விட்டான்! பண்பைத் தாரை வார்த்துவிட்டான்! தொழில் திறனைத் தாரை வார்த்துவிட்டான்! அரிய இனிய பெருந்திறக் கலைகளைத் தாரைவார்த்துவிட்டான்! மானத்தைத் தாரைவார்த்துவிட்டான்! மறத்தைத் தாரைவார்த்துவிட்டான்! மதத்தைத் தாரை வார்த்து விட்டான்! பெருமிதத்தைத் தாரைவார்த்துவிட்டான்! பெருமையைத் தாரைவார்த்துவிட்டான்! மொழியைத் தாரைவார்த்துவிட்டான்! தன் இனவொற்றுமையைத் தாரை வார்த்துவிட்டான்! தன் நிலத்தையும் படிப்படியே தாரைவார்த்துக்கொண்டே வருகின்றான்.

தமிழனின் சொத்துக்கள் அக்கால மடமன்னர்களால் பார்ப்பனர்களுக்கே மிகப் பல வகை முறைகளில் வாரி வாரி **இறைக்கப் பெற்றன! அப்படி மடத்தனமாகவும் - மட்டித்தனமாகவும் - பேதைத் தனமாகவும் – மூளைகெட்ட முழுமுண்டைமைத்தனமாகவும் - பித்தியத்தனமாகவும் (பைத்தியக்காரத்தனமாகவும்) வாரி இறைக்கின்ற அறிவின்மை சான்ற வெறிச்செயலைக் குறித்தற்குக் "கொடைமடம்" என்னுமொரு இனிய கூட்டுச்சொல் ஒன்றும் தமிழில் தோற்றுவிக்கப் பெற்றது! (காண்க: புறம்**: 142:5).

தெளிவு இல்லாமலேயே கொடுக்கும் இக் கொடைமடத்தைப் போற்றி ஒளவையாரும், "தேற்றாஈகை" என்றவாறு அழகிய கூட்டுசொல் ஒன்றைப் புறநானூறுப் பாவொன்றில் பெய்து வைத்தார்! (தேற்றா வீகையும் உளதுகொல்!" புறம்: 140:9).

முழு முட்டுக்கட்டையாகிய "சேரன் செங்குட்டுவன்" என்னும் சிறுமூளைப் பயல் ஒருவன் வாரி வீசியிறைத்த கொடைமடச் செய்தியொன்றை இளங்கோஅடிகள் பெருமையாரப் பதிவு செய்துள்ளமை, இவ்விடத்தில் நினைவுகூரத் தகுவதாகும்! "மாடலன்" என்னும் பார்ப்பானொருவன் கண்ணகி பற்றிய - அவள் குடும்பநிலை பற்றிய சில பொதுச் செய்திகளைத் தனக்குக் கூறின அந்நேரத்திலேயே, திடுதிப்பென ஆளெடைக்கொடைக்கு (துலா புருஷதானத்திற்கு)- உத்தரவிடுகின்றான், அக் குட்டுவக் கோணங்கி!... 208 அயிரெடை (Kilogram) கொண்ட தடித்துப் பருத்த கொழுவுடம்பைப் பெற்றிருந்த செங்குட்டுவன் தன் எடையளவுக்கு நேரான பொன்னை அம் மாடல மறையோனாகிய பார்ப்பனப் பயலுக்குத் தானமாக அளித்தான் என்னும் வரலாற்றுநிகழ்ச்சியை இளங்கோஅடிகள் பதிவுசெய்து வைத்துள்ளமையைப் படித்தறிந்து எண்ணுகையில் நம் நெஞ்சாங்குலை உலைக்களக்கொதிப்புக்குரிய உறுப்பாகி எரிகின்றது!..... மூச்சுக் காற்றெல்லாம் தீச்சூடு பற்றுகின்றது! ஏன்..... தெரியுமா?! அம் மடமூட முட்டுக்கட்டையாகிய குட்டுவ முண்டம், பார்ப்பானுக்குக் கொட்டிக் கொடுத்த அத்

தாரைவார்ப்பானது இன்றைய பணமதிப்பில் - எட்டுக் கோடியே எழுபத்து மூன்று இலக்கத்து அறுபதினாயிரம் உருவைகளாக (Rupees: 8,73,60,000) இருக்கின்றமைதான்!.... (அடேங்கப்பா !...)

இளங்கோ தம் காப்பியத்துள் தந்துள்ள வாய்(வேர்) மொழி (வாக்கு மூலம்) இதுதான்! (வரலாற்றுஆவணமாகவுள்ள இவ் வரிகளைச் சற்றுஆழ்ந்து சிந்தித்துப்பாருங்கள்!...)

"அருமறை முதல்வன் சொல்லக் கேட்டே
பெருமகன் மறையோர் பேணி – ஆங்கு அவற்கு
ஆடகப் பெருநிறை ஐயைந்து இரட்டி
தோடார் போந்தை வேலோன் தன் நிறை
மாடல மறையோன் கொள்க எனக் கொடுத்தாங்கு"

(சிலப்பதிகாரம்: நீர்ப்படை காதை: 27:172-175)

வய்: பொருந்துதற் கருத்துவேர். வய் > வை = பொருத்து; பொருந்துதலாகிய சேர்க்கைக்கருத்து, உள்ள விருப்பத்தோடு கூடிய பொருந்துதலுக்கும் வளர்ந்தது! (ஒப்பு நோக்குக: அம் > அமர் = பொருந்து. அமர்தல் = விரும்புதல்; பற்று = சேர்க்கை; உள்ளவிருப்பம்).

வய் > வெய் வெய்ய = விரும்புதற்குரிய ("வெய்யநெய்", தக்கயாக: 506) வெய்யவன் = விருப்பமுள்ளவன். "புதுவோர்ப் புணர்தல் வெய்யனாயின்" (கலி:75:10).

வய் > விய் (அகர இகரத் திரிபு) விய் > வியவு > விழவு.

விழவு = விரும்பிச் செய்யப்பெறுவதாகிய திருவிழாக்கொண்டாட்டம். விழவு > விழா. விய் >வியை > விழை = விருப்பம். "இன்பன் விழையான்" (குறள் : 615:1). விழைச்சு = விருப்பந்தரும் புணர்ச்சி.

விழைவு = 1. விருப்பம் (பு.வெ.9:41). 2. புணர்ச்சி (பிங்கலம்).

விய்>வியல் > வில் வில்>விள் > விளை விளை + ஆட்டு > விளையாட்டு. பொழுதுபோக்கிற்குரிய விருப்பஆட்டம். (விள் > விளை

> (GREEK) Phileo = to love. Phileo, Philo. (GK) Philologia-love of learning>ENGLISH) Philology=science esp. historical and comparative) of languages: Linguisitics)

விள் > வெள் > வேள் = விரும்பு. வேள் = விருப்பத்திற்குரிய தலைவன். வேள்+ஆண்மை > வேளாண்மை = விரும்பிச் செய்யும் கொடை; விருப்பமாகச் செய்யப் பெறும் உதவி. "விருந்தோம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு" (குறள் : 81).

வேள்வு + இ > வேள்வி வேள்வி = விருப்பம்.

விருந்தினர்க்கு விருப்பமாக உணவு படைத்தல், விருந்தோம்பல் (காண்க: குறள்: 87) (மேலும் காண்க: "விருந்தோம்பி வேள்வி தலைப்படாதார்" (குறள்: 88) உரை: விருந்தினரைப் பேணி அவர்க்குச் சிறந்த உணவு படைத்தலை மேற்கொள்ளாதார்....)

தமிழகத்தில் "வேள்வி" என்னும் சொல், விருந்தினர்க்கு விருப்பமுடன் உணவு படைக்கும் விருந்தோம்பலையே தொடக்கத்தில் குறித்து வழங்கியது. விருப்பக் கருத்து அடிப்படையில் "கொடை" என்னும் பொதுப் பொருளுக்கும் அச்சொல் விரிவெய்தியது! (காண்க: வேள்வி-கொடை (பிங்கலம்) விருந்தினர்க்குச் செய்யப்பெறும் விருந்தோம்புதல்போல் - தெய்வத்திற்குச் செய்யப்பெறும் விருந்தோம்புதல்போல் - தெய்வத்திற்குச் செய்யப்பெறும் பூசனையாகிய படைப்புக்கும் - பேய்கட்குச் செய்யப்பெறும் படைப்புக்குமாகத் தமிழ்க்குமுக (சமூகம்) வழக்கில் பொருள்கள் விரிவெய்தின!

பேய்ப்படையல் "பூதவேள்வி" எனப்பெற்றது. இப் பூதவேள்வியே "களவேள்வி" என்ற பெயரால் சிறப்பாகக் குறிப்பிடப் பெற்றது. பேய்கள் வயிறார உண்ணுதற்கு ஏற்றபடி பகைமறவர்களைப் போரிட்டுக் கொன்று அழித்து அவ் வுடம்புகளையிட்டுப் படைக்கும் புறத்துறைநிகழ்ச்சிக்குக் "களவேள்வி" என்பது பெயர். (காண்க: பு.வெ.மா: 8:6). "பண்ணி" என்னும் பெயரிலிருந்த மன்னன் ஒருவன் பண்டையிற் செய்த இவ்வகைக்

களவேள்வியை அகநானூறு சுட்டும்! **"பண்ணி தைஇய பயங்கெழு வேள்வியின்" (அகம்**: 13:11).

பேய்ப்படையலாகிய "களவேள்வி" என்னும் பூதவேள்வியைப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் நடத்திய காட்சியொன்றை "மாங்குடி மருதனார்" தம் புறப்பாடலில் (26) இவ்வாறு காட்டுவார்.... "முடித்தலை அடுப்பாகப், புனற்குருதி உலைக்கொளீஇ
தொடித்தோட் துடுப்பின் துழந்த வல்சியின் - அடுகளம் வேட்ட அடுபோர்ச் செழிய" என்றவாறு பாண்டியனை நோக்கி விளிக்கின்றார். அதாவது, முடியணிந்த தலைகளை நாட்டி வைத்து அடுப்பாகக் கொண்டு குருதிப் புனலாகிய (அரத்த) உலையிலே அப்பகைவரின் தசை மூளை முதலாயினவற்றைப் பெய்து வீரவளையையுடைய தோளாகிய துடுப்பால் துழாவிச் சமைக்கப்பட்ட உணவால் (களம்வேட்ட...) போர்க் களத்தின் கண் களவேள்வி வேட்ட செழிய மன்னா!.. என்பது அவரின் பாட்டுவரிகளின் பொருள்!) (எவ்வளவுக்கு நம் மன்னர்களாகிய மொண்ணைகள் (மொழுக்கைகள்!) திருந்தாது கிடந்துள்ளனர் என்பதற்கு இந்நிலைக் காட்சியும் ஒரு சான்றாகும்!)

அத்தோடு நின்றானல்லன், இப்பாண்டிய மடவன்!... பார்ப்பான் சொன்னபடி அவர்கள் இங்கு வந்து புகுத்திய தீவேள்வியையும் உடன் செய்தான் என்று மாங்குடி மருதனார் ஆவணப் படுத்துகிறார்!

அத் தீவேள்வியாகிய (யாக) வேள்வியைச் செய்யும்பொழுது அன்றைய பார்ப்பனப் பயல்கள் சுற்றத்தார் போலவே - அவனைச் சுற்றிச் சூழ்ந்திருந்தார்கள்!.. என்கிறார். (காண்க: ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை நான்மறை முதல்வர் சுற்றமாக, மன்னர் ஏவல் செய்ய, மன்னிய வேள்வி (யாகம்) முற்றிய வாள்வாய் வேந்தே" (புறம்: 26:13-15).

விருந்தோம்பலாகிய "மாந்தன் வேள்வி" - பேய்ப்படையலாகிய "பூத வேள்வி" என்னும் "களவேள்வி" -

தென்புலத்தார்க்குச் செய்யும் படையலாகிய "தென்புலத்தார் வேள்வி" என்னும் மூவகை வேள்வி வழக்குகள் தமிழகத்தில் பரவி நிலைகொண்டு இருந்தபோது, ஆரியப்பார்ப்பனர்கள் தம் தீவேள்வியைக் "கடவுள் வேள்வி" எனவும் - மறைக்கல்வியாகிய மடக்கல்வியைப் "பிரமவேள்வி" எனவும் குறித்து அம் மூன்றுடன் இரண்டையும் பின்னி ஐந்தென அறைந்து அவையாவும் "பஞ்சமகாயாகங்கள்" என்று சூழ்ச்சியாக நிலைப்படுத்தலாயினர்! (காண்க: திவ்யப் பிரபந்தம்; பெரிய திருமொழி :9:10:9)

அக் கால அரசர்களின் அடிதொட்டுத் தோள்பற்றித் தலையிலேறி -நின்றவாறு நெருப்பைத் தீக்குண்டத்தில் எரிய விட்டனர்! தீ வேள்வி செய்து புகை மண்டலமாக்கித் தமிழகப் பரப்பையே மூச்சுத் திணறவிட்டனர்! மூலைக்கு மூலை...... முடுக்குக்கு முடுக்கு புகை மண்டல்!.... எங்கும் அழல்.. எரிவு… தீக் குண்டங்களிலெல்லாம் ஆவின் நெய் அளவின்றிச் சொரியப்பெற்றது! அதனின்று பெரும்புகை எழுந்தது! (காண்க: "கொண்ட தீயின் சுடர் எழுதோறும் விரும்பு மெய் பரந்த பெரும்பெயர் ஆவுதி" (பதிற்றுப்பத்து: 21:6-7) எங்கும் தீ! தீ! எங்கும் அழல்.. தழல்...... அனல்...கனல்.. தனல்.... காங்கை .. வெப்பம். சூடு!.. நம்மவர்கள் சூடும் சுரணையும் அற்று நம் தமிழ்த்தன்மையையே பார்ப்பான் இட்டு மூட்டிய நெட்டநெடுந்தீயில் பொசுக்கத் தொடங்கினர்.....

மலையமான் "திருமுடிக்காரி" என்னும் மாங்காய் மடயனை நோக்கிக் கபிலன் எனும் கடைந்தெடுத்த பார்ப்பான் கழறும் கவினார்ந்த வரியொன்றை இவ்விடத்தில் கண்டு அதுபற்றி எண்ணுங்கள்!.... அவன் அவனைப் பாடுகின்றான்! "நின் நாடே, அழல் புறந்த ரூஉம் அந்தண ரதுவே!" (புறம்: 122:2-3) (அடேய்ய்.. மடய்யா!.. உன்னுடையதாகக் கருதிக் கொண்டிருக்கும் இந்நாடு யாருடையது தெரியுமா?! உன்னுடையது இல்லையடா… அடிமுட்டாளே!… தீ வேள்வியாகிய அழலை எரித்து அதனைப் பாதுகாத்துக்

கொண்டிருக்கும் ஐயர்வாள்களுக்குச் சொந்தமடா... மந்தமாடே..... என்கிறான்!.....)

தமிழகத்தில்...... பார்ப்பனரிட்ட பருத்த புகைத்தீ எப்படி மூட்டமாகி மூடிக்கிடந்தது என்பதற்குரிய சான்று ஆவணமாகவே (Evidential record) இப் புறப்பாட்டின் அகப்பகுதி வெளிப்படையாக நிற்கின்றது! நம் அகத்திலும் புறத்திலும் உள்ள அனைத்துப் பகுதிகளும் அளவற்று எரிகின்றன!.

வடநாட்டிலுள்ள இன்றைய பீகாரில் கி.மு. 642-இல் "சிசுநாகு" என்னும் நாகர் மரபினத்தைச் சேர்ந்த ஒருவனால் மகத அரசு உருவாயிற்று! இம் மகத வழிமரபில் வந்த ஐந்தாவது அரசனாகிய பிம்பிசாரன் அதனை மகதப் பேரரசாக உருவாக்கினான்! கி.மு.413 முடிய சிசுநாகு வழியில் வந்து அரசாண்டு கொண்டிருந்த பேரரசனான மகநந்தன் (மகாநந்தன்) என்பவனை "நந்தன்" (நந்தா) என்னும் துணிச்சல் மிக்க மறவன் ஒருவன் கொன்று போட்டான்! ஆட்சியைக் கைப்பற்றிய நந்தன் நந்தர்மரபு ஆட்சியை நிறுவினான்!

கி.மு.322 முடிய நந்தப்பேரரசு சிறப்புடன் நடைபெற்றுவந்தது! சந்திரகுப்தன் என்பவன் கடைசிநந்தஅரசனை ஆட்சியிலிருந்து தூக்கியெறிந்துவிட்டு மோரிய வழிமுறையை நிறுவினான்! இச் சந்திரகுப்தன் சிசுநாகு மரபில்வந்த கடைசிப்பேரரசரின் குடும்பவுறுப்பினன் ஆவான்! சந்திரகுப்தரின் புரட்சிவழி நாகர்களுக்குரிய மகதப்பேரரசின் மறுநிலைநாட்டல் (புனர்நிர்மானம்) பெற்றது. மகதப்பேரரசின் எல்லைகள் மோரியர்களின் தொடர்ந்த போர்வெற்றிகளால் மிகமிக விரிவெய்தலாயின! அசோகரின் கீழ் - இப்பேரரசு சிறப்பாக மிகப்பெருவளர்ச்சி எய்தியது! இம்மோரியப் பேரரசே - அசோகப்பேரரசு ஆகும்!

பார்ப்பனியத்தின் தீவிரைவான மதப்பரப்பலின் வழியே வடநாடுகளில் பற்றி வளர்ந்து அலைபரப்பிய கெடும்பான சூழ்ச்சிச்சூழலை அடியோடு மாற்றும்நிலையில் அசோகனின் மனம் அறிவன் (புத்தம்) மதத்தில் (பௌத்தத்தில்) மாற்றங் கொண்டது...

பார்ப்பனர்கள் அனைத்து அரசுத் துணைகளையும் படிப்படியே இழக்கத் தொடங்கிய தொடக்கக் காலம் அது!.... பார்ப்பனியப் பல்தெய்வ சிறுமை மதத்தின் மிக அடிப்படையான கூறாகிய வேள்வி முறையிலான விலங்குப் பலிகள் அனைத்தையும் அசோகன் தடை செய்தான்! அதற்கென மிக இன்றியமையாத சட்ட வரைவுகளைத் தீர்வுகளாக ஏற்படுத்திச் செயற்படுத்தினான்! விலங்குப் பலித் தடைகள் பற்றிய விரிவு விரிவான சட்டவரைவுகளைக் கல்வெட்டுக்களிற் பொறித்து நாட்டு மக்கள் கடைப்பிடிக்க வேண்டுமாறு கட்டளைகள் இட்டான்.

விலங்குப் பலிகள் தடை செய்யப் பெற்றமையால் வேள்விகள் செய்யும் முயற்சிகள் பெரும்பான்மையனவும் வடநாடுகளில் படிப்படியே செயலிழந்தன! வேள்விகள் நடத்தி அவற்றின் வழியே பேராளமான பொன்னும் பொருளும் உணர்த்தியான தீனியும் பெற்றுக் கொழுப்பேறிச் செழிப்பெய்தி வந்த பார்ப்பனிய நாடோடிக் குழுவுக்குப் பெருபேரிடிகளாகவே அவ்அசோகனின் அமைதியான கட்டளைகள் அமைந்தன! எனவே, அவ்வரசாட்சியையே அழித்து ஒழித்துத் தரைமட்டமாக்கிவிடக் கமுக்கங்கமுக்கமாகக் கூடிக் கூடிப் பார்ப்பனர்கள் திட்டந்தீட்டத் தொடங்கினார்கள்! (மோரியப் பேரரசின் 140 ஆண்டுக்கால ஆட்சியில் பார்ப்பனர்கள் யாவரும் மேலெழ முடியாமலும் வாய்திறக்க முடியாமலும் குமுறிக் குட்கியவாறு அடங்கியொடுங்கி அமைந்துகிடந்தார்கள்.....)

விலங்குப் பலிகளிலும் சோம வேள்வியிலும் அழுத்தமான நம்பிக்கையும் தோய்வும் கொண்டிருந்த சாமவேதப் பார்ப்பனர்களாகிய சுங்கக் குலத்தைச் சேர்ந்த புசியமித்திரன் (புஷ்யமித்திர) என்னும் பெயரிய கொடுங்கடும்பார்ப்பான் ஒருவன் மோரிய அரசை அழித்தொழிக்கச் சூள் மேற்கொண்டு அதன்படி எதிர்த்துக் கலகஞ் செய்யவுந் தொடங்கினான்!

புசியமித்திரன் என்னும் சுங்கர்குலப் பார்ப்பான் கி.மு.185இல் குதிரைப்பலியை (அசுவமேதயாகம்) மீண்டும் பரவலாக நடைமுறைப் படுத்தினான்! (கி.மு.170-180க்கும் இடைப்பட்ட காலத்தில் பார்ப்பனர்கள் முன்பே மறைவாகச் செய்து வைத்தவற்றினின்று "சுமதி பார்க்கவா" என்னும் பெயரிய கூர்த்த சூழ்ச்சியார்ந்த வெறிபிடித்த

பார்ப்பனன் ஒருவனால் தொகுக்கப் பெற்ற "மனுசுருதி" என்னும் பார்ப்பனிய ஆட்சியமைவு அதிகாரத்தை வலுப்படுத்தும் நோக்கக் கருப்பகுதிகளைக் கொண்ட சட்டத் தொகுப்பு(!) நூலை கி.மு.185இல் தொடங்கப்பெற்ற பார்ப்பனியப் புரட்சியாட்சியில் புசியமித்திரன் சட்டமாகவே அறிவித்தான்! (மனுசுமிருதிக்கு முன்பாகவே மாவை அர்த்த சாத்திரம் அல்லது மாவை ராச சாத்திரம் என்னும் தொகுப்பு நூலும் "மாவை கிருக சூத்திரம்" என்னும் தொகுப்பு நூலும் இருந்தன. இவற்றிலிருந்தும் மனுசுமிருதிச் சட்ட நூலாக்கத்திற்கான நெறிகளில் சில பின்பற்றப் பெற்றுள்ளன.) மனுசுமிருதியில் அறிவன் (புத்தம்) மதத்தை அடியோடு அழித்தொழிப்பதற்கென்றே மிகப் புதிய பல சட்ட வரைவுகளைத் தருமநெறி என்னும் போர்வையில் கணக்க உட்புகுத்தியவன் "சுமதி பார்க்கவா" என்னும் பார்ப்பனிய வெறியனே!

அறிவன் மதத்துறவியின் தலையை வெட்டிக்கொண்டுவந்து தருபவர்க்கு 100 தங்கக்காசுகள் பரிசாகத்தரப்பெறும் என்று "புசியமித்திரன்" அறிவித்தான்! அவன் அறிவித்துச் செயற்படுத்திய இத் "தலைவிலை" அறிவிப்பினுள் -ஆரியவினத்துக்கே அறிவன்மதத்தின் மீதிருந்த அளவிலாத கொடுஞ்சினமும் - கடும்பகையுணர்ச்சியும் - எரிச்சலும் - எல்லைமீறிய வெறியும் அடங்கியுள்ளமையைப் பொதுநோக்கிலேயேகூட ஒருவரால் உணரமுடியும்.

புசியமித்திரனின் குதிரைப்பலியீட்டுத் தொடக்கச்செயற்பாடு, அறிவன்மதத்திற்கு எதிரான பார்ப்பனியத்தின் முதல் எதிர் நடவடிக்கையாகும். ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த "சமுத்திரகுப்தன்" என்பவனாலும் அவன்வழி முறையினராலும் - இவ்வகை நடவடிக்கைகள் முழுமையாக அரசதிகாரத்துடன் பரவலான செயற்பாடுகளாயின! நன்கு வளர்த்தெடுக்கப் பெற்றன! (இக் கட்டுரைப் பகுதியில் சுட்டப்பெற்றுள்ள வரலாற்றுச் சான்றுப் பதிவுகளிற் பெரும்பான்மையின அண்ணல் அம்பேத்கர் அவர்களின் "எழுத்தும் பேச்சும்" என்னும் நூல் தொகுதி – 3-இனை அடிப்படைகளாகக் கொண்டவை. "பார்ப்பனியத்தின் வெற்றி" என்ற தலைப்பில் திரு.வெ. கோவிந்தசாமி என்னும் திறவோரால் மொழி

பெயர்க்கப் பெற்று திருப்பூர் சமூகநீதிப் பதிப்பகத்தாலும் வெளியிடப் பெற்றுள்ளது.)

வடபால் பகுதிகளில் ஆரியரின் ஆட்சியதிகாரங்களும் வேள்விகளும் பூசனைகளும் மதப்பரப்பல்களும் வளரவளர அவற்றின் ஓதங்கள் தென்பாற் பகுதிகளிலும் சாரங்கொண்டன! மனுசுமிருதியின் சட்டநெறிகள்(!) மிகு மறைகரவாகச் செயற்படுத்தப் பெற்றன! இங்கு வந்தேறித் தங்கி இடம் பற்றிய பார்ப்பனர்கள் பின்புலத்தர்களாக நின்று அரசனைப் பற்றியேறியேவிப் படிப்படியே அவற்றைச் செய்விக்கலாயினர்! அவற்றின் விளைவுத் தொடர் காட்சிகளையே இங்கு இம்மண் மிசை நிகழ்த்திய வேள்விவினைகளில் கண்டோம்!

"மறைகளைக் கற்றுணர்ந்த பார்ப்பனனுக்கு வேள்வி நடத்துவதற்காக அனைத்து வகைப் பொன்மணி வகைகளையும் அரசன் வாரி வழங்க வேண்டும்" என்பது மனுசுமிருதியின் பதினொன்றாம் பாடப்பகுதியுள் வரும் நான்காம்நெறியாகும்!

பார்ப்பனர் அல்லாத ஒருவர்க்குத் தரப்பெறும் தானம் பொதுவான பயனையே தரும்! பார்ப்பனன் என்று தன்னை அழைத்துக் கொள்ளும் ஒருவனுக்குத் தரப்படும் தானம் - இருமடங்கு பயனைத் தரும்! மறையை (வேதம்) நன்கு அறிந்த ஒரு பார்ப்பனனுக்குத் தரப்பெறும் தானம் நூறு மடங்கு பயனைத்தரும்! மறை - மறையோத்து (வேதபாராயணம்) முதலியவற்றை நன்கு அறிந்த பார்ப்பனனுக்குத் தரப்பெறும் தானம் அளவற்ற பயனைத் தரும்! என்பது மனுசுமிருதியின் ஏழாம் பாடப் பகுதியின் எண்பத்தைந்தாம் சட்ட நெறியாகும்!

இதன்வழி அரசன் பார்ப்பனனுக்குத் தானம் செய்வது மிகப்பெரிய நல்வினையாகும் என்றும் அவன் பல்வேறு துறக்கவுலகங்களுக்குச் (சொர்க்க லோகங்கள்) சிக்கலின்றிச் சென்றடையும் பெரும்பேறுகள் வாய்க்கும் என்று பல்வேறு நம்பிக்கைகளைப் பார்ப்பான் வளர்த்தெடுத்து அவற்றிற்கென தானமுறைகள் மிகப் பலவற்றை இம் மண்ணின் மைந்தர்களாகிய மடயர்களெல்லோரும் பின்பற்றுவதற்கென வகுத்தளிக்கத்

தொடங்கினான்! நம்மவர் அப் பார்ப்பன இரவலரெல்லோருக்கும் தொகுத்தளிக்கத் தொடங்கினர்!

அவர்கள் நமக்கு வகுத்தளித்த தானமுறைகள் மிகப்பல. அவற்றுள் சில.....

1. இரணிய கருப்ப தானம் (நூறுகோடிக் காலம் (கல்பம்) மேலுலகத்தில் வாழ வழி செய்யும் தானம்! (பொற்குடத் தானம்!) 2. இரணியாசுவ தானம் (பொற்குதிரைத் தானம்) 3. இரணியாசுவ ரத தானம் (பொற்குதிரை-பொன்தேர் தானம்) 4. உபயகோமுகிதானம் (ஆத் தானம்) 5. கனககல்பலதிகா தானம் (பொற் கொடித் தானம்) 6. கனககாமதேனு தானம் (பொற்கன்று- பொன்னாத் தானம்) 7. கல்பவிருட்ச தானம் (பொன்மரத்தானம்) 8. கர்ப்பாச தானம் (பஞ்சுத் தானம்) 9. கிருத பர்வத தானம் (குடநெய்த் தானம்) 10. கிருட்டினாஜினத் தானம் (இரலைத் தோல் தானம்; மாந்தோல் தானம்) 11. குடதேனு தானம் 12. குடபர்வத தானம் 13. கோசகஸ்திர தானம் (அயிரெடை ஆத் தானம்) 14. சக்கரா பர்வத தானம் (சக்கரை மலைத் தானம்) 15. சப்த சாகரத் தானம் (எழுகடல் தானம் - முதல் குடம்: உப்பு; இரண்டாம் குடம்:பால்; மூன்றாம் குடம்:நெய்; நான்காம் குடம் வெல்லம்; ஐந்தாம் குடம்:தயிர்; ஆறாம் குடம் :சக்கரை; ஏழாம் குடம்: தூய நீர்) (சுத்தோதகம் சுத்த + உதக > சுத்தோதக = தூயநீர்); 16. சுவர்ன பர்வத தானம் (பொன்மலைத் தானம்) (250 எடை முதல் 1000 எடை வரை) 17. சையாதானம் (பாய்த் தானம்; பாய்க் கொடை) 18. தராதானம் (தரைத்தானம்; நிலத்தானம்; பொன்னிலத்தானம்) 19. தானிய பர்வத தானம் (தவசமணித் தானம்) : உப்பு, வெல்லம், பொன், வெண்ணெய், எள்-திருமணி (இரத்தினம்)- வெள்ளி-சக்கரை முதலியவற்றை மலைவடிவில் கூட்டிக் கொடுக்கும் தானம்!) 20. திக்பால தானம் (எண்பார்ப்புச் சோறீட்டுத் தானம்) 21. திலபர்வத தானம் (எள்மலைத் தானம்) 22. துலாபுருஷதானம் (துலைத் தானம்; ஆளெடைக் கொடை) 23. பஞ்சாலங்கல தானம்

(ஐம்பொற்கலப்பைத் தானம்) 24. பிரமாண்ட தானம் (பெரும்புடவித் தானம்) 25. மகாபூத கடதானம் (பெரும்பேர்ங்குடத்தானம்) 26. ரத்னதேனு தானம் (திருமணித்தானம்) 27. ரத்ன பர்வத தானம் (திருமணி மலைத்தானம்) (300 எடைமுதல் 1000 எடை (பலம்) வரையிலாகத் திருமணிகளை (ரத்தினம்) மலைபோற் குவித்து அளிக்கப்பெறும் கொடை வகை) 28. ரௌப்பிய பர்வத தானம் (உருவமலைத் தானம்; பெருமலைத் தானம்) 29. லவண பர்வத தானம் (உப்பு மலைத் தானம்) 30. விச்வ சக்கரதானம் (பெருஞ் சக்கரத் தானம்) 31. ஹே ஹஸ்தி ரத தானம் (பொற்கை யிருகரித் தானம்) 32. குடைத்தானம்; 33. தீபத் தானம் (திருவிளக்குத் தானம்) 34. வஸ்திரதானம் (உடையணிகள் தானம்). இப்படிப் பேராளமான தானவகைகள் முன்மொழியப்பட்டு நம்மினத்தவரிடம் பிழியப் பெற்றன!

தமிழர்களின் - தென்னாட்டவரின் செல்வவளங்கள் படிப்படியே பார்ப்பனர்களால் உறிஞ்சப்பெற்று உட்கொள்ளப் பெற்றன! அவர்களின் வெண்சாம்பல் மெல்லுடலங்கள் பொன்திருமேனிச் சடலங்களாயின! மேலும் மேலும் அவர்கள்பால் ஓர் அறியாமையாலேற்பட்ட மயக்கஞ்சான்ற ஈர்ப்பு இங்குள்ள மூளைகெட்ட முண்டங்களுக்கெல்லாம் ஏற்படலாயிற்று!

அறநெறிகள் என்ற போர்வையின் கீழ் மறைக்கருத்துக்கள் என்ற மாய்மாலங்கள் பல.... அன்றைய நம் முன்னோரின் நெஞ்சங்களிலெல்லாம் பார்ப்பான் பற்றிய உயர்வு நிலைகளாக அருமை பெருமை நிலைகளாக உருவேற்றஞ் செய்யப் பெற்றன.

"தூய நல்வினைகளிலும் சரி அல்லது பொதுவான செயல்களிலும் சரி நெருப்பானது தெய்விய ஆற்றலோடு திகழ்கின்றது! அதைப் போலவே படித்தவன் ஆனாலும் சரி அல்லது முழு மடயன் ஆனாலும் சரி பார்ப்பனன் என்பவன் வலுத்திறன் வாய்ந்த தெய்வியஞ்சான்ற பேராற்றல் பெற்றவனே!" (மனு: 9:317).

"பார்ப்பனன்தான் உலகத்தை உருவாக்கியவன்: தண்டனை அளிப்பவனும் அவனே! ஆசிரியனும் அவனே! ஆகவே, அனைத்து உயிரினங்களையும் காப்பாற்றுவன் அவனே! அவனை ஒவ்வொரு மாந்தனும் தகாத சொற்களால் பேசுவதோ அல்லது கடுமையான சொற்களைப் பயன்படுத்துவதோ கூடாது!" (மனு: 11:35).

"அரசன் கடுமையான துயரத்தில் வீழ்ந்து கிடக்கும் போதிலும் பார்ப்பனன் கோபப்படும் அளவுக்குச் சினமூட்டக்கூடாது! பார்ப்பனன் சினம் அடைந்தால் உடனடியாக அவனையும் (அரசனையும்) அவனது படை படையாளச் சூழ்வையும் அழித்து விடுவான்" (மனு 11:313).

“சட்டம் அறிந்துள்ள பார்ப்பனன் குற்றங்கள் எதனையும் அரசனின் கவனத்திற்குக் கொண்டுவரத் தேவையில்லை; தன் சொந்த அதிகாரத் தகுதி வழியே தானே தன்னைத் தொல்லைப்படுத்தியவர்களைத் தண்டிக்க முடியும்” (மனு 11:31).

“அரசனின் அதிகாரத்தைக் காட்டிலும் பார்ப்பனர்களின் அதிகாரம் உயர்ந்ததாகும்; ஆகவே பார்ப்பனர் தம் எதிரிகளைத் தம் சொந்த அதிகாரத் தகுதி வழியே தாமே தண்டிக்கலாம்!” (மனு: 11: 32).

படைத் தலைமை அரசாட்சி அனைவரின் மீதான ஆட்சி உரிமை ஆகிய அனைத்திற்கும் உரிமையுடையவன், பார்ப்பனனே! (மனு. 12: 100)

பார்ப்பனர்க்கு எதிராக எந்தச் சமயத்திலும் படைக்கலம் (ஆயுதம்) தூக்கும் ஓர் அரசனை அல்லது படை வீரனை (சத்திரியனை) பார்ப்பனன் தானே தண்டிக்கலாம்! (காரணம் - அவன் பார்ப்பனரிடமிருந்து தோன்றியவன் ஆதலால்! (மனு. 9:320).

அரசன் நேரில் இருந்து வழக்கு உசாவல் (விசாரணை) செய்ய முடியவில்லையென்றால் - அதற்காகப் படித்த ஒரு பார்ப்பனனைக் கொண்டு உசாவச் செய்ய வேண்டும் (மனு. 8:9).

இப்பொழுது அன்றைய நம் தமிழக ஆட்சிப் பரப்புகளுக்குள் அந்நிலைக் கருத்தேற்றங்களின் தாக்குரவுகள் நிகழ்ந்தமைக்கு ஒரு

சோற்றுப் பதமாக ஒரு நிகழ்வினைக் கருதிச் செல்லல் தேவையானதாகும்!

நம்மவர் - நம் மன்னவர் ஆகிய முன்னவரிற் பெரும்பாலரும் பார்ப்பானை நம்பி நம்பிச் சாம்பினர்!..... அவர்களோ எம்பியெம்பிப் பொம்மினர்! (பொம்முதல் = பருத்தல்)

மேற்சுட்டிய இந்நிலைகளால் பார்ப்பானுக்கு எவ்வளவுக்கு மீமதிப்பும் ஏற்றமும் சாய்காலும் இருந்தன என்பதற்கு அடுத்து வரும் தொடரில், அவன் தூதனாகச் சென்று போர்க்கும் படை படையாளங்களொடு அணியமாயிருந்த ஒரு தமிழ்வேந்தனைக் கண்டு ஓரிரு சொல் சொன்னவுடனேயே, அங்கு என்ன நடந்தது என்னும் காட்சியொன்றில் கண்டு நைந்து கட்டிக் கொண்டு அழுவோம்..... வாருங்கள்!.....

பார்ப்பான் சொல்லும் சொல்லுக்கு, இம் மண்ணில் என்றும் ஒரு பெருமதிப்பு உள்ளது. இது, அன்றும் நேற்றும் இன்றும்..... என்றும் தொடர்கின்றது. உரிய நேரம் பார்த்து மூக்கை நுழைத்து, தான் விரும்பியபடி மோந்து நிறைவடையும் தன்மை பார்ப்பனியத்துக்கே உரியது. நீண்ட தொடர் சிக்கல்களை உற்று உள்நோக்கியவாறே அடைகாக்கும் கோழியைப் போல ஆர அமர அமைதி காத்து உரிய நேரத்தில் முட்டை முனையை அலகாற் கொத்திக் குஞ்சினை சிதைத்தெடுத்துப் புறம் பெயரப் பண்ணுவதில் பார்ப்பான் சிறந்த கெட்டிக்காரன்!.. சூழலுக்குத் தகத் தன்னை முற்றிலுமாக வண்ணப்படுத்தி மாற்றிக் கொள்ளும் பச்சோந்தித் தன்மை பார்ப்பனியத் துக்கென்றே பொருந்திய மரபுப் பண்பு .....

அன்றைய மன்னர்களிற் பலர் பார்ப்பானின் வாழ்த்துதல்களுக்கும் வழிகாட்டலுக்கும் வாய்பிளந்து ஏங்கினர். எதிர்பார்த்தனர். அவன் முன் தலைதாழ்த்தினர். சொன்ன சொல்லுக்குக் கட்டுப்பட்டுக் கடமையாற்றினர்! விட்டுக்கொடுத்தனர். வழிமொழிந்து ஒழுகினர்! (காண்க: "ஆறு புரிந்து ஒழுகும் அறம்புரி அந்தணர் வழிமொழிந்து ஒழுகி" (பதிற்றுப் பத்து: 24:7-8). பார்ப்பான் சொல்லிவிட்டான் என்றால் ஏன்? எதற்கு? என்றெல்லாம் எதிர்த்துக்

கேட்கும் மனப்பாங்கே, அக்கால மன்னர்கள் பலருக்கும் இருந்ததாக வரலாறு இல்லை!

மதுரை வேளாசான் - என்னும் புலவனொருவன் ஆவணப்படுத்தி வைத்துள்ள பாட்டு – இது!......

"வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
உயவல் ஊர்திப் பயலைப், பார்ப்பான்
எல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே யதற்கே
எரியும் சீப்பும் மாற்றி
மாண்வினை யானையும் மணிகளைத் தனவே!" **புறம்**: 305)

(வேந்தர் இருவர்க்குள் மாறுபாடு (இகல்) நேர்ந்து - அது புகைந்து தீப் பற்றினாற் போன்று எரியும் போது நான்மறைகளுக்குச் சொந்தக்காரனான பார்ப்பனப்பையல் ஒருவன், இரு பக்கமும் நலம் பெருகுகின்ற வகையில் நடுவுநிலைமை (சந்து செய்து தீர்க்கின்ற முறைமைக்குப் "பார்ப்பனமுல்லை" என்பது பெயராகும் என்று அப் புறப்பொருள் வெண்பா மாலை, அச் செயலின் மீது ஒளிபீய்ச்சிப் பாய்ச்சி வைத்துள்ளது!)

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்துள் அரசாண்ட எவரோ இரு தமிழ் மன்னர்களுக்குள் இவ்வாறு இகல் (மாறுபாடு) ஏற்பட்டுள்ளது. இருவரும் தத்தம் பாங்கில் போர்க்கு அணியமாகி (தயாராகி) வேண்டிய முன்னேற்பாடுகளை முடுக்கமாகச் செய்து கொண்டிருந்தனர். ஒரு மன்னனை அடைந்து அமைதி செய்துவிட்டு மற்றொரு வேந்தனை நோக்கித் தூதுவனாகச் சென்றான், பார்ப்பனச் சிறுவன் ஒருவன்!

(இப்பாட்டின் இரண்டாம் அடியுள் வரும "பயலைப் பார்ப்பான்' என்பதற்கு "மிக்க இளையவனான பார்ப்பான்" என்பது பொருள்! "பார்ப்பனப் பயல்" எனினும் ஒக்கும்!....)

வயலைக் கொடி (பசலைக் கொடி போன்று வாடிய இடுப்பினை உடைய சின்னஞ்சிறிய பார்ப்பான்

(நடைவண்டியிலேயே) (உயவல் ஊர்தி!) நடையாகவே சிலுக்குச் சிலுக்கென்று நடந்து அவ் வேந்தனின் தங்கிடத்தை இரவு நேரத்தில் அடைந்தான்.... அந்நேரத்தில் அந் நள்ளிரவில் அவ் வேந்தன் செய்யவிருக்கும் படைவினைகளுக்குரிய அடிப்படை முன்னேற்பாட்டுக் கூறுகளிற்பல அங்கு நிறைவேற்றமாகி விடியலில் நடக்கவுள்ள போருக்கான அணிய நிலையில் காத்திருக்கும் துடிதுடிப்பான சூழல் நிலவிக் கொண்டிருந்தது. பகைவரின் மதிலைக் கைப்பற்றுவதற்கென ஏணிகள் பலவும் அணியப்படுத்தப் பெற்றிருந்தன! தன் அரண்மனையின் உள்வாயிலில் கதவுக்கு வலிவாக அதனை அசைக்கவியலாதவாறு நிலைநிறுத்தப் பண்ணுவதற்கு ஏந்தாக உரிய இடுமரங்கள் (சீப்புகள்) அணியமாக இருந்தன! நன்கு போர்ப்பயிற்சி மிக்கிருந்த யானைகளுக்கு உரிய மணிகள் பக்கவாட்டுக்களில் கட்டப் பெற்றிருந்தன....

மாறுபாடும் சினமும் வாய்ந்திருந்த அவ் வேந்தலுக்குரிய தங்குமனையின் வாயில் அருகில் வந்த பார்ப்பான் - எவருடைய ஒப்புதலையும் பெறாமலேயே (அப்படிப் பெற வேண்டிய தேவை பார்ப்பானுக்கு அன்றைக்குக் கிடையாது....) உள்ளே கிடுகிடுவெனச் சென்று புகுந்தான்!....

அவ் வேந்தனை நோக்கி - அப் பார்ப்பனச் சிறுவன் மிகக் குறைந்த சொற்களால் ஏதோ சொன்னான்.... அவ்வளவுதான்..... அதற்கே அனைத்துப் போர் ஏற்பாட்டு முயற்சிகளும் உடனே நிறுத்தப் பெற்றன! ஏணிகள் எல்லாம் எறியப் பெற்றன! சீப்புகள் யாவும் மாற்றப் பெற்றன! யானைகளுக்குப் பூட்டப்பெற்றிருந்த மணிகளெல்லாம் மறு நொடியில் களைந்து நீக்கப் பெற்றன! அத்துணை நிலைகளும் - பின்னர் அமைதி பூண்டன! போர் இல்லை... இல்லவே இல்லை ...... எப்படி நடந்தது, இது! வெறும் சில சொற்களைக் கொண்டு, அப்படி எதனைக் கூறியிருப்பான் அப் பார்ப்பான்? நமக்கு அறவே விளங்கவில்லை. ஒன்று மட்டும் தெள்ளத்தெளிவாக நமக்குப் புரிகின்றது. பார்ப்பான்கருத்துக்கு

மாறுகருத்து என்று ஒன்று இல்லை என்பதே, அது! இதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. அன்றைய வேந்தர்கள் அன்றைய பார்ப்பனர்களிடம் எவ்வாறு அடங்கியொடுங்கி நடந்து கொண்டார்கள் என்பதுவே, இதுபோலும் செய்தியால் நாம் அறிய இயல்கின்ற உண்மையாகும்!

"பார்ப்பான்" என்னும் அழகிய சொல், ஒரு மொழிபெயர்ப்புச் சொல்.... வேதியன் (வேதிய) என்னும் சமற்கிருதச் சிறப்புச் சொல்லுக்குத் தமிழர் நேரிதாக மொழிபெயர்த்து உருவாக்கிப் பயன்படுத்திய எழிலார்ந்த கொடியவனுக்குரிய பெயர்! இப்படிப்பட்ட மொழி பெயர்ப்பு முறையைத் தொல்காப்பியர் தம் நூலுள் இவ்வாறு சுட்டினார்: "மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தலோடு....." (தொல். பொருள். மரபியல் 97: 1-2)

தன்மானத் தமிழர்களின் இப் பயன்பாட்டுப் போக்கை முறியடிக்கும் வகையிலேயே மதிப்புரவு வாய்ந்த செந்தமிழ்ச் சொற்களில் பெருமையார்ந்திருந்த அந்தணன், ஐயன் என்னும் இரு சொற்களையும் தம் குலப்பெயர்ச்சுட்டுக்களாக மென்மெல வலியுறுத்தித் தமக்கே உரியனவாக அவர்களே எடுத்துப் போர்த்திக் கொண்டார்கள்; குளிர்காய்ந்து கொண்டார்கள்....

ஆரியத்துக்குத் தலைவணங்கிய தன்மானமிலிகளிற் சிலர் மட்டும் அரசனைச் சார்ந்திருந்து மிகுந்த செல்சொல், (செல்வாக்கு) வலிவுடையராகி மேன்மட்டத்தில் ஒட்டிக்கொண்டு கிடந்த அன்னோரை அந்தணன், ஐயன் என்றவாறான சொற்சுட்டுக்களாலேயே குறிக்கலாயினர். தன்மானஞ் சார்ந்த தமிழ்ப்புலவர்களிற் பலரும் "பார்ப்பான், பார்ப்பான்...." என்றவாறே தெளிவார்ந்த அம் மொழியாக்கச் சொல்லைத் தம் ஆக்கங்களுக்கிடையே பதித்துச் செல்வாராயினர்!

பார்ப்பான் என்ற மொழியாக்கச் சொல் உருவாக்கப்பட்ட பின்னர்ப் பார்ப்பனப் பெண்ணைக் குறிக்கும் சொற்களாகப் பார்ப்பனத்தி (பார்ப்பனன்) + அத்தி), பார்ப்பனி, பார்ப்பினி (பார்ப்பனன் + இ) ('பார்ப்பினி மருதியை' மணிமேகலை. 27:41,

பார்ப்பினி " (<பார்ப்பனி : பார்ப்பினி (வின்சிலோ), பார்ப்பாத்தி (பார்ப்பு +அத்தி > பார்ப்பாத்தி (>பாப்பாத்தி கொச்சை (தமிழகச் சட்டமன்றவுரையிடையிலேயே தம்மைப் "பார்ப்பாத்தி" (நான் ஒரு பாப்பாத்தி தான்....) என்று உரக்கக்கூவிய முன்னால் முன்னாள் போடவேண்டிய ஒரு முதலமைச்சியின் கூவலையும், நாம் சென்ற ஆட்சிக்காலத்தில் கேட்டு அதிர்ந்தமையும் இவ்விடத்தில் நினைந்து கருதியுணர்ந்து நகைக்கத் தக்கதாகும்!..), பார்ப்பி. (பார்ப்பு+இ) ["பாக்கியம் அமைத்த பார்ப்பி பாப்பியையும்" பெருங்கதை. நரவாண. 7: 130] போன்ற சொற்கள் தமிழகத்துள் படிப்படியே வழங்கப்பெற்றன.

அமைச்சன், - "அமைச்சு" என்ற சொல் கொண்டும், அமைச்சு= அமைச்சன் (குறள்: 631, 632, 633), அரசன், அரசு" என்ற சொல் கொண்டும் (அரசு = அரசன் (குறள்: 384), வேந்தன், "வேந்து" என்ற சொல் கொண்டும் (வேந்து = வேந்தன் (குறள்: 550, 551, 561, 681, 735, 740, 895, 899) சுட்டப் பெற்றமை போன்றே, பார்ப்பானும் - "பார்ப்பு" என்ற சொல் கொண்டும் கட்டப்பெற்றான். (காண்க. பார்ப்பு: பார்ப்பான்; பார்ப்பனச் சாதி. ("ஆறும்...... பார்ப்பியற் கூறும்" (தொல். பொருள். 75: உரை (மேலும் காண்க: "பார்ப்பொடு பழகேல்!" (ஆத்தி சூடி: 77)

பிற்கால ஔவையாரின் ஆத்திசூடியுள் "பார்ப்பொடு பழகேல்" என்பதுவும் ஓர் அரிய அறிவுரை; அறவுரை!... (இது பார்ப்பான் பதிப்புகளிலும் பார்ப்பானுக்கு அடியவராயிருந்தார்ப் பதிப்புகளிலும் "பாம்பொடு பழகேல்!" என்றவாறு நுட்பமாகவும் சூழ்ச்சியாகவும் கரவாகவும் மாற்றப் பெற்றுள்ளது! (காண்க: பக்கம்: 8. சை.சி.நூ. ப.கழகம். ஆங்கில மொழிபெயர்ப்புடன்-)

("பாம்பொடு பழகேல்" என்றவாறு 77-ஆம் அறநெறிப் பாவரியாத்த ஔவையார் - அதே ஆத்திசூடியுள் "அரவம் ஆட்டேல்" என்றவாறு 25-ஆம் அறநெறிப் பாவரியொன்றை ஏன் முற்கூட்டியே சுட்டியுள்ளார், என ஓர் எளிய கேள்வியொன்றைக் கேட்டாலே கரவாக

மாற்றித் திரித்துவிடப்பெற்றுள்ள அவ்வரியிடையுள்ள சூழ்ச்சிக்கருத்து உடைந்து போய்விடுவதைக் காணலாம்.....)

புதுச்சேரிப் பெரும்புலவர் பாவேந்தர் அவர்கள் தாம் எழுதிய புதிய ஆத்திசூடியுள் மிகத் தெளிவாக இவ்வாறு குறிப்பிடுவதும் இங்குக் கருதத்தக்க ஓர் ஆர் அறிவுவரியாகும்! அது, இது..! 'பார்ப்புப் பொதுப்பகை" (பாரதிதாசன் - ஆத்திசூடி: 58).

"சூத்திர னுக்கொரு நீதி - தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு
வேறொரு நீதி!
சாத்திரம் சொல்லிடுமாயின்-அது
சாத்திரமன்று சதியென்று கண்டோம்!..."

என்றவாறு ஏதோ ஓ... ஒரு மூடில் (மூடு இல்லாத) மனநிலையில் பாரதி பாடிய அழகிய சந்த யாப்பு வரிகளிடையே, இப் "பார்ப்பு" தண்டச்சோறு உண்டவாறு உள்ளடங்கியுள்ளமையையும் இவ்விடத்தில் கண்டுகளிக்கத் தக்கதாகும்!

"நெருப்பிடம் (தீயிடம்) எவ்வாறு நெருங்கியும் நெருங்காதும் இருந்து குளிர்காய்ந்து கொள்ளுகின்றோமோ அவ்வாறே, மிக மிக எச்சரிக்கையாகப் பார்ப்பானிடம் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும்!" என்றவாறு உழவர் குடியினராகிய வேளாண்குடிமக்களுக்கு (திரிகடுக நூல்வாயிலாக) அறிவுரை கூறிய நல்லாதனாரின் கூற்றும் இவ்விடத்தில் சிந்திக்கத் தக்கது! திரிகடுகம்: 42:2. "பழகினும் பார்ப்பாரைத் தீப்போல் ஒழுகல்!

பார்ப்பான் நாடோட்ட வாழ்க்கையினனாகத் திரிந்து கொண்டே வாழ்ந்ததில் தங்கி நிலைத்துவாழும் ஓர் இனமக்களுக்கு இயல்பாக அமைந்தியலும் அறிவினும் வேறுவகைப்பட்ட உலகியல் தெளிவு மேம்பட்டவனாக வளர்ந்திருந்தான்! கிரேக்கப் பள்ளப்பகுதியொன்றினின்று புறப்பட்டு ஆங்காங்கும் அலைந்து திரிந்து அல்லோலகல்லோலப்பட்டு இந் நாட்டுக்குள் புகுந்தேறுவதற்கும் முன்னர் வழியிற்கண்ட இன மக்கள் பலரின் பழக்க வழக்கங்கள் - செயல்திறமுறைகள் பலவற்றையும் கண்டும் -

உணர்ந்தும் - கற்றும் ஆரியன் வளர்ந்திருந்தான்! வழியிற் கண்டு பெற்ற அறிவு நிலைகளோடு தீய சூழ்ச்சி வாய்ந்த குறுக்குத் தன்மையே அவன் இனத்தின் இயல்பாக மேம்பட்டிருந்தது!

அன்று முதல் இன்று வரை இச் சூழ்ச்சி மனப்பான்மையும் கரவும், - அறாத இழைத்தொகுதி போல் அவ் இனத்தானிடம் பிணைப்புண்டு கிடக்கின்றது! அவ் இனத்தானின் ஒவ்வொரு செயலிலும் இந்நொடியிலுங்கூட நாம் இதனைக் காணவியலும்!

இந் நிலையுண்மைகளை உணர்ந்து தெளிந்திருந்த பாவேந்தர் அவர்கள் தம் "தமிழியக்கம்" என்னும் நூலுள் ஓரிடத்தில் இவ்வாறு வெளிப்படையாகவே விளாசியுள்ளார்.! தமிழ் மாணாக்கரை நோக்கி எச்சரிப்பாக அவர் கூறிய அறிவுரை அரும்பா, அது! அது, இது!.....

"பார்ப்பான் பால்படியாதீர்;
சொற்குக் கீழ்ப் படியாதீர்
உம்மை ஏய்க்கப்
பார்ப்பான்; தீதுறப் பார்ப்பான்
கெடுத்துவிடப் பார்ப்பான்- எப்
போதும் பார்ப்பான்
ஆர்ப்பான் நம் நன்மையிலே
ஆர்வ மிக உள்ளவன்போல்
நம்ப வேண்டாம்!
பார்ப்பானின் கையை எதிர்
பார்ப்பானையே பார்ப்பான்
தின்னப் பார்ப்பான்!"

(தமிழியக்கம்: 78 - ஆம் பாடல்)

ஒவ்வொரு நாளும் அவர்களில் ஒவ்வோர் ஆளும் செயற்பட்டு வரும் முறைமைகளை உற்று நோக்கும் எவர்க்கும் இது எளிதிற் புலனாகும்!

தாள்களிலும் நூல்களிலும் தொலைக்காட்சிகளிலும் (T.V.) இதழ்களிலும் (வாய்) இதழ்களினின்றும் மூக்கினின்றும் புறம்பெயரும் ஒலிகளிலும் (வானொலிகளிலும்) அவனே - அவன் சார்ந்த (ஆட்டியே!)

அவளே - தலையிடத்தில் வாலாட்டித் திரியும் சூழலைப் பார்க்கவியலும்!....

எங்கும் நேர்மையையே கடைப்பிடிக்கும் அறிவாளியாகவே- தன்னை முற்படுத்தி நடிக்கும் நயத்திறத்தன்மை பார்ப்பானுக்குக் கைவந்தகலை!.... அன்பே வடிவானவன் போன்றும்- அமைதியையே விரும்பிப் பணிபுரிபவன் போன்றும் நடுவு நிலைமையையே நயந்து அதற்கெனவே தோன்றி முளைத்த தூயவன் போன்றும் பார்ப்பான் அதிக நுட்பமாகச் செயல்படுவதில் வல்லாளனாகவே என்றும் இன்றும் நிலைத்து இயங்குகின்றான்.

ஏதோ ஒருவகையில் தான் தங்கி வாழும் மண்ணகத்தில் அம் மண்ணின் மைந்தர்கள் உயர்ந்து உருப்பெறுதற்கான விழிப்புச் சூழல் முளைவிடப் போகின்றது என்று குறியீடுகள் சில தென்பட்டவுடனேயே நல்ல பாம்பானது இக்கட்டு நேரத்தில் விழிப்புணர்ச்சியோடும் எச்சரிக்கையோடும் முன்அணியமாக சில அடிப்படைச் செயல்நிலைகளை மேற்கொள்ளுவது போல அவ்வளவு விரைவு விரைவாகவும் கூர்மையாகவும் செயற்பட அணியமாகும் தன்மையை ஒவ்வொரு பார்ப்பானிடத்துங் காணலாம்!

நாம் வாழும் தமிழக எல்லையை அடுத்த ஓர் இருபத்திரண்டு கற்கள் தொலைவில் உள்ள இலங்கையுள், நம் சொந்த இனமக்கள் கால்கோடி எண்ணிக்கையினர்க்கும் மேம்பட்ட நம் குருதிவழியினர் நம் ஒரே தொப்பூழ்க் கொடிஉறவின் - நம் கால்வழியினராகிய செந்தமிழ் மானமக்கள் கடந்து வந்த ஐம்பது ஆண்டுக்காலமாகப் படாத பாடுபட்டு வருகின்றனர்! தொடர்ந்து இழிவுபடுத்தப்பெற்று உரிமைகள் மறுக்கப்பெற்று அடக்கியொடுக்கப்பட்டு அல்லற்படுகின்றனர்! கற்பு (கல்வி) மறுக்கப்பெற்று - கற்பு சூறையாடப்பட்டு - கொலை வாய்ப்பட்டு உலைவாய்ப்பட்ட நிலையினராகவே இன்றுங் குலைவுறுகின்றனர். குமுறி நோகின்றனர்! அம் மக்களுட் சிலர் உலகெங்கணும் வாழ்க்கைப்பாடு நோக்கி அலைந்து அலமருகின்றனர். சிங்கள இனவெறி நாய்களால் சீய்ப்படும் நம் இனமரபுச் செல்வமக்கள் ஐம்பதாண்டுகளாக அடைந்து வரும் இன்னல்களுக்கும் இக்கட்டுகளுக்கும் இடர்ப்பாடுகளுக்கும்

இடுக்கண்களுக்கும் இடையூறுகளுக்கும் அலைக்கழிப்பு களுக்கும் அழிம்புகளுக்கும் அளவில்லை! அளவேயில்லை!

அனைத்து உரிமைகளையும் ஒட்டுமொத்தமாக மீட்கும் முயற்சியில் நேரிடையாகப் போர்வினைகளில் மும்முரமாக ஈடுபட்டு 27.11.1982 தொடங்கி 2009 வரையிலான காலஅளவுக்குள் இறுதிச்சூழ்ச்சி வெறியாட்டத்திற்கு முன்னீடாக ஓரிலக்கம் மக்களையும் - (போராளிகளும் – பொதுமக்களும்), - **பிரபாகரன்** எனும் தமிழின மறவர் தலைவனாகிய பெருந்திறலோனான ஒளியோனையும் மறவர்களாகிய இளையரையும் தோழியரையும் பொது மக்களையும் சேர்த்து ஒன்றரையிலக்கம் தமிழினத்தாரையும், தொகு மொத்தமாக இரண்டரையிலக்கம் எண்ணிக்கையினரையும் சிங்கள இனவெறி நாய்களும் - இந்தியப் படைத்துறைக் கூலிப்பயல்களும் கொடுமையாகச் சிதைத்துக் கொன்றுபோட்டனர்! கைகோத்தவாறு கருப்புக்கொடி ஏந்தி மெல்லிய முழக்கங்கள் போட்டவாறு நாம் உள்ளொடுங்கிக் கொண்டோம்! அரசியல் கொள்ளையரும் நடித்துக் காய் நகர்த்தினார்

இவ் வினைக்குப் போகின்றோம்; திரும்பி வரவேமாட்டோம், நம் உயிரை நமது நாட்டு மீட்சிக்கென ஒப்படைக்கச் செல்கின்றோம் என்ற தெளிவான மகிழ்வார்ந்த வீறுறுதியுடன் எதிரிப்படையோடு தாமே சென்று கடமையாக மோதிச் சிதறிய 160 எண்ணிக்கையினர்க்கும் மேற்பட்ட இளைஞர்-இளைஞிகளாகிய தமிழ்மான விடுதலைக் கரும்புலிகள் அங்குத் தாம் நடத்திய ஈகவேள்வியுள் வேண்டுமென்றே எரியுண்டு மறப்புகழ் எய்தி மாய்ந்தமையை எண்ணினால் உயிருங்குலையும் ஒருசேரப் பற்றிஎரிகின்றது!

இவை போன்ற செய்திகள் எவ்வளவு மிகப்பெரியன!.... உலகந் தோன்றிய நாளினின்று - உயிர்கள் தோன்றிய நாளினின்று - மாந்தற்போலி (Anthropoid) ‘மாந்தவுயிரனாக' மாந்தனாக மாறிநின்ற நாளினின்று எண்ணிப்பார்க்கவே முடியாத - கற்பனைசெய்து

பார்க்கவே முடியாத மீப்பெரிய வினையாண்மைகள் நமக்குப் பக்கத்திலேயே ஐந்து நிமையத்துக்குள் வானூர்தியில் **சென்றடைந்து விடக்கூடிய மிக அண்மையிடத்திலேயே நிகழ்ந்துள்ளன**!

இவையாவும் மிகத் துலக்கமாகவும் விளக்கமாகவும் நமக்கு ஏன் தெரியவில்லை, தெரியுமா?..... இங்குள்ள பார்ப்பனஇனம் அவ்வளவு தெளிவுடையது!.... அவ்வளவு விளக்கமுடையது!..... அரசியலிலும் ஆளுமையிலும் அவ் இனத்தின் கட்டுப்படுத்தங்களே எங்கும் நீக்கமற நிறைந்துள்ளன! செய்தித் தொடர்பு ஊடகங்களாகவுள்ள பெருவலிவுகளில் அவ் இனத்தின் இருப்பு, மிகமிக அதிகம்!... தாள்களும் வானொலிகளும் தொலைக்காட்சிகளும் ஆட்சியதிகாரத்தின் குடுமிகளும் அவ்வினத்தின் கையில்! அவ் இனத்தான் அசைத்தால் அவை ஆடும்...... எங்கும் அவன் இழுத்தால் இழுப்புக்கு கடைப்பிடிக்கும்படி - ஏற்றபடி வளைந்து நெளிந்து அவை ஆடும்!

தமிழினத்தவர்க்குள் ஒருவருக்கொருவர் கலந்துரையாடுதலில் கூட அச்சவுணர்ச்சியை ஆழப்படுத்தி விட்டான்; செய்திகள் பரிமாற்றமுறும் நிலைகளையே செயலிழக்கச் செய்துவிட்டான்; தமிழ் என்றவாறு வெளிப்படையாகச் சொல்வது கூட, ஒரு "வன்முறைச் செயல்" என்றவாறான ஒரு கடுங்கொடுஞ் சூழ்நிலையை நிலையாகவும் நுட்பமாகவும் நிலைப்படுத்தி விட்டான்.

அடிக்கடி, நடுவுநிலைமை பற்றிப் பேசுவான்; எழுதுவான், தூண்டுவான்! தொடர்ந்து திரும்பத் திரும்ப ஒன்றைச் சொல்லி மூளை வெளுப்பு செய்வான். அந் நடுவுநிலைமை என்பது, அவன் இனத்திற்கான காப்புணர்ச்சியாகும். அவன் தொடர்ந்து இம் மண்ணில் பொருக்கித் தின்னுதற்கு.. இடையூறில்லாத சூழலமைப்பை ஏற்படுத்தும் வினையாண்மைக்கு உரியதாகும்!

ஈராயிரம் ஆண்டுகளுக்கும் முன்னீடாகப் பார்ப்பானுடைய நடுவுநிலைமை என்னும் சூழ்ச்சி வலைப்பின்னலில் வீழ்ந்து எவ் அரசனும் தப்பவில்லை... அவனை அண்டி வாழ்ந்த குடிகளும்

தப்பவில்லை! நேர்மையும் மனச்சான்றும் இன்றி, அறநெறிகள் என்ற பெயரில் அவன் உருவாக்கி வலியுறுத்திய சட்டங்களெல்லாம் அண்மைக்காலம் வரை இந் நாட்டில் பிசிரில்லாதும் பிசகில்லாதும் அவ்வவ்வாறே பின்பற்றப் பெற்றன.

மௌண்ட்யம் பிராணந்தி கோதண்டா
ப்ராஹ்மணானாம் விதீயதே
இதரே ஷாம்து வர்ணானா மதண்ட
ப்ராணந்தி கோப வேத –

இச் சொலவகம் (**சுலோகம்**) **மனு** (**அ**) **தர்ம சாத்திரத்தில் சட்டமாக எழுதப்பெற்றிருந்தது**; (**இன்றும் தவிராது அச்சிலும்** வந்து கொண்டுள்ளது) (பொருள்: கொலைத் தொழில் புரிந்துவிட்ட மற்ற வண்ணத்தாரைத் (வருணத்தாரை) தூக்கில் போட்டுக் கொல்ல வேண்டும், இத்தகைய குற்றத்தைப் (கொலையைப்) பார்ப்பான் ஒருவன் செய்து விடுவானானால் அவனை எக் காரணங்கொண்டும் தண்டிக்கக்கூடாது, அதற்கு அவன் தலைமயிரை மொட்டையடித்துவிடுதல் வேண்டும், அதுவே தண்டனையாம்.

இராணடேயும் - காந்தியும் - சின்னாவும் (Ranade Gandhi and Jinnah) என்ற நூலில் பக்கம் 25–இல் **அண்ணல் அம்பேத்கர் பெருமகன் இது பற்றி இவ்வாறு எழுதுகின்றார்**!

"இச்சட்டத்தை அரசர்கள் ஏற்றுச் செயற்படுத்தி வந்தனர்! பின்னர்-இந்துச் சட்டம் (Hindu Law) என்னும் மூசடியான (மோசடியான) சட்டத்தின் கீழ் - எத்தகைய கொலைக் குற்றத்திற்கும் பார்ப்பனர்கள் மட்டும் விலக்களிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள்! கிழக்கிந்தியக் குழுமம் (கம்பெனி) 1817-ஆம் ஆண்டுவரை இச் சலுகைகளை ஏற்று பார்ப்பனர்களுக்குத் தண்டனை வழங்குவதை முழுவதும் தவிர்த்து (இம் மனுதர்மச்சட்டத்தை) நடைமுறைப்படுத்திவந்தனர்!"

எவ்வளவு கொடுமை, இது! கடந்த ஈராயிரம் ஆண்டுக்கால அளவில் எப் பார்ப்பானும் இம் மண்ணக மைந்தன் எவனையும் கொல்லலாம். கொலை செய்த 'பார்ப்பானுக்கு மிகப்பெரிய

தண்டனையோ அவனுக்கு மொட்டையடித்து விடுதலை!....' அடா..அடா!... நம் உரிமைகளை மொட்டையடித்துள்ள - உணர்வுகளை மொட்டையடித்துள்ள - நம் பெருமைகளை மொட்டையடித்துள்ள இக் கொடுமுடியான முறைகளை உருவாக்கிய மரபில் முளைத்த குடுமிகள்(!) இன்றும் இன்னும் இன்னும் உச்சியில் ஆடிக் கொண்டிருக்கின்றனவே! அவ்வுச்சிக் குடுமிகளை நம் உள்ளங்கைகளாற் பற்றியிறுக்கிப் பிடிக்கும் நாளே - நம் எச்சம் (எதிர்கால நம் மரபினர்) உய்வடைதற்கான நாளாகும்! அப் பொன்னாள், எந் நாள்?...

"இருக்கு, எசுர், சாமம், அதர்வணம்" என்னும் நான்கு மறைகளையும் செவியாற் கேட்டுக் கற்ற பார்ப்பானை "நான்மறையோன்" என்றவாறு அக் காலத்தில் நம்மவர் சுட்டினர்.

பல்வேறு சிறு தெய்வங்களை வாழ்த்திப்பாடும் சற்றேறக்குறைய 10,500 உரைப்பாக்கள் அடங்கிய முதல் தொகுதியாகிய இருக்கு மறையே "எசுர்" மறைக்கு அடிக்களன் ஆனது. ஏறத்தாழப் பாதியளவினதான இருக்கு உரைப்பாக்களே "எசுர்" தொகுதியுள் அடங்கியுள்ளன! சாம மறை 1549 உரைப்பாக்களால் ஆனது!. அதனுள் 75 உரைப்பாக்களே பதிய கோப்புக்கள். பிற அனைத்தும் சந்த நலம் பெறுமாறு அமைத்த இருக்கு உரைப்பாக்களே, இருக்கு மறையுள் மூன்றில் ஒரு பகுதி அதர்வம் (அல்லது) அதர்வண மறையுள் பதிவுற்றுள்ளது. அம் மறை 6000 உரைப்பாக்களின் தொகுதி.

இவை யாவும், எழுத்து வடிவத்தில் இவற்றை அமைத்துக் கொள்ளும் முன்னர் இங்குக் கணக்கிட்டுரைத்த அளவு எண்ணிக்கையிலும் மீமிகக் குறைவனவாகவே இருந்தனவாதல் வேண்டும்.

பிராமணநாடோடியர் தாம் தத்துப்பித்தென்று பேசிக்கொணர்ந்த கிரேக்கவகைப்பட்ட வேதமொழியானது இக்கால ஆங்கிலமொழிக்கு மூலக்களனாயிருந்த ஆங்கிலோசாகசானிய மொழியைப் போன்று சொற்றொகுதி நிலையில் மிகச்சில நூறு

அல்லது ஓரீராயிம் (ஒரு அல்லது இரு ஆயிரம்) சொற்களையே கொண்டிருந்தாதல் வேண்டும்.

அக் கால வடபுலத்து வட்டார மொழிச்சொற்களைப் பெருவாரியாகப் பற்றிப் புரட்டியெடுத்து விறைக்க வறுத்துத் தம் வேதமொழியுள் கலப்புறுத்தியே, ஓரளவுக்குப் பயன்பெறும் கருத்துப் பரிமாற்ற மொழியாகச் சமற்கிருதத்தைப் பார்ப்பனர் உருவாக்கியுள்ளனர்.

இன்றைய சமற்கிருதத்துள் அடங்கியிருக்கும் பெரும்பான்மைச் சொற்றொகுதி அன்றைய வடபுலத்து வட்டார மொழிகளைச் சார்ந்தது!. (அவையாவும் தமிழ் மொழியின்வழியிலமைந்த வட்டாரத் திரிபு ஆக்கங்களே! அவை பெரும்பான்மையினவாதலின் அவ் வட்டார மொழிகளின் சொற்றொகுதிக்குரிய மொழிப்பெயராகப் "பிராகிருதம்" என்றவாறு ஒரு புதுப்பெயரைச் சமற்கிருத ஆக்கத்திற்குப் பின், பார்ப்பனர் சூழ்ச்சியாகச் சுட்டினர்! (பிரா = முந்தியது. க்ருத= செய்யப்பெற்றது. பிராகிருதம் = முந்திச் செய்யப்பெற்றது).

(சம் = கலப்பு. க்ருத = செய்யப்பெற்றது சம்ஸ்கிருத = கலந்து செய்யப் பெற்றது). தொடக்கத்தில், - அவர்களின் மொழிக்குரிய பெயராகக் “கலப்புமொழி" என்னும் தெளிவான உண்மைப்பெயரையே சூட்டினர்!. காலவட்டச் சுழற்சியில் அவர்களின் வலக்கார வல்லாளுமைகள் வலுக்க வலுக்க அம் மொழிப்பெயராகிய சமஸ்கிருதத்திற்கு (சம் =நல்ல க்ருத- செய்யப்பெற்றது, நன்றாகச் செய்யப்பெற்றது என்னும் பொருத்தமாகப் பொருந்தக்கூடிய நன்மை தரவல்ல மற்றொரு பொருளை நன்றாக இட்டுக்கட்டிக் கட்டிப்பிணித்து ஏற்றியுரைத்துப் பரப்பி நிலைப்படுத் தலாயினர்.

“சம்-க்ரி" என்னும் சமற்கிருத வினைச் சொல்லுக்கு "ஒன்றாகக்கல்" (ஒன்று கூட்டும் கலவையாக்கு) என்பதுவே அடிப்படைப்பொருள். (மாபாரதத்திலும் இவ் வடிவம், இப்பொருளில் மட்டுமே பயன்படுத்தப் பெற்றுள்ளது. "சம்ஸ்க்ருத" - என்னும் சொல்லுக்கு "ஒன்றாகக்" கூட்டிவைத்தது

(put together) என்பதே முதற்பொருளாகும் என்று அறிஞர். “மானியர் வில்லியம்சு" தம் "சமற்கிருதம் ஆங்கிலம் அகரமுதலி"யுள் சுட்டி வைத்ததும் இவ்விடத்தில் ஆழ்ந்து நோக்கற்குரியதாகும். (காண்க: பக்கம் 1120) ஆக, "சமஸ்க்ருதம்" என்னும் மொழிக்குரிய மெய்ப்பொருள் அது, "கலந்து செய்யப்பெற்றது" என்னும் பொருளுடைய "கலப்புமொழி" என்பதுவே!.

இந் நாடு முழுமையிலுமுள்ள வந்தேறிகளான பார்ப்பனர்கள் யாவரும் தங்களின் இன்றைய பெருஞ்சொத்துக்களாக உரிமை கொண்டாடியவாறு உயரஉயரக் குதிப்பதற்குக் காரணமாகவுள்ள அம் (வேதங்கள்) மறைகள் நான்கும் தொடக்கத்தில் வாய்மொழியாகவே சொல்லப்பெற்றுச் செவிவழியாகமட்டும் கேட்கப்பெற்றனவே!

எழுத்து வழியன்றிச் செவி வழியாக மட்டுமே கேட்கப்பெற்ற வகைமையுடையதாக இருந்ததால்தான்.. அது 'ச்ருதி" (சுருதி) என்னவும் பெற்றது. (ச்ரு=கேள். ச்ருதி = கேள்வி) இச் “ச்ரு" என்பதுவும் "செவியுறு" என்னும் செப்பத் தமிழ் வினை வடிவத்தின் கொடுந்திரிபு வடிவே என்பார், பாவாணர்...........)

பார்ப்பானின் மறைகள் யாவும் செவிவழியாக மட்டுமே கேட்டுவரப் பெற்ற கேள்விகளாதலின் அவற்றை "நான்மறைக் கேள்வி" என்னும் தொடர்மொழி கொண்டு பரிதிரட்டு பதிவு செய்துள்ளமை ஈண்டுக்கவனிக்கத் தக்கதாகும் (காண்க. "நான்மறைக் கேள்வி நவில் குர லெடுப்ப" (பரிதிரட்டு. 8.8).

இந் நான்மறையை அடிப்படையாக வைத்தே அவற்றுக்கு உரியவர்களாகத் தம்மை இங்கு அடையாளப் படுத்திக் கொண்ட பார்ப்பனரை, நான்மறையாளர் (திரிகடுகம்.3: 3) (ஆசாரக்கோவை. 61:1) - நான்மறையோர் (பட்டினப்பாலை. 202) நான்மறையந்தணர் (சிலம்பு. 13:141) (மணிமேகலை. 6:169) நான்மறை முதல்வர் (புறம்: 26: 26:13: 93:7) நான்மறைமாக்கள் (மணிமேகலை.13: 99) என்றவாறெல்லாம் குறிக்கும் வழக்குக்கள் நம் தமிழில் எழுந்தன.

அம் மறைகளுள் ஒரு முடியும் (மயிரும்!) சிறந்த முடியில்லை என்பதனை மேலோட்டமாகவே கூடக் காணும் ஒரு பொத்தாம் பொது மாந்தனாலும், எடுத்தஎடுப்பிலேயே விளங்கிக்கொள்ளவியலும்! அவ்வளவுக்கு எளிய பொருண்மைகளையுடைய பொத்தாம்பொதுவாகிய அறிவாக வைத்து எண்ணவே சற்றுந்தகுதியில்லாத, பல்வேறு வெற்றோலங்களாலாகிய மனக் கிறுக்குத்தன்மைகள் வாய்ந்த செய்திகளின் தொகுப்புக்களாலாகிய குப்பைகள் கொட்டிவைக்கப்பெற்ற குண்டுகுழிகளாகவே வேதங்கள் என்னப்பெறும் நான்மறைகளும் கிடக்கின்றன!

சான்றுக்கு, ஒன்றிரண்டு..... (மண்டூகச் செய்தி: தவளைச் செய்தி)

1. ஆண்டு முழுவதும் அமைதியுடன் கிடந்த தவளைகள், வேள்விகளில் தானங்களை விரும்பி ஓதும் பார்ப்பனர்களைப் போல் மழையை விரும்பும் தவளைகள் உரக்கக் கத்துகின்றன. (இருக்கு: 5940)

2. **ஆசிரியன் சொல்வதை அப்படியே திருப்பிக்கூறும் மாணவனைப்போல ஒரு தவளை கத்தத் தொடங்கியவுடன் மற்ற தவளைகள் அதை அப்படியே கத்துகின்றன!. தண்ணீரின் மேல் இருந்து அவற்றுக்குள் பேசிக்கொள்ளும்போது அவற்றின் ஒவ்வொரு. உறுப்புக்களும் பெருத்துத்தோன்றுகின்றன.** (இருக்கு: 5994)

3. நடு இரவில் நடக்கும் சோமக் கள்விருந்தில் சோமக்கள் நிரம்பி வழியும் மரத்தொட்டிகளைச் சுற்றிச் சூழ்ந்து உட்கார்ந்து கொண்டு பேசிக் கொண்டிருக்கும் பார்ப்பனர்களைப் போல் மழைக்காலத் தொடக்க நாளைக் கொண்டாடுவதற்காக நீர் நிறைந்த குட்டையில் - சுற்றிலும் தவளைகள் ஒன்றுகூடியுள்ளன. (இருக்கு: 5996)

இப்படியாக 23,049 அளவு எண்ணிக்கையிலடங்கிய வெற்றுரைகளாகிய நச்சுரைகளின் தொகுப்பையே, "மறை" என்றும், இது எளிதானதன்று என்றும், மாந்தரால் செய்யப்பெறாது தானே எழுந்த பெருவியப்புக்குரிய தெய்வீக வெளிப்பாடு என்றும், (“அபவ்ருஷேனம்" அதாவது புருஷனால் செய்யப்படாதது!) சற்றேறக்குறைய ஈராயிரத்தைந்நூறு ஆண்டுக் காலமாகப்

பிராமணராகிய பார்ப்பனர் தொடர்ந்து நம்மை ஏய்த்து ஏமாற்றி வந்துள்ளமையை நாம் இன்று ஒருவாறு உணரத் தொடங்கியிருக் கின்றோம்!....

தமிழகத்துள் அவர்கள் நன்கு காலூன்றி நிலைப்பெய்தத் தொடங்கிய காலத்தில் அவர்களுக்கு அமைந்திருந்த வெண்ணிறத் தோற்றத்தையும் வெடிப்புக் கடுமை சார்ந்த விரைவு அதிர்ச்சியொலிகளாகிய அரைச்செயற்கை மொழிவெளிப்பாட்டின் புதுமையையும் மறைத்து மறைத்து யாரும் அறிந்துகொள்ள இயலாவாறு ஓதலும் ஓதுவித்தலும்: நிகழ்த்துவித்துக் கொண்டிருந்த நடைமுறைகளையும் கண்ட நம் தமிழ்மக்கள் அவர்கள் (பார்ப்பனர் மறையுள் ஏதோ... ஒரு பெருந்திறவலுப் பேறு உள்ளடங்கித்தான் உள்ளது என்றவாறு உன்னிப்பும் (Autosuggestion) தற்கருத்தேற்றமும் (guess) ஆயாமலேயே நம்பும் மடப்போக்கும் கொண்டவராயினர்!

மறையானது இறைப்பெருமை வாய்ந்ததென்றும் அனைத்து ஆற்றலும் அடங்கியதென்றும் அதனுள் சாவிப்பு (சாவம் **கொடுத்தல்) வசியம்** (mesmerism), **வாழ்விப்பு முதலியன அடங்கியதென்றும் (இவை பெரும்பான்மையடங்கிய மந்திரத் திரட்டே அதர்வமறை) பார்ப்பனர்கள் தொடர்ந்து பன்னிலைகளிலும் பல்லிடங்களிலும் பரப்பப் பரப்ப, அப் பரப்புரைகள் (பிரச்சாரங்கள்) தமிழர்களின் நெஞ்சின் அகத்தும் புறத்தும் - அகப்புறத்தும் புறப்புறத்தும் மீமதிப்பும் பணிந்து போற்றும் தகுதி நிலையும் (தகாத் தகுதி நிலை) எய்தின. அம் மறைகளுள் என்னென்ன செய்திகள் உள்ளடங்கியுள்ளன என்று இன்று நாம் அறிதற்கியலும் வாய்ப்புப்போல் - அன்றைய தமிழகத்துள் சூழல்கள் அமைந்தில**!.

இங்கு வந்து ஈண்டு அன்று அமைந்திருந்த குமுகச் சூழல்களுக்கு ஊடாகப் பட்டும் படாமல் நுண்ணுட்பமாகப் பழகிய பார்ப்பான் அம் மக்களுட் பொருள்வாய்ப்பும் வலுவும் வாய்ந்திருந்தாரின் அகவுணர்ச்சிகளுக்குத் துணைவனாகவும் ஊடாடினான்!. பல இடங்களில் தமிழகக் காதலன் காதலியரிடையே பாங்கனாகவும் (ஊடக மாமர்) பணியாற்றினான்!. (காண்க: தொல்.

கற்பியல்: 52) (மேலுங் காண்க: "பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி, களவின் கிளவிக்கு உரியர் என்ப" (தொல்: பொருள். செய்யுளி: 181).

தலைவனது காமமிகுதி கண்டு இதன் நிலை இப்படிப்பட்டதே என்று இழித்து இடித்துக் கூறுதலும் அவ்வாறு கூறி அவன் தேறுதலும் ஆறுதலும் அடையுமாறு உரிய ஏதுக்களும் தோதுக்களும் கூறுதலும்... போன்ற வினைகள் பார்ப்பர்க்கு உரிய கற்பியல் சார்ந்த செயற்பாடுகள் என்றவாறு தொல்காப்பியர் அன்றே தொகுத்துக் கூறிள்ளமையும் இவ்விடத்தில் சேர்த்துச் சிந்திக்கத்தக்கது.

"காமநிலை யுரைத்தலும் தேர்நிலை யுரைத்தலும்.....

அன்னவை பிறவும் பார்ப்பார்க்கு உரிய"

(காண்க: தொல்: பொருள், கற்பியல்: 36)

பழந்தொல்கால இலக்கியச் செய்திகள் வழியேயும், இலக்கணப் பதிவுகள் வழியேயும் இம் மேற்குறிப்பிடப்பெற்ற அன்றைய நடைமுறைகளை நாம் அறியவியல்கின்றது!.

பாங்கனாக, ஊடகனாக இயங்கிய ஒரு பார்ப்பனமகன், தமிழ்மகனாகிய தலைமகன் ஒருவன் காதல் உணர்வில் கிறங்கி நின்றபோது.. அவனை இடித்துரைத்துத் தேற்றுகின்றான்!. அப்போது, "பார்ப்பன மகனே! நீ எனைத் தேற்றுவது பயனற்ற செயலடா!. உங்கள் மறையில் இதற்கு ஏதேனும் மாற்று மருந்து இருக்கின்றதா? இருப்பின், அதை எனக்குக் கூறு'' என்கின்றான், தமிழ்மகன். அப் பாட்டு, இது!...

பார்ப்பன மகனே! பார்ப்பன மகனே!
செம்பூ முருக்கின் நன்னார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ வுண்டிப் பார்ப்பன மகனே!
எழுதாக் கற்பின் நின்சொல் உள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்தும் உண்டோ? மயலோ விதுவே!

(குறுந்தொகை.156)

கல்+பு கற்பு= கற்றுக்கொள்ளுகை; கல்வி. எழுதாக் கற்பு: எழுதாமலேயே- எழுத்து என்ற ஒன்றன் பயன்பாடில்லாமலேயே வாய்மொழியாற் சொல்லச் சொல்லக் கேட்டுக்கேட்டு அறிவதாகிய கேள்வி வழியாலாகிய கல்வி; அதாவது, வேதப் படிப்பு...)

அம் மறையாகிய படிப்பினுள் உங்களுக்கே உரிய சொல்லாகிய அம் மறையினுள் (...நின் சொல் உள்.... பிரிந்த தலைவியையும் தலைவனையும் ஒன்றுசேரப்பண்ணும் தன்மையையுடைய நோய் தீர்க்கும் மருந்து ஏதேனும் உளதோ?) என்றவாறு தலைவன் ஒருவன், - பார்ப்பனப்பையலாகிய ஒருவனைப் பார்த்துக் - கேட்பதாகிய செய்தியே இப் பாட்டுள்ளடங்கிய -நிகழ்ச்சிக் கரு. எழுதத் தெரியாமலேயே, எழுத்தின் துணையில்லாமலேயே அன்றைய பார்ப்பனர் நம் தமிழகத்துள் இயங்கியிருந்த நிலைமையை இப் பாட்டுள்ளடங்கிய நிகழ்ச்சி நமக்குத் தெரிவிக்கின்றது!.

கி.பி. 10-ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதிக் காலத்திலுமாக வளர்ச்சி பெறத் தொடங்கியதே இன்றைய "தேவநாகரி" எழுத்துமுறை....... "இன்றைய நாகரியிலுள்ள முதற்கல்வெட்டு கி.பி. 11- ஆம் நூற்றாண்டிற்கு முந்தியதாக இல்லை.!" - என்று அறுதியிட்டுரைத்துள்ள அறிஞர் மானியர் வில்லியம்சின் குறிப்பும் இவ்விடத்தில் ஆழ்ந்து கருதத் தக்கதாகும். (காண்க: சமற்கிருதம் - ஆங்கிலம் - அகரமுதலி = முன்னுரையின் அடிக்குறிப்பு. பக்கம்: 28.

அவர்கள், அவர்களுக்குள்ளாகவே சொல்லவும் கேட்கவுமான படிப்பே 'அவர்களின் (அவாள்களின்) அன்றைய கல்விமுறை!. அம் முறைகளை வைத்துக் கொண்டே ஈடிணையில்லாத ஓர் அறிவுச் செழுங் குலமாகிய நந்தமிழினத்தைச் **சூழ்ச்சிகளாலும் கரவுவினைகளாலும் அடி அடியென்று தொடர்ந்து அடித்து அடிமையாக்கி விட்ட கொடுநிலை ஒரு வரலாற்று வியப்பு நிலையாகும்.**

அதற்கு அடிப்படையான ஏந்து நிலைகளைத் (வசதிப்பாட்டை) தொடர்ந்து திட்டமிட்டுச் செய்துகொண்டனர்!. இம்

மண்ணகமைந்தர்க்கு அறிவு ஏற்படாதவாறு நுண்ணிலை வாய்ந்த பல சூழ்ச்சியான தடைச் சட்டங்களை உருவாக்கி மன்னர்களைக் கொண்டே அவற்றைச் செய்றபடுத்தச் செய்து நிலைப்படுத்தினர்.

தங்களின் மறைகள் இறைத்தன்மை உடையவை என்னும் பொய்யையும் - புளுகையும் - புரட்டையும் காப்பாற்றும் முதற்படியாக - மறையினைப் பார்ப்பார் ஓதும்போதும், கேட்கும்போதும் அவற்றைச் சூத்திரன் கேட்கவேகூடாது என்றவாறு பல கடுங்கொடுஞ் சட்டமுறைகளை உருவாக்கினர்!. இதற்குரிய சட்டப்பிரிவின் வடிவுருவினை "அபசூத்திராதிக்கிரணம்" என்னும் நூலிலுள்ள 38-ஆம் சொலவகத்திற்கு விளக்கவுரைப் பகுதியாக விளங்கும் கோதம தர்ம சூத்திரத்தால் அறியலாகும். அது, இது!....

"அதஹாஸ்ய வேத முபஸ்ருஸ்வத: ஸரோத் ரௌத்ர: புஜதுப்யாம் பூர யேத பூர யேத"

(பொருள்: மறை ஓதும்போது அதைக் காதால் கேட்கிற சூத்திரனது (நாலாம் வண்ணத்தானது) காதுகளில் ஈயத்தையும் மெழுகையும் காய்ச்சி உருக்கிவிடவேண்டும்)

அதற்குரிய விளக்கவுரைப் பகுதியிலுள்ள மற்றொரு "சுமிருதி" - இது.

"வேதாச் சாரணே ஜிஹ்வாச்சே
தோதாரனே சரீர பேத"

(பொருள்: நாலாம் வண்ணத்தான் (சூத்திரன்) மறையைத் தன் வாயால் சொன்னால் அவன் நாக்கை அறுக்க வேண்டும்! உணர்ந்து வைத்திருந்தால் அவன் உடலையே பிளக்க வேண்டும்.)

மிக மிகப் பெரும்பான்மையரான உழைக்கும் அடிப்படை மக்கள் - அறிவு பெற முடியாதபடியான ஒரு கொடுங்குமுகச் சூழலைப் பார்ப்பான் உருவாக்கினான். நசூத்ராய மதம் தத்யாத் என்பதாக அவர்கள் ஒரு பொதுக் கொள்கையையே வைத்திருந்தனர் - என்பது அதன் பொருளாகும்.

"ஒரே கல்லில் இரு மாங்காய்கள்" வீழ்த்தும் முறை, இது. நம்மவன் படிக்கவே கூடாது; படித்தவனும் அவர்கள் படிப்பின் செய்திகளை அறிந்து அவ் வெற்றுவேட்டு நிலைகளின் உண்மையுருவுணர்ந்து விழிப்பெய்தி - விடவும் கூடாது. ஈராயிரமாண்டுக் காலத் தமிழக வரலாற்றில் நம் அடிப்படை மக்கட் பெருங்கூட்டத்திற்குரிய கல்வி வாய்ப்பு முற்றிலும் மறுக்கப்பட்டமைக்குப் பார்ப்பனனே கருக்காரணகனாக விளங்கினான்.

சற்றே விழிப்பு ஏற்பட்டும், தன்மானம் தலையெடுத்தும், தமிழ் மானமானது மென்மெலக் கருவெடுத்தும் உருவெடுத்தும் வருகின்ற இன்றைய சூழலில் நம் செந்தமிழ் நாட்டுச் சொந்தப் பிள்ளைகள் உருப்பெறுவதற்குரிய தாய்மொழிவழிக் கல்வி வாய்ப்பு கனிந்து வரவிருந்த அருமையான அமையத்தில் - சமைவான சமையத்தில் - நேரிதான நேரத்தில் இத் தமிழகமெங்கணுமுள்ள அனைத்துப் பார்ப்பாரக் குஞ்சுகளும் குளுவான்களும் பிஞ்சுகளும் பிருக்குகளும் என்னென்ன வகையான ஆட்டம் பாட்டங்களைத் தாள்களிலும் நூல்களிலும் காட்சியொளிகளிலும் (T.V) கேட்சியொலிகளிலும் (Radio) போட்டுக் காட்டி அதற்கான அடிக்குழி பறித்து குப்புற வீழ்த்திவிட்டு அகம்மலர்ந்து புறம் பொலிந்தன என்பதை நாம் இவ்விடத்தில் கருதிப் பார்த்தல் வேண்டும்!

ஆங்கிலக் காம்மயக்கத்திலிருக்கும் (Anglomania) இன்றைய குமுகச் சூழலை மிக நுட்பமாகப் பயன்படுத்திக் கொண்டு இடைக்கால வெற்றியைப் பெற்றுள்ள ஆரியப் பார்ப்பனரின் (இன்றைய) நடைமுறை வினைகளின் கருப்பகுதிக்குள் அன்றைய பார்ப்பானின் அதே வினை முறைகளின் போக்கு அடங்கியிருப்பதை நுட்பமானவர்களால் தெளிவாக அறிந்து கொள்ளவியலும்!. தான் அயலானாக இருக்கும் மனவுணர்ச்சியினின்று எப்பார்ப்பானும் இன்னும் மாறினான் அல்லன்!. இங்குள்ள பார்ப்பான் எவனுக்கும் "தன் தாய்மொழி தமிழ்" என்னும் உணர்விருப்பதாக, என் ஐம் பானாண்டு வாழ்க்கையில் நான் அறிய இயலவில்லை!

வந்தேறிய பார்ப்பானுக்கிருந்த அதே உணர்ச்சியிலேயே இன்றைய பார்ப்பான் ஒவ்வொருவனும், மனஅச்சுப்பிசகில்லாமல் அப்படியே கடந்தியங்கியவாறே உள்ளான்! நாமோ, அடி நசுங்கிய நிலையில் அப்படியே கிடக்கையாகவே கிடக்கின்றோம்......

மறைமந்திரங்களிலும் அவற்றைக் கொண்டு பொருக்கித் தின்னுவதற்காகப் பார்ப்பான் நிகழ்த்திய பலவகை வேள்விகளிலும் ஏதோ பெருஞ்சிறப்பு நிலைகள் பல உள்ளனவாக மன்னர்கள் யாவரும் மயங்கலாயினர்! அவர்கள் நம்புவதற்கேற்றபடியாகவும் மனம் மகிழுமாறும் நயமான பொருத்தமான பொய் புளுகுகளை அவிழ்த்துவிட்ட பார்ப்பனர்கள் அம் மன்னர்களின் நெஞ்சங்களைக் கவர்ச்சியாகவும் சூழ்ச்சியாகவும் பிணித்தனர். அப் பார்ப்பனர்களையும் விஞ்சும்படியாக நம் தமிழ்ப் புலவரிற் சிலரும் அவற்றை ஏற்ற நிலையில் புளுகத் தொடங்கி அரசர்களை மகிழ்வித்துப் பொன்னும் பொருளும் பொருக்கலாயினர்!

"சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை" என்பவன், . வேள்விவேட்டற்கு உரிய நெறிகளையெல்லாம் கேட்டறிந்து நோன்பு மேற்கொண்டு தன் மனையாளொடு வேள்வி செய்தான். இதன் பயனாக(!), அவள் (அரசனின் கோயிலாளாகிய பெருந்தேவி) வயிற்றிலிருந்த குழந்தை, கருவிலிருந்தே அரசுத்துறைக்கு வேண்டுந்திறன்களெல்லாம் நிரம்பப் பெற்று நல்லறிவினோடு (சுத்த புத்தியோடு) விளங்கியதாக அம்மன்னனிடம் புளுகி அப் புளுகுக்கு ஈட்டுப் பொருளாகக் காணம் ஒன்பது நூறாயிரம் பொன்னைப் பரிசிலாகப் பெற்றான், அரிசில் கிழான் ..... "'கிர்ர்ர்".... ஏறிய கிறுக்கனான "இரும்பொறை" தன் அரசுக் கட்டிலையும் (அரியணை) அத்துடன் கொடுக்க முன்வந்தான்! அந்நிலைக்கு இரங்கிய புலவன் அவனிடம் இரந்து ஏற்க மறுத்து விட்டு அமைச்சுப் பதவியை மட்டும் பெற்றுக் கொண்டான்!.... இது, பதிற்றுப்பத்து பறைசாற்றும் வரலாறு..... (காண்க: பதிற்றுப்பத்து: 74. மற்றும் - பதிகம்).

ஆரியமறைகள் யாவற்றையும் சமற்கிருதம் எனப் பிற்றைக் காலத்தில் சுட்டப்பெற்ற ஓர் அரைச் செயற்கை மொழியில் முக்கல் முனுகல் வாய்ந்த தவளையோசை படுமாறு நீட்டித்திழுத்தநிலையில்

கேட்டனரேயன்றி - அவை கூறும் பொருட்பாடுகளை உணர்கின்ற வகையில் அன்றைய தமிழர் எவர்க்கும் வாய்ப்பில்லை! பார்ப்புகளின் உரப்பொலியும் அவர்களுக்கு அமைந்திருந்த செவ்வெள்ளை மேனி மினுக்கொளியும் வெற்றுப் பகட்டுமிடுக்கும் நம்மவர்களை வியப்படையச் செய்தன!.

சிலவாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட தொல்பழங்காலத்தில் அச்சத்தினாலும் அறியாமையினாலும், தொடக்கமுற்ற இறைவழிபாடு "உயிர்" என்ற எதோ ஒன்று, தனித்தியங்கும் தன்மையுடையது என்னும் தெளிவின்மை சான்ற நம்பிக்கைவழி எழுந்ததாகும்! 'உயிர் என்னுமொரு இயங்கு பொருள், இவ்வுடலினின்று பிரிவெய்துவதாலேயே இறப்பு நேர்கின்றது. அவ்வுயிர் மீண்டும் அல்லுருவாக (அருவமாக) அலைகின்றது. இன்றும் "இறந்தார் குறி" Necromancy (இறந்தவருடன் பேசி அவரிடமிருந்து குறிப்பு அறிதல்) கேட்கும் வழக்கமுடைமையிலும் அம் மூடநம்பிக்கைத் தொடர்ச்சி நிலையை உணரலாம். அவ்வுயிர் நம்மைக் காக்கும், மீண்டும் மீண்டும் அது பிறப்பெடுக்கிறது என்பன போன்ற கருத்துப் பிறழ்வான மனக்கோளாற்று நிலைகள் தமிழ்மாந்தர்க்கு எழுந்தமையின் கருவாயிலிருந்தது, "கனவே". இறந்தபின்பு கனவில் புலனாகவல்ல மாந்தரின் இயக்கங்கள் பற்றிய உணர்வுகளே பேய் பற்றிய மடமையும் பேதைமையும் திணிந்த நம்பிக்கைகளுக்குத் தீனிகளாயின!

இருள் - கருப்பு - கடி - பூதம் - கூளி - குறளி - முனி - சடைமுனி - மண்ணை – அலகை – ஆலி - மயல் - மருள் - சோகு - அழன் - குணகு - குணங்கு - அள்ளை - பாசம் - ஆர் – அணங்கு - தாக்கணங்கு - நோக்கணங்கு - கழுது - சவம் - சாவு - பிணம் முதலியன - நம் முந்தைய தமிழர்கள் காணாமலேயே தற்கருத்தேற்றத்தினால் கருதிக் கண்டு குறித்த பேய்வகைக்குரிய இருபத்தேழு பெயர்களாகும். - இவ்வகைப் பேய்கள் யாவும் காட்டிலும் சுடுகாட்டிலும் இடுகாட்டிலும் அடர்ந்த மரங்களிலும் பாழடைந்த பகுதிகளிலும் தங்கியிருக்கின்றன என்னும் மடநம்பிக்கை வளர்ந்திருந்த தொல் பழங்காலத் தமிழகத்தில் அவற்றுக்குப் படையலும் பூசனைகளும் செய்து அமைவு கொள்ளுமாறும் தம்மைக் காக்குமாறும் மக்கள் வேண்டினர்.

(பேய்களும் - பூதங்களும் தெய்வநிலைக்கு வளர்த்தெடுக்கப் பெற்றிருந்த சூழலைக், கழகக் காலத்தில் இருந்த "பேயனார்". என்னும் புலவர் பெயரும் - "பேய்மகள் இளவெயினி" என்னும் புலத்தியர் ஒருவர் பெயரும். "பேயன் - பேய்ச்சி" என்பன போன்று சிற்றூர்ப்புற மக்களிடையே பயிலப்பெறும் பெயர் வழக்குகளும் நமக்குக் கண்டு காட்டுகின்றன. காடும் - சுடுகாடும் - இடுகாடும் ஊர் வாழ்நராகிய மக்களுக்குத் தொலைவில் அமைந்த அயலிடங்களாக இருந்த நிலையில் ஊர்க்குள்ளும் ஊர்க்குச் சற்றே புறத்தேயும் அமைந்திருந்த அடர்ந்த மரங்களின் மீது அவை தங்கியிருப்பனவாகக் கருதினர்; நம்பினர்....

ஆவி - பேய் முதலியனவற்றைத் தெய்வங்களாகவே கருதும் மனப்போக்கு வாய்ந்திருந்த மக்கள் அவை தங்கியிருப்பனவாகக் கருதிய மரங்களை வெட்டுவதற்கும் அஞ்சினர். தவிர்த்தனர். புதிய வீடுகள் கட்டுவதற்குப் பயன்படுத்திய மரங்களில் - அம் மரங்களாலாகிய கதவுகளில் - பலகணிகளில் அவை சார்ந்திருக்கக்கூடும் என்ற அச்சவுணர்ச்சியின் வழி - "புதுமனை குடி புகுவதற்கு" முந்தைய நாளில் நள்ளிரவில், அவற்றைச் செதுக்கி உருவாக்கிய மரத்தச்சரைக் கொண்டே "தச்சுக் கழித்தல்" என்னும் பூசனைச் சடங்குகளும் கழிப்பு நிகழ்ச்சிகளும் இன்னும் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் தொடர்ந்து நடத்தப்பெறுகின்ற நிலைகளில் உணரவியலும்!

பேய் அல்லது அதனின் வளர்ச்சியுருவான காவல்தெய்வம் (காக்கும் தெய்வம்) உறைகின்றது என்னும் நம்பிக்கை வலுப்பெற வலுப்பெற அக் காலத்து மன்னர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மரத்தைத் தெரிந்தெடுத்து அதனையே தம் காவல்மரமாக மதிப்புமிக்க அரசு அடையாளக் குறியீட்டுப் பொருளாக வளர்க்கவும் பேணவும் தொடங்கினர். பகைவர் அணுகாதவாறு வளர்த்துக் காக்கப்பெறும் காவல் மரம், "கடிமரம்' என அழைக்கப்பெற்றது. (கடி=காவல். கடிமரம்= காவல் மரம்) (புறம்: 23: உரை). மரங்களில் கடவுளர் தங்கியிருப்பர் என்னும் நம் பழந்தமிழ் மக்கள் நம்பிக்கைக்

கீற்றொளிகளை, "நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து" (நற்றிணை: 343) "கடவுள் சேர்ந்த ..... பெண்ணை" (நற்றிணை: 303) - “தெய்வம் சேர்ந்த வேம்பு" அகம்: 309) என்பன போலும் கழக இலக்கிய வரிகளின் ஊடாகக் காணலாம்!

"கந்து" என்பது திரட்சி வாய்ந்த கம்பத்தை அல்லது தூணினைக் குறிக்கும் சொல், ஆகும். கந்து + அம் > கந்தம் = பெருந்தூண்; பெருங்கம்பம். பண்டைய தமிழ்மக்கள் தாம் வாழ்வு நடத்தி வந்த ஊரின் அம்பலத்தில் திண்ணைபோன்ற மேடையொன்றை அமைத்து - அதன்மீது "கந்தம்"ஆகிய பெருந்தூண் ஒன்றனை நட்டு - அதனையே வழிபடுபொருளாக மதித்து வணங்கி வந்தனர். அவ்வாறு தொடர்ந்து வழிபட - வழிபட அக் கந்தினுள் தெய்வத்தன்மையானது மேன்மேலும் வளர்ச்சியெய்தி வரும் எனவும் நம்பிக்கை கொண்டிருந்தனர். (காண்க: அந்தி மாட்டிய நந்தா விளக்கின். மலரணி மெழுக்கம் ஏறிப் பலர் தொழ, வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில் (பட்டினப்பாலை. 247-249).

புகார், காஞ்சி ஆகிய நகரங்களில் தூண்களிற் படிமையாகச் செதுக்கி உருவாக்கப் பெற்றிருந்த பாவை, “கந்திற்பாவை" என்னும் கூட்டுச் சொல்லால் சுட்டப் பெற்றமையும் இவ்விடத்திற் கருதுதற்குரியது. (காண்க: மணிமேகலை: 28:185) (மேலுங்காண்க: "கந்துடை நெடுநிலைக் கடவுட் பாவை" (மணி: 21:7); "கடவுள் எழுதிய நெடுநிலைக் கந்து" (மணி: 21:1).

உருவஞ் செதுக்குவதற்குப் பொருத்தமான மரவகையுள் ஒன்று, கடம்பு மரம். (Anthocephalus cadamba) அக் கடம்பு மரத்தூணில் செதுக்கப்பெற்ற இறைவன் "கடம்பன்" எனப் பெற்றான். (மணி: 4:49). (மேலுங் காண்க: "கடம்பு அமர் நெடுவேள்" (பெரும்பாணாற்றுப் படை: 75).

கந்து ஆகிய தூணிடத்தில் செதுக்கப்பெற்ற இறைவன் கந்து + அன் > "கந்தன்" எனப்பெற்றான்! இச் சொல்லுடன் "ச" (ஸ்) என்னும் ஆரியமுறைப் பயில்வு வகைப்பட்ட முன்னொலியொன்றனைப்

பிணித்துச் சமற்கிருதவாணர் "ஸ்கந்த"' என்றனர்! தாக்குபவன் கார்த்திகேயன், சிவன் அல்லது அழல் என்னும் தீத்தெய்வத்தின் மகன், சிவனின் விருந்தினர்களுக்குத் தலைவனாயிருந்த ஒரு போர்க் கடவுள் என்றவாறெல்லாம் பல பொருள்களையும் கொண்டு கூட்டி எழுதிவைத்துக் கொண்டனர்.

இக் கடம்பனும் கந்தனும் ஒருவனே! அவன்தான் முருகன்! அம் முருகனே குமரன். அவன்தான் குறிஞ்சி நிலத்துக்குரிய முந்தைய சேந்தன்! அவனேதான் சேயோன் காண்க: "சேயோன் மேய மைவரை உலகமும்" (தொல். பொருள்: அகத்திணை: 5:2)

செய் = சிவந்த நிறம். செய் > சேய்= 1. சிவந்தவன் 2.செங்குருதித் தோய்வுடன் தாயின் கருப்பையினின்று பிரிந்து வெளிவரும் பிள்ளையாகிய குழந்தை: குழந்தை.

செய் - (ய்) - அன் > செய்யன் = சிவந்தவன்; முருகன், சேயோன்.

செய்யன் சிவந்த வாடையன் (திருமுருகு.206) –

'செய் > சேய் > சேய்ந்து > சேந்து. சேந்து + அன் > சேந்தன் = செந்நிறத்தன்.

- (ஒப்புநோக்குக: சேந்து + இல் > சேந்தில்) செந்தில் = செந்தில் முருகன். சேர்ந்து + ஊர் சேந்தூர்) செந்தூர் = திருச்செந்தூர்).

சேய் = சிவந்த நிறத்தவனாகிய முருகன்.

("வெல்போர்ச் சேஎய்" (மலைபடு: 493); "திருத்தகு சேஎய்" புறம்: 125:20). "செருவெங்சேஎய்" (புறம்: 120:21). "செருமிகுசேஎய்" (அகம்: 266: 21; புறம்: 14:19).

கரிய நிறத்து இறைவன் - மாயோன் (மய் = கருமை மய் > மாய். மாய் + அன் > மாயன். (மாயான்>மாயோன்). இவன் காட்டுப் பகுதிக்குரிய முல்லைநிலக் கடவுள்!

தீம் புனல் உலகமாகிய மருதநிலத்துக்குரிய கடவுள் - வேந்தன்! பெருமணல் வாய்ந்த கரையை உடைய கடலாகிய

வாரணத்திற்கு உரிய கடவுள் "வாரணன்"... இவனே - (வாரணன் > வாருணன்) “வருணன்" எனப் பெற்றான்!

நான்கு நிலங்கட்கும், நான்கு தனித்தனிக் கடவுளர் உளர் எனப் பட்டியலிட்டார், தொல்காப்பியர் (காண்க: தொல், பொருள்: அகத்: 5)

இவற்றுள் முருகப்பெருமான் என்னும் சேயோன் ("சேய்") - சிவந்தவன் என்னும் நிற அடிப்படையில் செவ்வன் > செவன் > “சிவன்” என்றவாறாகப் பொதுப்பெறச் சுட்டப்பெற்று வந்துள்ளான்!

"சேய்" என்னும் சொல்லுக்குத் தமிழ்மொழிக்கண் "குழந்தை" என்னுமொரு பொருளும் உள்ளமையைக் கருத்திற் கொண்ட ஆரியர் சிவனைத் தனிப் பிரித்து "ஷிவா" என உரிமை கொண்டாடிக் கொண்டு - சிவனுக்குச் சேய் அதாவது சிவனுக்கு மகன் ஒருவன் தனியே உள்ளான் என்றவாறு ஒரு கருத்துக் கிழிப்பையும் நிகழ்த்திக் குழப்பினர். அவன் "பிள்ளை " ஆனதால் அவனுக்குப் பிள்ளையார் என்றும் ஆர் பெயரிட்டுக் குழப்பி - இறுதியில் அவனும் வேறானவன்; அவன் முருகக் கடவுளாகிய இளைய பிள்ளைக்கு மூத்த பிள்ளை என்றவாறும் கூறிச் சிவனுக்கு இருபிள்ளைகள் பேற்றைத் தந்து, பந்தாடினர்!

அத்தொடு மட்டுமன்றித் தமிழர்க்கே உரிய தொல்தெய்வக் கருத்துக்குரிய அடிமணை வடிவங்களில் ஒன்றான சேயை - முருகனை - கந்தனை - கடம்பனை - (கையில் வேல் ஏந்தி நின்றிருந்த) வேலனை - குமரனை - “சுப்ரமண்ய" என்றவாறு கொத்தடிமைப்பாடு படுத்துகின்ற வகையில் புதுப் பெயரொன்றைப் பொத்தி மொத்தியும் (சு = நல்ல ப்ரஹ்மண்ய: பிராமணன், பார்ப்பான். சுப்ரமண்ய = பார்ப்பானுக்கு நல்லவன்; பார்ப்பானுக்கு அடிமை), கார்த்திகேயனாக்கிக் கசக்கியும் - சணற்காட்டிற் பிறந்தானென்று கதை கட்டிச் சரவணபவனாக்கிச் (சரவணன்) சரித்து இறக்கியும் - (ஓர் அழகிய திருமுகத்தனை-) அறு திரி முகங்களாகக் கூறுபட அறுத்துப் பிரித்து ஷண்முகம் ஆக்கி அவற்றை ஒருடம்பிலேயே ஒட்டச்செய்து

அவ் ஓருடம்பிலேயே பக்கத்திற்கு அறு கைகளாகப் பன்னிரு கைகளைச் செருகி ஒவ்வொரு கையிலும் ஒவ்வொரு படைக்கலக் கருவிகளைத் திணித்துப் பற்றச் செய்து தாளமுடியாது தள்ளாடுமாறு சுமத்தியும் என்னென்னவோ செய்து சிதைத்துச் சிதர்த்துச் சிதறலாக்கினர்!

அடிமை மயக்கமும் அறியாமையுழல்வும் வாய்ந்த நம் தமிழரிற் பலர் - முருகனை மறந்து துறந்தவராகிச் சுப்பிரமணியங்களாகப் பேரேற்றிக் கொண்டு தூள்கிளப்பியவாறு துள்ளித் திரிவாராயினர்!

கல்லோடு கல் உரசும்போது தீப் பிறப்பதையும், காய்ந்த மரக்கிளையோடு மரக்கிளை - மூங்கிற்கிளையோடு மூங்கிற்கிளை உரசும்போது தீப்பற்றுவதையும் கண்ட பண்டைய தமிழர் "ஞெலிகோல்" என்னும் பெயர் கொண்ட தீக்கடைகோல் ஒன்றை உருவாக்கத் தெரிந்து கொண்டனர்; தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பயன்படுத்தி வந்தனர்! இயற்கையாக நேர்ந்த செயற்பாடுகளைக் கண்டுகொண்டு கண்டுபிடித்த கழிகளாலாகிய பொறி இது! காய்ந்த மரக்கட்டையில் மெல்லிய ஆழ்துளையொன்றை இட்டு, அம்மெல்லிய துளைக்குள் நெருக்குறப் பொருந்துமாறு - உரிய உருட்சிவாய்ந்த வலிய வற்றல் கோலினை உட்பொருத்தி - இப்படியும் அப்படியுமாகச் சுழன்று உருளும் நிலையில் விரைந்து உரசிக் கடையும் முறையினால் அஞ்ஞெலிகோல் வழியே தீ உண்டாக்கினர்! (ஞல்: வளைவுக் கருத்துக்கிளைவேர். ஞல்>ஞெல்>ஞெலி, ஞெலிதல் = வளைதல்; உருளுதல். (காண்க: ஞெலி>நெலி> நெளி) - (நெளிதல்=வளைதல்; உருளுதல்)

(துய்: சேர்க்கைக்கருத்து வேர். துய்> தொய் > தோய். தோய்தல்=பொருந்துதல். (காண்க: "தாள்தோய் தடக்கை" புறம்: 14:11) துய் > தொய் > தய் (=பொருந்துதற் கருத்துக் கிளைவேர்). தய்தல், தைத்தல் = பொருத்துதல். தய் > தெய்>தேய்= உரசு (தோய்தல் = உரசுதல்) தேய்>தீய்>= தேய்வினால் அல்லது தேய்க்கையினால் ஏற்படும் நெருப்பு; உரசலினால் உண்டாகும் அழல்.) (தேய்>தீய்> தீ.

(ஒப்பு நோக்குக: தேன் > தேம் > தீம். (தீம்+தமிழ் = தீந்தமிழ் - தேன் போன்று இனிக்கும் தமிழ்மொழி.)

ஊனை - (கறியை) - தவசத்தைப் (தானியத்தை) பதப்பட்ட சுவையார்ந்த ஊனாக்கும் (உணவாக்கும்) வினைக்கு அடிப்படைப் பயன்பாட்டுக்குரிய பொருளாகத் தீ அமைந்தமையாலும் குளிர்காலத்தில் குளிர்காயப் பயன்பட்டமையாலும் - கொடிய விலங்குகள் தம் அண்மையில் வாராவாறு காக்கப் பயன்பட்டமையாலும் அழகிய நிறச் சிறப்பு வாய்ந்திருந்தமையாலும்- அத் தீயே ஒரு வழிபாட்டுப் பொருளாகவும் பண்டைய தமிழ்மாந்தர்தம் வாழ்விடையே அமைந்து ஒளிர்ந்தது!

தேய் > தெய் > தெய்வம். தெய்+வு > தெய்வு > தெய்வு + அம் > தெய்வம்=தீயாகிய கடவுள்; கடவுள்; வணங்கப்பெறும் இறைவன்.

(தெய்வம்: காண்க: தொல். சொல்: 4:3, 58:2. தொல் பொருள்: 20:1, 39:2, 56:1, 1137, 146:4, 415:1. அகம்: 110:4, 166:7, 309:4, 360:6, புறம்: 58:16)

தெய் > (**தெய்வம்**) (GREEK.) THEOS = GOD. (***தீய்***> ***தீ***> (GREEK)THION=sulphur. **மேலுங்காண்க**: (ENGLISH) Thio-acid, thio sulphate) (GREEK) THEOS> (ENGLISH) THEO - Theo: theocracy, theocrasy, theodicy, theogony, theonmachy, theomania, theophany, theobromine, theologian, theology, theosophy, atheist!

தெய் > (தெய்வம்) > (LATIN) DEUS - (THEOS)> DIVUS (=godlike.) > divinus=divine.

உலக வாழ்க்கை இயல்பாகவும் இனிதாகவும் இயலுவதற்கு ஏற்ற பொழுது - கதிரவனாகிய ஞாயிற்றுக்கோள் அவ்வப் பகுதியில் ஒளிரும் காலமாகிய பகற்பொழுது ஆகும்! இரவுப்பொழுது அஞ்சுதற்கமைந்த பொழுதாக அல்லற்பாட்டுக்குரிய பொழுதாக ஆர்ந்திருந்தமையால் பகற் பொழுதையே மாந்தன் இயல்பாக விரும்பினான்! கதிர்க்கோளத்தை நெருப்பு உருவாகவே கருதினான்! "கனல்" என்னும் நெருப்புக்குரிய சொல் கொண்டு (கனல்+இ) "கனலி" என்றவாறு ஞாயிற்றுக் கோளினைச் சுட்டும் சொல்லொன்றை

உருவாக்கியமையையும் இவ்விடத்திற் கருதுதல் வேண்டும். (காண்க: "கனைகதிர்க் கனலியைக் காமுறல் இயைவதோ" (கலித் தொகை: 16:12).

ஞாயிற்றுக் கோளினை -ஆண்பாலீறு பெறுமாறு- கதிர் + அவன் > கதிரவன் என்றும் (காண்க. சிலம்பு: 7:31, மணிமேகலை.7:126), (கதிர்+ஆன் > கதிரான்) "கதிரோன்" என்றும் (காண்க: பரிபாடல்: 20:6) (சிலம்பு: 6 -வெண்பா: 4) குறித்துச் சுட்டியுள்ள வழக்குகளும் இவ்விடத்திற் கருதுதற்குரியன!

காவிரிப் பூம்பட்டினத்தில் கதிரவனுக்குக் கோயில் இருந்தமையை "உச்சிக் கிழான் கோட்டம் (சிலம்பு: 9:11) என்னும் பதிவு சுட்டுகின்றது!

ஞாயிற்றை வணங்கிப் போற்றும் பண்டைய மரபுப் பதிவை இளங்கோ அடிகளின் "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என்றவாறு வரும் மங்கல வாழ்த்துப் பாடல் வரி (சிலம்பு: 1:4) பொதிந்துவைத்துள்ளது!

திங்களையும் (மதியையும்) வணங்கிப் போற்றும் வழக்கிருந்தமையைத் "திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்" என்றவாறு வரும் இளங்கோஅடிகளின் சிலப்பதிகார மங்கலவாழ்த்துப் பாடல் வரியாலும் (சிலம்: 1:1), "பிறைதொழுகென்றல்" என்னும் அகப்பொருள் துறை வழக்காலும் உணரலாம்! காவிரிப் பூம்பட்டினத்தில் திங்களாகிய நிலவுக்கும் தனிக்கோயில் இருந்தமையை "நிலாக் கோட்டம்" (சிலம்பு: 9:13) என்னும் சிலப்பதிகாரப் பதிவால் அறியவியல்கின்றது!

பண்டைய தமிழர், ஞாயிற்றுக் கோளாகிய கதிரவனை வணங்கியமை-இயற்கையை வணங்கும் நன்றியுணர்வுப் பண்பு சார்ந்ததாகும்! இந்நிலையுணர்வு வழியில்தான் காற்றையும் தெய்வமாகக் கொண்டு அக் காற்றை "வளிதரும் செல்வன்" என்றனர்!

(காண்க: "வளிதரும் செல்வனை வாழ்த்த வும் இயைவதோ” (கலி: 16:16)...

நீரைத் தெய்வமாகக் கருதியமையைக் "கங்கையம்மன்" என்றும் ஊர்த் தெய்வம் இன்றும் வழிபடப்பெற்று வருவதனுள்ளும் காணலாம். "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்" என்னும் சிலப்பதிகார வரியினுள்ளும் (சிலம்பு: 1:7) இந் நீர்வணக்கச் சான்றை அறியலாகும்.

நீர்த்தெய்வத்தை உயர்த்திப் பிடித்த முயற்சியைக் கரகம் எடுத்துத் தலைமேலிருத்தி ஆடுகின்ற வழிபாட்டு முறையினாலும் உணரலாம்! (கார்=கருமை, கரிய முகில், முகிலாற் பொழியும் மழை, நீர். கார்+அகம்>காரகம்> கரகம்=நீர்க்கலம். (ஒப்பு நோக்குக: "நீர் அறவு அறியாக் கரகத்து" (புறம்: 1:12) "நீரின்று அமையாது உலகு" (காண்க: குறள்: 20:1) என்னும் தெளிவும் உணர்வும் நன்றியறிகையும் இவ் வழிபாட்டின் உட்புறக் கருக்களாம்!

நிலத்தைப் பெண்ணாகவும் (காண்க: "மண்மகள்" (சிலம்பு: 15:138), மண்ணக மடந்தை (சிலம்பு: 5: 3) நிலமடந்தை (சிறுபாண்:1, சிலம்பு: 4: 7, 23:121), "**நிலமென்னும் நல்லாள்**" (**குறள்**: 1040: 2)**தாயாகவும் தெய்வமாகவும் தமிழர் கருதினர். (காண்க**: "**நிலமகள் அமுத காஞ்சியும்**" (**புறம்**: 365: 10).

விண்டு = வானம் ("விண்பொரு புகழ் விறல் வஞ்சி" (புறம்:11: 6) விண்+து> விண்டு = வானம் (சூடா) மேலும் காண்க: விண்டு உலாய் (கம்பரா: தாரக: 2).

விண் = வான நிறமுடைய கடவுள்; கரியவன். (பச்சை நிறம், நீலநிறத்திற்கும் கருமை நிறத்திற்கும் உரிய இனமாகிய நிறம் ஆதலால்பச்சையன் என்றும் பச்சையப்பன் என்றும் திருமால் குறிக்கப் பெற்றமை இங்குக் கருதுதற்குரியன!) வானத்து முகில் (மேகம்) கரியநிறம் உடையது பற்றி - மாயன், மாயோன், மாயவன் (மய் = கருமை. மய்>மாய்> மாய்+அன் > மாயன் - கரியவன்; கரிய நிறத்து இறைவன்) என்றவாறெல்லாம் குறிக்கப்பெற்றான்! திருமாலைக்

"கார்வண்ணன்" என்ற குறிப்பும் இவ்விடத்திற் கருதத் தக்கதாகும். நீலவண்ணன், மணிவண்ணன் என்பனவெல்லாம் - வானத்துக் கருமையடிப்படையில் தோன்றியனவே!

தமிழகத்தில் 1800-ஆண்டுகட்கும் முற்பாடேயே திருமாலாகிய நெடியோனுக்குக் கோயில் இருந்தமையை- "நீலமேனி நெடியோன் கோயில்" எனவரும் சிலப்பதிகார வரியால் அறியலாம்!

விண் > விண்ணு = திருமால். ("விரிந்தெங்கும் சென்றமையால் விண்ணுவுமாய்" (யாப்: வி: 84)

விண்+து > விண்டு =வானம் (சூடா.) திருமால்

விண்ணு > (சமற்கிருதம்) விஷ்ணு.

("விஷ்ணு" என்னும் சொல்லுக்கு மூலம் "விஷ்" என்றும், சுறுசுறுப்பாக இரு - செயல்படு, வேலைசெய், அமை என்பன அம் மூலத்திற்குரிய பொருள்கள் என்றும், சமற்கிருதப் புலவர்கள் பலர், பலவாறு கதையுரைத்துள்ளமையின் பொருத்தப்பாடின்மைகளை மேலோட்டமாகப் பார்த்தாலேயே கூட தெளிவாக விளங்கும்!)

இயற்கைப் பூதங்களாகிய வான்-மண்-நீர்--வளி-தீ, வானத்திலுள்ள இரு சுடர்களாகிய ஞாயிறுதிங்கள் ஆகியனவற்றையும் - பேய், பூதம் முதலிய அச்சப்பாட்டுக் கற்பனையுருக்களையும் - விலங்குகளில் சிலவற்றையும் - "நாகம்" போன்ற நச்சுயிரியையும் - சோலை, மலை - நீர் நிலைகளில் வாழ்வனவாகக் கருதியவற்றையும் காடுகாள் (காடுகிழவோள்), காளி, கொற்றவை, மோடி, பழையோள், முதுகோதை, ஆத்தாள், ஆய், அம்மா முதலிய பெண்ணுருக்களையும், மதுரை வீரன், காடன், மாடன், கறுப்பண்ணன் போன்ற நடுகல் உருக்களையும், தொழில்வழி உருவாக்கிய சில உருக்களையும் தெய்வங்களாக வணங்கும் மரபுவழக்கத் தொடர்ச்சி இத் தமிழகத்தில் பல நிலைகளில் பல முறைகளில் தொடர்ந் திருந்தமையைக் கழக இலக்கிய, பிற்றையிலக்கிய, **சமய இலக்கிய**, **இலக்கண நூல்கள் பலவாறாலும் பரவலாக உணர முடிகின்றது**!

பல தெய்வங்களை வணங்கும் வழக்கம், தமிழரிடம் அமைந்திருந்தது. எனினும், உருவ வணக்கத்தைத் தவிர்த்துவிட்டு நெஞ்சகத்தால் மட்டுமே வழிபட்டு ஒன்றியுருகிப் போற்றும் மேனிலைச் சமயவொழுங்காகிய கடவுள் சமயமும் இம் மண்ணகத்தே வளர்ந்தோங்கியிருந்தமையின் பதிவுகளையும் நூல்களிடையே ஆங்காங்குக் காணவியல்கின்றன!

"உய்யும் வகையால் உணர்வினால் ஏத்துமின்".. "வள்ளல் தலைவன் கள்ளப் பெருமக்கள் உள்ளத்தினுள்ளே ஒளிந்திருந்தானை". "முகத்தின் கண்கொண்டு காண்கின்ற மூடர்களே, அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்", "ஒன்றி என் உள்ளத்தின் உள்ளிருந்தானே", வாழ்த்த வல்லார் மனத்து உள்ளூறு சோதியை"- எனப் பலவாறு வரும் திருமூலரின் திருமந்திரவரிகளிடையே, இக் கடவுட் சமயமுறை இம்மண்ணில் ஒரு பாங்கில் நிலவித் தொடர்ந்து வந்தமையின் எச்சத்தைக் காணமுடிகின்றது!

இவ் உணர்வுக்கரு சார்ந்த இறையியல் கொள்கையின் பதிவுகளைக்- "காண்பார்க்குச் சோதியாய் சிந்தையுளே தோன்றும்" எனவரும் காரைக்காலம்மையாரின் கூற்றிலும், "நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்" எனவரும் திருநாவுக்கரசரின் நாவுரைப்பிலும், "சிந்திப்பாரவர் சிந்தையுளானை" எனவரும் சுந்தரரின் சுட்டலிலும், "சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்" எனவரும் மாணிக்கவாசகரின் மணிமொழியுரையிலும், "உள்ளுவார் உள்ளத்து உளன் கண்டாய்!" எனவரும் பொய்கையாழ்வாரின் புறப்படுத்தத்திலும், - "உள்ளுவார் உள்ளத்தே உறைகின்றானை" எனவரும் திருமங்கையாழ்வாரின் தெள்ளூரையிலும்..... பரவலாகப் பார்க்கவியல்கின்றது!

"தேனுக்குள் இன்பம் சிவப்போ கருப்போ வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்!" எனவரும் திருமந்திரத் திருமூலரின் கடுந்தாக்குக் கேள்வியினுள்ளும் - இக் கடவுட்சமயவுணர்வுச் சார்புக்

கோட்பாட்டின் அரு வீச்சு, அழகுறப் பதிவாகியுள்ளமையை அறிந்து மகிழவியல்கின்றது!

தூய அறிவாண்மை சான்ற தமிழகச் சித்தர்களின் வெளிப்பாடுகள் பலவற்றினுள் - இவ் வகைச் சமயக் கோட்பாட்டு அலைவீச்சுக்களை அறியவியல்கின்றது!

இறந்துவிட்டால், அத்தொடு கதை பட்டென முடிந்தது! (மடிந்துவிட்டால் முடிந்துவிடும்!..) பிறகு மறுபிறப்பாவது-மண்ணாங்கட்டியாவது!..... என்றவாறான தெளிந்த சிந்தனையோட்டங்கள் பலவுங்கூட இச் சித்தர்களின் சித்திரங்களில் செப்பமாகவும் திட்பமாகவும் ஒட்பமாகவும் நுட்பமாகவும் தீட்டப் பெற்றுள்ளன.

“கறந்த பால் முலைப்புகா;
கடைந்த வெண்ணெய் மோர்புகா;
உடைந்துபோன சங்கினோசை உயிர்களும் உடற்புகா;
விரிந்த பூ உதிர்ந்த காயும் மீண்டுபோய் மரம்புகா;
இறந்தவர் பிறப்ப தில்லை இல்லை இல்லை இல்லையே!
(சிவவாக்கியர்: பா:43)

என்பன போன்றுள்ள பல அரிய தெள்ளறிவு வீச்சுக்கள் நமக்குப் பெரிதும் வியப்பளிப்பனவாகவே உள்ளன!

“உளியிட்ட கல்லையும் ஒப்பிட்ட சாந்தையும்
ஊத்தையறப் புளியிட்ட செம்பையும் போற்றுகிலேன்...."

எனவரும் பட்டினத்து அடிகளின் பாடல் அடிகள், உருவவழிபாட்டு முறைக்கு எதிராக அடித்துள்ள அழகிய அடிகளாகவே படுகின்றன!

“நட்ட கல்லைத் தெய்வ மென்று
நாலு புட்பஞ் சாத்தியே,
சுற்றி வந்து முணுமு ணென்று
சொல்லு மந்திரம் ஏதடா?
நட்ட கல்லும் பேசுமோ நம்
நாதன் உள்ளி ருக்கையில்!

சுட்ட சட்டி சட்டு வம்க

றிச்சு வை அறியுமோ?" (பா: 518),

எனவரும் சிவவாக்கியரின் எக்குத் தாளத்தோடு கூடிய பழைய எழிற்பாட்டு எள்ளலாக மட்டுமன்றி உருவ வழிபாட்டாளர் அனைவரின் செவிப் பறைகளும் கிழியுமாறு குத்திய வல்ல நுள்ளலாகவும் உள்ளது! (நுள்ளல்=கிள்ளல்).

“சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே

சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே

ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்

அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகு அலவே!"

என்றவாறு உரைத்த அண்மைக் காலத்து அண்ணல் திரு. இராமலிங்க அடிகளின் அடிகளிலும் இத் தெளிந்த நோக்கின் உச்ச நிலைப்படிவை உணர்ந்து உவக்க முடிகின்றது!

பல்வேறுவகை உருக்களாகத் தெய்வத்தை வணங்கும் வழக்கம் தமிழ்க்குடியினரிடையே அமைந்திருந்தது! எனினும், ஒளியை, ஒளியின் அடிப்படையுருவாய் அமைந்தொளிரும் கதிரவனை வழிபடும் பண்டை முறைமை அனைத்துப் பிரிவு மக்களிடமும் இங்குக் கருக்கொண்டவாறேதான் இருந்தது; இருக்கின்றது!...

கோவலன் கொலையுண்ட பின்னர்க் கொதித்தெழுந்த கண்ணகி வானை நோக்கி - வானப் புறத்தொளிர்ந்த கதிரவனை உற்றுநோக்கிக் -"காய் கதிர்ச் செல்வனே - கள்வனோ என் கணவன்?!....." என்றவாறு உரைத்த உரத்த உரைப்பிலும் இம்முறையுண்மையின்படிவைக் காணலாம்!....

இன்றைய நாள்களிலுங்கூட சிற்றூர்ப்புறங்களில் ஏதேனும் சச்சரவோ பூசலோ மிகுந்தவிடத்துத் துயரார்ந்த மனச்சூழலால் தாக்குண்ட ஒருத்தி அல்லது ஒருவன் - எதிராளியைப் பார்த்து, "அதோ.... உச்சியில் எரிந்து கொண்டே போகின்றானே!... அவன் ஆய்வு பார்த்துக் கொள்வான்! போ!..." என்றவாறு குமுறி அறுதியுரைக்கும் கூற்றிலும் இதனின் தொடரிப் (சங்கலி) பதிவைக் கேட்டுணர முடியும்!.....

இதனின் நீள் தொடர்ச்சிப் போக்கின் படிவுகளையே அண்ணல் இராமலிங்க அடிகளார் போன்ற சித்தர் பெருமக்களின் உரைக் கருக்களில் உணர்கிறோம்!...

இவ் ஒளிவடிவைக் குறித்த சமற்கிருதச் சொல் "ஜோதி" என்பதாகும். வேள்விக் கருமங்களிடையே எழும் அனல் ஒளி எதிரே அமர்ந்திருந்து சுரண்டிக்கொழுத்த பார்ப்பான் அடிக்கடி பயன்படுத்திய இச் சொல்லையே தமிழச்சித்தரும் இறையடியாரும் தம் தமிழியல்பு ஒலிப்புக்கு ஏற்பச் "சோதி" என்றனர்.

"சோதிக்கும் சோதியாய்", "அருட் சோதியாய்", "சோதிப் பரஞ்சுடர்" என்றவாறு வரும் திருமூலரின் வெளிப்பாடுகளிலும் - "ஒருத்தரால் அறியவொண்ணாத் திருவுடைய சோதி', "திருவையாறகலாத செம்பொற் சோதி" என்றவாறு வரும் அப்பரடிகளின் செப்புரைகளிலும் "ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதியை" என்றவாறு வரும் மாணிக்கவாசகரின் மணியுரைகளிலும் “அனலுருவில் திகழும் சோதி" என்றவாறு வரும் திருமங்கையாழ்வாரின் தெருட்டுரையிலும், "சோதி வடிவமே தூய சிவம்" என்றவாறு வரும் பட்டினத்தாரின் பாட்டுரையிலும், "அருட் பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி" என்றவாறு அண்மையில் பன்னிப் பன்னியுரைத்த அண்ணல் இராமலிங்கரின் ஆருரையிலும் படிப்படியாகப் பதிவெய்தி வந்துள்ளமையைப் பரக்கக் காணலாம்!

பாரதியாரின், "பேரொளிவடிவப் பெருமான், நீ வாழ்க!" என்றவாறு பராவிய கூற்றிலும் பாவேந்தரின், “சோதியின் வடிவமே தூய நல் தெய்வம்" என்றவாறு ஏற்றிய மாற்றிலும் இவ் ஊற்றொழுக்கின் ஓட்டத் தொடர்ச்சியை உணரலாம்!....

கதிரவன் எழுச்சியொளி பரவுங்காலையில் பராவி ஏத்திய முறை -அதுபோலும் ஒளியெழும் விளக்கு வெளிச்சத்தினையும் வணங்கி நிற்கும் படிநிலையுற்று - அவ் விளக்கை ஏற்றும் ஒளிமுறைமையையே வழிபாட்டு முறைமையாகவும் ஆக்கிய நிலை - இவ் இறைவணக்க வழக்கத்தில் தொடர்ந்து தொடர்ந்தது!...

பல்லாயிரம் அறிவியற் கருவிகள் ஆர்ந்து பயனளிக்கும் இன்றைய கணிப்பொறிக் காலத்திலும் தொடர்பியல் ஊழிப் (communication era) பெருவளர்ச்சிக் காலத்திலும்கூட மின்விளக்குச் சொடுக்கியைப் (switch) போட்டவுடன் ஆங்குப் பரவும் ஒளியை நோக்கித் திருப்பித் திருப்பித் தன் கன்னத்திற் போட்டுக் கொண்டு நுண்வணக்கம் செய்யும் முறையிலும் இதனின் இழையறாத தொடர்ச்சித் தோய்வை நாம் நன்கு உணரலாம்!

ஒளியின் நிறம் சிவப்பு... (செய்>செய்வு> செவு > செவ்வு > செவ்வு+ஐ> செவ்வை) செவ்வை =சிவப்பு. (செய்>செய்ம்>செம்> செம்+ம்+ஐ> செம்மை =சிவப்பு. (ஒப்பு நோக்குக: செவ்வு> செவ்வுள் > செவுள் = மீனின் பக்க மூச்சுறுப்பாகிய செவ்வண்ணவுரு உறுப்பு) செவு> செவு+அன்>செவன்>சிவன். (செவப்பு > சிவப்பு)

கதிரவனே - ஞாயிறே - ஒளியே - ஒளிநிறத்தனே - இச் "சிவன்!" இச் சிவனே, "அரன்" என்றும் சுட்டப் பெற்றான்! ("அர்" சிவப்புக் கருத்து வேர்!) (அர்+அக்கு > அரக்கு = செம்மெழுகு. அர்+அத்து+அம் > அரத்தம் = சிவந்த நிறத்ததாகிய குருதி) அர்+அம்பு+ஐ>அரம்பை = செவ்வாழை (காண்க: அரம்பையொடு முக்கனியும்) குறிஞ்சி நிலத்தின் தலைமைக் கருத்தெய்வமாயிருந்த சேயோனே - சேந்தனே - இச் சிவனாகப் படிநிலைப் பெயருற்றான்!....

இச் சிவன், சடை வளர்த்திருந்த வடிவினனாக அக்கால நடையுடை வழக்கங்களுக்கேற்பக் கருதவும் சுட்டவும் பெற்றான்! "நெட்டிருங் கூந்தல் கடவுள்", "தாழ்சடை பொலிந்த அருந்தவத்தோன்", "ஈர்ஞ்சடை அந்தணன்", "விரிசடைக் கடவுள்" என்றவாறெல்லாம் கழக இலக்கியங்களுள் இதற்கான பதிவீடுகள் (entries) உள்ளன! அக் கால முனிவர்கள் - நிழலடர்ந்திருந்த ஆலமரத்தின் அடியில் அமர்வது வழக்கமாதலின், - அப்படித் தவவேடத்தில் அமர்ந்தானாகக் கருதிய இச் சிவனையும் "ஆலமர் கடவுள்", "ஆல் அமர் செல்வன்" (கலித்தொகை), "ஆல்கெழு கடவுள்" (திருமுருகாற்றுப்படை) என்றவாறெல்லாம் கழகப் புலவர்கள் சுட்டினர்!

அக் காலக் கருவி வகையுள் ஒன்று, "சூலம்". "சுல்" - குத்துதற்கருத்து வேர்! சுல் > சூல்> சூல்+அம் > சூலம் = குத்துக் கருவி; அதாவது, குத்துக்கோல்! தலைப் பகுதியில் மூன்று கவர்களை (பிரிவுகளை) உடைய சூலம், முத்தலைச் சூலம். இச் சூலத்தைக் கையிலேந்தியவன் என்னும் பொருளில், சிவன், “சூலி" என்றும் சுட்டப்பெற்றான்! (சூல்> சூலி = சூலத்தை உடையவன்.) இவனுக்குரிய மற்றொரு படைக்கலக் கருவி, கணிச்சி! (கணிச்சி என்பது "மழு" - இருபக்கமும் கூருள்ள போர்க்கோடரி (Battle axe) ஆகும்! எனவே, "கணிச்சியோன்" என்றும், "மழுவாள் நெடியோன்" என்றும், “மழுஆளி” (மழுவாளி) என்றும் சுட்டப் பெற்றான்!...

குறிஞ்சி நிலத்திற்குரிய சிறப்புப் பூக்களுள் ஒன்று - கொன்றை! இம் மலரை வேய்ந்திருந்தவன் சிவன்! என்னும் பொருள்பட, (கொன்றை வேய்ந்தோன்> கொன்றை வேய்ந்தன்) கொன்றை வேந்தன் என்றும் சுட்டப் பெற்றான்!

இவனுடைய ஊர்தி, ஏறு! (அதாவது, காளை! அதுவும் வெண்காளை!) எனவே, “ஏற்று ஊர்தியான்" எனவும் ஏற்றிவைக்கப் பெற்றான்! (சிவனைக் குறித்த கிண்டலடிப்பாகக் காளமேகக் கிறுக்கன் கழறிய "அக்காளையேறுவான்" என்ற தனிப்பாட்டு வரியும் இவ்விடத்தில் கருத்து விளக்கத்திற்காக எண்ணிப்பார்க்கத் தக்கதாகும்!)

இவனுக்கென அன்றைய தமிழர் படிப்படியே அமைத்த கற்பனையுரு வளர்ச்சியில், கொன்றைமாலையை அணிந்துகொண்டு, கையிலே சூலத்தையேந்தியவாறு காளைமீதேறிச் செல்லும் செக்கச் சிவந்த செம்மேனியனாக இச் சிவன் நின்றான்!... நின்றவன் அக்கால வழக்கிற்கேற்ப ஆடு ஆடென்று ஆடினான்!... ஆடி ஆடி... ஒருகாலை ஊன்றாமல் - தூக்கி நிறுத்தி - ஒருகாலை நிலத்திற்பதித்தவாறே ஆடினான்! ஒரு கால் பதிந்தது; ஒரு கால் மேலே வளைந்து தொங்கியது! எனவே "குஞ்சிதபாதம்" எனக் குறிக்கப்பெற்றான்! (குஞ்சுதலாவது, தொங்குதல். "குஞ்சி" என்னும் பெயர், தொங்கும்

ஆணின் சடைமுடிக்கும், தொங்கும் ஆண்குறிக்கும் குறிப்புச் சொல்லாயிருப்பதை இவ்விடத்தில் கருதிப் பார்க்கலாம்!...) பல வகையிலெல்லாம் ஆடி ஆடி நடவரசனும் ஆனான்!..... இப்படி, நடநாயகனாக நின்று ஆடிய சிவன் "ஆடல் வல்லான்" என்றும் சிறப்பிக்கப்பெற்றான்!

அவனுக்கான ஆட்ட அரங்கமாக அம்பலமும் அமைக்கப் பெற்றது! பிறகு, இறைவழிபாட்டுக் கருத்துவளர்ச்சியால் பெரிய அம்பலமும் அமைக்கப் பெற்றது! அப் பேரம்பலம் அமைக்கப்பெற்ற பின்னர் முன்னீடாக அமைக்கப் பெற்றிருந்த அம்பலம்>சிறு+அம்பலம்>சிற்றம்பலம் ஆகியது. (வெள்ளித் தகடு வேயப் பெற்ற அம்பலம், வெள்ளியம்பலமாகவும் - முழுக்க முழுக்கப் பொன் தகடுகளால் வேயப்பெற்ற அம்பலம் பொன்னம்பலம் ஆகவும் ஒளிர்ந்தன). சிறு அம்பலம், சிற்றம்பலம் ஆகி இன்று (சிற்றம்பலம் > சிற்றம்பரம் > சித்தம்பரம்) சிதம்பரம் என்றவாறு, ஓர் ஊர்ப்பெயராய்ச் சிரிக்கின்றது!... இவையாவும் முந்தைய வரலாற்றுத் தொடர்வின் பிந்தைய எச்சக் காட்சிகள்....

இந் நாவலந்தீவுள் வந்தேறிய பிராமணர்கள், தங்களின் பல்வேறு தெய்வங்களையும் மறந்துவிடாமல் அவற்றின் நினைவுகளால் உழன்றனர்! மீண்டும் மீண்டும் நினைந்து தத்தமர்க்குள் அதுவதன் பெயர்களை மாறிமாறி ஓதியோதி உலைந்தனர்! அவர்களுக்குரிய வரலாற்றில் இந்நிலைகளைக் காணவியல்கின்றது!

தியுசு, பிருதுவ, அதிதி, வருண, மித்திர, அக்கினி, இந்த்ர, உழசு (உஷா), சவிதா (சாவித்ரி), சூர்ய, அசுவினி, ஆதித்ய, பரிசனியன், மருத், ருத்ர, சோம, துவட்டா, ரிபு, விச்வகர்மா, பிரசாபதி, பிருகசுபதி, வாச், பூசன், அபாம்நாத்து, த்ரித, வனஸ்பதி, சரஸ்வதி, பாரதி, யமன் (யமி) முதலியனவும் பிறபிறவும் அவர்கள் சுமந்து வந்த பாரத் தெய்வங்கள்!... வேள்வியில் வெட்டிப் போடப்பெற்ற “விறகு", பிடுங்கிக் கிள்ளிக் கட்டித் தொடுத்து வைத்துக்கொண்ட அறுகம்புல்

கட்டு (தர்ப்ப) போன்ற வெட்டு கட்டுப் பொருள்களில் குறிப்பிட்ட பன்னிரண்டு எண்ணிக்கையினவற்றையுங்கூட தங்களின் தெய்வங்களாகவே அவர்கள் கொண்டாடினர்!...

(பா=பரப்பு. "பாவடி யானை" (புறம்: 233) (="பரந்த அடியினையுடைய யானை"). பா+கு> பாகு) பகு = பரு; பெரிதாகு; அதிகமாகு பகுவொளி பவழச் செவ்வாய்" (சீவக: 2801). காண்க: இட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் தேரை (குறுந்: 193:2).

பகு+அடு>பகடு = பெருமை. "பகட்டு ஆன் ஈன்ற கொடுநடைக் குழவி" (பெரும்பாண்: 243). பகடு =பரப்பு "பகட்டெழின் மருப்பு" (புறம்:13). பகடு = பெருவலிமை. "நுண்பூண் அம்பகட்டு மார்பின்" (புறம்:88). பகடு = பேரெருது. "பகட்டினானும் மாவினானும்" (தொல். பொருள்:76) மேலுங் காண்க: "பகடு பேரெருத்தின் நாமம்" (பிங்கலம்).

பகு + அவு > பகவு பகவு + அன் > பகவன் = பெரியோன்; பெருந்தெய்வம். "ஆதி பகவன் முதற்றேயுலகு" (குறள்:1)

பகு> ப்ருஹ் (சமற்கிருதம்). (ஒ.நோ. மெது> ம்ருது. படி>ப்ரதி. படிமை>ப்ரதிமா. புடவி>ப்ருத்வி. மண்>ம்ருண். கமுகு>க்ரமுக. பவளம்> ப்ரவா. திடம் > த்ருத.

பகு> (சமற்கிருதம்) (BRIH) ப்ரிஹ் = வளர்: விரிவடை; மேம்படு. ஒ.நோ: பெருங்கதை = பருவத் கதா. பெருவுடையார் = ப்ருஹத்ஈஸ்வர் (பிருகதீசுவரர்)

"பகு" என்னும் தூய செந்தமிழ்ச் சொல்லினின்றெழுந்த திரிபு - வடிவங்களிற்பல - வடபாற்பகுதியுள் வட்டாரமொழிகள் பலவற்றுள் வழக்கிலிருந்தன! அதனையே, பார்ப்பனர்கள் அவர்களுக்குரிய ஒலிப்பு முறைப்படிப் "ப்ருஹ்" என்ற வடிவில் திரித்துக்கொண்டபிறகு- அதனின்று "ப்ரஹ்மான்" (BRAHMAN) என்றொரு சொல்லைப் புனைந்து கொண்டு, இறைவழிபாடு என்னும் பொருளில் வழங்கத் தலைப்பட்டனர்! இருக்கு - அதர்வண மறைகளில் இதற்குரிய சொற்பதிவுகள் உள்ளன!

"இறைவழிபாட்டு வினையோடு தொடர்புடையவன்" என்னும் பொருளிலேயே "ப்ரஹ்மான்" என்ற இச் சொல்லினின்று, "பிராஹ்மன்ய" (பிராமணன்) என்றவாறொரு சொல்வடிவையும் பார்ப்பான் தனக்கென உருவாக்கிக் கொண்டான்! இந் நாட்டுள் நுழைந்த பின், தான் போட்டுக்கொண்ட வேடத்திற்குப் பொருத்தமாகும்படி தானே சூட்டிக் கொண்ட பெயர், இது!

கன்று-காலியோட்டித் திரியும் முல்லைநாகரிக நிலையில் கிடந்துழன்ற அவ் வெண்சாம்பல் நிற வேற்றார்க்கு - இந் நாடு முழுமையுள்ளும் காலங்காலமாகத் தொடர்ந்து பற்றியிருந்த "பற்றி" (பத்தி>பக்தி) நிலை நன்றாகப் பொறுக்கித் தின்னுவதற்கு மிக நன்றாக வாய்ப்பேற்படுத்தித் தந்தது!

“ஆப்கானித்தானம்" என்னும் காந்தார நாட்டு வழியாகவே ஆரியர் இந் நாட்டுள் புகுந்தனர்! முதன்முதலில் பெருங்கூட்டமாக ஒன்றியிருந்து சிந்து ஆற்றங்கரைச் சமவெளிகளில் தங்கி வாழத் தொடங்கினர்! தூய நீர், தாங்கள் கொண்டுவந்த - வந்துபிடித்த - வளர்த்துப்பெருக்கிய ஆக்களுக்கு (பசுக்களுக்கு) வேண்டியிருந்த செழிப்பார்ந்த புல்வளம் - இயற்கை கொழித்த சூழலமைவு ஆகியனவற்றால் - அவர்களுக்கு அவ்விடம் மிகவும் பொருந்தியதாயிருந்தது!

பின்னர், சிர்மூர் குன்றுகளில் உருவாகித் தானே சுவரத்தினின்று மேற்கு நோக்கியோடிப் படிப்படியே மென்மெல் மறைந்துபோகும் ஆறான சரசுவதியாற்றங்கரைக்கும் கண்ணாற்றங்கரைக்கும் ("திருஷ்டத்வதி") இடைப்பட்ட இடப்பரப்பில் படிப்படியே சென்று தங்கி வாழ்ந்த ஆரியர், பிறகு இமயமலைக்கும் விந்திய மலைக்கும் இடைப்பட்ட "நடுவண் பைதிரத்திலும் (மத்ய ப்ரதேசத்திலும்) தங்கித் தங்கி நகர்ந்து பரவலாகி, வடநாடு முழுமையிலும் அவ்வக்காலிருந்த (அரசுகளை) பேதைப் பெருமட அரசர்களை மயக்கி வயக்கி வலுப்பெற்றவாறு வளரலாயினர்! ஆங்கிருந்து வங்கத்துக் காளிக்கோட்டப் பகுதிக்குள்ளும் சிலர் சென்று

பரவினர்! காளிக் கோட்டத்துக்குச் சென்று அக் கோயிலுள் புகுந்து நிலைப்புறும் வகையில் கடாவெட்டும் பலி பூசனையையும் கூட ஆரியப் பிராமணனே ஏற்றான்!....

இந் நாட்டுள் புகுந்து இறங்கிய பின்னர் ஆங்காங்கும் மென்மெல நகர்ந்து தங்கித் தங்கி வாழ்ந்த ஆரியர் அனைவரும், தங்கியிருந்த ஒவ்வோரிடத்தும் அவ்வப் பகுதியுள் நடைமுறையிலிருந்த இந்நாட்டுக்கேயுரிய இறைநம்பிக்கைகள் – வழிபாட்டுமுறைகள் - பழக்கவழக்கங்கள் முதலியனபற்றியெல்லாம் ஆழமான நோட்டம் செலுத்தியவாறே இயங்கியுள்ளனர்!

அறியாமை - குருட்டு நம்பிக்கை - தெளிவின்மை - கள்ளங்கரவின்மை ஆகியவற்றோடு கூடிய பண்டைய வழிபாட்டு நிலைகளில் தொடர்ந்து தோய்ந்திருந்த இந்நாட்டுக் குடிமக்கட்கு, அவ் வாரியர்களின் தோற்றமும், மாற்றுநிறமும், வல்லொலிப்பு வெடிப்புமொழிவீச்சும், மயக்கத்தையும் கவர்ச்சியையும் உண்டுபண்ணின!

இறைவனுடைய மறுவுருவாக, வானினின்று நிலத்துக்குக் குதித்து உதித்த தெய்வவடிவாகத் தாங்களாகவே இம் மக்களிடம் கருத்து ஏற்றலாயினர்! இவ் அடிப்படையிலேயே தங்களைப் "பூசுரர்" என்றவாறு பறைசாற்றிக் கொண்டனர் ! (பூ= நிலத்துலகம்; உலகம் = தேவர்; இறையவர்). தங்களை "நிலத்தேவர்" என்று விரைந்து நம்பவைத்துவிட்ட பின்னர் நம்பிய இம்மக்களின் முன் தாங்கள் பேசும் வேதமொழியும் (வேதனைமொழி....) தேவமொழியேதான் என்னும் கருத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வதிலும் எவ்வகைத் தடையும் அவர்களுக்கு நேரவில்லை!....

எவ்வெக் கடவுளரையெல்லாம் இந்நாட்டு மக்கள் வழிபட்டனரோ அவை எவற்றையும் நேரிடையாக ஒருசிறிதும் எதிர்க்காமல் - உயர்ச்சிதாழ்ச்சி உரைக்காமல் - மாற்றுக்கருத்து எதுவும் கூறாமல் - அவற்றுக்கெல்லாம் ஏற்றம் செய்வதுபோல் பல்வேறு புனைவுப்புளுகுக் கதைகளைச் சுவைசுவையாக வகைவகையாகக் கட்டிக் கூறியவாறே, அக் கடவுள் வகையினத்தைச் (Category)

சமற்கிருதமொழியிலேயே புதுப்புதுப் பெயர்களாகப் படிப்படியாகச் சூட்டிச் சுட்டத் தொடங்கினர்! தாம் தூக்கிவந்த கடவுட்பெயர்க் கருத்துக்கு ஏற்ற இந்நாட்டுக் கடவுள் எதுவாயினும், அதனை அவர்களுடையதோடு ஒப்பப்பேசி - ஒப்பவிளக்கி அவர்களுடைய கடவுட்பெயரையே இங்கு ஏற்பிலிருந்த இந்நாட்டுக் கடவுட்கும் இட்டுச் சூட்டி ஒன்றாக்கிப் பிணைத்துப் புதுப்புதுப் புனை கதைகளை அதன் மீது சார்த்திக் குவிக்கலாயினர்!....

இவ் வினையால் விளைவும் இப்படியாயிற்று!... திருமாலா....... அவன் விஷ்ணுவானான்.... பெருமாலா (பெருமாளா) அவன் மகாவிஷ்ணுவானான்!.... சிவனா....... அவன் ருத்ரனானான்! முருகனா.... அவன் சுப்ரமண்யனானான்!... (குமரனா... அவன் கௌமாரனான்!) வேந்தனா.. அவன் இந்த்ரனானான்!....

(நடவரசனா... அவன் நட்ராஜ் ஆனான்!.... பெருவுடையானா..... அவன் ப்ருஹத்ஈஸ்வரனானான்!... தாயுமானவனா.... அவன் மாத்ருபூதம் ஆனான்!... பகவனா.... அவன் "பஹவான்" ஆனான்!... அரங்கனா... அவன் ரங்கனானான்!..... கண்ணனா... அவன் கிருஷ்ணனானான்!... கோவலனா.... அவன் கோபாலனானான்!...)

இருக்கு – யசுர் - சாம - அதர்வணம் என்னும் நாற்குப்பை நூற்குழித் தொட்டிகளினுள் ஒரு கோயிலுமில்லை!.... ஒரு வகையிலும் கோயில் வழிபாடு என்பதே இல்லை!... அங்கங்கும் கண்ணை மூடிக்கொண்டு வறட்டுத் தவளைக் கொரகொரப்பாகவும் இறக்கமாக மூச்சு வெடிப்பொலியாரக் கத்திக் கொண்டே (கழுத்தறுப்பதும்) செவிப்பறை கிழிப்பதும், வெட்டுவதும் - தீயில் வீணே எரிந்தழியக் கொட்டுவதும் - வாயால் கடித்துக் குதப்புவதும் - இடித்து நொறுக்குவதும் - உருக ஊற்றுவதும் - கறுக வறுப்பதும் - மென்று அதக்குவதும் - கொன்று தின்று குய்ய்.... விடுவதும்தான்.... அவர்களின் வழிபாடு, வணக்கம், ஏத்தல், போற்றல் போன்ற யாவும்!.....

தமிழகத்துள் நுழைந்த ஆரியப்பார்ப்பனர், - அக்கால மடப்பேதைகளாயிருந்த மன்னர் மண்வெட்டியரை மடியடிக் கிடத்தி மயக்கப்பாலூட்டிச் சுற்றிச் சுற்றி எங்கும் கோயில் எழுப்பும்படி ஏவினர்! பார்ப்பான் கட்டளைக்கு மனமண்டியிட்டு மன்னனும் எம்பி எம்பி மூலைக்குமூலை கட்டுவித்தான்!

இசையப்பெருமானுக்குப் (ஏசு பெருமானுக்கு) பின் வந்த இருநூறாண்டுக் காலத்துள் தமிழக வரைப்பினுள் நல்ல (பெரிய) கடைகால்களிட்டு கோட்டங்களை (கோயில்களை) நாட்டச் செய்து, (பார்ப்பனக் கூட்டம்) நாவூற நக்கிப் பொறுக்கத் தொடங்கிவிட்டமையைச் சிலப்பதிகார இளங்கோஅடிகளின் அடிகளில் உணர்கின்றோம்!...

"கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்" (சிலம்பு: 14:10), "பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும் (சிலம்பு. 5:169), அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்" (சிலம்பு: 5: 170), "வால்வளை மேனி வாலியோன் கோயிலும்" (சிலம்பு: 5: 171), "நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயிலும்" (சிலம்பு: 14: 7), "அருந்தெறற் கடவுள் அகன்பெருங் கோயிலும்" (சிலம்பு:13:137) என்பன, அவ் அடிகள்!...

("கோ" என்பவன், அரசன்! கோ + இல் > கோயில் = அரசனின் இல்லம்! இத்தகு பொருளில் தோன்றி நிலைத்திருந்த இச்சொல் கோ, கோவான பின் (ஆப்போல் - (பசுமாடு போல்) பார்ப்பானின் பின்னோடி அவனின் மடச்சொற்கேட்டு மதிமயங்கி-சூழ்ச்சிக்காளாகிப் பதனழிந்த பின்......) இறையவன் உறையும்(!) வழிபாட்டு இல்லப்பொருளுக்கு விரிவாக்கம் பெற்று இடம் மாறியது!)

கோயிலுக்கு முந்தைய தமிழ் வழக்கு, "கோட்டம்" என்பதாகும்! "கோட்டம்" என்பது வளைவையும் சுட்டும்! (வளைவாக முற்றும்படிச் சுற்றிச் சூழக் கட்டிய மதில் அமைந்த (இறை) இல்லம் கோட்டம்!...) தமிழர்தம் மனக்கோட்டம் மிகமிக இறைக்கோட்டங்களும் வானெழுந்தன! அவரின் தேட்டங்கள் பலவும் வெள்ளைக் கொள்ளைக் கூட்டத்திற்கு ஊட்டங்களாயின!

கழகக்கால இறுதியில் வாழ்ந்த கோச்செங்கண்ணான் என்னும் சோழக் கோணையன் (கி.பி.4 - ஆம் நூற்றாண்டுக்கு முன்னரேயே!...) எழுபது கோயில்களைக் கட்டிமுடித்த கருமத்தைத் திருமங்கையாழ்வார் இவ்வாறு தெரிவித்தார்!...

“இருக்கிலங்கு திருமொழிவாய் ஒண்தோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபது செய்து உலகம்
ஆண்ட திருக்குலத்து வளச் சோழன்..."

என்பது அத் தெரிவிப்பு....

ஆரியப் பார்ப்பனர் இத் தமிழக வரைப்பினில் அரும்பாடுபட்டுப் பரப்பமுயன்ற கடவுளரில் தலையாய ஒருவன், "பிரமா' (பிரமன்) என்னும் கற்பனைக் கடவுட்பயல் ஆவான்!... (இவன் திருவிளையாடல்களிற் சில....)

1. ஒரு நாள், கவுரிதேவியின் திருமணத்திற் கலந்து கொள்ள இப்பயல் சென்றான்! மணமகளாகிய கவுரிதேவியின் அழகு இவனைக் கவர்ந்தது! கவுரிமேல் காமம் மேலிட்டது. அப்பொழுது இவன் நடத்திய வன்புணர்ச்சியில் "வாலகில்லியன்" என்னும் - முனிப்பயல் குழந்தையாகப் பிறந்தான்! (சான்று: பிரமபுராணம்)

2. "திலோத்துமை" என்னும் அழகியை இப் பிரமன் படைத்தான்! முறைப்படி, இவள் மகள்!. அது பற்றிய எண்ணம், இம் மடப்பயலுக்கு ஏற்பட வில்லை! அவளின் அழகு இவனின் கண்களை ஈர்த்தது! சொக்கி மயங்கினான்! தாவியிழுத்து அணைய விரும்பினான்! அவளை நோக்கி ஓடினான்; அவளோ, இவனிடம் அகப்படக்கூடாதென நான்கு திசைகளிலுமாக மாறி மாறி ஓடிக்கொண்டேயிருந்தாள்! திசைக்கு ஒன்றாக நான்கு முகங்களைக் கொண்டு அவளைக் கண்டான்! எனவே, நான்முகன் ஆயினான்!

3. ஒரு நாள், இப் பிரமன் குதிரையீட்டு வேள்வி (அசுவமேத யாகம்) செய்யத் தொடங்கினான்! அவ் வேள்விக்கிடையில் தேவர்களின் மனைவிமார்களைக் கண்டுவிட்டான். வெறி

பொங்கியது.... விந்து முந்தியது!....அவ் விந்தை வீணாக்காமல் வேள்விக் குண்டத்தீயிலேயே கொட்டினான்!... அத் தீயிலிருந்து பிருகு, அங்கிரசன், அத்ரி, மரீசி, புலத்தியர், புலகர், வசிட்டர் முதலியோர் பிறந்தனர்.

4. ஓர் ஊழிக் காலத்தில் சரசுவதி தேவியை (இவள் ஒருத்தி மட்டுமே தன் காம வெறியெழுச்சிக்குப் போதாள் என்று....) நூறு பெண்களாக உருக்கள் கொள்ளச் செய்தான்! அவ்வுருக்களொடு புணர்ந்து “திவாந்தகன்" முதலிய அரக்கர்களைப் பெற்றான்!....

5. ஒரு நாள், பிரமன் தவம் செய்யத் தொடங்கினான!.... இத் தவத்தைக் குலைப்பதற்கு, இந்திரப்பயல் "திலோத்துமை' என்னும் குட்டியொருத்தியை இவன்பால் ஏவினான்! தவஞ்செய்வதைத் தூக்கிப் போட்டுவிட்டு ஆண்மான் உருக்கொண்டு திலோத்துமையைத் துரத்திக் கொண்டோடினான் இந் நாய்ப்பயல்!...

6. சரசுவதி என்பாளைத் தானே படைத்தான், இப் பிரமன்!... படைத்த பின் அவள் அழகு கண்டு, காமம் விண்டது! அவளைப் புணரும் முயற்சியை மேற்கொள்ளத் தொடங்கினான்! இவனிடமிருந்து தப்பியோட திலோத்துமை மான் உருக்கொண்டாள்! ஓடினாள்.... ஒடினாள்! ஓடிக்கொண்டேயிருந்தாள்! இப் பயலோ உடனே ஆண்மான் உருக்கொண்டு வெறிபிடித்தவாறு பின்னோடினான்!... கண்டு அஞ்சிய தேவர்கள், சிவனிடம் சென்று மன்றாடித் தடுக்குமாறு முறையிட்டனர்!.... சிவன் திடுமென வேடனாக வேடங்கொண்டு - இப் பிரம மானை நோக்கி அம்பு விட்டான்!... அம்பு பட்டு அலறியது, மான்! அப்போது - அவ்வுடலினின்று ஓர் ஒளி வான் நோக்கி எழுந்தது! அவ்வொளியே, "ஆதிரை!"...

7. ஒருநாள், ஊர்வசிதேவியின் நாட்டியம் நடந்தது! பார்த்துக்கொண்டேயிருந்தான், இப் பிராமணப் பிரமன்!... அவளின் அசைவுகளைக் காணக் காணக் காமம் கட்டு மீறியது!..... கட்டவிழ்ந்து விந்து சிந்தவே.... உடனே ஒரு குடத்தினுள் அதனை விட்டான்! விட்ட

விந்துவால் “அகத்தியன்" என்னும் குட்டை முனிப்பயல் ஒருவன் குழந்தையாய்ப் பிறந்தான்!...

8. சிவனுக்கும் சிவைக்கும் திருமணம் நடந்தது! மணத்தில் கலந்துகொண்டான், இம் மடப் பிரமன்!... மணக் கோலத்திலிருந்த மணவாட்டி சிவையின் கைவிரல் அழகு இவனின் நெஞ்சைச் சுண்டியது! காமம் தலைக்கேறியது; நிலை மீறிப் பொங்கியவுணர்ச்சியால் அனைவர் முன்னாலும் அவமானப்பட்டான்! இதற்கெனச் சிவனையே வழிபட்டுப் பொறுத்தருள வேண்டினான்; பழி நீங்கினான்.....

சென்ற நூற்றாண்டுக்குஞ் சென்ற நூற்றாண்டின் இறுதியில் ஆ. சிங்காரவேலு என்பவர் இப் (பெண்பிள்ளைப் பொறுக்கிப்) பயலின் கோளாறுகள் பலவற்றையும் விளக்கமாகப் படித்துப் பார்த்து அவற்றில் இன்றியமையாதனவற்றைச் (!) சுருக்கமாகத் தொகுத்து அறுபத்தெட்டுக் குறிப்புகளாக "அபிதான சிந்தாமணி" என்னும் குப்பைத் தொட்டியில் கொட்டிவைத்துள்ளார்!.... மேலும் விளக்கங்கள் விரும்புவார், - அத் தொட்டியைக் கீழும் மேலுமாகச் சீய்த்துப் பார்த்துப் பிரமனின் நாற்றங்களை நுகர்ந்து.... முகம் சுளிக்க, அகம் நெளியலாம்!....

ஈராயிரம் ஆண்டுகளுக்கும் முன்னீடாகவே, இத் தென்னகத்துள் நுழைந்தேறிய நூலாரான பூணூலியர், இப் பிரமனைத் தமிழக இறைப் பெருமானாக நிலைநிறுத்திவிட மிகப்பல முயற்சிகளைச் செய்துள்ளனர்... தொடர்ந்து அயர்விலாது முயன்றனர்.... பிரமன் எனும் இப் பயலுக்கெனப் பிங்கல நூற்றொகை (பிங்கல நிகண்டு) முப்பத்தொன்பது (39) தனித்தனிப் பெயர்களைப் பட்டியலிட்டுப் பதித்துவைத்துள்ளமையிலுங்கூட, இம் முயற்சியின் ஈரச் சாரத்தை ஆர அறியலாகும்!.....

இப் பயலின் ஊர்தி... அன்னப் பறவை!.... இவனின் படைக்கலம்.... கயிறாகிய பாசம்!... இவனுக்குரிய கொடி.... மறை! (வேதம்). இப் பிரமன் முகத்திலிருந்தே, மறைகளும் (வேதம்),

மறையுறுப்புகளும் (வேதாங்கம்), தொன்மங்களும் (புராணம்) தோன்றின!... (சான்று: மச்சபுராணம்)

இப் பிரமனுக்குரிய தொழில், படைப்பு..... ஆக்கம்..... உருவாக்கம்!..... எல்லாவற்றையும் - எல்லா உயிரிகளையும் இவன்தான் (இம் மடமூடமட்டிப்பயல்தான்!) படைத்தான்! ஆக்குந் தொழிலுக்கு, இவன்தான் இறை! (எல்லா உலகும் பிரமன் இட்ட முட்டைகளே!.... (கோழி முட்டைபோடுவதுபோலப் போட்டானோ.... என்னவோ?...). இதனை இம் மண்ணகத்தே வலியுறுத்தி ஆள்கள் சேர்ப்பதற்கென 1800 ஆண்டுகளுக்கும் முன்னரேயே "மதஇயக்கம்" ஒன்று இயங்கியது! இம் மதத்திற்குப் "பிரமவாதம்” என்று பெயர்! இம் மதக் கொள்கையன், "பிரமவாதி” எனவும் பெயர் பெற்றிருந்தான்! (காண்க: "பேருலகு எல்லாம் பிரமவாதி ஓர் பிரமனிட்ட முட்டை என்றனன்" (மணிமேகலை. 27: 96-97)

(பிரமம் என்பது வேறொன்றுமில்லை .... அது பிராமணியமே ஆகும்!... பிரமன் என்பவனும் வேறொருவனுமல்லன்!...... அவன் பிராமணனே ஆவான்!...) சான்று: “பிரம-ஆசாரம்" கொண்டு ஒழுகுபவன் எவனோ, அப் பயலே பிரமச்சாரி... (இப் பிரமச்சாரி எப்படியெப்படியெல்லாம் ஒழுகவேண்டும் என்றவாறு பல்வேறு வரையறைகளை மனுதருமச் சாத்திரம் தெளிவாகப், பட்டியலிட்டுள்ளது!. (அவற்றுள் இன்றியமையாத வரையறையுள் ஒன்றை மட்டும் சான்றுக்கென மென்று தின்று கொண்டு மேற்செல்லுங்கள்.... அது, இது! (பிரமச்சாரியாய் குருவிடம் அமர்ந்தவன்..) குருவின் மனைவிக்கு (குருவிக்கு!) எண்ணெய் தேய்த்தல்..... குளிப்பாட்டி விடுதல் - உடம்பு தேய்த்தல் - தலையாற்றுவித்தல் செய்யக்கூடாது... சான்று: மனுதர்மசாத்திரம்).

<u>பிரமதாயம்:</u> பிராமணப் பயல்கட்கு விடப்பெறும் (விடப்பெற்ற) இறையிலி (வரியில்லாத) நிலம். (சான்று: "ஐஞ்நூறூர் பிரமதாய்ங் கொடுத்து" பதிற்றுப்பத்து இரண்டாம்பத்து - பதிகம்)

பிரமதானம்: பிராமணர்க்குச் செய்யப்பெறும் தானம். (காண்க: Travancore | Archeological serics V: 207).

பிரமதேயம்: பிராமணர்க்குத் தானமாகக் கொடுக்கப்பெற்ற ஊர். (காண்க: South Indian Inscriptions. III: 112).

பிரமரிஷி = பார்ப்பன முனிவன்.

பிரமமுனி = பார்ப்பன முனிவன்

பிரம மாராயன்: பார்ப்பன அமைச்சர்க்குரிய பட்டப்பெயர். (காண்க: "மும்முடிச் சோழன் பிரம மாராயன்" (S.I.I : II: 139:21)

பிரமராயன்: பார்ப்பன அமைச்சர்க்குரிய பட்டப்பெயர்: (காண்க: "தென்னவன் பிரமராயரும்" இலக்கணவிளக்கம்: 900: உரை)

(இம் மேற்சுட்டிய வழக்குகளால் - பிரமம்.... பிராமணியம் என்பன வேறு வேறன்று, என்பதைத் தெளியவுணரலாகும்!)

இப் பிரம்மா... நான்கு மறைகள்(!) கொண்டிருந்த பிராமண இனத்துக்கு உரிய புத்தம் புதுக் கடவுளாக அவர்களாலேயே படைக்கப் பெற்றவனாவான்! அவனுக்கென அவர்கள் உருவங் கொடுக்கையில் (நான்மறைக் குறியீடாக...) நான்கு தலைகளையும் அம் முண்டத்தின் கழுத்தில் செருகினர்! இவனைச் "சதுர்முக(ன்)" - எனச் சாற்றினர்! அக் கூற்றினை "நான்முகன்" என்றவாறு நந்தமிழர் மொழிபெயர்த்து மாற்றினர்! (காண்க: 1. "தாமரை பயந்த தாவில் ஊழி: நான் முகவொருவன் சுட்டி" திருமுருகு: 164-165) 2. நீனிற வுருவின் நெடியோன் கொப்பூழ், 'நான் முகவொருவன் பயந்த பல்லிதழ்த் தாமரைப் பொகுட்டின்....' (பெரும்பாணாற்றுப் படை: | 402 - 404) திருமாலினுடைய (கொப்பூழ் (தொப்புள்) வழியே நிமிர்ந்த தண்டின் மேலமைந்த தாமரைப் பொகுட்டில்.....) உந்தியில் பிறந்தவனாகவும் பிரமனின் (வாழ்க்கைக்!) கதை உள்ளது!! (மலரோன் - உந்தியில் வந்தோன் - 'கமலயோனி' முதலிய பிரமனின் பெயர்கள் இவ்விடத்தில் ஒப்பு நோக்காகக் கருதத் தக்கன! (காண்க: பிங்கலம்: 156). அவற்றின் பதிவுகளே, இவ் இரு மேற்கோள்கள்!.... எனவே, திருமாலுக்குப்

பிரமன்றந்தை (<பிரமன்+தந்தை) என்றவாறு ஒரு பெயரும் உண்டு! (காண்க: பிங்கலம்: 156)

பிரமன்,- எவராலும் படைக்கப்பட்டவன் அல்லன்!.... அவன் ஒரு தான்தோன்றி! தானே தோன்றி! அதாவது- அவன் - "சுயம்பு"! அவனுக்குப் பிறப்பென்பதே இல்லை ... அவன், - "அஜ" (A-ja) (a=nagative prefix ja=birth) (பிறப்பிலி.) "அஜன்" என்னும் சொல்லுள் அமைந்துள்ள வடவெழுத்தையும் - வடவொலியையும் (ஒரீஇ...) நீக்கியவாறு - உரையாசிரியர் பாவாசிரியர் ஆகிய பலரும் "அயன்" என்ற தமிழிய வடிவிற் குறிப்பாராயினர்!...

தமிழர்களின் தனிப்பெரும்பழம் பண்டைய கடவுளான... சேயோனாகிய – சிவன், சிவப்புநிறக் கருத்தால் "அரன்" என்றவாறு பெயரொன்றைப் பெற்றிருந்தான், அல்லனோ?!... அவ், "அரன்" என்னும் சொல்லை, ஆரியர் "ஹர" என்றவாறு ஒலித்தனர்! "ஹர" என்னும் வடசொற்கு அழிப்பவன் என்றும் பொருள் உண்டு! (ஒப்பு நோக்கு: சம்ஹார= நல்ல நோக்கத்திற்காக அழித்தல், மேலுங்காண்க: சூரசம்ஹார.) (சிவனுக்குச் "சங்கரன்" என்னும் பெயரை, ஆரியர் சூட்டி நின்றமையையும் இவ்விடத்திற் கருதிப் பார்த்தல் தேவையானதாகும்!). "ஹர" என்பதற்குரிய அழித்தற் பொருளைச் சிவன் மீதே ஏற்றி அவன் அழித்தற்குரிய கடவுள் என்பதாகப் பொருள் கற்பிக்கத் தொடங்கினர்! நெருப்பு, தீய்க்குந் தன்மையுடையதாதலின் அவர் கூறிய கருத்து, பொருந்திய ஒன்றே என்றே அக்கால மக்களுக்குப் பட்டிருத்தல் வேண்டும்!...

நீரானது மக்கள் உயிர் வாழ்க்கைக்குரிய அடிப்படைகளுள் ஒன்றாதலின் திருமாலைக் காப்புக் கடவுளாகக் கூறினர்! அதே நேரத்தில் அனைத்துக்கும் மேம்பட்ட பெருந்திறக் கடவுளாகப் பிரமனையே முன்னிறுத்தினர்!.....

அதற்கெனப் படாதபாடு பட்டனர்!.... தென்னகமெங்கும் அக் கருத்துக்கு உடன்பாடிலாத சூழலையும் ஆழ உணர்ந்தனர்! பிரமனைக்

கடவுளுக்குரிய தகுதிப்பாடு உடையவனாக இத் தமிழக மக்கள் கருதினாரிலர்! மதித்தாரிலர்!....

மரபு வழிப்பட்ட அழுத்தமான இனவோர்மை சான்ற தெள்ளிய இம் மனவோட்டம் தமிழுலகம் எங்கும் தங்குதடையில்லாமல் ஓடியுள்ளமையை நம்மால் நன்கு உன்னியெண்ணியுணர முடிகின்றது!....

சிவனும், திருமாலும் தமிழகமெங்கணும் பரவலாகப் பதிந்து அழுத்தமாக நிலைத்திருந்தனர்! அவ்விருவர்க்கும் அமைந்திருந்த அழுத்தமான நிலைப்பாடுகளைப் போலவே - பிரமனுக்கும் ஏற்படுத்தப் பல கூறுகளில் பிராமணர் முயன்றனர்..... அதற்குக் கொடுமுடியாக... "அனைவர்க்கும் கடவுளர், மூவர்!" என்றவாறொரு பொதுக்கருத்தைச் சூழ்ச்சியாகத் தூவினர்! “ஆக்கல் - காத்தல் - அழித்தல் என்றவாறு மூன்று தனித்தனித் தொழில்களைச் செய்யும் முத் திருமேனியர் இவர்". - என்றவாறு கூவினர்! மூன்றும் சமத்திறமுள்ள இணைவலுவுள்ள தலைமைத் தொழில்கள்!... ஒன்றுக்கு ஒன்று வேறுபடாதன!... என்றவாறெல்லாம் பல கோணங்களில் கதைத்தனர்!... அதற்கு அடையாளக் குறியீடாக மூன்று தலைப்பு முண்டுகளையுடைய "முத்தலைக் கோல்" ஒன்றனைப் பிராமண முனிவன் ஒவ்வொருவனும் தூக்கிச் சுமந்தவாறு தமிழகமெங்குந் திரியலானான்! கருத்துப் பரப்புரையாற்றினான்!....

தொல்காப்பியர் காலத்துக்கும் முற்பாடேயே..... இப் பரப்புரைப் பணியை (பிரச்சார) ஆரியர் தொடங்கிவிட்டனர்! (காண்க: 'நூலே கரகம் முக்கோல் மணையே ஆயும் காலை அந்தணர்க்கு உரிய" தொல். பொருள். மரபு: 71). (மேலுங் காண்க: 1. "கல் தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான் முக்கோல் அசைநிலை கடுப்ப" (முல்லைப் பாட்டு: 37-38) 2. “முக்கோல் கொள் அந்தணர்" (கலித்: 126:4). 3. “உறித்தாழ்ந்த கரகமும் உரை சான்ற முக்கோலும்" (கலித்: 9:2) (“உரை சான்ற முக்கோல்" என்னும் அற்றை இச் சொற்றொடர்ப் பதிவினுள் மிகப் பேராளமான (ஏராளமான) உரை விளக்கங்களை இம் "முக்கோல்"

அக்காலத்தே அடக்கியிருந்த காட்சிகளையும் தெளிவாகக் காணலாகும்!)

இம் முக்கோலுக்குச் சமற்கிருதத்தில் "திரிதண்டம்" என்பது பெயர்!.... இம் முக்கோலை ஏந்தித் திரிந்த பார்ப்பனர், "முக்கோற் பகவர்" என்றவாறு சுட்டப் பெற்றனர்! (காண்க: கலித்: 9:2 துறைக் குறிப்பு)

ஆரியர் இந் நாவலந்தீவத்துள் வருமுன்பும் இத் தென்னகத்துள் காலடி எடுத்து வைக்கும் முன்பும் மிகப் பன்னூறாண்டுகளாகத் தொடர்ந்து நின்று நிலைத்து நீடிப் போற்றப் பெற்று வந்தான், சிவன்!...(சேயோன்) - திருமாலுக்கும் (மாயோன்) அதே தகுதியே! தமிழத்தெய்வத்தை ஆரியத் தெய்வமாக வண்ணப்படுத்தும் முயற்சிக்கிடையில் சிக்கித் திருமாலானவன் சிறிது நிறம் வெளிறிச் சுண்ணப்பட்டு விட்டுணு(விஷ்ணு)வாகினான்! சிவனியம் என்றும் தொடர்ந்து தழைப்பெய்தியவாறே ஒளிர்ந்து வளர்ந்தது! சிவனியத்தை ஆரியத்தால் வீழ்த்த முடியாது போனது என்பதற்குரிய அடையாளக் கருவை உள் தாங்கியே அடிமுடி காணும் தொன்மக் கதை (புராணம்) தமிழகமெங்கணும் பரவியிருந்தமையை இவ்விடத்திற் சற்று உன்னிப்பாகக் கூர்ந்து கருதுதல் வேண்டும்!...

சிவன்.... மீமிகப் பெரியோன்! பண்டைப் பழம்பெருமாத் தெய்வம்!.... அவனின் தொடக்கத்தையும் முடிவையும் காணுதல் என்பது எவர்க்கும் அரிதினும் அரிதாகும்!.... என்றவாறான கருத்துப் பற்றியே அச் சிவனின் அடியையும் (தாளையும்) முடியையும் (தலையுச்சத்தையும்) காணும் முயற்சியைப் பிரமனும் திருமாலும் மேற்கொண்டனர் என்னும் கதை பரவலெய்தியது!

எவ்வளவோ முயன்றும் எப்படியெப்படியோ முக்கியும் அவ் இருவராலும் காணவே முடியவில்லை என்பதுவே அக்காலத்தில் மிகச் சுவையாகப் பரவிய மரபுமானக் கரு சான்ற அக் கதையின் முடிபு ஆகும்!..

இக் கதையின் கருமுடிபாகிய, அடிமுடிகாணவியலாது போன அருமுடிவைக் குறித்து - (1) "நின் ஆதிகாணாது. இருவர் மூவுலகு

உழன்று நாற்றிசை உழிதர ஐம்பெருங்குன்றத்து அழலாய்த் தோன்றினை!" (2) "நடமாடும் சங்கரன் தாள் நான்முகனும் காணான்.. படமாடு பாம்பணையான் காணான்".. என்றவாறு திருஎழுகூற்றிருக்கையுள் நக்கீரரும், (1) "முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப் பண்பொடு நின்றனை" (2) "நாற்றமலர் மேல் அயனும் நாகத்தில் ஆற்றலணை மேலவரும் காண்கிலர்" என்றவாறு ஞானசம்பந்தரும், (1) "பிரமன் மால் காணாப் பெரியோன்" (2) "பிரமன் மால் அறியாய் பெற்றியோன்" (3) "பூங்கமலத்து அயனொடு மால் அறியாத நெறியோன்" (4) "மாலறியா நான் முகனும் காணா மலை!" (5) "மலரோன் நெடுமால் அறியாமல் நின்ற அரும்பெருமான்" (6) அரியொடு பிரமற்கு அளவு அறியவொண்ணான்" என்றவாறு மாணிக்கவாசகரும், இன்னவர் போன்றே பிறர்பிறரும் பல்லிடங்களில் சுட்டியுள்ள கருத்துவரிகளுனுள் மிகப் பெரும் போராட்ட நிகழ்ச்சிக் கருக்களத்தையே உள்ளீடாகக் காணவியல்கின்றது!

அடேய்ய்!...... பார்ப்பான்!.... நீயே இடைத் தரகனாக கோயில்களுக்குள் புகுந்து கொண்டு கருவறைக்குள் உமக்குரிய மொழியிலேயே ஏதாவது உளறியிழுத்து ஊளையிட்டுக் கொண்டு மலர் தூவியவாறு மணியாட்டிக் கொண்டு நன்றாகப் பொறுக்கித் தின்னு! ஆனைந்து (பஞ்சகௌவியம்: பால் - தயிர் - வெண்ணெய் - நெய் - மோர்), உண்டுகொண்டு மேலுஞ் சுரண்டிக் கொழு! கொழுகொழுவென்று கொழு! நீ சுமந்துவந்து "சூ"!..... காட்டும், அப்புதுப் பிரம்மா மட்டும் எங்களுக்கு வேண்டவே வேண்டா!" - என்றவாறு மறுதலித்துத் தடையிட்டு நின்ற நம் பண்டைத் தமிழ்மக்களின் வல்லிய தெளிவு, இன்றைக்கும் நாம் எண்ணியெண்ணி வியக்கத் தக்கதாகவே உள்ளது!..

பண்டைக்காலத்தில் ஆரியப் பார்ப்பனர்கள் சிறுசிறு தொகையினராகப் படிப்படியே இத் தமிழக எல்லைக்குள் உள்நுழையத் தொடங்கிய ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மிகமிக முற்காலத்தில் நம் தமிழக மக்கள் பல்வேறு குடிகளாகப் பல்வேறு இனக்குழுக்களாக வாழ்ந்து வந்தனர்!

குடவர் - குட்டுவர் - அதியர் - உதியர் – மழவர் - மறவர் - இளையர் - பூமியர் - வில்லோர்- கொங்கர் - குறவர் - பரதவர்- கோசர் - ஆவியர் - ஓவியர் - வேளிர் – ஒளியர் - அருவர் - அண்டர்- இடையர் (பொதுவர்)தொண்டையர் - திரையர் – களவர் - சேரர் - சோழர் - பாண்டியர் போன்ற பெயர்களெல்லாம் நம் தனித்தனி இனக்குழுவைக் குறித்த குறியீட்டுப் பெயர்களே! ஒவ்வொரு இனக்குழுவும் தனித்தனித் தலைவனை அரசனாகப் பெற்றிருந்தது.

ஆரியப் பார்ப்பனர் வருதற்குச் சில்லாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னரேயே, சேரர் - சோழர் - பாண்டியர் என்னும் இனக்குழுத் தொகுதிகள் ஆளுங்கணத் தலைமைகளுடன், பேரரசுகளாக வளரத் தொடங்கி நிலைத்திருந்தன. சிறு சிறு, இனக்குழுத் தலைமைகளை ஏற்றிருந்த சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள், அவ்வப் பகுதிகளில் - மேம்பட்டிருந்து ஆட்சிசெய்து வந்த மூவேந்தர்களில் ஒருவர்பால் ஏதோ ஒரு கட்டுப்பாடாகச் சார்ந்தேயிருந்தனர்... சார்ந்திருக்கவில்லையெனில், பெரும்படை வலிமையும் ஆள்வலிமையும் பெருஞ்செல்வவலிமையும் வாய்ந்திருந்த வேந்தனானவன் அத் திமிரும் சிற்றரசனை அடக்கியொடுக்கித் தன்பால் சேர்த்துக்கொள்ளும் அதிகாண்மைநிலை (ஆதிக்கம்) மேலோங்கியிருந்தது!

திருக்குறளில் “பழங்குடி" என்றவாறு ஓர் அருமையான சொல்லாட்சி பயிலப் பெற்றுள்ளது! (குறள்: 955:1) இப் “பழங்குடி" என்பதற்குத் "தொன்று தொட்டு வருகின்ற நற்குடி” என்றவாறு உரைவரைந்த பரிமேலழகப் பார்ப்பான் - "தொன்று தொட்டு வருதல்” என்பதற்கும் அடுத்துச் சேர்த்தவாறு பொருள் வரைந்துள்ளான்! “தொன்று தொட்டு வருதலாவது, சேர சோழ பாண்டியர் என்றாற் போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல் ஆகும்” என்னும் இப் பார்ப்பானின் உரைக் குறிப்பு ஆழ்ந்து கூர்ந்து கவனிக்கத் தக்க அருமை – சான்றதாகும்!

உலகப் படைப்பு, மாந்தன் படைப்புக்காலத்தினின்று மேம்பட்டு வரும் சேர, சோழ, பாண்டியர் என்னும் இதனுள்ளும் - இம் மூவேந்தர் ஆட்சிநிலையின் பண்டைப் பழம்பழைமையை நம்மால் - நன்கு தெளிவாகவுணர முடிகின்றது!

(வேய்தல் = அணிதல்; (அணிவித்தல்) (ஒப்புநோக்கு: கூரை வேய்தல் = கூரை அணிவித்தல்; கூரை இடுவித்தல், கூரை அமைத்தல்) வேய்ந்தோன் > வேய்ந்தன் > **வேந்தன் பூவகையொன்றை அணிந்தவன்**; **அடையாளப்பூ அணிந்தவன்.**)

அப் பண்டைக்காலத்தே போரிடும் போழ்து மூவேந்தரும் தத்தம் மார்பில் ஒவ்வொருவகை மரபு சான்ற மலர்மாலையை - அணிந்து கொண்டே போரிடுகின்ற வழக்கம் தொடர்ந்திருந்தது! அம் மலர்மாலை வகையைப் போர்க்காலத்தில் அணிந்து கொள்ளும் தன்மை காரணமாகவே 'வேந்தன்' என்னும் சிறப்புப் பெயர் தமிழில் தோன்றியிருந்தது!

ஈராயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கும் முன்னர்த் - தமிழக மூவேந்தர்களுள் - சேரனானவன் (வானவன்) போந்தைமாலையையும் - (பனம்பூமாலை) - பாண்டியனானவன் (வழுதி) வேப்பம்பூமாலையையும், சோழனானவன் (காவிரிநாடன்) ஆர் : ஆத்தி) மாலையையும் சூடிநின்ற காட்சியைத் தொல்காப்பியம் தெற்றெனக் காட்டியுள்ளமையையும் இவ்விடத்திற் கண்டு கருதிப் பார்க்கலாம். எதிர்நாட்டுப் பகைமன்னன் தங்களை இன்னின்னார் என்று அடையாளங்கண்டு கொள்ளவேண்டும் என்னும் இந்த முறைமைக்காக இதனைப் பண்டைய மூவேந்தரும் விடாப்பிடியாகக் கடைப்பிடித்ததாகவும் தொல்காப்பியம் நுட்பமாகக் குறிப்புக் காட்டியுள்ளது!

("..........உறுபகை வேந்து இடைதெரிதல் வேண்டி ஏந்து புகழ் போந்தே வேம்பே ஆர் என வரூஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும் (தொல்காப்பியம் - பொருள்: புறத்தினை: 63:2-5) (ஈராயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கும் முன்னர் முடியுடை

மூவேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர் மீமிகுந்த புகழ் உச்சியில் நின்றிருந்தார்கள் என்னும் வரலாற்றுண்மையை இம் மேற் சுட்டிய நூற்பாவினுள் வரும் "ஏந்து புகழ்" என்னும் சொற்றொடரும், மீமிகப் பெரிய படைவலிமையோடு ஒவ்வொருவரும் அரசாண்டு வந்தனர் என்னும் வரலாற்றுண்மையை இதனுள் வரும் "மாபெருந் தானையர்' என்னும் சொற்றொடரும் நமக்குத் தெளிவிக்கின்றன! வளமான பெரும்புகழுடைய நிலையில் இவர்கள் இருந்து கோலோச்சிய தகைமையை, "வண்புகழ் மூவர்" என்னும், இதே தொல்காப்பியச் சிறப்புச் சொற்றொடர் ஒன்று மற்றோரிடத்தில் நன்கு பதிவு செய்து வைக்கப் பெற்றுள்ளமையும் இவ்விடத்திற் கருதிப் பார்க்கலாகும். (காண்க: "வண்புகழ் மூவர், தண் பொழில் வரைப்பின் " தொல். பொருள். செய்யுள்: 75:3).

சேரர் - சோழர் - பாண்டியர் என்னும் மூவரும் பெருநில வேந்தர்களாகவும், மற்றைய குடிவழி ஆட்சியாளர்கள் பலரும் குறுநில மன்னர்களாகவும் தமிழக எல்லையில் ஆளுமை செய்து நின்ற காலத்தில் ஒவ்வொரு பெருநிலவேந்தனும் மற்றைய இரு பெருநில வேந்தர்களும் தனக்கு அடங்கி நடக்கவேண்டும் என்ற உள்அவா உந்துதல் உற்றவனாகவே வாழ்ந்திருக்கின்றான். அடிக்கடி, தத்தம் வலிமையை -- உரத்தைக் காட்டிக் கொள்ள ஒருவரோடொருவர் உரசிக் கொண்டனர். உட்பகை என்னும் வேண்டாப் பண்பு ஒவ்வொரு மட்வேந்தனின் மனக்குடிலிலும் குமுறிக் கொண்டிருந்தது.

தமிழினத்தின், தமிழ்நிலத்தின் வரலாற்றுப் பகுதிகளையும் வாழ்வியல் நடைமுறைக் கூறுகளையும், நாட்டின் பல்வேறு மூலை முடுக்குகளுக்கும் சென்று அலைந்து ஆழ்ந்து விளங்கிக் கொண்டிருந்த திருவள்ளுவப் பேராசான் "இத் தமிழினத்துக்குத் தலைவர்களாக இருந்த வேந்துப் பயல்களாகிய ஆட்சியாளர்கள் இத் தங்கத் தமிழ்க்குடியைத் தாம் தாம் கொண்டிருக்கும் உட்பகையுணர்ச்சி காரணமாக ஒருவரோடொருவர் உரம் பொருதிக் கொண்டு ஒட்டு மொத்தத் தமிழக்குடியையே படிப்படியே தேய்த்து உரசி வலிவிழக்கச் செய்கின்றார்கள்" என்றவாறு ஒரு குறள் வழியாக நொந்து நொடிந்து கூறும் அடிப்படையான இனநலிவுக்கான காரணச் செய்தியை

இவ்விடத்தில் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்!. அவர் கூறியுள்ள இக் குறுகிய குறட்பாச் செய்தி, இது!

"அரம்பொருதப் பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை யுற்ற குடி" (குறள்: 888)

இத் தமிழ்க்குடி, ஒரு பொன் குடி! தங்கக் குடி!..... அரத்தால் உரசப்பட்டு உரசப்பட்டுப் பொன் தேய்வது போல, இவர்களின் நெஞ்சகத்துள்ள உட்பகை என்னும் அரத்தால் ஒருவரோடொருவர் பொருது பொருது (சண்டையிட்டு சண்டையிட்டு) இப் பெருமைக்குரிய பண்டைப் பழம்பெரும் பாரிய நேரிய தண்டமிழ்க் குடியைப் படிப்படியே மெலிவித்து வலிவிழக்கச் செய்கின்றார்களே!, என்றவாறு, நெஞ்சஅவலம் மிகக் கதறுகின்றார், நம் வள்ளுவப் பெருந்தகை!...

ஆம்! அன்று, அவ் வேந்துப் பயல்கள் அனைவருக்கும் ஒரு தன்மை இருந்தது. "மற்றைய வேந்தர்கள், மன்னர்கள் ஆகிய எனைவரும் (அனைவரும்) தமக்குக் கீழ்ப்பட்டு - தம் வாய்மொழி கேட்டு - தம் ஏவல் எதுவெனக் கேட்டு - தாம் நடக்கின்ற வழி எதுவெனக் கண்டு அறிந்து - தமக்குப் பின் வந்து பணிந்து - தமக்குக் கீழ்ப் பணிந்து - தமக்கு வழி மொழிந்து -அடங்கியொடுங்கி நடக்க வேண்டும் என்றவாறான அதிகார மப்பும் ஆளுமை வெறியும் புகழ் வேட்கையும் செறிந்த மேலாண்மை வயா" என்னும் தன்மையே, அது... (சான்றுகள்: பட்டினப்பாலை: 274-282 **பொருநாராற்றுப்படை**: 133. **மதுரைக் காஞ்சி**: 144; 229, 773-774 **புறநானூறு** : 8:11:1 =4, 17: 31-32 **பதிற்றுப்பத்து**: 8:5, 4-5; 9:8:13; 9:10:6-8) (வயா : **வேட்கைப் பெருக்கம். (மேலுங்காண்க**: **"வயா" என் கிளவி வேட்கைப் பெருக்கம் (தொல், சொல், உரி**, 873**).**

பகை என்று வந்து விட்டால் உள்ளத்துள் சினத்தீ கிளர்ந்து எரியும் மனப்பாங்கு மரபு, இத் தமிழினத்துள் அன்றும் என்றும் இன்றும், உண்டு!

"கரிகால்வளவன்" என்றால், அவன் ஒரு **"பென்னம்பெரியபிடுங்கி" என்றவாறு வானளாவப் புகழ்ந்து**

பெருமையுற்று மகிழும் மடப்பான்மை, நம் தமிழரிடையே இன்றும் பொன்றாத ஒன்று! அன்னவனின் வண்டவாளங்களைக் கூர்ந்தெண்ணி நோக்கித் திறன் நிலை அளவிடும் ஆய்வியல் பார்வை நம்மிடம் நொம்பலப்பட்டுச் சாம்பியுள்ளமையே இதற்குக் காரணம். நமக்கு இது காறும் விண்டு விளக்கிய வரலாற்றியல் பெருமான்களில் பெரும்பாலரும், ஒரு பக்கத்துக்கு எதிர்பக்கமான மறுபக்கத்தை அப்படியே உள்ளது உள்ளவாறே துலக்கிக் காட்டாமல், கண்டு கொள்ளவிடாமல் கலக்கிவிட்டுச் சென்ற - செல்லுகின்ற தன்மையும் இதற்கு மற்றொரு காரணமாகும்.

பகையை அழிப்பது என்பதிலும் ஒரு வரைமுறை வேண்டாவா?!..... யாவற்றிலும் எல்லையற்று மீறும் மனப்பாங்கினர்களாகப் பண்டையில் இங்குத் தண்டேந்திய வேந்தர்கள் நடந்து கொண்ட இழிவினைகளிற் பல மறுபக்கத்தில் மறைந்திருப்பது தெரியும்போது நமக்கு நெஞ்செல்லாம் எரிந்து குமுறுகின்றது; தொண்டைத் தொளையில் அடைப்பே மண்டுகின்றது!

நம் தமிழமுன்னோன் அயலானிடம் போரிட்ட நிகழ்வுகள் என்பவை, மீமிகக் குறைவானவை! தத்தமக்குள்ளேயே கடித்து அடித்து நொடித்துக் கொண்ட - முட்டி மோதி முட்டி நெகிழ்ந்த - வெட்டிக் கொண்டு - நட்டுக் கொண்ட தத்தம் தமிழகச் செம்புலங்களையே சீர்குலைத்து, நொறுக்கியிடித்துத் தீய்த்துக் கருக்கிப் புகையெழுப்பிய நிகழ்வுகள் வரலாற்றுப்பகுதியுள் நிரம்பிய எண்ணிக்கையின.

பகையை அழிக்கப் படையோடு போகின்றான், கரிகால் வளவன். வழியிலிருந்த அப் பகைவனின் ஊர்களையெல்லாம் தீயிட்டுப் பொசுக்கிக் கொண்டே செல்லுகின்றான். தீப்பிழம்பு பேரளவிற் பற்றி எரியும்போது - அதற்கிடையே மாட்டிக்கொண்ட அவ்வூர் மக்களிற் சிலர் தத்தம் சுற்றத்தாரைக் கூவிக் கதறிக் கலங்கி அழுது அரற்றுகின்றார்கள்!

"கரிகால் பெருவளத்தானே! அவ் அலறல்கள் நிரம்பி கொடுமைக்கிடையில் அவ் அவலச் சூழ்நிலைகளுக்கிடையில் - கொள்ளையடிப்பதை பெரிதும் விரும்புகின்ற சிறப்புடையவனாக நீ

இருக்கின்றாய்" என்றவாறு கரிகாலனை நோக்கிக் கருங்குழலாதனார் என்னும் புலப்பிண்டனார் பூரித்துப் பாடுகின்றார். ("பகைவர் ஊர்சுடு விளக்கத்து அழுவிளிக் கம்பலை கொள்ளை மேவலை!" புறம்: 7:7:9), என்பது அப்பாடற் பகுதி!)

கரிகாலன் என்பவன் எவ்வளவு கடுங்கொடிய அரம்பப்பயலாக (Rowdy) ஈவிரக்கமற்ற கல்நெஞ்ச நாய்ப்பண்பினனாக இவ்விடத்திற் செயற்பட்டிருக்கின்றான் என்பது போலும் பல்வேறு செய்திகளையும் நாம் ஊன்றியறியத் தவறி விடுகின்றோம்!

இப்படி நம் தமிழ்நாட்டுப் பண்டைய ஆட்சியாளர்களாயிருந்த மன்னப்பயல்களில் மிகப்பலர் நிலங்கைப்பற்றல் வெறி, அதிகார வெறி, உரத்திமிர் போன்ற பல்வேறு காரணங்களால் தத்தமர்க்குள் முட்டிமோதி வெட்டிவீழ்த்தி வீண்பு செய்துகொண்டு நின்ற நிலைகளுக்கிடையில் பச்சையயலவர்களான பார்ப்பாரியர்கள் மீமெல்லிய ஒயிலோடு கூடிய படிப்படியான தொடர்வரவால் உரிய விழிப்புக்கான சூழலும் அமையவில்லை!

அன்றைய தமிழகத்துள் ஒவ்வொருவனுக்கென்றும் ஒவ்வொரு குறித்த மரச்செடியெடுத்து நட்டு வளர்த்துக்கொண்டு அதற்குக் காவல் போட்டுக் காத்துக் கொண்டு அது நம்மைக் காக்கின்ற மெய்யாம் மெய்யாந் தெய்வம் ஆகும் என்று அழுத்தமாகவும் வலிவாகவும் ஆழ்ந்து நம்பிக் கொண்டு மரபுபின்பற்றலிலேயே செறிய ஊன்றி நிற்கவும், அவனுக்கு எதிரியான பகை நாட்டு மன்னனோ அம் மரத்தை வெட்டிச் சிதைப்பதே தன் முதற்குறிக்கோள் என்னும் பெருவெறியோடு புகுந்து அதனை வெட்டி வீழ்த்தி வெற்றிக் களிப்புறுவதும் போன்ற பல்வேறு சிறுபிள்ளைத்தனமாக கடிமாவெட்டு விளையாட்டுக்களைப் பன்னூறு ஆண்டுக்கால அளவிடையில் அக்கால மன்னர்களில் மிகப்பலர் மிக நிரம்பிய அளவில் ஆடி மகிழ்ந்துள்ளனர். தமிழக உள்நாட்டுப்போர் வரலாற்றில் இவ் வினைவிளையாட்டுகள் பரந்துபட்ட காட்சிகளை-யுடையனவாயுள்ளன!

நம் தமிழில் தீயைக் குறித்துச் 'சேர்ந்தாரைக்கொல்லி' என்று சுட்டும் அழகிய மரபு வழக்கு ஒன்று உண்டு. "சினமென்னும் சேர்ந்தாரைக்கொல்லி' என்ற தொடரால் நம் வள்ளுவப்

பெருந்தெய்வம் இச் சொல்லாட்சியை மிக அருமையாகக் குறிப்பார். இச்சினமென்னும் தீ உள்ளத்தில் எரியத் தொடங்கி விட்டால் அச் சினம் கொண்டவனுக்குரிய இனமே அழிந்து போய்விடும்” என்பது அவர் தந்து நின்ற அருமைச்செய்தி (குறள்: 306)

"இனம்” என்பது என்ன தெரியுமா? இக்கட்டுக்காலத்தில் ஏற்பட்டுள்ள இடரினின்று தப்பித்து உய்வதற்குரிய ஏமப்புனை (Life - boat) ஆகும் என்பார், வள்ளுவர்! இச் சினத்தால் - அவ் “ஏமப்புனை" தீய்ந்து கருகி விடும் என்று எச்சரிக்கையும் செய்வார், அவர்!

சினம் மேற்கொண்ட நம் தமிழர்கள் அன்று எவ்வெவ்வாறெல்லாம் செயற்பட்டார்கள் என்பவற்றை அறிய வரலாற்றுள் நுழைந்து பார்க்கையில் நமக்குப் பெருவியப்பே ஏற்படுகின்றது! சினந்தோன்றிய பிறகு, எதிரியை அழிக்கப் புறப்பட்டு - முதற்கண் அவ் எதிரியின் நாட்டு நலவளங்களை - நில புலங்களை - குடியிருப்புகளை - மற்ற இருப்புகளை படிப்படியே தீயிட்டவாறே திரியலாயினர் நம் தமிழவர் என்கின்றது, நம் பண்டைய வரலாற்றுத் திரைக்கு அப்பாலான பதிவகம்!... அவற்றில் சில:

1. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பகைவர் நாட்டுக்கு நெருப்பு வைத்து அழித்தான்! (“நாடு கெட எரி பரப்பி" (மதுரைக் காஞ்சி: 126) (பகைவர் ஊர்களைச் சுட்டெரிப்பதால் ஏற்பட்ட புகையால் திசைகளெல்லாம் மறைந்தன! ("போர்சுடு கமழ்புகை மாதிரம் மறைப்ப” (பதிற்றுப்பத்து: 71:10)
2. நன்கு முற்றி விளைவுற்றிருந்த (கரும்பு) கருப்பங்காடான பகைவரது மருத நிலத்தை - ஒள்ளிய தீயூட்டி அழித்தான், “இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி! ("கரும்பல்லது காடறியாப் பெருந்தண்பணை பாழாக ஏம நன்னாடு ஒள்ளெரி யூட்டினை " (புறம்: 16:15-17)
3. முதற்கண் சுட்டிய அதே நெடுஞ்செழிய மடவன் (தயைாலங்கானத்துச் செருவென்ற கிறுக்கன்) பகைவருடைய

வளநிலத்தைத் தீயிட்டு அழித்து நாட்டையே காடாக்கினான்! சான்றோர் இருந்து அறிவு ஆய்ந்த மன்றங்களை (அம்பலங்களை) அழித்தான்! பெரிய மாளிகைகளுக்குத் தீயிட்டு அழித்தான் (காண்க: மதுரைக் காஞ்சி : 154-176).

4. பகைவர் மதிலை அழித்து விட்டு கழுதை ஏரால் அவ்விடத்தை உழுது வெள்ளை வரகும் கொள்ளும் விதைக்கும் மட்டித்தனமான மடவெறிப்பித்தியப் போக்கும் (பித்தியம் : பைத்தியம் - வடமொழி) மன்னர்களிடையே இருந்தது. வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி வெள்ளைவரகும் கொள்ளும் வித்தும்" (புறம்: 392: 9-10).

5. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் முட்டுக் கட்டையன் கழுதை நிரையைப் பூட்டி உழுது, பகைவரின் பெரிய அரண்களை அழித்தான் ("வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப் பாழ் செய்தனை அவர் நனந்தலை நல்லெயில்" புறம் : 15:1-3)

6. பகைவர் நாட்டிலிருந்த நன்னீர் நிறைந்தமைந்த காவற் பொய்களின் நீரில் களிறுகளை விட்டுக் கலக்கிச் சேறாக்கினான், இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி! (ஒளிறு மருப்பிற் களிறவர காப்புடை கயம் படியினை" (புறம்:15:9-10).

7. சேரன் செங்குட்டுவன் என்னும் வெறியன், பழையன் என்னும் பெயரிய குறுநில மன்னனாகிய பகைவன் ஊர்கள் யாவற்றையும் அழித்ததோடு அடங்கிவிடாமல் அவ்வூரிலிருந்த பெண்டிர் பலருடைய கூந்தல்களைப் பிடித்து அறுத்து அவற்றைக் கொண்டு கயிறு திரித்து அம் மயிர்க்கயிற்றால் யானைகளைச் சகடவொழுங்கில் கடாக்களாகப் பூட்டிப் பிணித்து ஓட்டினான்! ("பல்லிருங் கூந்தல் முரற்சியால் குஞ்சர வொழுகை பூட்டி" (பதிற்றுப்பத்து: பதிகம்: 5.16-17).

8. பகைவருடைய பல்லைப் பிடுங்கி, வெற்றிக்கு அடையாளக் குறியீடாகத் தம் கோட்டை வாயிலிற் பதிக்கும் வெறிவழக்கும் கூட அக்காலத் தமிழகத்துள் இருந்தது!

கோசர்கள் என்பார், அன்றைய தமிழகத்தின் ஒரு பகுதியில் ஊராட்சியாளர்களாக அமைந்திருந்தனர். அக் கோசர்களில், ஒரு கோசனுடைய செம்மண் புன்செய் நிலத்தில் (செஞ்செய்) பயிற்றல் கொடி தழைத்து வளர்ந்திருந்தது! அந் நிலத்தில் அன்னிமிஞிலி என்பாளின் தந்தைக்குச் சொந்தமான ஆ ஒன்று தப்பித் தவறிப் போய் நுழைந்து மேய்ந்து விட்டது. இது தான் நடந்தது!... கோசர் அவை கூட்டினர்! அன்னிமிஞிலியின் தந்தை, நிலத்துள் தன்னுடைய ஆவே நுழைந்தது என்று உண்மையை ஒத்துக் கொண்டார்! அவ்வுண்மையைக் கேட்டுச் சற்றும் மனமிரங்காமல் அவரின் கண்களைத் தோண்டியெடுத்து வெளியில் போட்டு விட்டார்கள், அக் கோசர்கள்! (இவ் வரலாற்றுச் செய்தி, அகநானூற்றுள் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது).

காண்க: 1 (அகம்: 196:9-10)

2. "பாசிலை அமன்ற பயறா புக்கென வாய்மொழித்

தந்தையைக் கண்களைந்து" (அகம்: 262:3-4)

ஆ (பசு) நிலத்தெல்லையில் நுழைந்து விட்டது என்பதற்குக் கூட அன்றைய ஆட்சியாளரால் ஒருவரின் கண்களைத் தோண்டியெடுத்துவிடக் கூடிய அளவுக்கு அதிகாரத் திமிர்க்கொழுப்பு கண்களை அடைத்திருந்த காட்சிகளையெல்லாம் உள்ளடக்கி இருந்தது இத்தமிழகம்!.

"செல்வதற்குரிய வழி" என்னும் பொருளும் உடைய ஒரு சொல், "ஆறு" என்பதாகும். (வரல் + ஆறு >) வரலாறு என்பது, வருகின்ற வழி என்றவாறு பொருள் பட்டு வழங்கும் அருமையான சொல்! (= History)

ஒரு வழியிற் செல்லும் வழிப்போக்கரைக் குறிப்பதற்கு, "ஆறுசெல்மாக்கள்" என்றவாறு பழைய வழக்கு ஒன்று - அன்று இருந்தது! (காண்க: “ஆறுசெல் மாக்கள் அறுத்த பிரண்டை" அகம்: 19:5). அவ் வழியிற் செல்லும் வழிப்போக்கர் அவ் வழிக்குப்

புதியவராய் இருந்தால் - அவரை "ஆறுசெல் வம்பலர்' என்பது பண்டைய வழக்கம்! ..(அகம்: 137:1-3, 175:1-6...)

காட்டு வழியிலும் - பாலை வழியிலும் - ஓர் ஊர்க்கும் மற்றோர் ஊர்க்கும் இடைப்பட்டிருந்த வழியிலும் - மலைப்பக்க வழியிலும் ஆக - அக்காலத்தில் சென்று கொண்டிருந்த இவ் ஆறுசெல் மாக்களும் (வழியிற்சென்ற மக்களும்) ஆறுசெல் வம்பலர்களும் (வழியிற் சென்ற புதியவர்களும்) அஞ்சியஞ்சியே குலைநடுங்கியவாறே செல்லவேண்டியிருந்தது!... (தமிழகத்தின் பல்லாயிரம் ஆண்டுக்கால வரலாற்றுப் பரப்பில் இந்நிலை - நிலை கொண்டிருந்தது...)

அப்படி வழியிற் சென்றவர்களுக்குக் கொடிய விலங்குகள் - கடு நஞ்சு வாய்ந்த உயிரிகளால் நேர்ந்த தொல்லைகளைவிட - கள்வர்களால் நேர்ந்த சள்ளைகளும் கொள்ளைகளும் கொலைபாடுகளும் - மிக மிக அளவிறந்தனவாயிருந்தன!

இவ் வழிப்பறிவினைக்கு "ஆறலைப்பு" என்பது பெயர்! (காண்க: மதுரை அகராதி). வழியிற் செல்வாரிடமிருந்து - அவர்கள் தம்முடன் கொண்டுவரும் பொருள்களைப் பறிப்பதற்காக - அங்குமிங்கும் அவர்களை அலறி அலையும்படிச் செய்து (கலைந்து ஓடும்படிச் செய்து) பிடித்துப் பறிக்கும் வினையைச் செய்யும் ஈவிரக்கமற்ற கள்வர்களுக்கு - அக்காலப் புலவர் பெருமக்கள் இலக்கியத்துள் பதிவு செய்து வைத்துள்ள அழகிய சிறப்புப் பெயர், "ஆறலை கள்வர்" என்பதாகும்! (காண்க:பொருநராற்றுப்படை:21-22).

(இக் காலத்தில் வழிப்பறி செய்யும் வினை ஆங்கொன்றும், ஈங்கொன்றுமாக நாளும் தொடர்ந்து நடக்கின்றது!... அதனினும் விஞ்சி இன்னொருவகைத் திருட்டும் பரவலாக நடக்கின்றது! (ஆங்கிலத்தில் Pick - Pocket என வழங்கும் – இச் சொல்லுக்கு நேரிணை சொல்லாக 'என் அகராதியுள்' பைப்பறி (=பைப்பறிஞன்) என்னும் ஒரு புதிய சொல்லாக்கத்தைப் பதிவு செய்துள்ளேன்.....) - "ஆறலை கள்வர்" என்னும் இவ் வழிப்பறித் திருடர்களாகிய

கள்வர்களுக்கும் - குடிமக்களை வாழ்விக்கவென்று தலைமைப் பொறுப்பேற்றிருந்த - பொறுப்பைப் பற்றியிருந்த - வழிவழியுரிமையாக வாய்த்திருந்த (கோப்பயல்களில் மிகப் பலர்...) அரசர்... வேந்தர்... மன்னர்களாகிய இம் முடிதாங்கிகளில் மிகப் பலரும் நாகரிகப் போர்வை போர்த்தியிருந்த நாடலை கள்வர்களாகவே விளங்கியமையை - நம் பழம் பேரிலக்கியங்களில் தோய்ந்து மிகப்பொறுமையாக - அவற்றை உற்று உள்நோக்கினால் மிகத் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியும்....

பிறனொருவனுக்கு உரிமையான - தனக்கு உரிமையல்லாத ஓர் உடைமையைத் தனக்கு வாய்த்த வலிவால் பற்றித் தனக்காக்கிக் கொள்ளும் கீழ்மை வினைக்குக் “கொள்ளை " என்பது பெயர்! (கொள் > கொள் + ள் + ஐ) கொள்ளை = பிறனின் பொருளைப் பற்றித் தனக்காக்கிக் கொள்ளும் வினை!

கொள்ளையடிப்பவரைக் கொள்ளையர் என்னும் சொல்லால் குறிப்பது, **பண்டைய வழக்கம்**! (**காண்க:அகம்**: 101:7-11). **கொள்ளை கொள்ளும் மாந்தர்**, “**கொள்ளை மாந்தர்" எனக் குறிக்கப்பெற்றனர்**! (**அகம்**:3:5-10)

(கரிகாற் பெருவளத்தான் என்னவாறு கொள்ளை கொள்ளும் கீழ்மைப் பண்பினன் என்பதனைக் கருங்குழலாதனார் கூற்றில் (புறம்:7:79) **கண்டோம்**!

கொள்ளையடிப்புக்கு மற்றுமொரு சிறப்புப் பெயர் - “கொண்டி" என்பதாகும். இச் சொல்லும் "கொள்" என்னும் வினையடியாகப் பிறந்த தொழிற் பெயரே! (கொள் > கொள்(கொண்) + தி > கொண்டி= கொள்ளை)

ஒற்றை மதில் சூழ்ந்த நாட்டையுடையவனாயிருந்தான், பெயர் தெரியவியலா ஒரு சிற்றரசப் பயல்!... இவனை, ஓர்எயில் மன்னன் (ஓரெயின் மன்னன்) என்ற சிறப்புப் பெயரால் மாத்திரம் பதிவுசெய்துள்ள குன்றூர்கிழார்மகனார் – என்னும் புலவர்- ஓர் அரிய செய்தியை உடன் கூறுகின்றார்! "அம் மன்னனுக்கு

மணப்பருவமெய்திய நிலையில் ஒரு மகள் உள்ளாள்! அவளுக்கு மணவேளையில் சீர்வரிசை செய்வதற்கென முன்னமேயே பெரும்பொருள்களைக் கொள்ளையடித்து வைத்துள்ளான்! தகுதியுள்ளவர்கள் போய் முட்டிப் பாருங்கள்!...." என்பது அவர்கூறும் செய்தி!...

அச் செய்தியுள் -, மணப்பருவம் எய்திச் சீரோடும் - கொள்ளையடித்து வைத்துள்ள மிகப்பெரும் செல்வத்தோடும் உள்ள அப் பெண்ணைக் குறித்தற்குப் "பெருஞ்சீர் அருங் கொண்டியள்!" என்றவாறு அருமையான அடைகள் அடுத்த சொற்றொடர் ஆட்சியையும் கையாளுகின்றார்! (கொண்டியள்=கொள்ளை கொண்ட செல்வத்தை உரிமையாகவுடையவள்.)

இக் கொண்டி, அதாவது இக் கொள்ளை, - அணிகலன், அருங்கலன் போலும் பொன், வயிரம், மணி முதலியனவாயும் இருக்கும்!... சில சமயங்களில் உணவுப் பொருளாகவும் இருக்கும்! கொள்ளையடித்த உணவுப் பொருளாக இருந்தால், - அதற்குக் கொண்டியுண்டி என்பது பெயர்!

இவ் வகையில்,- பகைவர் நாட்டுள் புகுந்து உணவுப் பொருள்களை - தவசங்களைக் (தானியங்களை) கொள்ளையடித்து வந்தவனாகிய தொண்டைமான் இளந்திரையனைப் பெருமைப்படுத்திக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப்படைச் செய்தி (பெரும்:454) இவ்விடத்தில் ஆழ்ந்து உடன் வைத்து எண்ணத்தக்கதாகும்!

கொள்ளையடிப்பதில் வல்லவராயிருந்த மறவர்கள் "கொண்டி மள்ளர்" என்றவாறு சிறப்பித்துச் சுட்டப்பெற்றனர்! (காண்க: பதிற்றுப்பத்து : 43:23-25)

தமிழ்நாட்டு எல்லை முழுவதையும் கொள்ளை கொள்ளும் விருப்பினனாகவும் - பகைவர் பொருள்களைக் கவர்வதில் தணிப்பருங் கடுந்திறலினனாகவும் "பாண்டியன் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறன்" என்பவன் விளங்கியதையும் - அவனின் பிள்ளைகளும்

இவ்வாறான தன்மையுடையவர்களாகவே கிடந்தனர் என்பதையும் - வடம வண்ணக்கன் பேரிசாத்தனார் என்னும் புலவர் புறப்பாட்டில் பதிவு செய்துள்ளமையும் (**புறம்**:198) -, **கடற்படையைப் பேரளவிற் கொண்டு** சென்று பகைவர் நாட்டின் மீது போர் தொடுத்துக் கொள்ளையடிக்கும் பெருந்திறத்தவனாக சோழநாட்டுப் பொருநன் “நலங்கிள்ளி" என்பவன் நடத்திய வரலாற்று மெய்க்காட்சிகளைக் கோவூர்கிழார் புறப்பாட்டில் பதிவு செய்துள்ளமையும் (புறம்:382:1-5)-, செல்வக் கடுங்கோ வாழியாதன் என்னும் சேரமன்னன் – பாண்டியனையும், சோழனையும் ஒரே வளைப்பில் வென்று பெருங்கொள்ளை கொண்டான் எனக் கபிலர் பதிற்றுப்பத்தினுள் பதிவு செய்து வைத்துள்ளமையும் (பதிற்றுப்பத்து 7:3:9-11)-, நம் மன்னர் பெருமக்கள் பலரும் கொள்ளையடிக்கும் திறப் பெருமை(!) வாய்ந்திருந்தனர் என்பதை ஒரு சோற்றுப்பதம் போலக் காட்டிநிற்கும் சான்றுகளாயிருத்தலை நாம் நன்கு ஆழ்ந்து எண்ணிப் பார்க்கவேண்டும்!

கொள்ளையடித்து வருதலில் – பொன், பொருள், உணவுப்பொருள் என்பவை மட்டுமல்லாமல் - சில சமயங்களில் பகையரசனுடைய மனைவி மார்களையும் கொள்ளைப் பொருள்களாக அடித்துக் கொண்டு வந்துவிடும் அறுவெறுக்கத்தக்க கீழ்மை வழக்கமொன்றும் அரசப்பயல்கள் சிலரிடம் இருந்தமையையும் அறிந்து நாணவேண்டியுள்ளது! போரிற் பிடித்துவரப்பெற்ற பகைவர் மனைவியரைக் குறித்துக் “கொண்டிமகளிர்" என்றவாறு சுட்டும் பட்டினப்பாலை ஆட்சி, இப் பாழ்ச்சிவினை நிகழ்ந்தமையைக் காட்சியாய் நிறுத்திக் காட்டுகின்றது! (சான்று: கொண்டி மகளிர் உண்டுறை மூழ்கி (பட்டினப்பாலை:246)

கொள்ளையடித்துக் கொண்டு வருதல் என்பது அன்றைய அரசர் வினைபாடுகளுள் - ஒரு அடிப்பட்ட நடைமுறை!... அதில் மற்றுமொரு நாகரிக நடைமுறையும் உடனிருந்தது! பகைவர் நாட்டைக் கைப்பற்றுகையில் - அல்லது கைப்பற்ற முனைகையில் எதிராளியரான அப் பகைவர் மிகவும் பணிந்து "ஆட்சி மட்டும்

என்னிடமே இருக்கட்டும்! ஒரு பெருங்கணத் தொகைப்பொருளைத் தங்களுக்குத் தந்துவிடுகின்றேன்" என்றவாறு ஒப்பந்த முறையிலாகப் - போர்க்கு வந்த அரசனிடம் அடக்கவொடுக்கமாகப் பேசி அளிக்கப்பெறும் ஈட்டுத் தொகைக்குத் "திறை" என்னும் பரவலாக வழக்குச் சொல்லொன்று வழங்கியது!

"திறை" என்பதுவும் கொள்ளை வகையைச் சார்ந்ததுதான்!... ஆனால், கொள்ளை போலும் கடுங்கொடுமை வாய்ந்திராத ஒருவகை நாகரிக நடைமுறைத் தன்மையை இது கொண்டிருந்தது! "திறை" என்பதற்குரிய மக்கள் வழக்குச்சொல் “கப்பம்' என்பதாகும். அரசர்க்குத் திறை செலுத்துதலைத் குறிக்கக் "கப்பங்கட்டுதல்" என்றவாறான வழக்குச் சொல்லை அடிப்படை மக்கள் தொடர்ந்து வழங்கினர்! (அதன் பயில்பு இன்றும் தொடர்கின்றது!...)

'திரு" என்னும் திரட்சிக் கருத்து அடிச்சொல்லுக்குத் "திரண்டசெல்வம்" என்பது பொருள்! (ஒப்பு நோக்குக: திரு > திரு + அள் > திறள் = திரட்சியுரு; திரட்சி) (மேலுங்காண்க: திரள்+சி > திரட்சி). திரண்டு கவர்ந்திழுக்கும் அழகுக்குத் "திரு" என்பதுவும் மற்றொரு வளர்ச்சிப் பொருளாயிருத்தலை இவ்விடத்தில் கருதிப் பார்த்தல் வேண்டும்!)

(திரு > திரு + ஐ > திரை = திரண்ட செல்வத் தொகுதி) திரிந்து வளைந்து சுருண்டு வீழ்வதாகிய கடல் அலையைக் குறிக்கும் மற்றொரு பரந்துபட்ட வழக்குச் சொல்லொடு மயக்கப்பொருள் நேராதவாறு "திரை” என்றவாறு திரண்ட செல்வத்தைக் குறித்து வழங்கிய இச் சொல்லை (திரை>) திறை என்றவாறு (இடையின ரகரத்தை -வல்லின றகரமாக வலித்தொலித்து) மாற்றி நிலைநிறுத்தியுள்ளனர், நம் திறப்புலவர் பெருமக்கள்!....)

திறை = பகையரசரிடமிருந்து ஈடாகப் பெறப்படும் திரண்ட பெருஞ் செல்வத்தொகுதி; கப்பம்.

திறை வாங்குகிறவனுக்குத் "திறையன்" என்பது பெயர்! (காண்க: "முனைகவர்ந்து கொண்ட திறையர் வினை முடித்து"

(முல்லைப்பாட்டு:18-19) திறைப்பொருளை அடைவதற்கெனப் போர்தொடுக்கும் முயற்சியைக் குறித்துத் "திறைதருமுயற்சி" என்றொரு சொற்றொடராட்சி இலக்கியத்தில் பதிவுற்றுள்ளமையும் இவ்விடத்திற் கருதுதற்குரியது! (காண்க: ஐங்குறுநூறு: 452:3). எந்த எந்த நிலைகளுக்கெல்லாம் எந்த எந்த அளவுக்குத் திறை கொடுக்கப்பெறுதல் வேண்டும் என்றவாறெல்லாம் துறை வகுத்துக்கொண்டு (கூறுபாடுகள் வைத்துக் கொண்டு) திறைக் கொள்ளைகளை அடித்து அமர்க்களப்படுத்தினர், - அன்றைய அரசர்கள்!... திறை கொள்ளும் கூறுபாடுகள் பற்றிக் குறிக்கும் அன்றைய கூட்டுத் தனிச் சிறப்புச் சொல், "திறைதுறை" என்பது! (காண்க: பொருநராற்றுப்படை:119-120).

அன்றைய அரசப் பயல்களிற் பெரும்பாலரும் தத்தமக்குரிய அரசாட்சி எல்லைப்பரப்பை ஒட்டியிருந்த அல்லது சற்றே எட்டியிருந்த குறுநில மன்னர்கள் பெரும்பாலரையும் தத்தம்மின் பெரும்படை வலிவோடு முற்றுகையிட்டு அல்லது போரிட்டுப் பணியப்பண்ணித் திறைகொண்டு கொழுத்தவாறு ஆங்காங்கும் அலம்பல் ஆடி ஆர்த்தனர்!

தமிழக முழுப் பரப்பெல்லையையும் இவ்வாறு தம் அரசுக்கு அடிப்படுத்தியாளத் துடித்த மனவெழுச்சியே அரசப்பயல்கள் பலருக்கும் அவ்வக்காலங்களில் இருந்தது! புகழ்பாடுந் தொழில் வல்லவராயிருந்த புலவர் பெருமக்களிற் சிலர், அரசர்களின் இவ்வகை உணர்ச்சியெழுச்சிக்கெனத் திரிதூண்டி நெய்யூற்றி எரிகூட்டி அவ் வெவ்வெரியில் குளிர்காய்ந்து கொண்டதோடு - தம்மின் தமரின் - (தம்மவரின்) வயிறுகளை ஈரப்படுத்தியுங்கொண்டனர்!

"சினப்போர் வழுதி தண்டமிழ் பொதுவெனப் பொறா அன்போரெதிர்ந்து" என்றவாறு புறப்பாட்டு 51 - இல், ஐயூர் முடவனார் அவர்களால் குறிக்கப்பெற்றுள்ள வரி (புறம்:51:4-5), தண்தமிழ்நாடு அரசர் பலர்க்குமாகத் தனித்தனியே உரிமையாயிருந்து பொதுப்பட்ட ஒன்றாய் இருப்பதைத் தாங்கமாட்டாதவனாக "மாறன்வழுதி" என்னும் பாண்டியன் இருந்தான் என்பதைச் சுட்டும் வரலாற்று வரியாகும்! இது ஒரு சோற்றுப் பதமான சான்று! ஆண்ட

மடமன்னர் மிகப் பலர்க்கும் இவ்வகை மனநிலை பொதுப்பட்ட வேட்கை நிலையாகவே இருந்தது! இதற்கான முயற்சிகளுள் ஒன்றே, திறைகவரும் கொள்ளைக் கூத்தாகும்!

இத் தமிழக எல்லையைத் தாண்டியும் பெரும்படையெடுத்துச் சென்று அவ்விடத்தும் மிக்க திறைகளைக் கொள்ளுதல் வேண்டும் என்னும்படியான வெறிவீறு - அன்றைய தமிழ்மன்னர் பலரின் நெஞ்சக்களங்களிலும் தாண்டவமாடியது!....

"கரிகால் வளவன், சேரன் செங்குட்டுவன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், முதற் குலோத்துங்கன் முதலிய பேரரசர் பிற நாடுகளை வென்று கொண்ட கொண்டியும் திறையும் கொஞ்சநஞ்சமல்ல!" என்பார், மொழி ஞாயிறு - ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் ! (காண்க: பழந்தமிழாட்சி: பக்:78).

சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையும் (புறம்: 22: 26) - அதியமான் நெடுமான் அஞ்சியும் (புறம்:97:20) - கொண்கானங்கிழானும் (புறம்:156:6)- சேரமான் சிக்கற்பள்ளி துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியாதனும் (புறம்:387:12-13)-(பதிற்றுப்பத்து:62:11-19) - இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் (பதிற்றுப்பத்து:17:2-3)- ஆடு கோட்பாட்டுச் சேரலாதனும் (பதிற்றுப்பத்து:53:2-3) (மே.கா:பதி. பத்து:59:21) தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும் பொறையும் (பதிற்றுப்பத்து:71:23-24) (80:10-11)- கரிகால் வளவனும் (பொருநராற்றுப்படை:120) பாண்டியனுக்குப் படைத்தலைவனாயிருந்த "பண்ணி " என்பானும் (அகம்:13:2), இந்நாகரிகக் கொள்ளைப் பணிகளில் பெரிதும் ஈடுபட்டிருந்த அன்றைய வரலாற்றுச் செய்திகளைக் கழக இலக்கியங்களிற் பரவலாகக் காணலாகும்! (வரலாற்றுச் செய்திகளை முறையாகப் பேணிக் காத்துவைக்கும் பண்பும் பழக்கமும் நந்தமிழர்க்கு இல்லாமையால் - முழுப் பட்டியலும் நமக்குக் கிடைத்தற்கான வாய்ப்பிழந்துவிட்டோம்!...)

இமயவரம்பன் சேரலாதன்,- வடபுலம் சென்று பகையரசர்களைப் பணிவித்து அவர்கள் தந்த திறைப்பொருள்களை

வாரிக் கட்டித் தூக்கிக்கொண்டு வந்த செய்தியொன்றை - அக்கால அகநானூற்றுப் பாடல் இவ்வாறு காட்சிப் படுத்துகின்றது!.... ("நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார், பணிதிறை தந்த பாடுசால் நன்கலம், பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல், ஒன்றுவாய் நிறையக் குவை இ....." (அகம்: 127:6-9)

"அவ் வடநாட்டிலே தன் பகைவர், தன்னைப் பணிந்து கொடுத்த, பெருமை மிக்க அழகிய அணிகலன்களையும் - பொன்னாற் செய்த பாவைகளையும் - வயிரம் முதலிய மணிகளையும் உள்ளிட்ட பொருள்களையெல்லாம் - "மாந்தை" என்னும் தனது தலைநகரின்கண் தன் நல்ல (பெரிய) அரண்மனை முற்றத்திலே இடமெல்லாம் நிறையும்படி குவித்துவைத்தான்!...." என்பது அக் காட்சி.....

கற்பனைக்கே எட்டாத - எண்ணிக்கையுள்ளும் அடக்கிவிட முடியாத கொண்டிகளும் (கொள்ளைகளும்) திறைகளும் (நயநாகரிகமான கொள்ளைகளும்) அன்றைய அரசர்களால் அடிக்கடிப் பெற்றுத் தமிழகமே தூள்கிளம்பிய மண்டிலமாயிருந்தது! (மேலும் விளக்கங்கள் விரும்பின் - கீழ் குறித்துள்ள பாடற்குறிப்புச் சான்றுகளையும் உடன் சேர்த்துவைத்துக்கொண்டு படிப்படியே உண்மைகள் கண்டு உள்ளெரிந்து நோகலாம்!.... (அகம்: 84: 14-17, 124:1-2, 334:3, 13:2, 44:12, - புறம்: 22:26-27, 97:18-21, 387:12- மதுரைக் காஞ்சி:230 - பதிற்றுப்பத்து:17: 2-3, 53:1-2, 66:7-8.)

எப்படிப்பட்ட மனத்தன்மை கொண்டவராயிருந்து - இத் திறை கொள்ளுதல் என்னும் நயநாகரிகமான கொள்ளையை நம் பண்டைய கடுங்கொடு மன்னர்கள் நிகழ்த்திச் செழித்துக் கொழித்தார்கள் என்பதை அறிய வேண்டுமானால் - அரிசில்கிழார் என்னும் புலவர் பெருமானின் அழகு மிளிரும் ஈரரிய வரிகளை மேலோட்டமாகப் பார்த்தாலே - மிக விளக்கமாகி விடும்!

பெருஞ்சேரல் இரும்பொறையை வியந்து புகழ்கின்றார், ஒரு பாட்டில்!... அவனுக்கு இணையாக ஓர் உவமையையும் சுட்டுகின்றார்! ஈடிணையற்ற உவமை, இது! “திறை கொள்ளுஞ் செயலில், இவ்

இரும்பொறையன் - ஒருபேய்!" - என்பதே அவர்கூறும் அரிய உவமைச் செய்தி! அவரின் வரிகளாவன : "பலி கொண்டு பெயரும் பாசம் போலத் திறை கொண்டு பெயர்தி வாழ்க!" (பதிற்றுப்பத்து: 71: 23-24)":தன்னால் பற்றப் பட்டாரது உயிரைக் (கொல்லாமல்) கொள்ளாமல் தனக்கு இட்ட பலியை மட்டும் ஏற்றுக்கொண்டு நீங்கும் பேய் போலத் திறையைக் கொண்டு நீ மீண்டு செல்கின்றாய்!" (இரும்பொறைப்பயலே!) என்கிறார், அரிசில்கிழார்!..

இப்படித்தான் - இவ்வகையில்தான் - நம் பேய்ப்பயல்களாகிய மன்னர்குடியினர் கொள்ளையான கொள்ளைகளைத் திறம்பட அடித்து ஓங்கிய வாழ்க்கை (!) தாங்கியிருந்தனர்!...

தஞ்சைப் பெருவுடையார் கோயிலுள் (இத் தமிழ்ச் சொல்லையும் பிருகத்ஈசுவரர் ஆக்கி நாசப்படுத்திவிட்டான், பார்ப்பான்!...) திருத்தொண்டு செய்வதற்கு என, - நானூறு (400) தேவரடியாள்களுக்கு (இன்றைய வழக்கில் சுட்ட வேண்டுவதானால்..... தேவடியாள்களுக்கு!......) தனித் தனியே வீடுகளை அவற்றில் அமைத்து (சின்னவீடுகளாக அல்ல!... பெரிய வீடுகளாகவே!..) பெருங்கடமை கிழித்தான் இராசராசசோழன் என்றவாறு தஞ்சாவூர் கோயில் கல்வெட்டு ஒன்று கூறுகின்ற அவல வரலாற்றுச் செய்தியை இத்துடன் சேர்த்துச் சிந்தியுங்கள்!... (சான்று:தென்னிந்தியக் கல்வெட்டு: S.I.I.II எண் : 66.)

இப்படியெல்லாம் ஆட்டம் போடவைக்கவும் - தானும் சேர்ந்து கூட்டம் போட்டு ஆடவும் - முற்படியிற் சொன்னபடியான, கொள்ளையும் - கொண்டியும் - திறையும் அடித்துப் பறித்தலை - அன்றைய மன்னர்குடி மாக்கள் அல்லது கோக்கள் கடமையாகக் கொண்டிருந்தால்தானே - முடியும்?!... எனவே, - எல்லா முடி (!) மன்னரும் இதில் முடிந்த முடிபான கொள்ளையடிப்புக் கருத்தில் ஒன்றுபட்ட நெஞ்சினராய் ஒத்துக் கிடந்தார்கள்....

இறை : அரசன்

"ஈர்" என்னும் பெருமைப்பொருள் தரும் - பகுதிச்சொல், ஈர்>சீர் என்றவாறு ஆக்கம் பெற்றது. சீர் + த் + தி > சீர்த்தி என்னும் சொல்லுக்குப் பெருமைமிக்க புகழ் என்பது பொருள், (காண்க: "சீர்த்தி மிகு புகழ்" தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - உரியியல் 15) ஒலியியல்–திரிபால், சீர்த்தி என்பது கீர்த்தி என்று ஆனது.

(ஒ.நோ: சேரலன் > கேரளன், செம்பு > கெம்பு, செழு > கெழு.)

ஈர் > ஈரு > இரு = பெருமை (ஒ.நோ: மாயிரு ஞாலம்" (குறள். 999) இரு > இறு. இறுவரை= பெரிய மலை. (புறப்பொருள் வெண்பாமாலை 726) இறு>இற = மிக்கிரு; பெருமையுரு. (இறந்த கற்பினாட்டு கலி:9). இற+ப்+பு > இறப்பு = உயர்ந்த பொருள், இறப்பு = மிகுதி, இறு+ஐ > இறை = உயரம் (புறம்: 11: 27) இறை = உயர்ந்தோன் (தொல். பொருள். 256). (திவாகரம், இறை=தலைவன் (திவாகரம்) மேம்பட்ட தெய்வம், "இறை" எனப்பெற்றது. (ஒ.நோ. பரம்பொருள்) குடிகளுக்குக் காவலனாக - மேம்பட்டிருந்த பெருமைக்குரியவன் இறை எனப் பெற்றான். (காண்க: "இறைகாக்கும் வையகமெல்லாம் - குறள்: 547)

குடிகள் அனைவர்க்கும் தலைவனாய் மேம்பட்டிருந்ததால், இறை (இறையன், இறைவன்) எனப் பெற்றான். இச்சொல், தனி!...

இறை: வரி

"இறு" வளைவுக் கருத்துப் பகுதிச்சொல். இறு > இறை= இறவாணம்; இறவாரம் "குறியிறைக் குரம்பை" (புறம்:129). - இறை > இறைஞ்சு = வளை; வணங்கு. இறைஞ்சுதல்= வணங்குதல். ("எழிலார் கழலிறைஞ்சி" (திருவாசகம்: 1:21). அரச கருமங்களுக்குத் தேவைப்படுவதாகிய பொருளுக்காகக் - குடியானவன், தன் உடைமைகளில் - தான் உண்டாக்கும் விளைச்சல்களில் ஓர் அளவுப் பகுதிப்பொருளை இறையாகிய அரசனுக்கு முன்னர்ப் பணிந்து - இறைஞ்சிச் செலுத்தப்பெற்ற வரிக்கு "இறை" என்றே பெயர்

குறிக்கப்பெற்றது! (காண்க: “இறைவற்கு இறையொருங்கு நேர்வது - நாடு" (குறள்; 753)

ஈர் இறைக்கும் குழப்பமும் மயக்கமும், ஏற்படாதிருக்க, இவ் இறை (வரி) அரசிறை - (அரசு-இறை) என்றும் சுட்டப்பெற்றது. (காண்க: அரசிறை=இறை (திவாகரம்).

வரி என்னும் பொருள் தரும் “இறை" வேறு... அரசன் என்னும் பொருள்தரும் “இறை”, - வேறு! இரண்டும் வேறு வேறு மூலப்பொருள் வழியே தோன்றியவை! அரசனுக்கு இறையாகச் செலுத்துவதற்கு என்று, வரையறைப்படுத்திய அளவுப் பொருளுக்கு "வரி" என்பது பெயர். அனைத்து வகையான இறைமுறைகளுக்கும், இவ் வரி" என்பது பொதுப்பெயராகும்.

"யா" என்பது, “கட்டு" என்னும் பொருள் அடிப்படையிலான வினைவேரடிச் சொல்லாகும். (யா > யா+ அம் > யாயம் > ஆயம்) ‘ஆயம் என்பது கட்டப்பெற வேண்டியதாகிய வரி' என்னும் பொருட்பட்டதாகும். கட்ட வேண்டிய வரியே (கட்டு+ஆயம்)> "கட்டாயம்" எனப்பெற்றது. இது, கட்டாயமாகக் கட்ட வேண்டியது என்னும் பொருள்வலிவும் பெற்றமையைக் “கட்டாயம்" என்னும் கடமையுறுதியைச் சுட்டும் சொற்பொருள் வளர்ச்சி தெளிவுறக் காட்டும்!

கட்டப்பெற்றே தீர்க்க வேண்டிய ஒன்றாதலால் - இவ் "வரி”, "கடம்" என்றும் “கடன்" என்றும் பல வடிவங்களில் குறிக்கப்பெற்றன! வரியாகக் கொடுக்கப்பெற வேண்டிய பகுதியளவு - பகுதி என்ற சொல்வழியாலும் சுட்டப்பெற்றது!

அரசியல் வினைச்செலவுகளுக்கென்று அக்கால அரசர்களும் இடைக்கால அரசர்களும் பிற்கால அரசர்களும் பலவகைகளில் - பல முறைகளில் - பலநிலைகளில் - பலபெயர்களில் வரியீட்டினார்கள்!.... அவர்கள் வாங்கிய (அல்லது கொள்ளை (!) கொண்ட) அவ் வரியீட்டு வகைகளாகக் கல்வெட்டுக்கள் வழியேயும் ஆவணங்கள் சிலவற்றின் வழியேயும் நாம் தெரிந்துகொள்ளக் கூடியவை, இவை!...

வரி வகைகள்:

அங்காடிப் பாட்டம், (அங்காடிக் கூலி), அச்சுவரி, அட்டுக்கிறை, அடிகாசு, அடிமைக்காசு, அணியிடுவான் வரி, அதிகரணத் தண்டம், அதிகாரப் பேறு, (அதிகாரப்பொன்), அரிகொழி, அரிநட்டி, அரிவாட் பதக்கு, அருந்தோடு, அரைக்கால்வாசி, அழகெருது, அழகெருதுக் காட்சிக்காசு (காட்சியெருதுக் காசு), அமுகற்சரக்கு, அள்ளுக்காக, அளியிடுவான்வரி, ஆண்டெழுத்துத் தேவை, ஆற்றிறைபாட்டம், ஆதிரைப் பிள்ளையார் நோன்பு, ஆள்நெய், ஆற்றுக் குலை, ஆற்றுப்பாட்டம், இடைப்பாட்டம் (இடைவரி), இருபீதக்கட்டி, இறைகாவல், இறைச்சோறு, இனவரி (இனக்காசு) ஈழப்புன்செய் (ஈழப்பூட்சி) - ஈழற்கடி வரி, உகப்பார்பொன் (உகவைப்பொன்), உப்பாயப் (உப்புக்காசு (உப்புக்கோச்செய்கை), உரல்வரி - உல்லியக்கூலி, உலாவுகாட்சி.

உவச்சவரி, உழுதான்குடி - உள்வரி, உறுபாதை உறுவுகோல், நிலன் காசு - ஊசிவாசி, ஊற்றைப்பாட்டம். ஊர்க் கணக்கர் விதம்) ஊர்க்கலணை (ஊர்க்கழஞ்சி), ஊர்ச்சரிகை ஊராட்சி, ஊரிடுவரிப்பாடு ஊரெட்டு, எள் கடமை (எட்கடமை) (எக்கடமை) எடுத்துக் கொட்டி, எடைவரி, எருமைப்பொன், எழுவை, ஏணிக்காணம், ஏர்க்காடி (ஏர்ப்பொன், - ஏர்க்காணிக்கை),, ஏரியாயம், ஏல்வை , - ஒட்டிதற் கடமை, ஓட்டச்சு, ஓடக்கூலி, கடையடைக்காய், கடையிறை, கண்காணி, கண்காணிக் கணக்கர் முதல், கண்கூலி, கலியாணக் காணம் (கண்ணாலக் காணம்) (மணவரி), கண்ணேட்டுக் காணம், (கண்ணிட்டுக் காணம்), கணக்கப்பேறு, (கணக்கிலக்கை), கதிர்க்காணம், கருவூலவரி, காட்டாள்காசு, காணவட்டம், காணிவெட்டி, காலத்தேவை, காவல்பரப்பு, (காவற்பேறு), கீழ்வாரப் பச்சை, குயக்காணம், குடநாழிக் குடிமை, (குடிக்காசு, குடிக்காணம், குடியிறை), குதிரைவரி, குமரக்கச்சாணம், குலைவெட்டி, கூலம், கூற்று நெல், கெடுபாதை, கேள்வி மகமை, கைக்கணக்கு முதல், கையேற்பு,

கொடிக் கடமை, கொட்டைக்கூலி, கோள் நிறை கூலி, (சண்டாளப்பேறு), சாட்டுவரி, சிறுபாடிகாவல், சூலவரி, (சூலவரிப்பொன்), செக்கிறை, செக்கு மன்றாடி, செங்கொடிக்காணம், சென்னீர்ப்பெட்டி, சென்னீரமஞ்சி, சோறுமாடு, தட்டடுவு, தட்டாரப்பாட்டம், (தட்டுக்காயம், தட்டொலி), தடிப்பதக்கு, தண்டல் மேனி, (தண்டவிலக்கை) (தண்டற்கடமை), தண்டநாயகர் மகமை, தண்டாளர்முதல், தரகு (தரகுபாட்டும்), தாள்பிடியரிசி (தாட்பிடியரிசி>தாப்பிடியரிசி), - திருமுன் காட்சி, திருமுகக்காணம், திங்கட் சோறு, திங்கள் நெய், திங்கள் மோகம், திரைக்காசு, துலாக்கூலி, (துலாபாரவரி), தேவகுடிமை, தோணிக்கடமை, தேரரணக் காணிக்கை, தோலொட்டு, நத்தவரி, நல்லா (நற்பசு), நல்லாடு, நல்லெருது, நல்லெருமை, நற்கிடா, நாட்டுக் காணிக்கை (நாட்டு வரி), நாட்டுபாதி, நாடு காவல், நிலக்காணிக்கை, நீர்க்கூலி, நீர்நிலக்காசு, - நெட்டாள், நெய்விலை, பச்சைப்பணம், பஞ்சுப் பீலி, பட்டடைவரி, பட்டிக்காடி, பட்டிக்கால், பட்டிகைக் காணம், பட்டித் தண்டம் (பட்டிப்பொன்), பட்டோலைக் காசு, படாங்கழி, படைப்பணம் (படையிலார் முறைமை), பண் குறுணி, பண்டவெட்டி, பண்ணிக்கூலி, பணவாசி, பணிக்கொத்து, பதுவாரம், பறைத்தறி, பறையிறை, பண்மை , பாசிப்பாட்டம், பாடிகாவல், புத்தகம், புதா நாழி கட (புறக்கலனை), புறம்பு, பேர்க்கடமைப்பேர்வரி, பொற்பூ, பொன்வரி, மண்மதில், மதில் தேவை, மந்தைப்பணம், மரமச்சாதிவிலை, மனைப்பணம், மாட்டுக்கறை, மாழைக்கூலி (மாடைக் கூலி), மாதப்படி, மாப்பட்டடை, மாப்பணம், மாப்பதக்கு, மாமகம், மாவிறை, முத்தாவணம், முதற்றிரமம், முப்பற முந்நாழி, முழவரிசை, முன்னிடும்பணம், மேராழி, வகைப்பேறு, வட்டிநாழி, வண்ணாரப்பாட்டம், (வண்ணாரப்பாறை), வலங்கை- யிட்ங்கை மகன்மை, வழிநடைக்கிடும்பணம், வாசல்பணம் (வாசல்பேறு), வாடாக்கடமை, வாய்க்கால் பாட்டம், வாரக்காணம், விடைப்பேர்,

வீட்டுத்தேவை, வீரசேவை, வெட்டி வெட்டிக்காசு, வெட்டிப்பாட்டம், வெட்டிவரி), வெள்ளாண்வெட்டி, வெள்ளி வாரி, வேண்டுகோள்வரி, வேய்நெல், வேலிக்காசு, மடக்கு வரி..... (சான்று: பழந்தமிழாட்சி மொழிஞாயிறு - பாவாணர்).

வாங்கப் பெற்ற வரிவகைகளுள் சில இவை.... என்பதை எண்ணிப்பார்க்கையில் - அக்கால மக்கள் எவ்வளவு கொடிய மனவிக்கட்டுகளுக்கும் - உளத்துயரங்களுக்கும் வாழ்வியல் இடர்ப்பாடுகளுக்கும் ஆட்பட்டிருப்பார்கள் என்பதை நன்கு உணர முடிகின்றது!

வரிகள் பலவும் ஈராயிரம் ஆண்டுகட்கும் முன்னீடாகப் - பெரும்பாலும் கூலக்குவியல்களாகவே கொள்ளப்பெற்றன. அரசனுடைய அரண்மனைகளிலும் கோயில்களிலும் வரிப்பொருளாகக் கொள்ளப் பெற்ற நெற்குவியல்களைக் கொட்டிக் காத்துவைக்க மீமிகப்பெரிய களஞ்சியங்களை –பேரறைகளைக் கட்டிவைத்திருந்தார்கள்! ஒரு களஞ்சியத்திற்கு "இறையாயிரங்கொண்டான்" - என்றே பெயர் வழங்கியுள்ளது!

(இறு>இறை= கைவிரல்களின் இடைமடக்குப் பகுதி; கைவிரல் மடக்குப் பகுதி வரிகள், - இரண்டிற்கு இடையேயான பகுதியளவு... "அங்குலம்" (inch) என்று வழங்கும் சமற்கிருதச் சொற்பொருளுக்கு ஓரளவில் சமனான - இவ் அளவுப்பகுதியே இவ் "இறை" குறிக்கும் அளவுப் பகுதியாகும்.) ஓர் இறை கன அளவுக்கு 1000 - கலம் நெல் கொள்ளக் கூடிய அமைவில் - உருவாக்கப் பெற்ற - களஞ்சியமே – 'இவ் இறையாயிரங் கொண்டான்' என்பதாகும்.. திருவரங்கக் கோயிலிலும் (சிரீரங்கம்), - இராமநாதபுரம் அரண்மணையிலும் உள்ள களஞ்சியங்கள் இறையாயிரங்கொண்டானுக்கு இன்றும் சான்று பகர்வன ஆகும்.

நிலங்களுக்கெனக் கட்டாயமான வரி கட்டளையிடப் பெற்றிருந்தது. இது செய்க்கடன். செய்க்கடன், "காணிக்கடன்" என்ற பெயராலும் வழங்கப்பெற்றது! விளைநிலம் நன்கு விளையாமையைச்

சுட்டிக் காட்டி அதற்கெனக் கிள்ளிவளவனிடம் வெள்ளைக்குடிநாகனார் வரிவிலக்கு வேண்டிய புறநானூற்றுச் செய்தி இவ்விடத்திற் கருதத்தக்கதாகும்.

அறக்கட்டளைக்கென விடப்பெற்ற நிலங்கள் மட்டுமே பண்டையில் வரிவிலக்குகள் பெற்றன! வரி நீக்கப்பெற்ற நிலத்திற்கு “இறையிலி” (இறை+இலி(=இல்லாதது) என்பது பெயர். (காண்க: “அறத்திற்கு விட்ட இறையிலி நிலங்களும்” (சீவகசிந்தாமணி: 76. உரை). வரி விலக்குதல் என்னும் பொருளில் - இறையிழித்துதல் (தென்னிந்தியக் கல்வெட்டு S.I.1:111:4), இறையிழிச்சுதல் (S.1.1:111:6), இறைவிழுத்துதல் (S.I.I:111:80), முதலிய சொற்கள் இடைக்காலத்தில் வழக்கிலிருந்தன.

பொருள்களை விலைகூவி விற்கும் சந்தை, அங்காடி, தெரு, திருவிழா முதலியவற்றில் விற்பனை செய்த சில்லறைக் கடைகட்கெல்லாம் வரியிடப்பெற்றது. அவ்வரிக்கு “நாள்வரி” என்பது பெயர்.

அக்கால மன்னர்களுக்கு, நிலத்தினின்று வருவாய் எவ்வளவு வந்ததோ - அந்த அளவிற்கு - வணிக வகையிலும் வரி வருவாய் வந்தது. அரசனுக்குரிய நாட்டுக்குள் விற்பனைக்கென வரும் பொருள்கள் மீதும் - அந்த நாட்டுள்ளிருந்து பிறரால் வெளியிற் கொண்டு செல்லப் பெறும் பொருள்கள் மீதும் வரி வாங்கும் வழக்கம் பண்டையில் இருந்தது! இவ் வினைக்கு “உல்கு செய்தல்" என்பது பெயர். ("அசைவின்றி உல்கு செய” (பட்டினப்பாலை:125). நாட்டு எல்லைகளில் இதற்கென வாயில்கள் அமைக்கப்பெற்றிருந்தன! இவ்வாயிலுக்கு "உல்குடைப் பெருவழி" என்பது பெயர். (காண்க: பெரும்பாணாற்றுப்படை:81). (வணிக மக்களிடமிருந்து இவ்விடத்தில் நின்று பெற்ற வரிக்கு “உல்கு" என்பது பெயர், நில வாணிகத்தில் வண்டிகளிலும் நீர்வாணிகத்தில் மரக்கலங்களிலும் வரும் பண்டங்களுக்கென வாங்கப்பெற்ற வரியாகிய இறையே, இவ் “உல்கு" ஆகும்!). இவ் "உல்கு” அன்றைய அரசர்களின் உரிமைப் பொருள்!...

“உறு பொருளும் உல்கு பொருளும் ஒன்னார்த் தெறுபொருளும் வேந்தன் பொருள்” குறள்: 756) என்னும் குறளும் இதனைத் தெளிவுறுத்தியுள்ளமை இவ்விடத்திற் கருதுதற்குரியது.

“உல்கு" என்னும் சொல்லை, ஆரிய - பிராமணர் -S"(எஸ்) என்னும் முதன்மிகை புணர்த்தி (prothesis) மிக எளிதாக (Sulka): -- என்றவாறு மாற்றிக் கொண்டனர். உல்கு > (சமற்கிருதம்) sulka=toll, tax, Dharma sastra. - Apastamba's Dharma sutra - manu Law book)

தமிழினின்று எடுத்துத் திரித்துக்கொண்ட இந்த "சுல்க" எனும் சொல்லே - பிராகிருத மொழியில் (சுல்க > சுன்க) “சுங்க" என்றவாறு திரிந்தது! இதனையே இன்று “சுங்கவரி" (Customs Duty) என்றவாறு இருபிறப்பி நிலையில் - (Hybird) தமிழர் வழங்கிவருகின்றனர்.

(உல்கு செய்யும் தொழில் அலுவலரைச் - "சுங்கம் வாங்கி" எனக் குறித்தனர்! அதுவே, நாளடைவில் (சுங்கம் வாங்கி>சொங்கம் வாங்கி)> சங்கம் வாங்கி என்றவாறு உகர ஒகர அகரத் திரிபில் வழங்கியது. 'தென்னார்க்காடு மாவட்டத்தில் – கூட்டிக்கொடுப்பவனைக் குறிக்க (pimp) (சங்கம்வாங்கி >) "சங்கமாங்கி" --- என்றவாறு வசவு கூறி ஏசுவது பரந்துபட்ட வழக்குடையதாகும். (வரி வாங்கிக்கொண்டு நாட்டுக்குள் அணுப்புவதுபோல - உரிய பொருளைப் பெற்றுக் கொண்டு கூடுதற்கென ஆளை உள்ளே அணுப்புதலைக் குறித்த நிலையில் இது பொருள் வளர்ச்சி பெற்றுள்ளது!) (காண்க: சங்கம் வாங்கி கூட்டிக் கொடுப்போன்.- சங்கம் வாங்குதல் = கூட்டிக் கொடுத்தல் - வின்சிலோ அகராதி) (மேலுங்காண்க: செ.ப.க. . தமிழ்ப் பேரகராதி பக்: 1223)

புரத்தல் = காத்தல். புரவலன் = குடி மக்களுக்குக் காவலனாகிய மன்னன். குடி மக்களைக் காத்தற்குரிய வரிக்குப் "புரவுவரி" என்பது - பெயர். இப் புரவு வரியை எல்லையில்லாது வாங்கும் தன்மை, அன்றைய மன்னர்கள் - மிகப் பெரும்பாலாரிடம் இருந்தமையை அக்கால மன்னருள் - ஒருவனாகிய “சோழன்

நலங்கிள்ளி" என்பவனே மிகக் கடுமையாகச் சாடியுள்ளான்! புறப்பாட்டு ஒன்றில் அவ்வாறு புரவுவரி வாங்கும் - கொடியோனைக் குடிபுரவு இரக்கும் கூரில்-ஆண்மைச் சிறியோன் (புறம்: 175 : 4-5) என்கின்றான், இந் நலங்கிள்ளி. குடிமக்களை இறை வேண்டி இரக்கும் (பிச்சையெடுக்கும்) தகுதியில்லாத ஆண்மையையுடைய (பேடிமையையுடைய) உள்ளத்திற் சிறியோன்" - என்பது, அவ் வரிக்குரிய பொருள்!

அன்பு கெடும்படியாக அருள் உணர்வில்லாமல் இவ் இறையாகிய (வரியாகிய) பொருள் தொகுதியை "அரசனானவன் விரும்பக்கூடாது, யானை புகுந்த - நெல்வயல்போல் - நாட்டை ஆக்கிவிடக் கூடாது" என்னும் கருத்துப்பெற அவ்வாறு தண்டலாளர் வழி வரிபெற்ற பாண்டியன் அறிவுடை நம்பியைப் பிசிராந்தையார் என்னும் புலவர் பண்டையிற் கடிந்து கூறியுள்ள புறப்பாட்டு - இவ்விடத்திற் கருதுதற்குரியது! மன்னவன் தான்பெறும் வரியை நெறியறிந்து கொள்ள வேண்டும் என்றும் அப் பாட்டில் அறிவுறுத்துகின்றார். (காண்க:"அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே, கோடி யாத்து நாடு பெரிது நந்தும்...... பரிவு தப எடுக்கும் பிண்டம் நச்சின் யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே" (புறம்:184).

இவ்வாறாக எல்லைகடந்து வரிவாங்கும் (கட்டாயமாகப் பிடுங்கும்) கொடிய வழக்கம் ஈராயிரம் ஆண்டுகட்கும் முன்னீடாகவே - தமிழகத்துள் இருந்த நிலையைக் கூர்ந்து கவனித்து மனங்கொதித்த நம் திருவள்ளுவப் பேராசான் (ஒரு குறள் வழியே) மிகச் சினந்து இவ்வாறு கூறினார்.

"வேலொடு நின்றான் இடு என் றது போலும்
கோலொடு நின்றான் இரவு" - (குறள்:552),

காட்டில், "வேலைக் கையிலேந்தியவாறு, - வந்த வழிப்போக்கனை நோக்கிப் பொருளை இங்கு, வையடா!" என்கின்றான், வழிப்பறி செய்யும் ஆறலை கள்வன்!.... செங்கோலைக் கையிலேந்திக் கொண்டு,

“புரவுவரி” என்றவாறு “இரவு" (பிச்சை) எடுக்கின்றான் – நாடுகாக்கும் மன்னவன்! இரண்டுக்குமிடையே எந்நிலையிலும் வேறுபாடில்லையே,... என்பது, திருவள்ளுவரின் சினக்கூற்று! - அக்கம்பக்கத்திலிருந்த குறுநில மன்னர்களையும் - அடுத்திருந்த வேந்தர்களையும் - மிகச் சேய்மையிலிருந்த மொழிபெயர்தேயத்து - மன்னர்களையும் படையெடுத்து - அச்சுறுத்தி - தெருட்டி - அடித்துக் கொள்ளை கொண்ட திறை... ஒரு புறம்!. இறை, புரவுவரி, உல்கு என்னும் வகையிலாக மிகப் பல்வேறு வரிகளைத் தண்டிக் கொண்டிருந்தது, ஒரு புறம்!. - கொழுமையுறச் சேர்த்துக் குவித்துக்கொண்ட பெருவளச் செல்வங்கள் எல்லையற்றன!.... பார்ப்பான் கொழுப்புக்கும் செழிப்புக்கும் - இத் தமிழ்மன்னர்கள் தண்டிய கொழிப்பு மிகமிகப் பயன்பட்டது. இக் கொள்ளைசேர்ப்பு - திறைசேர்ப்பு- வரிசேர்ப்பு முதலியன எல்லையில்லாது குவிந்தமையை - மதுரையை ஆண்ட குலசேகர பாண்டியன் என்பானின் கருவூலம் - 1200 கோடிப் பதினப்பொன் (=தினார்) பொற்காசுகளையும் எண்ணாற் குறிப்பிட முடியாத பன்மணிக் குவியல்களையும் – கொண்டிருந்தது என்னும் - வரலாற்றுண்மையாலும் அறியலாம்!... (காண்க: The Pandyan Kingdom: பக்கம்: 196)

தேசம் யாருக்குரியது?!...

துய்: பிரிதற்கருத்து வேர். (பிரிவு)

துய் > துய்ல் > துல் (பிரிவு)

துல் > துன் > துன் + இ > துனி =

1. பிரிவு. ‘துனி செய்து நீடினும்’ (கலி:6)."

2. புலவி நீட்டம் “துனியும் புலவியும் இல்லாயின்” (குறள்: 1306)

துனி = பிரிவுத் துன்பம் (அகம்:328:6).

துன் > துன்னு > துன்னுதல் = பிரிந்து செல்லுதல் (அகம்:77:2).

துல் > துள் > துள் + இ > துளி = பிரிவெய்திய நீர்த்திரளின் துணுக்கு, சொட்டு

துளி = திவலை (பிங்கலம்) “துளி பெயல்” (நற்:114:7) துளி = மழை.

“துளி நசைப் புள்” (புறம்:198:25) = வானம்பாடி.

துள் + அர் > துளர் = நீக்கு; களைகளை வெட்டு.

துளர்ந்து = களைகளை வெட்டி நீக்கி.

“புனம் துளர்ந்து வித்திய” (குறுந்:214:1)

“துளர்படு துடவை” (பெரும்பாண்: 201)

துள் > துண் > துண் + இ = துணி நீக்கு: வெட்டு.

துணி = துண்டம். துணித்தல் = வெட்டுதல்.

துணி+க்+கை > துணிக்கை = சிறு துண்டு

துணி + அல் > துணியல் = துண்டு.

“கொழுமீன் குறைஇய... துணியல்” (மதுரைக் : 320)

துண் + து > துண்டு.

துண்டு + இ > துண்டி = வெட்டு.

துய் > துய்ம் > தும்

(ஒநோ: (வெய் > வெய்ம் > வெம்) (செய் > செய்ம் > செம்)

தும் + இ > துமி = வெட்டு. துமித்தல் = விலக்குதல்

துமித்தல் = அறுத்தல். (அகம்: 24:1, 89:13)

துய் > துய்வு > துவு = பிரி, நீங்கு, விலகு

துவு > துவ்வு = பிரி, நீங்கு, நீங்கியொழி.

“பழியோர் செல்வம் வறுமையில் துவ்வாது” (முது. காஞ்சி:31)

துவு + அல் > துவல் = பிரிவு, சாவு.

துவல் > துவலு = துவலுதல் = துளித்தல்.

துவல் + ஐ > துவலை =பிரிந்து விழும் (நீர்த்திரளின்) துணுக்கு, நீர்த்துளி

துவலை > (தொவலை) > (தெவலை) > திவலை = நீர்த்துளி.

“எறிதிரைத் திவலை தூ உம்” (அகம்: 252:12)

துவல் + து > துவற்று = துளித் துளியாகப் பொழி, தூவு.

“துவலை துவற்றலின்” (மலைபடு:363)

துவு + அர் > துவர் = வகிர். துவர்தல் = வகிர்தல் (பிங்கலம்)

துவர் = துண்டு

துவல் + து > துவற்று துவற்றுதல் = தூவுதல் (பிறவினை).

துவறுதல் = மழை தூவுதல் (தன்வினை)

(துய் + வு) துய்வு > துவு > தூவு துளியாகச் சிந்து

தூவு + இ > தூவி = பீலி.   தூவு + அல் > தூவல் = துளி (புறம் :24:7)
துவறு > தூறு.
தூறுதல் = துளித்துளியாகச் சிதறுதல்
தூறு > தூற்று = சிதறும் - வீசு.
தூற்று + தல் > தூற்றுதல் =

1. பதரையும் - கூலமணியையும் வேறு பிரித்தற்கு வாரிக் காற்றிடை இறைத்துத் தூவுதல்.
2. பழிச் சொற்களை வாரி வீசிப் பரப்புதல்

"தூற்றாதே தூர விடல்" (நாலடி:76:4)

துய்: பிரிவு (நீக்கம், குறைவூறு, நைவு, அழிவு)
(துய்) > தொய்) > (தெய்) > தேய்   (உ > ஒ > எ > ஏ)
(துற > தொற > தெற > திற)
(துவலை > தொவலை > தெவலை > திவலை)
தேய்தல் = பிரிதல், நீக்குதல்
"தேய்கமா தெளிவே" (நற்றிணை :345:10
:தெளிவுறுத்துவதை நீ நீக்குக! (தவிர்க!)
தேய்தல் பிரிதல், குறைவுறுதல், நைவுறுதல், நைவுற்று மெலிதல்
"பாசம் நின்ற தேய்கால் மத்தம்" (நற்:12:2)
(:கயிறு ஆடித் தேய்வுற்ற தண்டினையுடைய பெருமத்து...)
"தேய்புரிப் பழங் கயிறு போல" நற்:284:10)
தேய் + உ > தேய்வு = தேய்மை
தேய்வு + ஐ > தேய்வை = சந்தனக் குழம்பு (திருமுருகு :33)
"தேய்வை வெண்காழ்" = சந்தனைக்கட்டை (புறம்:369:19)
தேய்தல்: குறைதல், குறைவுறுதல்.
"அல்லவை தேய அறம் பெருகும்" (குறள்:961)
"அரம் பொருத பொன் போலத் தேயும்" (குறள் : 888)
"தொடர்பும் தேயுமே நின் வயினானே" (குறுந்:42)
தேயா மண்டிலம் = கதிரவ மண்டிலம்
"தேயா மண்டிலங் காணுமாறு" (பரி:17:32)
தேய் > தேய் + உம் > தேயும் > தேய்ம் = தேய்வுறும்;
படிப்படியே குறைவுற்று முற்றும் இல்லாது போகும்;
படிப்படியே அழியும்.
"அறனும் அன்றே ஆக்கமும் தேய்ம் என" (நற்:68:3)
தேய்த்தல் = (தேய்வுறச் செய்தல்>நைவித்தல் >இல்லாமற் செய்தல் >)அழித்தல்
"தெவ்வர்த் தேய்த்த செவ்வேல் வயவன்" (நற்:260:6)
"வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும்" (தொல் புறத்திணை:8:10)
தேய்வு = மெலிவு; பெருமையழிவு
தேய் > தேய்ம் > தேய்ம்பு > தேம்பு.
தேம்புதல் = குறைவுறுதல்; குன்றுதல்
"யானை தன் வாய்நிறை கொண்ட வலிதேம்பு தடக்கை" (அகம் 39:11-12)
தேம்புதல் = மெலிதல் (புறம்: 164:2)
தேய் > தேய் + அம் > தேயம்: திசை; பக்கம்

“அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
நால் இரு வழக்கின் தாபதப் பக்கமும்
பால்அறி மரபின் பொருநர்க் கண்ணும்
அனைநிலை வகையொடு ஆங்குஎழு வகையான்
தொகைநிலை பெற்றது என்மனார் புலவர்”

(தொல் பொருள், புறத்திணை:16)

நச். உரை:16:4-5) காமம் வெகுளி மயக்கமில்லாத ஒழுகலாற்றினை இறப்பும் நிகழ்வும் எதிர்வுமென்னும் மூவகைக் காலத்தினும் வழங்கும் நெறியான் அமைந்த முழுதுணர்வுடையோன் பக்கமும்..

(ஒ.நோ. பக்கம் வய்: பிரிவு வய் + கு > வய்கு > வகு

வகுத்தல் = பிரித்தல்

வகு > பகு = பிரி. பகு + அவு > பகவு = பிரிவு (எட்பகவு = எள் பிரிவு)

பிரிவுக் கருத்தில்: பகு > பக்கு > பக்கு + அம் > பக்கம் = பிரிவு, திசை

(ஒ.நோ.) துய் = பிரிவு. துய் > (தொய்) > தெய்) > திய் > திய் + ஐ > தியை
> திசை = பிரிவு, பக்கம் திசை = பக்கம்

திசைப்பெயர் = திசை வகைக்குரிய பெயர்,

“திசைப்பெயர் முன்னர்” (தொல் எழுத். உருபி:29:1)

குணக்கு, குடக்கு, தெற்கு, வடக்கு என்பன திசைப்பெயர்கள் திசைகள் நான்கென முதலில் வகுத்த தமிழர்கள் - பின்னர் மேலும் நுண்ணுணுக்கமாக எட்டெனப் பகுத்து வழங்கினர்.

திசைகள் நான்கு = கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு

திசையிரு நான்கு = எட்டுத் திசைகள்

கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, தென்மேற்கு, தென்கிழக்கு, வடமேற்கு, வடகிழக்கு திசையிரு நான்கு (புறம்: 41:4)

“திசையிரு நான்கும் அதிர்ந்திடும்” (சிலம்பு:20:4)

திசைச்சொல் = செந்தமிழ் நிலத்தினைச் சார்ந்து அடுத்துள்ள பகுதியினராகிய தமிழுறவோர் வழங்கும் சொற்கள்.

“செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தம் குறிப் பினவே திசைச்சொற் கிளவி” (தொல். சொல். எச்ச:4)

“திசைநிலைக் கிளவி (தொல்.சொல்:449:2)

துய் > தொய் > தெய் > தேய் > தேய் + அம் > தேயம் = திசை

தேய் > தே = திசை (ஒநோ.: மாய் > மா. சாய் > சா. சேய் > சே.
தேய் > தீய் > தீ நோய் > நோ.)

தேவகை = திசைக் கூறுகள்.

“கண் கால் புறம் அகம் உழை கீழ் மேல்
பின் சார் அயல் புடை தேவகை எனாஅ” (தொல்.சொல்.வேற்றுமை:82:1-2)

“தேவகை என்பன திசைக்கூறு” (கல்லாடர் உரை)

தேய் > தேய் + அம் > தேயம் > தேய்ம் > தேம்

தேம் > தேஎம் = திசை, உழி, பக்கம்

"தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்" (தொல்.சொல்.அகத்:39:6)

(நச்.உரை: தோழியது ஆற்றாமையைக் கண்டுழியும் - தலைவியைத் தேடிப்போய்க் காணாது வந்தாரைக் கண்டுழியும்..)

(உழி = பக்கம், இடம். உழை = பக்கம்.

உழையிருந்தான் = பக்கத்திருப்போனாகிய அமைச்சன்)

தேஎம் = இடம்; கண் (இடம்)

"அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்
அந்தமில் சிறப்பின் பிறர்பிறர் திறத்தினும்"

(தொல்.சொல்.கற்பு:5:15-16)

(:சான்றோர் தேஎத்தும்: சான்றோர்க் கண்ணும். தேஎம்: இடம்

"பெற்ற தே எத்துப் பெருமையின் நிலைஇ" (தொல்.சொல்.கற்பு:5:6-7)

"தேம்எம் மருளும் அமையம் ஆயினும்" (மலைபடுகடாம்:273)

(உரை: "திசை தெரியாமல் மயங்கும் இராக் காலமாயினும்")

"தேஎம் தேறாக் கடும்பரிக் கரும்பொடு"

தேஎம் - திசை (மலைபடு:364)

"தேஎம் கொண்டு தெய்வம் நோக்கி" (நெடுநல்:77)

(நச்உரை: "திசைகளைக் குறித்துக்கொண்டு, அத் திசைகளில் நிற்கும் தெய்வங்களையும் குறைவறப்பார் த்து")

"பகல்மாய் அந்திப் படுசுடர் அமையத்து
அவன் மறை தேஎம் நோக்கி" (அகம்:48:23-25)

தேஎம்: திசைப் பக்கம் உள்ள இடம்; இடம்

"அருஞ்சுரம் இறந்தோர் தேஎத்துச் சென்ற நெஞ்சம்" (ஐங்குறு 317:3-4)

தேயம்: மக்கள் வாழும் நாடுளைத் தாண்டிச் செல்லச் செல்லத் தொலைவிலாகும் பாழ்வெளி

"நாடும் தேயமும் நனிபல இறந்த" (அகம்:383:4)

தேயம்:நாட்டிற்குத் தொலைதூரத்துள்ள இடம்,

"ஊரது சார்வும் செல்லும் தேயமும்" (தொல்.பொருள் அகத்.43:3)

(நச். உரை:எம் ஊர் அணித்தெனவும் - நீர்செல்லும் ஊர் சேய்த்தெனவும்...)

தேயம்: (தேய்ம் > தேம் > தேஎம்)

தேயம்: தொலை தூரத்திலுள்ள நாடு.

1. "இகந்தன வாயினும் பகைவர் தேஎம்" (மலைபடு:86)
   (உரை:பகைவர் தேயம் சேணிகந்தன வாயினும்..)
2. "செல்லும் தேஎத்து" (மலைரபடு:394)
   (நீங்கள் போகும் நாட்டிலெலாம்)
3. "அவர் சென்ற தேஎத்து" (அகம்:73:17)
4. "கொடியோர் சென்ற தேஎத்து" (அகம்:163:12)
5. "சென்ற தேஎத்து உழப்பு நனி விளக்கி (தொல்.பொருள். கற்பு:5:51)

(நச்உரை: தான் சென்ற தேயத்திலே நேர்ந்த வருத்தத்தை மிகவும் விளங்கக் கூறி..)

(மேலும் காண்க: "செய்யார் தேஎம்" (பொருந:134)

(:ஏவல் செய்யாத பகைவர் தேயம்)

"மலைந்தோர் தேஎம்" (பெரும்பாண்:423)

"பாழாயின நின் பகைவர் தேஎம்" (மதுரை:176)

புறம்: 470:6:11, 38:18 பதிற்றுப்:20:7, 21:28, பதி. திரட்டு: 2:12:13-5

அகம் : 215:3, 338:12-13 கல: 143:59.60

உயர்ந்த தேயம்: வானுலகின்கண் இருக்கும் (?) தேவருலகம்,

"உயாந்த தேஎத்து விழுமியோர் வரினும் (மதுரைக்:200)

தமிழ் மொழியின்று முதன் முதலில் பெயர்ந்து சென்று - பிரிந்து படிப்படியே தனிப்பட்ட வட்டாரவழக்குத் தமிழ்மொழியாகிய தெலுங்கு மொழியைப் பேசிய தமிழவராகிய மக்கள் தமிழகத்தின் வடக்குப் பக்கத்தே இருந்தமை காரணமாக (வடகு > வடகு + அர் > வடகர்) வடுகர் என்னப் பெற்றனர். வடுக நாட்டாரே, வடுகர்.

"வட வடுகர் வாளோட்டிய (புறம்: 378:2) என்ற வரியின் கண்ணுள்ள "வடவடுகர்" என்னும் அடையடுத்த தெளிவுப்பெயர் நன்கு கருதத்தக்கது!

வடுகர் நாடு "வடுகர் தேயம்" எனச் சுட்டப்பெற்றது. "வால் நிரைப் புகவின் வடுகர் தேஎத்து" (அகம்:213:7-8)

வடுகர் நாடாகிய தெலுங்கு நாடே, முதலில் "மொழிபெயர் தேயம்" எனச் சுட்டப்பெற்றது.

(காண்க: "வடுகர்... மொழிபெயர் தேஎம்" - அகம்:295:15-17)

"வடுக முனையது - மொழி பெயர் தேஎத்தராயினும்" (குறுந்:11-7)

வடுக நாட்டையடுத்துள்ள மற்ற பிற தமிழிய நாடுகளையும் "மொழிபெயர் தேயம்" எனப் பொதுப் பெற சுட்டும் வழக்கும் பரவலெய்தியது.

(காண்க: அகம்:211:8. 67:12, சிலம்பு:6:143)

தேயம்: அயல்நாடு (மதுரைக் :322)

தேயம்:பிறநாடு (அகம்:35:18)

தேயம் > தேய்ம் > தேம் > தேஎம்: நாடு

தேயம் : நாடு

"பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று" (குறள்: 753)

"தேயத் துறையும் சான்றோன் (புறம்:217:10-11)

"அறியாத் தேயத்து ஆர் இடை உழந்து (சிலம்பு:14:19)

நாற்பந்தைந்து (45) ஆண்டுகளுக்கு முன்னீடாக -அதாவது 1967-68 வாக்கில் நான் 18 அகவைப் பையன்! கல்லூரியில் வணிகவியல் பயின்று கொண்டிருந்த மாணவன்! கல்லூரியின் ஆண்டு விளையாட்டு விழா - இன்றைக்கும் இருக்கும் பாரதிதாசன் கல்லூரி வளாகத்தில் அக்கால் நிகழ்ந்தது! அந் நிகழ்வுக்கிடையில் ஓர் யாணனாகப் (கள் இறக்கும் மரமேறியாக..) புனை வேடமிட்டுக்கொண்டு மாறுவேடப்போட்டி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு முதற் பரிசில் பெற்றேன். பரிசில் வழங்கிய பெருமகனார் - புதுச்சேரியின் பழைய முதலமைச்சர் "எதுவார் குபேர்" என்னும் பெயரிய பிரஞ்சுக்காரர்! அவரின் அன்பு சான்ற வேட்புக்கும் கேட்புக்கும் வணங்கி மூன்று நாள்கள் கழித்து புதுவையிலிருந்த இல்லத்திற்குச் சென்று பார்த்தேன்! மிக்க அன்பொடு பல நிலைகள் பற்றி உரையாடினார்!..

அவரின் பேச்சுக்கிடையில் ஒரு சிறப்பு நிகழ்ச்சியை நினைவு கூர்ந்தார்! "...தில்லியினின்று தலைமையமைச்சர் நேரு என்னை அழைத்தார்!... எல்லையைத் தீர்மானிப்பது குறித்துப் பேசுவதற்காக! நேரிடையாகப் பேச வேண்டியுள்ளது என்றதனால் விரைந்து கிளம்ப வேண்டியதாயிற்று!..

சென்னைக்குச் சென்று வானூர்தி ஏறினேன்! வானூர்தி மேலெழுந்தது! 100 அடி... 200 அடி.. பக்கவாட்டிலிருந்து கண்ணாடிக் கதவு வழியாக வெளியில் பார்த்துக்கொண்டிருந்தேன். நிலத்திலிருந்த ஆடுகள் மாடுகள் மாந்தர்கள் எனும் யாவும் படிப்படியே சிறிது சிறிதாகி எறும்புகள் போல் கண்ணுக்குத் தெரிந்தன!

பெரும் பெருங் கட்டடங்கள் சிறுசிறு விளையாட்டுப் பெட்டிகள் போல் தெரிந்தன!

மேலும் மேலே போகப்போக குன்றுகள்.. மலைகள் தெரிந்தன! அவையும் படிப்படியே இறுதியில் சிற்றுருக்களாகி மறைவுற்றன! நிலம் முழுமையும் புகைப்போர்வையால் போர்த்தப்பெற்றதுபோல் அனைத்தும் உருவற்றன!

என்னையே என் உள்ளம் இப்படிக்கேட்டது!.. "ஏய்ய்!... குபேர்!..." எங்கே அடா எல்லை?... மேலே போகப்போக தொலைவாகச் செல்லச் செல்ல எல்லாம் தேய்ந்து மறையும்!..." அவ் வுரையழகு எண்ணி அன்றைக்குப் பெரிதும் வியந்தேன்!

"சென்று தேய்ந்து இறுதல்" என்றவாறு வருந்தொடர், ஈண்டு எண்ணி இன்புறற்கு உரியது. (நன்னூல், பொதுப்:12:5)

ஒரு திசையின்கண்ணிருந்து ஒருவன் செல்லச் செல்ல அவனின் இயக்கக் காட்சி படிப்படியே தேய்வாகிக் குறுகி இறுதியில் நம் பார்வையினின்றே மறைவுறும்! இவ் இயற்கைத் தோற்ற முறைமையே தேயம் என்னும் இச்சொல்லுக்குரிய கருத்து உருவாக்கத்துள்ளும் பொருந்தியுள்ளமையை உற்ற உட்கூர்ந்து கவனித்தால் துலங்க விளக்கமாகி நிற்கின்றது!

ஒப்பு நோக்கத்திற்கென ஒரு விளக்கம்:

ஏ: உயர்ச்சிக் கருத்து (தொலைவுக் கருத்து) ஏ + (அண்) (இடப்பொருளுருபு)

ஏண் = உயர்ச்சி, தொலைவு ஏண் > சேண் = உயர்ச்சி, தொலைவு

ஏ > ஏய் > சேய் சேய்மை = தொலைவு

சேய்த்து = தொலைவிலுள்ளது சேயது = தொலைவிலுள்ளது,

சேய் நாட்டார் (நற்.115:8) குறுந்:380:4)

சேய் நாட்டோடார் (குறுந்:64:5) (=தொலைதூர நாட்டின்கண் வாழ்நர்)

சேய்நாடு = தொலைவிலுள்ள நாடு

(அகம்:1:8, 21: 5, 59:16 115:16, 187:3 புறம் 377:14)

சேய்மை > சீமை

சீமை : தொலை தூரத்திலுள்ளதாகிய அயல்நாடு,

தேயம் : திசை > அத் திசையின் தொலைதூரத்திலுள்ள நாடு (ஊர்)>

இன்ன வகையிலாகக் கருத்து விரிவாக்கம் பெற்ற இத்தேயம், "நாடு" என்னும் பொதுப் பொருளையும் தெளிவார எய்தியது,

தேயம்: (தேய்ம் > தேம் > தேஎம்) நாடு

காண்க: (புறம் : 217:10-11) குறள் :735) (சிலம்பு :14:19)
(தொல், பொருள், அகத் 43:3) (தொல் பொருள் 68:1)
(தொல் பொருள் கற்பு : 5:51) பொருந:134) பெரும்பாண் : 423;424
(மதுரைக் :176, 229, 506)
(பட்டினப்: 216) (மலைபடு: 86) (அகம்: 35:18) (73:16-17)
(163:12) (213:8) 215:1-2) அகம் :236:7)

தேயம் > தேசம் (யகர - சகரத் திரிபு)

"அறியாத தேசத்து" (முதுமொழிக் காஞ்சி: 3:8) (தேசம்: நாடு)
(மணி:27:23) தேசம்: திசை (வட வழக்கு) ஏகதேசம்: ஒரு பகுதி, ஒரு பக்கம்
(ய > ச) ஒ.நோ: வாயில் > வாசல் நேயம் > நேசம்
பாயம் > பாசம் ஈயல் > ஈசல் காயா > காசா

திசை என்னும் கருத்து - (துய் > தொய் > தெய் > திய் > திய் + ஐ தியை > திசை) பிரிவுக் கருத்து அடிப்படையினின்று எழுந்து பக்கக் கருத்துக்குத் தாவி நிலைபெற்றது!

இத் "துய்" எனும் பிரிவுக் கருத்து மூல அடிப்படை வளர்ச்சியிலேயே (துய் > தொய் > தெய் > தேய் + அம் > தேயம்) தேயமாகிய தேசம் திசைக் கண் நீடிச் செல்ல செல்ல ஆங்கே அமைந்திலங்குவதாகிய நாடு என்னும் கருத்து நோக்கி வளர்ந்து சென்று - இறுதியில் 'நாடு' என்னும் பொதுப் பொருளும் நிறைந்து நிலைத்தது!...

இவ்வகையில் ஆகும் அடிப்படை திசையே! இதனையே "தேச" எனும் சொல்லுக்கு மூலமாக "dis" என்பதனைச் சுட்டிச் சமற்கிருத அகரமுதலிகளில் அம் மொழிவாணர் குறித்துள்ளமை ஈண்டு ஆழ்ந்து ஒப்புநோக்குதற்குரியதாகும்!

பரம் + தேசி > பரதேசி என்ற வடநாட்டு வழக்குச் சொல் அயல்நாட்டானைச் குறித்தற்கு வழங்கும் நிலைக்குள், "தேசம்" என்பது நாடு எனும் பொதுப் பொருண்மையை அடைந்து விட்டமையை அறியலாம்!

"பரதேசி" என்பது அயல்நாட்டவன் என்பதோடு - அயல்நாட்டு இரவலன் எனும் பொருண்மையையும் தமிழக மக்கள் வழங்கியுள்ளமையை ஈண்டுக் கருதிப் பார்க்கலாம்!

நாம்தாம் வடபாற்பகுதி மொழிகள் பலவற்றுக்கும் - சமற்கிருதத்திற்கும் நம் தேசத்தை வழங்கினோம்! வடபால் மொழிகள் சிலவற்றுள் நம் (தேயத்தின்) தேசத்தின் படிவுளாகுவன:

(தேயம் > தேசம்) >
(Sanskrit) Desa = point, region, part, province, country.
(Pali) Desa = place, country
(Shah bazgarki dialect of Asoka:) desa = country
(Mausehra rock incription of Asoka): desa = country
(Kalasha (dardic) Desa : portion
(Dhombi rock inscription of Asoka) desa = portion
(Girmar rock inscription of Asoka) desa = portion
(Nidoc) (language of Kharasthi inscription)
MIA Forms occuring in orpurs inscriptionnam Indicarium Vol. II Part I
desa = region,country,

(Prakrit) desa = part, country,
(Gypsy (Romani)
(Armenian dialect of Gypsy); (des) les: earth, world
(Palestinian dialect of Asiatic Gypsy of the Nawar): desa: place, camping ground.
(Ashkun): desi : village.
(Walgali) Wai - ala) des: village
(kalasha)
(Rumbar dialect of European Gypsy): desa: country desa: far, distant
(Phalura): des, dis = village.
(Pashai (Pasai - Dardic)
(Kurangali dialect of Pashai) des = cultivated field.
(Kashmiri)
(Kashtawari dialect of Kashmiri) dis = country.
(Sindhi) dehu = country
(West Pahari) des: country
(Kumamani) des = country
(Nepali) dis : country, the plains of India.
(Bengali) des = country
(Oriya) desa : country
(Maithili) des: country
(Awadhi) : country
(Hindi) des: country
(Marwari) desa : a small country
(Gujarati) des : country
(Marathi) desa : country
(Sinhalese) desa : country

"தேயம்" எனும் செந்தமிழ் வடிவினின்று "தேசம்" என்றவாறாக மக்கள் வழக்கில் நன்கு பயிலப்பெற்று - அவ் வழக்கானது இத் தேயம் முழுக்கவும் ஆங்காங்கு மிகுந்த வட்டார மொழிகளிற் பரவலுற்றுச் சமற்கிருதத்துள் முற்சுட்டிய நிலையிற் புகும் முன்னீடாகப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டுக் கிரேக்கத்துட் சென்று அதன் முந்தைய பழைய வடிவிலேயே படிவுற்றுள்ளது!

["தேம்" எனும் சொல் வடிவம் 1. தேன். 2. இனிமை 3. மணம். 4. வண்டு 5. அகில் நெய் 6. மதம் 7. தேனடை என்றவாறாகிய ஏழு வகைப் பொருள்களிலாக நூற்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையிடங்களில் கழக இலக்கியப் பதிவுகளுள்ளாகப் படிவெய்தியுள்ளது! "தேன்" எனும் இனிமைக் கருத்துச் சொற்பொருள் வழியே திரிபெய்தி நின்ற (தேன் >) தேம் எனும் வடிவம் தோன்றிய வேர்வழியோ மிக வேறானதாகும்,

காண்க: துல் (துலக்கக் கருத்துக் கிளைவேர்) (தெளிவுக் கருத்து)
துல் > தொல் > தொள் (தெள் + இ > தெளி தெளி+ உ) தெளிவு

(தெல் > தெல் + து > தெற்று. தெற்றென = தெளிவாக)
தெற்று > தெறு > தேறு = தெளிவாகு
தேறு + அல் > தேறல் = கள்ளித் தெளிவு
“தேக்கள் தேறல்” = தேனால் ஆகிய கள்ளின் தெளிவு (புறம்:384:8)
(திருமுருகு: 195) (மலைபடு:171.522) (அகம்: 360:14-15)
தேறல்: தேன். (அகம்:2:1-7 182:3,3,4) தேறல்: கள்
துல் > தொல் > தெல் > தென் > தேன்

தேன் > தேம் (ன > ம) (தேம் + மா > தேமா தேன் + மொழி > தேன்மொழி > தேமொழி)

தேம் > தீம் = இனிமை. (காண்க புறம்: 24:12-15, 70:1, 109: 5, 116:1, 129: 4, 150: 27, 28. 168 : 8, 177 : 9, 225, 239 :16, 250 : 7, 258: 2, 260: 2, 281 :1, 285 : 3, 292 :1, 321:1-3, 348 :1, 2, 380:9, 395:25, 396:7-9, 399:4)

துல் > தொல் > தெல் > தென் > தேன் > தேம்
தேம் > தீம். (தீம் + தீம் > தீந்தீம் > தீந்தி > திந்தி > தித்தி. தித்தி + பு > தித்திப்பு = இனிப்பு, இனிக்கை.

(ஒநோ: தம் + தம் > தந்தம் > தத்தம்)

இத் “தேம்”, இனிமைக் கருத்தில் விளைந்து, முற்றித் தனித்து விரிந்து நிலைநின்ற அழகுச் சொல் ஆகும்! இது தனி!...

திசைப் பொருளினின்று விரிந்த (துய் > தொய் > தெய் > தேய் > தேய் + அம்) “தேயம்” என்பது மேலும் பயன்பாட்டிற் சுருக்கமெய்தித் “தேய்ம்'' என்றாகிப் பின்னர்த் “தேம்” என்றவாறு நின்றது! இது முன்னைய “தேம்” என்பதினின்று வேர்வழியில் வேறாயது.

இதனைத் “தேம்” என்னும் இனிமைப் பொருள் தரும் சொல்லினின்று மயக்கமற வேறுபிரித்து நாட்டுதற்கு அளபெடை கொடுத்து நிறுத்தித் (தேம்) “தேஎம்” என்றவாறாக்கி அன்றைய இலக்கிய இலக்கண நுண்மாண் நுழைபுல அறிஞர்கள் வழங்கியுள்ளனர்! இத் தெளிவு, நம் முன்னோரின் மொழிப் பயன்பாட்டு முறைமையறிவை நமக்கு உணர்த்துகின்றது!]
தேயம் > தேய்ம் > தேம் > தேஎம் = நாடு
தேம் > Greek) Demos = Country, land

ஊர் - உலகு - உலகம் என்றவாறான இடப்பொருள் குறித்த சொற்கள் ஊரில் வாழும் - உலகில் வாழும் - உலகத்தில் வாழும் மக்களையும் சிறக்கக் குறித்தல் ஈண்டு நன்கு எண்ணத் தக்கது!
(காண்க: உலகு = மக்கள் குறள்: 117, 256, 280, 346, 399, 470, 670, 809, 841, 970, 994, 1015, 1025, 1031)
ஊர் = ஊரிலுள்ளவர் (குறள்: 1129, 1130)

(Greek) Demos = country, land > also the people of such a land, hence, the common people.

(Greek) Demos = the people.

(personification of the populace esp. in a democracy)

உகு > உகை: மேலெழு, மேம்படு.

உகை > ஒகை > அகை = மேலெழு.

அகைதல் = மேற்செல்லுதல (Greek) (B) ago. agos = to lead.
(Latin) agere = to lead. (> (E) agency, agent, agenta)
(Greek) agogas = leading
(Greek) Demagogos = leader of the populace,
(மக்கள் தலைவன்)
desire or prejudices of the mob.
> (English) Demagogue = Leader of the populace, political agitator appealing to
(தமிழ்) கடுமை : வலிமை

குய் : சேர்க்கைக் கருத்து வேர். குய்ல் > குல் > குல் + அம் > குலம் = கூட்டம்
குல் > கொல் > கல் > கல் + அ > கல = சேர்.
கலவி = சேர்க்கை, புணர்ச்சி
கல் > கள் = சேர்க்கை.
(ஒநோ: மரம் + கள் > மரங்கள்)
களம்: சேர்க்கை; கூட்டம்
கள் > கண் = (சேர்க்கை), இடம். கணம் = கூட்டம்.
கள் + து > கட்டு = சேர், பிணை, கூட்டு.
கட்டு > கடு = வலிவு. உறுதி, திறம்.
கடுமை: வலிமை (காண்க: கடுவினை, கடுவெயில், கடும்பகல், கடுவளி, கடும்பசி, கடுங்கதிர், கடுங்கண்)
கடுந்தரை : வன்னிலம் (கட்டாந்தரை). கடுநெருப்பு = அளவுக்கு மிஞ்சின தீ. கடுமான் = அரிமா. (வலிமை அடிப்படை)
(கல்லாடம் : 67:16)
கடுமீன்: (வலியதாகிய-) சுறா "கடுமீன் கலிப்பினும்" (அகம் 50)
கடுவன்: ஆண்குரங்கு, ஆண்பூனை (வலிமை)

கடு + அவு > கடவு > கடா. கடா > கடாய்.
கடாய் > கெடாய் > கிடாய் > கிடா.
வலிமைக் கருத்து அடிப்படையில் ஆண்பால் விலங்கு குறித்துப் பெயரீடு பெற்றது (திவா.)

கடு (Greek) kratos = strength, power.
(Greek) - a (privative) + kratos = power
(Eng) acrasia = weakness of will, by which a person acts against usual or expected judgement.

கடு > (Latin) gravis, gravidus
(Eng) grave = Weighty
gravid (< gravis) = pregnant
gravimetry = measurement of weight.
(L) gravis: heavy.
(E) gravitas; weight, gravity, weightiness , gravitation, gravitometer

கடு > (GK) kratos = power, strength.

(Indo - European) kratus > (Germanic)
hardlus > (Gothic) hardus > (old Norse) harthr
(old High German) hart (Old saxon) hard
(old English) h(e)ard > (English) hard.
(Eng) hard = Firm, solid : harden, hardihood, hardly,
hardship, hardy.

கடு > (German) hardhus > hard, hart. > (English) - (hard) > ard, art.
: forming nouns (placard, pollard, spaniard)
standard (Gk, depreciatory (drunkard, dullard, sluggard)

கடு > Greek) krotos = power, strength
(GK) Demos + (GK) kratia. > Democratix = popular government.
> (middle Latin) democratix > (French) Democratix
> (English) Democracy = Popular Government
(Formerly written democrcy)
(: Milton Areopagitica Ed. Hales. P.4)
(E). Cracy: Forming Loaus. Meaning ruling of.
(: Aristocrocy, bureaucracy, democracy, plutocracy)
(E) Gerontocracy: Government by old people or old men.
(English) <(Greek) Demos)
> demarch, demagogism, democratism,
demogenic, demophil, demophobe, demotic,
demotics (Sociology) demic = of the people.
demoticist = student of demotic script.
Demography = the study of population.
Demology = Demography, the theory of origin and nature of communites.

"இந்தியர்" என்று கட்டுவது, செயற்கைப் பொம்மை

"தமிழர்" என்னும் பேரினத்தார்க்குரிய பல்லாயிரமாண்டுக் காலத் தொடர்மரபையும் அறாப்புகழையும் வளப்பெருமையையும் அவர்க்கென்றிருக்கும் சிறப்பு அடையாளக் குறியாண்மையையும் அடியோடறுக்கும் முயற்சியே, 'இந்தியர்' என்றவாறான புத்தம் புதிய செயற்கைச் சோளக்கொல்லைப் பொம்மையை உருவாக்கும் அரசியல் கயமையாளர்களின்-வரலாற்றறிவற்றோரின் விடாப்பிடியான வீம்புவினைத் தொடர்ச்சியாகும்!

தமிழினின்று முதலில் பிரிந்தது தெலுங்கே!

தமிழினம் தனித்த ஒரு பேரினம்! அதனின்று எழுந்தவையே மற்றையவான தமிழியப் பிரிவு இனங்கள்! முதன் முதலாகப் பிரிந்தது, வடுக இனம்! முதற் பிரிந்தது தெலுங்கு மொழி! தமிழின் வட்டாரக் கிளை மொழியாகப் பயிலப் பெற்று ஆரியத்தின் தொடர் தாக்கத்தாலும் வல்லுறவாலும் குலுங்கி நலுங்கிப் போய்த் தெலுங்காக இலங்கியது! இந்நிலையிலான - பல்வேறு விழுக்காட்டளவு வேறுபாடுகளால் நிலை குலைந்துலைந்து பிரிவுற்றனவே - பிற தமிழிய மொழிகள் ஆகுவன!

தெளிவற்ற மொழியியலர், மிகப் பெரும்பான்மையர்!

அடிப்படை மொழியியல் அறிவின்மையாலும் - தமிழின் அகநிலையுண்மைகள் பற்றிய கருத்துக்கள் பற்றிக் கடுகளவுங் கருத்துச் செலுத்தாத மேம்போக்கு வீம்பாலும், தமிழினின்றேதாம் பிற அனைத்துத் தமிழிய மொழிகளும் (திரவிட மொழிகளும்) திரிபெய்தி உயிர்த்து உலவுகின்றன என்னும் தெளிவற்ற மொழியியலர், மிகப் பெரும்பான்மையர் ஆகுவர்!

"தமிழ்" எனும் சொல்லினின்றே "த்ரமிள" என்னும் வடிவும் த்ரமிட - திரவிட என்றவாறான படிநிலைத் திரிபுகளெய்தின எனும் செப்பத் தெளிவு - அகக் காழ்ப்பிலாத நேர் நோக்க அறிஞர் பெருமக்களான அண்ணல் அம்பேத்கர், மொழிஞாயிறு-பாவாணர் போன்றோர்க்குத் துலக்கமாகியிருந்தமையை அன்னன்னோார் பதித்துவைத்துள்ள அருங்குறிப்புகளில் படிவெய்தியுள்ளமையை, அத்தகு மொழியியலர் அடக்கத்தோடு படித்துப் படியவேண்டும்!

தமிழிய மொழிகள் வழங்கும் இடங்களில் வாழும் அவ்வப்பகுதி வட்டாரத்தினரும் அடிப்படை தெரியாமலேயே நெளிகின்றார்கள்! தமிழிய மொழிபேசும் இனப் பிரிவாராக இருக்கும் அவர்கள் - அவ் இனப் பிரிவுக்கேயுரிய மூத்த முன்னோர் இனமாகத் "தமிழினம்" நிலைத்து நீடி நிற்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ளாமையினாலேயே இந்நாடு முழுமையிலும் உரிய உள்ளொற்றுமை உடைசற்பட்டுக் கிடக்கின்றது!

அக் கொச்சைச் சொல்லுக்குள் தமிழும் தமிழரும் ?!...

"தமிழம்" என்னும் சொல்லின் வடபால் திரிபுக் கொச்சையே "திரவிடம்" என்பதாகும்! தமிழினின்று திரிபெய்திய பிற தமிழியமொழிகள் குறித்துச் சுட்டப்பெற வேண்டியதாகிய அக் கொச்சைச் சொல்லுக்குள் தமிழையும் உள்ளடக்கிச் சொல்லுவது, அடாததும் - முறையற்றதுமாகும். அதன்வழியே, தமிழரும் "திராவிடர்" எனும் கற்பனைக் கூட்டுக்குள் இக்கால் மிகத் தவறுதலாக அடைக்கப்பட்டுள்ளனர்! இதன் காரணமாக இத் தமிழினமே உணர்வு மழுக்கத்திற்கும் ஏமாற்றுக்கும் உள்ளாகி ஒடுங்கிக் கிடக்கின்றது!

தமிழரின் தலைகள் மீது மட்டும் !...

"இந்தியர்" என்பது எவ்வாறு கற்பனைச் சுட்டோ, அதுபோன்றதே "திராவிடர்" என்பதுவும் ஆகும்! தமிழியப் பிரிவினராய தெலுங்கரோ - கன்னடியரோ - மலையாளியரோ - துளுவரோ - குடகரோ - மற்றும் உள்ளடங்கும் பிறரோ, - "திரவிடர்" எனும் சொல்லாட்சியையே ஏற்காதுள்ளபோது - பயன்படுத்தாதுள்ளபோது, அவ் இட்டுக்கட்டிய கற்பனைக் குறியீட்டைத் தமிழர் தலைகளின் மீது மட்டும் சுமத்தி அமுக்கும் சூழ்ச்சி மிகமிகக் கரவானதாகும்! இழிவுப் படுத்துவதாகும்; தாழ்த்துவதுமாகும்!

தமிழியப் பிரிவு இனங்கள் யாவும் தனித்தனி தேசிய இனங்களே!

இக் கால் தெலுங்குஇனமும் - கன்னடியஇனமும் - மலையாளஇனமும் - துளுஇனமும் - இவை போன்றனவாகிய தமிழயப் பிரிவு இனங்கள் அனைத்துமே தனித்தனி தேசிய இனங்கள்தாம்! பெருமைக்குரியனதாம்! மதிக்கத் தக்க மாண்புடையனதாம்! (நம் அண்டை அயலிலாக அடுத்துள்ள அம்முந்தைய

தொல்லுறவுத் தொடர் சொந்தக்காரர்களாகிய இவர்களிற் பலர் - நமக்குரிய பொதுவுரிமைகளுக்கே இன்னலும் தீங்கும் இழப்பும் தொடர்ந்து விளைத்துக் கொண்டிருக்கும் இழிநிலைத் தொடர்வினைகளை எண்ணி மனங்குமைந்தவாறேதாம் உள்ளணைத்துக்கொண்டு இவ்வாறு உரைக்கின்றோம்!...)

சிறப்புக்குரிய இவ் இனங்கள் அனைத்தையும் “இந்தியர்” என்னும் ஒற்றைச் சொல்லாட்சிக்கு உட்படுமாறு அடக்க முயல்வது - கூட்டிப் பொருக்கித் தின்பதற்கான சூழ்ச்சிமை நிறைந்ததேயாகும்!

இவ் ஆய்வின் - முற்பகுதி விளக்கங்களுக்குள்ளாக நாம் காணும் உண்மை, “தேசம்” எனும் சொல் - “தேயம்” எனும் முந்தைய செந்தமிழ்ச் சொல்லின் வளர்ச்சிச் சொல் என்பதுவும் - அத் “தேயம்” என்பதுவோ, “தேய்” எனும் “படிப்படியே குறைவுற்றுப் பின்னர் முற்றுமாக இல்லாமலேயே தேய்வுற்றுப் போ” எனும் பொருட்பாட்டு வினைச்சொல் அடிப்படையில் திசை குறித்து வளர்ந்த சொல் என்பதுவும் - அத் “தேய்” எனும் வினைச்சொல் வடிவும் “துய்” எனும் பிரிவுக் கருத்து வேரினின்று தோன்றி வளர்ந்தது என்பதுவும் ஆகும்!

“தேசம்” எனும் சொல்லின் அடிப்படை வடிவமான “தேயம்” என்பது மிகப்பரவலாகப் பண்டைய இலக்கிய இலக்கணங்களிற் படர்ந்து படிந்து நிறைவாரப் பயில்விலிருந்த ஒரு பழஞ்சொல் ஆகும்! மக்கள் வழக்கில் யகர-சகரத் திரிபாகி வழங்கி வடபாற் பகுதிகளிலெல்லாம் பரக்கப்படிவெய்தியது, இத் “தேசம்”.

முதற்கண்,- திசையடிப்படையிலாக அடுத்துள்ள சேய்மைப்பட்ட நாட்டைக்குறித்துப் - பின்னர் மிகத் தொலைவிலுள்ள அயலகப் பகுதியைக் குறித்துக் காலம் செல்லச்செல்ல “நாடு” எனும் பொதுப் பொருட்பாட்டிலேயே வழங்கலாயிற்று, இது!

ஆங்கிலேயனான ஐரோப்பியனை இந் நாவலந்தீவாகிய ஒன்றிய நாட்டினின்று வெருட்டியோட்டுவதற்கு - இப் பன்னாட்டு ஒன்றிய இனங்கள் அனைத்தையும் ஒன்றாகப் பிணைத்துக் கற்பனைக் கயிற்றால் மேலுக்குக் கட்டிய காட்சிப் பொம்மையாக “இந்திய தேசியம்” வார்க்கப்பெற்றது! இருபதாம் நூற்றாண்டில், இச் சொல் அவனை அப்புறப் படுத்துவதற்கெனத் தேவைப்பட்டது. அவ்வளவுதான்! (ஆரியம் ஈண்டு வாகாகக் குந்தி வயணமாகப் பொருக்கித் தின்ன வாட்டமாயமைந்த வனப்பான கூட்டுச்சொல், இது!)

நம் தமிழ்நாடு, தமிழினத்தவரின் தேசம் ஆகும்! நாம் பேசும் தமிழ், இத் தமிழ்த் தேசத்தின் தேசிய மொழி ஆகும்! நம் தமிழர்கள் யாவரும் தமிழ்த் தேசிய இனத்தவர் ஆகுவர்! மொழி - இனம் - நாடு எனும் இம் முந்நிலைகளைத் தம் மானத்தொடு தமக்குரிய மரபுரிமை அடையாளமாக நிலைநிறுத்திக்கொள்ளும் தகைமைக்குரிய - வினையாண்மைக்குரிய தனிச்சிறப்புப் பெயரே “தமிழ்த் தேசியம்” என்பதாகும்.

தமிழரின் தன்மானவுணர்வுப் பண்பு சார்ந்த - மரபுரிமை மேன்மைச் செறிவார்ந்த இனவுயிர்ப்புக்குரிய மூச்சுக்காற்று, இது!

நாடு!... நம்+நாடு>நந்நாடு நல்(ன்)+நாடு>நன்னாடு

உய் > ஒய் > அய்

உய் > ஊய் > + இ > ஊயி > ஊசி (சிறுமை > நுண்மை > கூர்மை)

அய் > அயிர் = (சிறுமை > நுண்மை. “அயிர்மணல் படுகரை”

அகம் : 113 : 20

(சிறுமை>நுண்மை>கூர்மை) “அயிர்மன வாளால்” (திருமந் : 1493)

நுண்மணல் : “அயிர்த் துகள் முகந்த ஆனா ஊதை” (நற் : 163 : 2)

அயிரி : நுண்மணல் (வடநிகண்டு : 33)

அய் > அய் + இர் > அயிர் : நுண்ணிதாக, - அறிவுக்கும் உணர்வுக்கும் படுகின்ற ஐயவுணர்வு.

“உம்பர் நாட்டவர் அயிர் உற இமைப்பன” (கம்பரா. 1,3,29)

அயிர்த்தல் = ஐயமுறுதல்

“பாணர் அயிர்ப்புக் கொண்டு” (நற்றிணை : 46 : 5-6)

“அயிர்த்தன்று மன்னே நெஞ்சம்” (அகம் : 315 : 5)

அய்யம் > ஐயம் = ஐயவுணர்வு

அயிர் + ஐ > அயிரை = நொய்ம்மீன் (> அசிரை)

“சிறுவெண் காக்கை அயிரை ஆரும்” (ஐங் : 164)

அயிரை > அயிலை (ரகர - லகரத் திரிபு)

“வெண்சோறு அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து (அகம் : 60:5)

அயில் = (சிறுமை > நுண்மை > கூர்மை)

கூர்மை. “அயில் உளி பொருத” (சிறுபாண் : 32)

“அயில் அம்பு” (பரி. 18 : 30)

“ஆண்மகன் கையில் அயில் வாள்” (நாலடி : 386)

கூர்மை > (கூர்ங்கருவி)

: வேல் “அயில்திணி நெடுங்கதவம்” (கலித் : 135 : 3)

அயில் : (கூரிய முள்ளமைந்த-) முசுமுசுக்கை (பச்சிலை அகராதி)

அயில் : (கூர்மை>)

கருதுக : அய்ம்பு > அம்பு - நுனி கூர்த்த கணை

"அம்பு தெரிந்து (அகம் : 82 : 11)

"கூர்நல அம்பு" (மலைபடு : 421)

அயிலவன் : வேலுடைய முருகக்கடவுள் (அயிலான்)

அயிர் : நுண்மணல். (நுண்மணல் தொகையளவுப் பெருக்கங் கருதிய நிலையில் - நூறின் பத்துமடங்கான தொகையைச் சுட்டும் எண்ணுப்பெயர் நோக்கியது! : (காண்க : அயிர் > அயிரம் > ஆயிரம்) (திரிபாக்கத் திருட்டு :) அயிரம் > அஸ்ர > சஹஸ்ர = ஆயிரம்

"சகஸ்ர" (சமற்கிருதம்)

அய் > ஐ = நுண்மை

"அரியே ஐம்மை" (தொல். பொருள் : 356:1)

அய் > அய்கு>அஃகு. அஃகு + அல் > அஃகல் = சிறுமை (திவா : 1671)

அஃகுதல் = சிறிதாதல் > நுண்ணிதாதல் > கூர்ந்திருத்தல்

சிறிதாதல் > குறைதல் (அளவிற்குறைதல்)

"அஃகாமை செல்வத்திற்கு யாதெனின்" (குறள் : 178)

(> சுருங்குதல்) "அஃகிய நுட்பம்" (மலைபடு : 551)

அஃகு > (சிறிதாகு > குறைவுறு > சுருங்கு > உள்ளொடுங்கு)

(> உள்ளொடுங்கு > உள்அமை)

அஃகு > அகு > + அம் > அகம் = உள், (கீழ்)

கருதுக: புறம் = வெளி (மேல்) (முதுகு)

அகம் = (உள் >)

"உள்ளம் அகன்நக வாரா முகன்அழி பரிசில்" (புறம் : 207 : 4)

அகம் : உள், உட்புறம்.

அகஞ்செவி = காதின் உட்புறம் (முல்லை : 89 : நச்.)

அகங்கை = உள்ளங்கை (பிங்கலம் : 1022)

அகவடி = உள்ளங்கால் (திருவிளை. பு. : 11 : 41)

(அகம்) : அகவு + ஐ > அகவை = உள், உள்ளிடம், உட்பகுதி

"மணித்துளை அகவையின்" (மணிமே : 12 : 66)

அகவை = உட்பட்ட ஆண்டு அமைவுநிலை (வயது)

யாண்டிறுதிக்கு உட்பட்ட காலப் பேறு.

(காண்க : கோவலன் அகவை : 16 ஆண்டு (திருமணத்தின் பொழுது!...)

கண்ணகி அகவை : 12 ஆண்டு) (திருமணத்தின் பொழுது!...)

"ஈரெட்டாண்டு அகவையான்" (சிலம்பு : 1 : 34)

"ஈராறாண்டு அகவையாள்" (சிலம்பு : 1 : 34)

அகம் : உள், உள்ளொடுங்கும் தோற்றஅமைவுடைய வயிறு

"அகன் ஆர உண்பன்" (இயற். இரண்டாந். திருவந் : 29)

(கருதுக : அகு + அடு > அகடு = உட்பகுதி

"அகடு நனை வேங்கை வீ " (புறம் : 390 : 2)

அகடு = வயிறு

"பால் வீ தோல்முலை அகடு நிலம் சேர்த்தி….

முடங்கிய… செந்நாய்" (நற்றிணை : 103 : 5-6)

அகடு + ஊரி > அகடூரி = பாம்பு (சிந்தாமணி நிகண்டு : 17)

அகம் : உள்

அகவிதழ் = பூவின் உள்ளிதழ்

அகவிரல் = விரலின் உட்பக்கம்

அகவிலை = அகவிதழ்.

அகம் = உள், உள்ளம்

அகவாயில் = உள்ளம் (குருபரம். ஆறா. ப. 558)

அகவாய் = உள்ளிடம் (தொண்டரடி. திருமாலை 7, வியாக் 1)

உள்ளம். "நெஞ்சமும் தம்மதே

அகவாயில் ஆபரணமும் அவரதே" (பெரிய.தி:2,8,9)

அகநகை = இகழ்ச்சிச் சிரிப்பு, உள்ளத்திற்குள் நகைத்தல்

"அகநகை இகழ்ச்சி நகை" (சிலம்பு 3 :14 அடியார்க்கு)

"அக நகைத்து உரைத்து" (சிலம்பு :16 :164)

அகம் > அகம்பு = உள்; உள்ளிடம்

(புறம்பு என்பதற்குரிய எதிர்ச்சொல்)

அகம்பு + அடி > அகம்படி = 1. உள், உள்ளிடம் 2. அடிப்பகுதி

3. உள்ளம் (மனம்)

4. கோயில் அல்லது அரண்மனையகத்துப் புரியும் தொண்டு

5. அரண்மனை மறைவகம் (அந்தப்புரம்)

(தென்னிந்தியக் கோயில் சாசனம் : ப : 1339)

அகம்பு + அடிமை > அகம்படிமை = அகம்படித்தொண்டு

அகம்படியார்> அகமுடையார் (திரிபுச்சொல்) (தெ.இ.க.12:140)

அகத்தடிமை = கடவுள் அடியாருக்குத் தொண்டு.

“அகத்தடிமை செய்யும் அந்தணன்” (தேவா: 7: 9: 6)

அகம் = 1. உள், உள்ளிடம், உட்பகுதி

“களவன் தண்அகம் மண்ணளைச் செல்லும்” (ஐங்குறு 271)

2. இடம் “வரையகத்தால்” (பரிபா : 5 : 90)

3. (அகம்) வீடு, இல்லம்

“அகம் எல்லாம் நிறைப்பினும்” (நாலடி : 318)

4. உள்ளம், மனம்

“அகமலி ஊடல்” (தொல். பொருள் : 157: 2)

“அகமலி யுவகை” (மலை : 184, புறம் : 394 :10)

அகம் = உள்ளடங்குகை

“வேந்துறு தொழிலே யாண்டினது அகமே” (தொல்.பொருள் :189)

அகத்திடுதல் = உள்ளிடுதல்

“கவவு அகத்திடுமே” (தொல். சொல் : 357)

இரு கைகளாலும் சேர்த்தணைத்து உட்படுத்துதல்.

“கணவரைக் கூடினவருடைய அகத்திடுதலையுடைய

கையை நெகிழாதேயே....” (கலித் : 33 : 7 நச்.)

அகத்தீடு = கைகளுள் அடங்குமாறு அணைக்கை (செ.ப.க.)

அகத்துறுப்பு = உள்ளுறுப்பு > மனப்பண்பு, அன்பு

"அகத்துறுப்பு அன்பிலவர்க்கு" (குறள் : 79)

அகத்தியல் = உள்ளத்தியற்கை (கம்பரா : 6 : 4 : 138)

அகத்தான் = உள்ளிருப்பவன்

"மனத்தகத்தான்" (தேவா : 6 : 3, 8 : 5)

அகத்தர் = உள்ளிருப்போர் (கலி : 25 : 3)

அகத்துறை = இலக்கியப்பொருளில் அகம்பற்றிய வகை

"அகத்துறைகள் தாங்கி ஐந்திணை நெறி யளாவி" (கம்பரா: 2:5:1)

அகத்திணையியல் :

இன்பமாகிய ஒழுக்கம் பற்றிக் கூறும் இலக்கணம்.

(தொல். பொருள். முதல் இயல் பெயர்)

அகத்தமிழ் = அகத்திணை பற்றிக் கூறும் தமிழ். (திருக்கோ. உரை : 70)

அகநானூறு = அகப்பொருள் தழுவிய நானூறு பாடல்கள் கொண்ட தொகை நூல்.

அகணி = உட்பகுதி (கம்பரா : 4 : 13: 27)

"கடுக்காயில் அகணி நஞ்சு;

சுக்கில் புறணி நஞ்சு" (செ. ப. க. அக.)

அகணி:அகப்பகுதியில் நஞ்சுடையதாகிய கடுக்காய் (சித்தர்-அகராதி)

அகணி : நஞ்சு (வைத். விரி. அக.)

அகணி = உட்பகுதி

ஊரகப்பகுதியிலேயே அமைந்திருக்கும் மருதநிலம்.

"அப்புலத்து அகணி நாடு ஒரீஇ" (கம்பரா : 4 : 14 : 16)

நெல்வயல். "அகணியின் கரை புரளும்" (அரிசமய : 5, 6)

கருதுக : அகம் = மருதநிலம்.

"அகநாடு புக்கு அவர் அருப்பம் வெளவி" (மதுரைக் : 149)

அகவரை = உள்ளிடம் "அகவரைத் திரிவோர்" (மணி : 6 : 172)

அகவர் = நாட்டுள் வாழுநர் (பொருந : 220)

அகநிலை = அகப்பகுதியில் (வாழ்விடத்தின் நடுப்பகுதியில்) அமைந்துள்ள நகர்.

“அரைசு மேம்படீஇய அகநிலை மருங்கில்” (சிலம்பு : 5 : 161)

அகநகர் = 1. கோட்டைக்குள் அடங்கிய நகர்.

“புறச்சிறை யிருக்கை பொருந்தா தாகலின்
அரைசர் பின்னோர் அகநகர் மருங்கினின்” (சிலம்பு:15:108-109)

“தொகைகொள் மாடத்து அகநகர் வரைப்பின்”(பெருங்:1:43:24)

2. அரண்மனை. “அகநகர்... புக்கான்” (சூளாமணி : 362)

அகநாடு = உள்நாடு

“ஆடுகளங் கடுக்கும் அகநாட்டையே” (புறம் : 28 : 14)

அகப்பகை = உட்பகை.

“அகப்பகை ஒன்றஞ்சிக் காப்ப” (நீதிநெறி : 55)

அகப்படுதல் = உட்படுதல்

“இந் நாற்பேரெல்லைக்குள்ளும் அகப்பட்ட நீர்நிலமும்”
(தென். இந். கல் : 7 : 854)

அகப்படுத்தல் = உட்படுத்தல், பிடித்தல், கவ்வுதல்

“களிறு அகப்படுத்த பெருஞ்சின மாசுணம்” (நற் : 261: 6)

அகம் = (உள் >) இல். இல்லற இன்பம் (புணர்ச்சி)

(வல் > வல் + து > வற்று. வற்று + இயம் > வற்றியம் > வத்தியம்>பத்தியம்= வயிற்றை வற்றப்போடுதல், பட்டினியாயிருத்தல்)

அகப்பத்தியம் = மருந்துண்ணுங் காலத்துப் பெண்ணுறவு (புணர்ச்சி) கொள்ளாதிருக்கை (சித்.பரி. அக: ப: 153)

அகம் = உள், உள்ளம்,

> யான் என்னும் மனச்செருக்கு,

அகங்காரம் > (= அகந்தை)

அகப்பற்று = உடம்பினை, “யான்” என்று அதன்மேல் வைக்கும் பற்று

அகம் : உள்

அகப்பு = மரப்பிளப்பில் (உள்ளாக - அகம்படுமாறு-)
செருகப்பெறும் மரத்துண்டு. (தச்சுத்தொழில் வழக்கு)
அகப்பு > ஆப்பு.

ஆப்பின் உள்ளார் (தேவா : 1, 8, 2)

“ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்கதனைப் போல....”

(பட்டினத்தார் பா: பொது. அன்னை : 12)

அகப்பு > ஆப்பு (ஒ. நோ. தொகுப்பு > தோப்பு.)

அகப்பொருள் : அகவொழுக்கம்

அகம் = உள், உள்ளிடம், உட்பகுதி.

அகடு = (ஒரு பொருளின் அல்லது இடத்தின்-) உட்பகுதி > நடுப்பகுதி

“அகடு சேர்பு பொருந்தி... கவடுபடக் கவைஇய சென்று....” (மலைபடு:33-34) “கொல்லை அகடு அணைந்து” (சீவக : 1228)

> நடுநிலைமை

“அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்” (நாலடி : 2)

அகடு : உள், உட்பகுதி, அகப்பகுதி

(அகல்+உள் > அகலுள்) அகன்ற இடமுடைய நாடு

“பைதிரம் அகலுள் நாடென்ப” (பிங்கலம் : 457)

அகலுள் (ஆசி. நி : 146)

“அகலுள் எனும் பெயர் ஊரும் நாடும்” (வடமலை நிகண்டு : 26) “அகலுள் எனும் சொல்லுள் உள்ள “உள்” எனும் (உட்பகுதி) உட்பாட்டுச்சொல், உள்ளவும் உன்னவும் தக்கது!

(அகம்) > அகடு > (ஞகடு) > ஞாடு > நாடு

“அகம்” எனும் உள்பகுதியைக் குறித்த - இடப்பொருண்மை சுட்டிய கருத்துச் சொல்லினின்று விளர்ந்த “அகடு” எனும் சொல்லே, “ஞகடு” என்றவாறு திரிபெய்தி, ஞாடு என்றவாறு மேலும் தொக்குற்று (தொக்கி – தொகுப்புற்று-) - அறுதியில் “நாடு” என்றவாறு நீடி நிலைநின்றுள்ளது!

நிலைத்திணைச் செறிவின் பரப்பிடமாகிய இருப்பமைவு (உல்லகம் (உள்ளகம்>) உலகம் ஆகும்!

(உல் > உள் = உள் இருப்பமைவு.)

காடு அகப்பட்ட நிலப்பரப்பும் - நீர் அகப்பட்ட பரப்பகமும் - உட்பட்ட இடப்பரப்பாதலின் – “அகடு” எனும் கருத்துச்சொல்லினின்று (அகப்பகுதி) பெயர் பெற்றுள்ளது!

காடு என்பது வாழ்விடப்பகுதியைச் சூழ்ந்தமைந்திருக்கும் இயற்கை அரண்! கருதுக: “அணிநிழற் காடும் உடையது அரண்” (குறள் : 742)

காடு சூழ்ந்த வாழ்விடப் பரப்பே, முதலில் – இத் தமிழனுக்கு நாடு! “அணிநிழற்காடு” எனும் வள்ளுவச்சொல்லாட்சி, பேரழகு பொம்மியது, ஆகும்! தொடக்கக்காலத் தொன்காடு, பொதும்பரால் நிறைந்தது! (காண்க : “வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்!” (பெரும் : 374)

பரவ - பரவ இத் தமிழன் தம் அகமாக - தமர் வாழ்வகமாக - வாழ்நிலப் பரப்பாக உலகத்தை (உள்ளகத்தை) இருப்பிடமாகக் கருதி முடிவுசெய்தது - கடல்சூழ்வு நிலையைக் கருதியே! வாழ்விடப்பரப்பின் முப்புடையும் கடல் சூழ்வு!....

கிழக்கிலும் - மேற்கிலும் - தெற்கிலும் நிறைவாரும் பேராழிகளின் சூழ்வுஅமைவு, இருப்பிடஅறுதி செய்தற்குக் கருத்துரு தந்துள்ளது!

வடபாற்பகுதி நீளிதாய் இருந்தது! சிமைய இமயம் முடிவாயிருந்தது! இவனின் வாழ்விடப் பரப்பின் சூழ்வில் முக்கடல்களே கவ்வியிருந்தனவாகலின் – இக் காட்சிக்கோளே பெயர்க்கருத்துருவுக்குக் களனாகியது!

இவன் உலகம், அன்று கடல் சூழ் மண்டிலம்! காண்க: “கடல் சூழ் மண்டிலம் பெறினும்- விடல் சூழலன் யான் நின்னுடை நட்பே” (குறுந் : 300:7) முக்கடல் சூழ் மண்டிலமே, அன்றைக்கு இவன் முழுவுலகம்! உள்ளகம்!...

தமிழ் வழங்கிய பெரும்பரப்பு, முதற்கண் இதுவே! இது, இவனின்,- “செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம்!” தமிழ்கூறு

நல்லுலகம்! - எனும் ஆட்சியினுள்ளும், இவனின் "உலகம்" எதுவாக இருந்தது என்பதனைக் காட்டும்!...

"நீர் சூழ் நிலவரை (புறம்: 160 :29) நீரகவிருக்கை (நீர் +அகம் +இருக்கை) (புறம்: 99 : 3) (கடலுக்கு உட்பட்ட நிலவுலகம்) நீரகம் = கடல் சூழ்ந்த நிலவுலகம் (மலைபடு : 81)

நீர் சூழ்ந்த தமிழகம்தான் இத் தமிழனுக்கு உலகம்! இதுதான் இவன் ஊர்; இதுதான் இவனுக்கு நாடு!...

இதைத் தாண்டி - இவற்றைத் தாண்டிப்போய் புறத்துப் பேர்உலகப் பரப்பிடத்தைப் பார்த்தபோதும், - இவனுக்குத் தம் உலகமாகவே தோன்றியது! உலகமக்கள் யாவரும் இவனுக்குச் சொந்த உறவினர்களாகவே தோன்றினர்! "யாதும் ஊரே, யாவரும் கேளிர்!" என்றது, இம் மண்ணின் மாந்தநேய மணம் தந்த கருவுணர்வு! "விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று" என்றமையினுள்ளும், இவனின் மாந்தநேயத் துய்யுணர்வின் தெள்ளிமையையும் பண்பாட்டு - நகரிக மரபுச்செழிப்புத் தொடர்ச்சியையும் காணவொல்லும்! "காதலர் தூதொடு வந்த கனவினுக்கு யாது செய்வென்கொல் விருந்து!" என்றவாறுவரும் இலக்கியப் படைப்பினுள் வரும் பண்பாட்டுமணத்தை விருந்தூற்றுமனத்தை, இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் செல்லினும் பிறவினத்துள் கற்பனையாகவேனும் தோன்றுமா என்பது ஐயப்பாட்டுக்குரியதே! கனவுக்கு விருந்துபடைக்கத் துடிக்கும் மனத்தைக் கற்பனை செய்துபார்க்கையிலேயே, - நம் பண்பும் வானில் மிதந்துலவி இன்பில் பறக்கின்றது! நெஞ்சு நெகிழ்வுறுகின்றது!.....

அய் (சிறுமை > நுண்மை > குறுமை > உள்ளொடுங்குகை > உட்பாடு (உட்படுகை) அய் > அய்கு > அஃகு > அகு > (அகம்) > அகு > அகு + அடு > அகடு > ஞகடு > ஞாடு > நாடு.

நாடு எனும் சொல்லறுதி நிலையை நாடுதற்கு – அதுவாவது, நாட்டை நண்ணுதற்குத் தமிழ், - இவ்வளவு நடை நடக்க வேண்டி வந்தது!

நாடு தாண்டி - நாடுகளின் ஒட்டுமொத்தப் பரப்பிடமாகிய பெருமுழுவுலகே – ஞாலம்!

அது தோன்றி நிறைந்து நின்ற வகை........

ஆ > ஆகு > ஆகு + அல் > ஆகல் > அகல் > ஆல் > (யால்) > ஞால் > ஞால் + அம் > ஞாலம் = உலகு, உலகம், பேருலகம், முழுவுலகம்.

ஞாலம் = பார், பரப்பகம், வியலகம், வியலுள், அகன்றலையுலகம், வியன்றலையுலகம், அகலகம், மலர்தலையுலகம்.

ஞாலம், அகலக் கருத்திலும் - நாடு அகப்பாடாகிய உட்பாட்டுக் கருத்திலும் (உட்படுகை) - ஊர் என்பது உயரிய மலையின்கண் கட்டிய குடில்களின் தொகுப்பிடக் கருத்திலும் தோற்றமுற்றன!

“ஞய்” என்னும் ஒளிக்கருத்துக் கிளைவேரினின்று தோன்றி, ஞய் > ஞய்கு > ஞகு > நகு > நகர் என்றவாறு விளர்ந்த வெள்ளை பூசப்பெற்ற ஒண்மனையையும் - அதன் கூட்டாகிய ஒண்மனைத் தொகுதிப் பரப்பகத்தை நகர் > நகர் + அம் > நகரம் என்றவாறும் குறித்துச் சொற்கள் தோன்றின!

நாடு :

நாட்டவர் = நாட்டினையுடையவர் (ஐங் : 213: 4)

நாட்டார் = நாட்டிடத்தார் (குறுந் : 228 :5)

நாட்டோர் = நாட்டவர்

நாடன் = நாட்டினையுடையோன்

(ஒ.நோ.: நாடு> நாடன் ஊர் > ஊரன்)

மலையகப் பரப்பகமும், நாடு என்னப்பெற்றது!

காண்க : மலைநாடு (அகம் : 398 : 25) (தி.மா : 79 : 1)

மலையகம் = மலைநாடு (குறுந் : 319 : 4)

காட்டுக்குள் அமைந்த நாடு, கானாடு! (கான் + நாடு)

கானகநாடன் - (நற் : 47 : 6 குறுந் : 54 : 5 ஐங் : 217 : 3)

கானநாடன் – (அகம் : 128 : 10)

(கருதுக: கானகம் (சிலம்பு : 13 : 44, 14 : 54, 20 : 19)

மலைநாட்டுக்கு உரியவன், மலைநாடன்! (காண்க : குறுந் : 105 : 5)

குன்றநாட்டுக்கு உரியவன், குன்றநாடன் (காண்க : ஐங்குறு: 268 : 4)

வடதிசைக்கண், - இமயமலை! கிழக்கிலும் மேற்கிலும் தெற்கிலும் கடல்கள்! (தெற்கு = தென்குமரித் திசை)

இவற்றின் நடுவுபட்ட - உட்பட்ட - உள்ளகமாகிய இடப்பரப்பில் குன்றுண்டு, மலையுண்டு, காடுண்டு!

காண்க :

தென்குமரி வடபெருங்கல்
குண குட கடலா வெல்லை
குன்றுமலை நாடு காடு
ஒன்றுபட்டு..........

முழுதாண் டோர் வாழி காவல!... (புறம் : 17 : 18)

நம் நாட்டு வளச்செழிப்பு!.......

நிலத்தின் மேலுள்ள ஆற்று நீர் - ஏரி நீர் - குளத்து நீர் - தாங்கல் நீர் எனப்பெறுமிவையாவும் மேல்நீர்! (மேனீர்)

நிலத்தின் கீழகப்பட்டனவாகிய - கிணற்று நீர் - கேணி நீர் - துரவு (பெருங்கிணறு) நீர் எனப்பெறுமிவையாவும் கீழ்நீர்! (அதுவாவது கீணீர்)

இவ் விரண்டுவகையுமே, இருபுனல்! இது வள்ளுவச் சொல்லாட்சி!....

முய் : எழுச்சிக்கருத்து வேர். (மேலெழுதல்)

முய் > முய்ல் > முல் > முலை.

முல் > முலை > (மொலை) > மலை = முளைத்தெழுந்தாற்போன்று மேந்தோன்றி நிலைநிற்பதாகிய பெருங்குன்றம்.

வளத்தால் வான்பட்டது!

வளத்தால் செழிப்பாரும் வாய்ப்பு வாய்த்த இயல்புநிலைபற்றியே - வள்ளுவப்பெருந்தகை “வாய்ந்த மலை” எனும் கூட்டுச்சொல் பூட்டிக் காட்டினார்!

அம் மலையினின்று இழிதருவதாகி வந்தவாறேயிருக்கும் அருவியை “வருபுனல்” என்ற சொற்கூட்டால் சுட்டினார்!

நம் தமிழகத்துள் இயற்கையாகவே நிறைவார்ந்திலங்கும் காடும் - மலையும் - ஆறும் - கடலும் இதற்குரிய இயற்கை அரண்கள்!

“இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்

வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு” (குறள் : 737)

பொறுப்பேற்று ஆளவந்த அரசுகளின், - ஆள்வாளிகளாக இன்றியங்கும் ஆள்களின் தகவின்மைகளால் - தேற்றமின்மைகளால் - திட்டமீடின்மைகளால் - பொறுப்புணர்வின்மைகளால் - மக்கள் மீதான அறிவுசார் அக்கறையின்மைகளால் நீர்இருப்புகளெல்லாம் தந்நிலை குலைவுறுகின்றன! சாயப்பட்டறை நடத்தும் முண்டங்களிற் சிலரும் - வேதியற்றொழிலகம் நடத்தும் பிண்டங்களிற் சிலரும் - நீரை நிறம்மாற்றி நச்சுறுத்தி நசியச்செய்து குடிப்புக்கும் சமைப்புக்கும் அதனைப் பயனற்றதாக்குகின்றனர்! உந்துகள் போலும் ஊர்திகள் உருவாக்கும் தொழிலக மனத்தொழுநோயர். நீரை நிலத்தினின்று உறிஞ்சிப் பேராளமாகச் செலவழித்து, எதிர்கால மாந்தர்க்குப் பெருந்தீங்கு உருவாக்கத் தொடங்கியுள்ளனர்!

ஒரே நாடு என்கிறான்! ஒரே ஒன்றியம் என்கிறான்! அனைத்தையும் பிணைத்திணைத்த நடுவணரசாட்சி எங்களுடையது என்கிறான்! ஒருமை என்கிறான்! ஒருமைப்பாடு என்கிறான்! ஒற்றுமை என்கிறான்! இயல்பாகவும் - இயற்கையாகவும் ஒழுகியவாறு ஒழுங்குற ஓடிக்கொண்டிருக்கும் ஆற்று நீரினை அணைகட்டித் தடுத்து, அதனை மேற்செல்லவிடாதேயே மறித்தடக்கும் முட்டுக்கட்டைகளாகிய மரமண்டை - அண்டையரைத் தட்டிக் கேட்கத் துப்பில்லாத

மந்தமூளையரையே, - நாம் மேலே தூக்கி வைத்துக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்!

பாவேந்தர், தம் பாட்டுத் தேட்டையுள் ஓரிடத்தே, இவ்வாறு கிண்டலடித்தது - நம் நினைவுக்குள் வருகின்றது!.... அது, இது!

"இங்கு இவ் விதமாக நடக்குதண்ணே! - இதில்
யாருக்கும் வெட்கமில்லை!...."

- என்றவாறு வரும் கீழ்க்குத்தல் வரி!...

"நீர்" எனும் சொல்லே, நீர் (நீலு) என்றவாறு (திரவிட) தமிழியமொழிகள் சிலவற்றுள் திரிபெய்தும்! ரகர - லகரத் திரிபு உடையது! தமிழிலும் நிறம் குறித்த சொற்களுள் ஒன்றாயிருக்கும் "நீலம்" என்பது, கருப்பே!

எண்ணுக : "நீர் நிறக் காக்கையும்" (சிலம்பு : 10 : 116)

"மண்ணுற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கின்" (மதுரைக்:351) நீர் (Greek) Neros = water.

Nereid = a sea–nymph (– நீரணங்கு, கடலணங்கு)

(Latin) Nereid

(Eng) Nereid

(Eng) aneroid barometer

(a=not + neros = water) (baros < (பாரம்) weight meter < மாத்திரி

நீர் > நீல் > நீல்+அம் > நீலம்

நீலம் = கருமை, கரும்பச்சை நீல்நிறம் > நீனிறம் = கருநிறம்

நீலமாக்கடல் (மணி: 8 : 17) (புறம்: 91: 6) நீல யானை (மணி: 19: 20)

நீலமேனி நெடியோன் (சிலம்பு: 5:172)

நீல் நிற விசும்பு (பெரும்: 135, மது 581, 678, பட்: 67)

நீல்நிறப் பெருமலை (அகம்: 222: 1) நீல்நிறப் பெருங்கடல் (அகம்: 40:2)

இக் குறிப்பீடுகளுள் நீலம் என்பது, கருமையே என்பது தெளிவுறும்!

நீலம் > (Egypt->)

(English) Nile

Nile blue = a very pale greenish blue colour.

Nile green = a very pale green colour thought of the colour of the river Nile.

(Greek) Neilometrion > Nilometer = a gauge for measuring the height of the river Nile.

“நைல்” என்னப்பெறும் நீல் (நீல)ஆறு 6800 அயிரி மாத்திரித் (Kilometer) தொலைவுக்கும் மேல் ஓடிக்கொண்டிருக்கிறது! ஆப்பிரிக்காக் கண்டம் முழுவதும் சுற்றிப் பாய்கின்றது! இந்த ஆற்றினால் பயன்பெறுபவை 55 நாடுகள்! எங்கும் அங்கே சிக்கலில்லை! யாரும் எவர்க்கும் தடைசெய்யும் முறையைக் கையாள்வதில்லை!

இங்கேதான் - மடமூடமட்டிப் பேதை அரசியற்பயல்களிற் சிலர் ஒப்போலை அரசியற் புரட்டுகளுக்காக, அடுத்த அண்டை மாநில உரிமைகளுக்குத் தீங்குகளும் கெடும்புகளும் அழிம்புகளும் செய்கின்றனர்! இங்குள்ள அரசியல் மரமண்டைகளுக்கு இதன் விடிவுபற்றிக் கவலை இராது; வாராது! நம் மறஇளவல்கள்தாம் இதுபற்றிச் சிந்திக்கவேண்டும்! கட்டாயமாகச் சிந்திப்பார்கள்! செயலில் இறங்குவர்! வெற்றியும் விளைப்பர்!

ஒரு நாடு என்றால், அது தள்ளா விளையுள் உள்ளதாக இருத்தல் வேண்டும்; தக்க அறிவுச்சான்றோரால் நிரம்பியதாக இருத்தல் வேண்டும்! பல வகைப் பொருள்வளமிகுதியால் - பிற நாட்டவராலும் விரும்பப்பெறும் தகுதியுடையதாய் இருக்கவேண்டும்! வறுமையற்றதும் - மிக்க விளைவுகள் உள்ளதுமான நாடாக, நாடென்பது இருக்க வேண்டும்; நாடு எனின், கடும் பசியும்-தீராத நோயும் (தொற்றும் பிணியும்) - அழிம்புசெய்யும் பகைச்சூழ்வும் இல்லாதிருக்க வேண்டும்! ஒற்றுமையைக் குலைக்கும் மாறுபாட்டுக்

குழு மனப்பான்மையினராகிய முரணர்களின் இருப்பு இல்லாதவாறு, நாட்டுச்சூழல் நிலவ வேண்டும்! எப்பொழுதும் வளங் குன்றாதவாறான திட்டமீடுகளால் நாடென்பது நிலைபெற்றிருக்க வேண்டும்!

நாடெனச் சிறப்பித்துச் சொல்லப்பெறுவது - பிற நாட்டுப் பொருள்களின் தேவையின்றித் தமக்கு வேண்டிய பொருள்வளங்களையெல்லாம் தம்மகத்தே கொண்டதாக அமைந்திருத்தல் வேண்டும்! பிற நாட்டுப் பொருள்களை நாடிப்பெற்று, அதனால் வளம் பெற்றியலும் நாடு, நாடாகாது! தானே தன்னிறைவு பெற்றியங்குதலால் செழித்திருக்க வேண்டும்!

குடிமக்கள் அரசொடு பொருந்தி ஒன்றியிருத்தலும், - அரசு குடிகளொடு பொருந்தி இயங்குதலும் இல்லையெனில், - மேற்கூறிய அனைத்து நலங்களும் அமைந்திருக்குமாயினும் அவற்றால் பயனில்லாதேயே போகும்! – என்றவாறெல்லாம்,…. நம் வள்ளுவப்பெருந்தகை - ஓர் அரிய நன்னாடு பெற்றிருக்கவேண்டிய நற்கூறுகளையெல்லாம் நுண்ணிதின் ஆய்ந்து, பதிவு செய்துள்ளமை ஆழ்ந்து கருதியுணரத் தக்கதாகும்!

நம் தமிழ்நாடு ஓர் அருமை வளநாடு! நல்வாழ்க்கை வாழ்தற்கேற்ற சூழல் நிறைந்த பெருநாடு! நன்னாடு, - நலநாடு! அனைவர்க்கும் ஏற்ற பருவ நிலைகள் கொண்ட - உயிர் வாழ்வுக்கேற்ற துய்ய நாடு! அறிவு சார் புலநாடு! நாம் இங்கு வாழ நேர்ந்ததே, நமக்கென்றமைந்திருக்கும் பெரும்பேறு!

எல்லாவற்றுக்கும் மேலான ஒரு பெரும்பெருமை, நம் தாய்மொழி தமிழ் என்பதுவே! இயற்கையியல்பில் உருப்பெற்ற அருமொழி, இது! உலகம் இற்றைக்கு அறிவாலும் அறிவியலாலும் மேம்பட்டு உயர்ந்திருக்கின்றமைக்கே கருமொழி, இம்மொழி!…

(அகம்:) - உள் - உள்ளகம் எனும் அகக்கருப் பொருள்வழியே உருப்பெற்றது, நம் “நாடு” எனும் அருந்திற வரலாற்றுச் சொல்! அதனுள்ளீடாக நம் முந்தியல் மாந்தவரலாறும் – இடவரலாறும் - மொழிவரலாறும் பிணைந்திணைந்துள்ளன! நாடு என்பது நாமிருந்து

வாழும் - நம் முன்னோர் வதிந்துவந்த - நமக்கேயுரிய “தமிழ்நாடு” தான்! (இதனைப் பெயர்மீட்டுச் - சட்ட முறைப்படி நிலைநிறுத்திய நம் பேரறிஞர் அண்ணாவையும் – அவர்க்கிருந்த வரலாற்றுத் தெளிவையும் அவர்க்கிருந்த தமிழினப் பற்றையும் ஈண்டு நினைவது நெஞ்சுக்கு நெகிழ்வுவப்பு தருகின்றது!)

நாடு எனும் கருத்துச்சொல்லுக்கு - ஈடிணையாகப் புறவுலகில் பரவலாக வழங்கி வரப்பெறும் (- குறிப்பாக, மேலையாரிய மொழிகள் வழியிலான-) ‘Nation’ எனும் சொல்லுருவாக்கம் பிறப்பின் அடிப்படையிலான இடம், என்பதேயாகும்!

ஒரு நாட்டரசனால் கைப்பற்றப்பெற்ற நிலப்பகுதியாகிய வட்டாரம் (Region) – “Country” எனப்பெற்றது! பின்னர், அது நாட்டுப்புறம் எனும் பொருண்மையை அடியொற்றி வளர்ந்தது! இதனை “country–dance” = நாட்டுப்புற நடனம் என்பது போலும் சொல்லாட்சிகளினுள்ளாகக் காணவியலும்!

இந்த “country” எனும் சொல் இலத்தீனத்தில் வழங்கிய “contra” = (over against) எனும் சொல்லினின்று உருப்பெற்றதாகும்! இடைஆங்கிலத்தில்கூட (M.E.) இப் பொருண்மைச் சொல் “contre” (contree) என்றே நின்றிருந்தது! பழம் பிரஞ்சு மொழியுள், இதன் முந்தியல் வடிவு “contree” என்பதுவே!

இனி, - பிறப்பு அடிப்படையைக் கொண்ட இடம் எனும் பொருட்பாட்டில் சொல்லெழுந்து நின்றுள்ளமையின் அடிவரலாற்றை காண்குவம் வம்மின்!... (காணலாம் வாருங்கள்!)

இய் (பிரிவுக்கருத்துவேர்) பிரிவு, பிரித்தல், பிரித்துத்தருதல்

இய் > ஈய் ஈய் > ஈ ஈய்வு > ஈவு

ஈய்+கு > ஈய்கு > ஈகு > ஈகு + ஐ > ஈகை ஈகு + அம் > ஈகம்

ஈய் > ஈயு > ஈனு > ஈனு ஈனுதல் = புறந்தருதல், பெற்றெடுத்தல்

ஈன் +து> ஈன்று> ஈற்று = ஈனப்பெற்றது

ஈனுதல் = பெற்றெடுத்தல்

ஈன்றல் – ஈன்றாள் – ஈன்றோள் - ஈனில்

ஈன்+அம்>ஈனம்>இனம்=ஈனப்பெற்ற பிள்ளைகளின் தொகை.

(ஒரு தாய் வயிற்றிற் பிறந்த பிள்ளைகளின் தொகை சுட்டி நின்று, பின் அனைத்துப் பிறப்புகளின் கூட்டுக்கும் ஆனது!)

ஈனம் > (இனம்) > (Greek) genea =1. race இனம்

2. generation (இனமரபு, இனவழி மரபு)

3. offspring (வழித்தோன்றல்)

(இனம்) (Greek) genos: stock, kin= உறவுத்தொகுதி

(Greek) genos > (Latin) genus = birth, Origin, race.

ஈன் > (இனம்) > Gen > genos > (L) genus > gen.

(Greek) genea = race, kind, offspring.

(GK) genos (Latin) generere > gener.

(Old French) gendres > gendre

(E) gender = பகுப்பு ; பால்

(GK) genos > (L) genus = race, kind.

ஈன் Indo-European base: gen (gon, gn)

காண்க: gene oxy-gene, nitrogene

Genus > generate, generation

(GK) genos > (Skt) Janas. ,

(Skt) jana, janana, Janman

(GK) genea = race. generation.

(GK) Genealogia > (E) genealogy

(GK) genea > (L) generalis : which has been taken into the most of the Eur. languages) pert. to the whole kind.

(E) General = pert. to the whole.

(GK) genos, gegona. (L) gignere = to beget

(IE) gen, gon, gn = produce.

> OFris kin, ken, kon.

(OE) cy(n), (E) kin: family, race. class, kind.

Kind. birth, nature, manner, race. genus, species,

(OE) kindly: (good naturally)

(GK) genos > Genesis > (E) = generation, creation, nativity.

(First book of the old Testament.)

(Gk) genos > (G) genial = conducive to growth.

> genius: innate Capacity; person possessing this.

(E) gentle = belonging to the some gens or stock.

genuine = natural.

ஈனம் (> இனம்) (Greek) genos > (Latin) genā, genātus

>gnatus > Natus = born. >

>Natalis > natal = belonging to one's birth

> (L) Natio, Nationem >(F) nation (E) Nation = a race of people.

= பிறப்பிடம் பற்றிய வாழ்நிலம்; நாடு.